ResearchGate

See discussions, stats, and author profiles for this publication at: https://www.researchgate.net/publication/340581047

# Value and Peace Education Tamil Medium

**Book** · August 2017

CITATIONS
0

READS
7,449

1 author:

Thanavathi C.
V.O.C.College of Education, Thoothukudi

**82** PUBLICATIONS **39** CITATIONS

SEE PROFILE

**Some of the authors of this publication are also working on these related projects:**

Project social media View project

Project Media Phobia View project


All content following this page was uploaded by Thanavathi C. on 24 July 2020.

The user has requested enhancement of the downloaded file.

# மதிப்புணர்வு மற்றும் அமைதிக் கல்வி

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல்
பல்கலைக்கழகம் புதிய பாடத்திட்டத்தின்படி

B.Ed., இரண்டாம் ஆண்டு




முனைவர். ச.தனவதி

# என்னுரை

மதிப்புணர்வு மற்றும் அமைதிக் கல்வி என்னும் இந்நூல் தற்கால மாணவ, மாணவியர்களுக்கு ஏற்ற வகையில் மாணவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் எளிய சொற்களை கொண்டு படித்தாலே புரிந்து கொள்ளும் வகையில் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. மாணவ ஆசிரியர்களின் நலன் கருதி இந்நூலை எழுதி உள்ளேன். இப்புத்தகம் மாணவர்களுக்கு முழு நிறைவை அளிக்கக்கூடிய புத்தகமாகவும், ஆசிரியர்களுக்கு வேண்டிய தகவல்களைச் சேகரிக்க உதவும் குறிப்பேடாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை. இந்நூல் தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பல்கலைகழத்தின் பாடத்திட்டத்தின்படி எழுதப்பட்டு அனைத்து கல்வியியல் கல்லூரி மாணவ மாணவிகளும் பயன்படும்படி எழுதப்பட்டுள்ளது.

நான் மேன்மேலும் வளர வாழ்த்துக்களையும் வசதிகளையும் அளிக்கும் எனது நிறுவனத்திற்கும், நிறுவன **தலைவர் திரு.ஏ.பி.சி.வி. சொக்கலிங்கம் மற்றும் செயலர் திரு.ஏ.பி.சி.வி. சண்முகம்** அவர்களுக்கும் என நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவருவதற்க உறுதுணையாக நின்று ஊக்கமும் அளித்த **முனைவர் பீட்டர் ஆனந்த்** அவர்களுக்கும் அனைத்துவித உதவிகளையும் நல்கிய எனது மாணவர்கள், எனது கணவர் **திரு. ரா. ஐய்யம் பெருமாள்,** குழந்தைகள் **மாஸ்டர் ஐ. பார்கவன் மாஸ்டர் ஐ. சஞ்சீவன்,** நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலினை நல்லமுறையில் வெளிக்கொணர்ந்த **சம்யுக்தா பதிப்பகத்தாருக்கும்** என் நன்றியைப் பதிவு செய்கிறேன்.

தூத்துக்குடி முனைவர். ச.தனவதி

08.08.2017

# அலகு – I

# மதிப்புணர்வுகள் கல்வி

# (Values Education)

## 1.1 மதிப்புணர்வுகள் - பொருள் (Values - Meaning)

மதிப்புணர்வு என்பதற்கு மதிப்பு, விழுமம் என்றும் பொருள் உண்டு, இவை ஒரே பொருளுடையவை ஆகும். ஆக்ஸ்போர்டு அகராதியின்படி (Oxford Dictionary) மதிப்பு என்பதற்கு 'தகுதி உடையது' (worth) என்று பொருளாகும். சமூகவியலின்படி (Social Science) மதிப்பு என்னும் சொல்லானது ஒருவருடைய ஆர்வம் (Interest), விருப்பு (Liking), பணிகள் (Duties), தேவைகள் (Needs), நன்னடத்தை (Conduct) முதலியவற்றைக் குறிக்கும். மதிப்பு என்னும் சொல்லினை ஆங்கிலத்தில் "Value" என்று கூறுவர். Value என்னும் சொல்லானது இலத்தீன் (Latin) மொழிச் சொல்லான "Valerie" என்பதிலிருந்து உருவானது. இதற்கு 'நல்லதொரு பொருள்' (Good Thing) என்பது பொருளாகும். மதிப்பு என்றால் தகுதியுடையது, ஏற்கத்தகுந்தது என்று கூறுவர். ஏற்கத்தகுந்த எண்ணம், கருத்து, பேச்சு அல்லது செயல்பாடு மதிப்பு உடையது என்று கருதப்படுகிறது. ஒரு பொருளினைக் குறித்தோ, தனிநபர் அல்லது சமூகத்தினைப் பற்றிய ஒருவரின் கருத்துக் கணிப்பினை வெளிப்படுத்தவும் இவ்வார்த்தையானது பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம் ஒருவர் தன்னைப் பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்தவும் (Self Expression), தன்னைத் தானே மதிப்பீடு (Self Evaluation) செய்யவும் இது பயன்படுகிறது. மதிப்புணர்வுகளான நன்னெறிகளைப் பின்பற்றுவதினாலேயே மனிதனுடைய வாழ்க்கைக்கும், முடிவிற்கும் பொருள் கிடைக்கிறது, மரியாதை அளிக்கப்படுகிறது. சமூகமானது அவர்களை நினைத்துப் பார்க்கின்றது. (உ.ம்) நாட்டிற்காக உழைத்த தேசத்தலைவர்களை நாம் இன்றளவும் நினைத்துப் பார்த்து மரியாதை அளிக்கிறோம்.

கற்போரிடத்தில் சரியான மனப்பான்மைகள் விழுமங்கள், உணர்வுகள், நடத்தைக் கோலங்கள் ஆகியவற்றை உருவாக்கிடும் அனைத்துக் கல்விச் செயல்களும், விழுமக் கல்வி என்று குறிக்கப்படுகிறது. விழுமக் கல்வி என்பது கற்பவரை மேம்பட்ட மனிதனாக்கி அவரது ஆளுமையில் உரிய மாற்றங்களை ஏற்படுத்துவதேயாகும். வாழும் வாழ்க்கை முறையே மக்களை மாக்களிலிருந்து வேறுபடுத்தி காட்டுகிறது. எப்படியும் வாழலாம் என்பதை விட, இப்படித் தான் வாழவேண்டும் என்று மக்களை நினைக்க வைப்பது அவர்கள் கொண்டுள்ள சீரிய விழுமங்களே (Values). பிறந்த குழந்தை சமூக நெறிகளைக் கற்றுத் தெளிந்து அதன்படி வாழ்வதற்குத் தன்னைத் தயார் செய்து கொள்கிறது. ஆனால் அக்குழந்தை வாழும் சமுதாயத்தின் சமூக நெறிமுறைகள் ஏற்புடையது தானா என்ற வினா எழுகிறது. எந்த சமுதாயத்திற்கும் ஏற்றம் தரும் சீரிய சமூக நெறிமுறைகள் யாவை என்பதை சுட்டிக்காட்டுவதே விழுமங்கள் ஆகும். சண்டை

சச்சரவுகள் அற்ற அமைதிப் பூங்காவாக இவ்வுலகம் விளங்க வேண்டும் என்றால் மன நிறைவுடனும் மனித நேயத்துடனும் மக்கள் வாழ வேண்டுமானால் ஒவ்வொருவரும் விழுமங்கள் துணைகொண்டு வாழவேண்டும்.

## 1.2 மதிப்புணர்வுகள் – வரையறை (Values - Definitions)

விரும்பத்தக்கவை, முனைந்து அடைய வேண்டியவை, மதிப்புமிக்கவை என்றெல்லாம் எவற்றை மனிதர்கள் தம் சிந்தனை, உணர்வு, செயல்கள் மூலம் வெளிப்படுத்துகிறார்களோ அவையே விழுமங்கள் அல்லது மதிப்புகள் அல்லது மதிப்புணர்வுகள் (Values) என்று குறிப்பிடப்படுகின்றன. மதிப்புகள், பொருட்களையோ (உ.ம்) (உணவு, செல்வம், பல்வேறு நுகர் பொருட்கள் போன்றவை) அல்லது மனத்தின் பால் தொடர்பு கொண்ட கருத்துக்கள் அல்லது பண்புகள் ஆகியவற்றையோ (உ.ம்) (உண்மை, நேர்மை, நீதி, நியாயம், மகிழ்ச்சி மனநிறைவு போன்றவை) அதாவது மதிப்புகள் பொருள் சார்ந்ததாகவோ (Object Oriented) அல்லது பண்பு சார்ந்ததாகவோ (Related to Abstract Qualities) இருக்கலாம். அவை மனித நடத்தையின் தரத்தையும் (Standard) இலட்சியங்களையும் (Ideals) நிர்ணயிப்பவையாக அமைகின்றன. எனவே ஒவ்வொரு மனிதனது விழுமங்கள் அல்லது மதிப்புகள் அவனது நடத்தைக் கோலங்களுக்கான மையக்காரணிகளாகத் திகழ்கின்றன.

மதிப்பினைப் பற்றி தத்துவவியலாளர், மனவியலாளர், கல்வியாளர், பல்வேறு வரையறைகளை அளித்து உள்ளனர்.

- ★ தத்துவவியலாளர் மதிப்பினைச் "சிறந்ததொரு வாழ்க்கை முறை எனவும் புவியில் வாழ்வதற்கு ஏற்றதொரு நெறிமுறை" எனக் கூறுகின்றனர்.
- ★ மனவியல் அறிஞர்கள் மதிப்பினை, குறிப்பிட்ட செய்திகள், பொருள்கள் அல்லது பாரம்பரியத்தைக் குறித்த உடன்பாடான மற்றும் உடன்பாடற்ற கருத்து வெளிப்பாடு, மனப்பான்மை அல்லது மனவெழுச்சி நிலை என்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில் மனிதருடைய ஆளுமை, மனவெழுச்சி, அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு அவருடைய நடத்தையானது அமையும் என்று கூறுகின்றனர். மனிதருடைய வாழக்கைச் சூழல் மற்றும் அவர்களின் பாரம்பரியம் அவர்களின் நடத்தையால் மாறுபடும் என்று கருதுகின்றனர்.
- ★ கல்வியியல் அறிஞர்கள் "மதிப்புகளைச் சமூகத்தால் அங்கீகரிக்கப்படும் மனிதச் செயல்கள் அல்லது நடத்தைகள்" என்கின்றனர். சமூகத்தால் அங்கீகரிப்பினைப் பெறுகின்ற பொருள், செயல், கருத்து, நடத்தை அல்லது வாழ்க்கை முறை மதிப்புடையது எனக் கூறுகின்றனர்.

★ கானே (Kane) (1962), “மதிப்புகள் எனப்படுபவை குறிப்பிட்ட சமூகத்தினா் அல்லது பெரும்பான்மையான சமூகமானது பின்பற்றுகின்ற, நம்பிக்கை மற்றும் நெறிமுறைகள்” எனக் கூறுகிறாா்.

★ டேவிட் (David) (1964), “மனிதா்கள் பிறா் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று வகுத்துள்ள நெறிமுறைகள் மதிப்புடையன” என்று கூறுகிறாா். மேலும் அந்நடத்தைகள் பிறருக்குப் பயனளிக்கக் கூடியனவாகவும் இருக்க வேண்டும்” என்கின்றாா்.

★ இப்பில் (Hipple) (1969), “மதிப்புகள் நற்செயல்களை அறிந்தும் அறியாமலும் ஊககுவிக்கக் கூடியவையாகவும், நியாயப்படுத்துபவையாகவும் உள்ளன” என்று கூறுகின்றாா்.

★ சுக்லா (Shukla) (1977), “பிறரால் விரும்பத்தக்க நடத்தை மற்றும் நற்செயல்கள் மதிப்புடையனவாகக் கருதப்படும்” என்று கூறுகிறாா்.

★ நேய்பால் (Naipaul) (1979), “தகுந்த முறையில் மதிப்புகளைத் தோ்வு செய்து நற்செயல்களைப் புரிவதன் மூலம் நாம் வாழும் வாழ்க்கைக்கொரு சிறந்த வடிவமும், நல்வழியும் கிடைக்கின்றது” என்கின்றாா்.

## 1.3 மதிப்புணா்வுகளின் தன்மை அல்லது இயல்பு (Nature of Values)

மனிதனுடைய நடத்தையானது மதிப்புணா்வுகள் மூலம் நெறிப்படுகிறது. பிள்ளைப் பருவத்திலிருந்து முதிா் பருவம் வரை ஒவ்வொரு நிலையிலும் மதிப்புணா்வுகள் மேம்பாடு அடைந்து வருகின்றன. மேற்கிந்திய நாகரிகத்தின் காரணமாகவும், ஊடகங்களின் தாக்கத்தினாலும் மக்களிடையே மதிப்புணா்வுகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. “மதிப்புணா்வுகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. “மதிப்புணா்வுகள் தாமே உணா்ந்து மேற்கொள்ளப்படுபவை அன்றி அவற்றைக் கற்பிக்க முடியாது” என தத்துவவியலாளா்கள் கருதுகின்றனா். மனவியல் அறிஞா்களான ஸிக்மெண்டு பிராய்டு (Sigmund Freud), பியாஜே (Piaget) முதலியோா் மதிப்புகளை பற்றி தம் கருத்துகளைத் தெரிவித்து உள்ளனா்.

★ ஸிக்மெண்டு பிராய்டு (Sigmund Freud), “குழந்தைகள் சுற்றுச் சூழலின் மூலமாக மதிப்புணா்வு வளா்ச்சியினை பெறுகின்றனா்” என்று கூறியுள்ளாா்.

★ பியாஜே (Piaget), “மனவியலின் அடிப்படையில் பாா்க்கும் போது மனிதா்களிடம் இயல்பாகவே காணப்படும் நுண்ணறிவு, மதிப்பிடும் திறன், காரணிமுணராற்றல், முடிவு (அ) தீா்வு காணும் திறன் முதலியவற்றின் காரணமாக மதிப்புணா்வு உருவாகிறது” என்கிறாா்.

★ கற்றல் கோட்பாட்டினை வகுத்தவா்கள் “மதிப்புகள் என்பது சமூத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற எண்ணங்கள், செயல்கள் அல்லது நடத்தைகள்” என்று கூறுகின்றனா். மேலும் அவா்கள் அவை ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு அவற்றின் தன்மை, செயல்விளைவு

காரணமாக அமைகிறது என்றும் கூறுகின்றனர். உணர்வுகளின் அடிப்படையிலும் செயல்கள், எண்ணங்கள் சமூகத்தினரால் வரவேற்கப்படுகின்றன. (உ.ம்) பரிசுப் பொருள்களைத் திருமணவிழாவில் தருதல், பிறந்த நாளில் வாழ்த்து கூறுதல், பிறரின் துன்பங்களில் பங்கு கொள்ளுதல் இவ்வகையான செயல்கள் மனவெழுச்சிகளோடு தொடர்புடையவை ஆகும். ஏற்றுக் கொள்ளக் கூடிய செயல்களை, ஆசிரியர்களை, மாணவர்களைப் பாராட்டுதல், பரிசளித்தலின் மூலமாக ஊக்குவிக்க வேண்டும். ஏற்கத்தகாத செயல்களை ஆக்கபூர்வமாக நெறிப்படுதலின் மூலமாக சீரமைக்க வேண்டும் என்று கல்வியியலாளர்கள் கூறுகின்றனர். இவ்வாறு மாணவர்களை நெறிப்படுத்துவதற்கு மதிப்புணர்வுக் கல்வி மிகவும் தேவை என்று அவர்கள் கருதுகின்றனர்.

## 1.4 வளர்ச்சியின் மதிப்புணர்வுகள் **(Values of Development)**

வளர்ச்சிகளை நான்கு விதமாகக் கொள்ளலாம்.

1. உடல் வளர்ச்சி (Physical Development)
2. அறிவு வளர்ச்சி (Knowledge Development)
3. மனவெழுச்சி வளர்ச்சி (Emotional Development)
4. சமூக வளர்ச்சி (Social Development)

### 1. உடல் வளர்ச்சி **(Physical Development)**

உயரமும் எடையும் அதிகரிக்கும் பருவம் இது. நாளமில்லா சுரப்பிகள் வளர்ச்சியடைந்து துரிதமாக வேலை செயயத் தொடங்குகின்றன. பாலுணர்ச்சி தோன்றும் (Sex Consciousnes) பருவம். முகத்தில் தோன்றும். பருக்கலால் கூச்சம் உண்டாகலாம். வெளிப்புற விளையாட்டுகளில் ஈடுபாடு அதிகரிக்கலாம். வெற்றி தோல்வி அடைவதினால் ஒருவித மனப்பக்குவம் உண்டாகும். சத்துள்ள உணவு, போதுமான ஒய்வு, உறக்கம் இன்றியமையாதது. பாலினக் கல்வி (Sex Education) அவசியம். பாலுணர்ச்சி ஒரு இயற்கைத் தூண்டலினால் தோன்றும் மன எழுச்சிகளும் இயற்கையானவையே என எடுத்துரைக்க வேண்டும்.

இதனை போதிக்கும் ஆசிரியர் மன முதிர்ச்சி பெற்றவராக இருத்தல் நல்லது. பெற்றோரே இதனை அளிக்கலாம். இப்பாலூக்கத்தைத் தூய்மைப்படுத்தி (Sublimation) பயனளிக்கக் கூடிய பல வழிகளில் மடை மாற்றவும் (Canalization) வேண்டும். உடல் திறனில் (Body building exercise) உடற்பயிற்சியில் மாணவர் அக்கறை காட்டுவர். உடல் வளர்ச்சி மாறுதல்கள் ஆண்களைவிட பெண்களுக்கு ஓரிரு வருடங்கள் முன்பாகவே தோன்றுவதுண்டு. ஆண் பெண் மாணவர் பழகுவதை ஒருவித சந்தேக நோக்குடன் பார்ப்பது தவறென தற்கால கல்வியாளர்கள் அபிப்ராயப்படுகின்றனர். ஆண் பெண் இருபாலரும் சேர்ந்து கல்வி பயிலும் பள்ளிகளில் மாணவரிடையே கருத்து பரிமாறல், பட்டிமன்றம் பொருட்காட்சி (Exhibition), உல்லாசப் பயணம் (Excursion), விளையாட்டுக்கள் (Games) முதலியவை ஆசிரியர் மேற்பார்வையில் நடத்துவதில்

தப்பில்லை. அவர்களைப் பிரித்து தனித்திருக்கும்படி வற்புறுத்தி சாதாரண பேச்சுக்களையும் தவறாகப் பாவித்தல். தணடித்தல் போன்றவை மன நல இயலுக்கு (Mental Hygiene) ஏற்றதல்ல.

### 2. அறிவு வளர்ச்சி (Knowledge Development)

இப்பருவத்தில் அறிவுப் பெருக்கம் காணப்படும் (Expansion of Mental Capacity) நுண்ணறிவு வளர்ச்சி முழுமையடைகிறது. பியாஜே குறிப்பிட்ட முறையான செயல்முறை (Formal Operational Stage) இப்பருவத்தில் தோன்றுகிறது. ஆய்ந்தறியும் தன்மை மேலோங்கும். கருதுகோள் அமைத்தல் காணப்படும். சோதனை மூலம் அறிவு பெறும் பண்பு மிளிரும். படிப்பதில் ஆர்வம் அதிகரிக்கும். பிள்ளைப் பருவத்தில் கவர்ந்த கதைகளும் நாவல்களும் குமரப்பருவத்தில் கவர்வதில்லை. காதல் துப்பரிதல் போன்ற நாவல்களில் ஆர்வம் அதிகரிக்கும். சொற்களஞ்சியம் அதிகரிக்கும். எவற்றையும் சீர்தூக்கி பகுத்தறிவால் ஆராய்ந்து முடிவு செய்யும் தன்மை தோன்றும்.

பெரியோரிடம் வாதாடும் தன்மை (Argument) வெளிப்படும் அறநெறி ஒழுக்க வளர்ச்சியில் முன்னேற்றம் காணப்படும். பண்டைய மதிப்புகளும் (Antiquity Value) மூட நம்பிக்கைகளும் (Superstitions) உடைத்தெறியப்படும் சிலரிடம் நாத்திக மனப்பான்மையும் (Disbelief in Religion) தோன்றலாம். அரசியலைப் பற்றி அலசும் தன்மை மேலோங்கும். நாட்டங்கள் (Apptitude) வெளிப்படும். தொழில்சார்கல்வி (Vocaltional Education) இப்பருவத்தினருக்கே மிகவும் பொருந்தும். வாழ்க்கைத் தொழில் தேர்வுக்கு வழிகாட்டலும் (Vocaltional Guidance) இப்பருவத்தினருக்குத் தேவைப்படுவதாகும்.

### 3. மனவெழுச்சி வளர்ச்சி (Emotional Development)

குமரப்பருவ நிலையிலிருந்து ஒருவர் முழு முதிர்ச்சி நிலைக்கு மாற்றம் பெறும் பருவமாகும். இதனை ஒரு தெளிவற்ற நிலைக்கு ஒப்பிடலாம். ஒரு பொழுது தளர்நோக்குடன் காணப்படும் குமரப்பருவத்தினனை, உடனடியாகத் தளரா நோக்கோடு செயல்படுவதையும் நாம் காணலாம். ஆவர்களுடைய உடலும் மனமும் மனவெழுச்சியற்ற அமைதியான நிலையிலேயே சமநிலை சிதைந்து காணப்படுகின்றன. இதற்குக் காரணம் இப்பருவத்தினரது வளர்ச்சியில் நிகழும் வேகமான மாறுதல்களே தீவிர மனவெழுச்சிக்குட்பட்டால், அவர்களின் நிலை முற்றிலும், ஒழுங்கு குலைந்து சிதைந்து போவதில் வியப்பொன்றும் இல்லை. தன்மான உணர்ச்சி மிகுந்த இப்பருவத்தில் பிறர் தம்மை மதிக்க வேண்டும் என்னும் எண்ணமும் பிறர் தம்மைப் பார்த்து ஏளனஞ் செய்வார்களோ என்னும் அச்சமும் மிகுந்து காணப்படும். இப்பருவத்தினர் பெரியோர்களின் கட்டுப்பாட்டை அதிகம் விரும்புவதில்லை. ஆனாலும் கட்டுப்பாடுகள் சமூகச் சூழ்நிலையில் வீட்டிலும் பள்ளியிலும் இருந்தே தீருகின்றன. குமரப்பருவத்தினர் இவற்றாலும் மனவெழுச்சிகளுக்குட்படுகிறார்கள். பால் உணர்ச்சியுடன் தொடர்பு கொண்ட மன எழுச்சிகளும் பொதுவாக இப்பருவத்தில் தோன்றும். குமரப் பருவத்தினரிடம் முதிப்பருவ நடத்தைகளைச்

சமுதாயத்தினர் எதிர்பார்ப்பர். இவ்வெதிர்பாட்டினின்று விடுபடுதலில் விருப்பம் மிகுந்து, இதனின்றும் பிரச்சனைகள் எழக்கூடும்.

தனது உண்மை நிலை பற்றியும், தன்கருத்து, தனது எதிர்கால அவாக்கள், தன்னம்பிக்கை போன்றவற்றுடன் தொடர்புடைய பிரச்சனைகளும் எழும் கல்வி, பொருளாதாரம் சமூக மதிப்பு போன்றவற்றுடன் இணைத்தும் பல பிரச்சனைகள் இப்பருவத்தில் எழக்கூடும். மன எழுச்சிகள் தீவிரம் அடைந்து மனப்போராட்டங்களாக மாறாமல் கவனித்துக் கொள்வது. பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகிய இவ்விரு சாராரின் கடமையாகும். வீட்டில் பெற்றோர்கள் இப்பருவத்தினர் மனம் புண்படும்படியாகவோ அல்லது தீவிர மன எழுச்சிகளைத் தூண்டும் படியாகவோ நடந்து கொள்ளக் கூடாது.

இப்பருவத்தினரை அளவுக்கு மீறிக் கட்டுப்படுத்த நினைப்பது பயனற்றது மட்டுமல்லாமல் தீமை பயப்பதும் ஆகும். அன்பும், பரிவும் இவர்கள் பால் பெற்றோர்கள் காட்டி, இவர்களுடைய சுதந்திர உணர்ச்சியை மதித்து, வீட்டில் பொறுப்புள்ள செயல்களைச் செய்ய வாய்ப்புகளையும் அளிப்பார்கள் ஆயின் மனவெழுச்சித் தீவிரமும், பொருத்தப்பாடின்மை போன்றனவும் தவிர்க்கப்படும். பள்ளிகளில் ஆசிரியர்கள், அறிந்தோ அறியாமலோ பல நேரங்களில் குமரப் பருவத்தில் உள்ள மாணவர்களிடையே மன அமைதிக்குலைவைத் தோற்றுவிக்கிறார்கள். அவர்கள் மனம் புண்படும்படி பேசுதல், அவர்களின் திறமைக்கு அப்பாற்பட்ட வேலைகளைச் செய்யும்படி கட்டாயப்படுத்துதல், பாரபட்சமாக அவர்களை நடத்துதல் போன்ற செயல்களை ஆசிரியர்கள் தவிர்க்க வேண்டும். மனவெழுச்சிகளை ஒடுக்கி நசுக்க முற்படாமல், பயனுள்ள வழிகளில் அவை வெளிப்படப் பள்ளி வாழ்க்கையில் உல்லாசப் பயணங்கள் போன்றன இதற்கு பெரிதும் பயன்படும். முக்கியமான வேதனை என்னவெனில், களிமண் தன்மையுள்ள இவர்களை தீவிரவாதத் தலைவர்கள் தங்கள் வசதிக்கேற்ப மாற்றிக் கொள்கின்றனர். எனவே குமரப்பருவத்தினர் தீவிரவாதிகளிடம் மாட்டிக் கொள்ளாமல் பாதுகாக்கப்பட வேண்டும்.

### 4. சமூக வளர்ச்சி (Social Development)

குமரப்பருவத்தில் ஒருவன் சிறப்பாக சமூக வளர்ச்சி பெறுகிறான். சமூக முதிர்ச்சியையும் பெறுகிறான். சமூக முதிர்ச்சியையும் பொருத்தப்பாட்டையும் அடைகிறான். இவற்றில் சிலவற்றைப் பாரக்கலாம்.

1. பல நண்பர்களைப் பெற்றிருத்தல்.
2. பிறருடன் ஒத்துழைத்தல்
3. தனது செயல்களில் இருந்து எழும் விளைவுகளுக்கான பொறுப்புகளைத் தானே ஏற்பது.
4. சமூகப் பிரச்சனைகளைத் தன்னலநோக்குடன் அணுகாமல் பிறரது கருத்துக்களுக்கு மதிப்பளித்து செயல்படுதல்.

5. தனது நிறை குறைகளை உணர்ந்து, தன்னைப் பற்றிய உண்மையான மதிப்பீட்டைப் பெற்றிருத்தல்.
6. சமூகத்தோடு ஒன்றி சமூக நலனை வளர்ப்பதில் கவனம் செலுத்துதல்.
7. தற்காலிகமாக எழும் தடைகளைக் கண்டு உற்சாகம் குன்றிப் போகாமல் எழுச்சியுடன் அதற்கான வழிமுறைகளைக் கையாளுதல்.

மதிப்புணர்வுகள் மூலம் ஒரு மனிதன் சமூகத்திறன்களைப் (Social Skills) பெறுகிறான். பிறருடன் பழகுதல், பல்வேறு இடங்களுக்குச் சென்று பல்வேறு தரப்பட்ட மக்களுடன் பழகுதல், பிறருடன் இணங்கிச் செல்லுதல், பிறருக்கு ஒத்துழைத்தல், குழுவாகச் செயல்படுதல், பிறரை புரிந்துகொள்ளுதல், சமுதாயத்தில் உறுப்பினராதல் மற்றும் தலைவராதல் இத்தகைய பண்புகள் மூலம் ஒருவன் சமூக வளர்ச்சி பெறுகிறான்.

## 1.5 மதிப்புணர்வு வளர்ச்சியின் காலகட்டங்கள் (Periods of Value Development)

பழங்காலந் தொட்டு சமயக் கல்விக்கும், நன்னெறிக் கல்விக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இந்திய நாட்டில் இருந்து வருகிறது. இந்திய நாட்டில் பழங்காலத்திலிருந்து பல்வேறு சமயங்களைச் சார்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர். கல்வி அமைப்புகளின் வழியாகவும், சமய அமைப்புகளின் வழியாகவும் சமயக் கல்வியும் நன்னெறிக் கல்வியும் மாணாக்கர்க்கு அளிக்கப்பட்டன. பல்வேறு கால கட்டங்களில் சமயக் கல்வியும், நன்னெறிக் கல்வியும் எவ்வாறு கற்பிக்கப்பட்டது என்பதற்கான விளக்கம் கீழ் உள்ளவாறு அளிக்கப்பட்டுள்ளது.

### 1. வேத காலம் (**Vedic Period**):

சங்ககாலத்தில் இந்து சமயத்தினர் இந்திய நாட்டில் பெரும்பாலினராக வாழந்தனர். அவர்கள் கல்வி பயில்வதற்கெனக் குருகுலங்கள் இருந்தன. அங்கு பிராமணர்களும், துறவிகளும், மாணாக்கர்க்குக் கல்வி போதித்தனர். அவர்களை மாணாக்கர் ‘குரு’ என அழைத்தனர். மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் வழக்கிற்கேற்ப தெய்வத்திற்கு அடுத்த நிலையில் ஆசான் மாணக்கரால் போற்றப்பட்டனர். குருகுலங்களில் உயர் குலத்தவரென அக்காலத்தில் மக்களால் கருதப்பட்ட பிராமணர்கள், அரச வம்சத்தினர்களின் பிள்ளைகள் மட்டுமே மாணாக்கராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவர்களுக்கு வேதங்கள், மந்திரங்கள், புராணங்கள் போதிக்கப்பட்டன. மேலும் எளிமையான வாழ்க்கை முறை, ஒழுக்கம், இரந்துண்ணல், குருசேவை புரிதல், இறை வழிபாட்டு முறை, தம்முடைய பணிகளைத் தாமே மேற்கொள்ளல், வாய்மை, நேர்மை முதலியன மாணாக்கர்க்குக் கற்றுத்தரப்பட்டன.

### 2. புத்தர் காலம் (**Buddhist Period**):

பிறசமயங்கள் இந்திய நாட்டில் பரவத் தொடங்கியபோது புத்த மதமும் மக்களிடையே பிற உயர் துன்புறுத்தாமையைப் போதிக்கத் தொடங்கியது. புத்த மதத்தினர் தம்முடைய சமயத்தினைப் பரப்புவதற்கொன ஆலயங்களையும், பள்ளிகளையும் அமைத்தனர். அங்குக் கல்வி

பயிலும் மாணவர்கள் பிட்சுக்கள் என அழைக்கப்பட்டனர். அங்கு மாணவர்களுக்கு எழுத்தறிவு மட்டுமன்றி, தியானம், இரந்துண்ணல், பிரம்மச்சரியம், பிற உயிரைத் துன்புறுத்தாமை, சமயக் கல்வியினை பிரச்சாரம் செய்தல், ஒழுக்கம், கட்டுப்பாடு, துறவு வாழ்க்கைக்கான நெறிமுறைகள் ஒருங்கே கற்றுத்தரப்பட்டன.

### 3. இஸ்லாமியர் காலம் (**Muslim Period**):

இஸ்லாமிய அரசர்கள் இந்திய நாட்டின் மீது போர் தொடுத்து வெற்றி கண்ட பின் இஸ்லாமியச் சமயக் கல்வியானது நம் நாட்டில் பரவத் தொடங்கியது. இஸ்லாமியக் கல்வியினைக் கற்பிப்பதற்கெனப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் மூலம் மாணாக்கர்க்கு, எழுத்தறிவு, அரேபிய, உருது மொழியியலாற்றல், திருகுரான் ஓதும் முறை அதில் கூறப்பட்டுள்ள ஒழுங்கு நெறிகள் கற்றுத் தரப்பட்டன. திருகுரானில் கூறப்பட்டுள்ள வாசகங்கள் இறைவனின் மகிமையை எடுத்துரைத்தது மட்டுமின்றி, மக்கள் பின்பற்ற வேண்டிய வாழ்க்கை நெறிமுறைகளான கட்டுப்பாடு, ஒழுக்கம், திருமண முறை, தான தர்மம், வாய்மை, இறைவழிபாடு செய்யும் முறை முதலானவை வலியுறுத்தின. மது அருந்துதல், சூதாடுதல், பிறர் மனை நோக்குதலை திருகுரான் குற்றமெனச் சுட்டிக் காட்டுகிறது. இவ்வாறாக மக்களிடையே சமயக் கல்வியோடு நன்னெறிக் கல்வியும் போதிக்கப்பட்டது.

### 4. அக்பர் காலம் (**Akbar Period**):

அக்பர் இந்திய நாட்டில் இந்து சமயம், இஸ்லாமிய சமயம், இரண்டினையுமே ஊக்குவித்தார். முதன் முதலாக சமய நல்லிணக்கத்துக்கு வித்திட்ட அரசர் என்ற புகழ் அக்பருக்கு உரியதாகும். அக்பர் இந்திய நாட்டில் இந்து சமயத்தினர் கல்வி பயில்வதெற்கெனப் பள்ளிகளையும், கல்வி நிறுவனங்களையும் உருவாக்கினார். மேலும் இஸ்லாமிகச் சமயத்தினர் கல்வி பயில்வதற்கென மக்தாப்களையும், மதரஸாக்களையும் (Maktabs and Madras) உருவாக்கினர். அனைத்துச் சமயங்களிலும் கூறப்பட்டுள்ள நன்னெறி கருத்துகள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதில் அவர் தனிக் கவனம் செலுத்தினார். இந்து சமயத்தினருக்குரிய மகாபாரதம், இராமாயணம் போன்றவற்றையும், இஸ்லாமிய சமயத்தினருக்குரிய திருக்குரான் போன்றவற்றையும் மிகவும் போற்றினார்.

### 5. ஆங்கிலேயர் இந்திய நாட்டினை ஆண்ட காலம் (**British Period**):

இந்திய நாட்டில் 1815 ஆம் ஆண்டு மோரியா பிரபு (Lord Moria) என்னும் ஆங்கிலேயர் முதன் முதலில் சமயக் கல்வி மற்றும் நன்னெறி கல்விக்கும் சமமாக முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று கூறினார். பிறகு 1854 ஆம் ஆண்டு றுழழனள னநளியவஉா இன் மூலமாக சமத்துவமிகுந்த நன்னெறிக் கல்வியானது மக்களுக்கு அளிக்கப்பட்டது. 1887 ஆம் ஆண்டு

விவேகானந்தர் ஏற்படுத்திய ஸ்ரீ ராமகிருஷ்ண இயக்கம் (Shri Ramakrishna Mission) என்னும் அமைப்பின் மூலமாக நன்னெறிக் கல்வி, சமயக் கல்வி மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது. இரபீந்திரநாத் தாகூரால் 1917இல் ஆரம்பிக்கப்பட்ட சாந்திநிகேதன், என்னும் கல்வி அமைப்பானது இயற்கைச் சூழலில் நன்னெறிக் கல்வி மற்றும் சமயக் கல்விக்கும் வித்திட்டது. மகாத்மா காந்தி அடிகள் 1937 ஆம் ஆண்டு பரிந்துரைத்த ஆதாரக் கல்வி, சமயக் கல்விக்கு வித்திட்டது.

1944 ஆம் ஆண்டு இந்திய நாட்டில் உருவாக்கப்பட்ட சமயக் கல்வி குழு அமைப்பின் தலைவராக திரு.ஜி.வி. பார்னே (G.V. Barne) என்பவர் 'புதிய கல்வித் திட்டத்தினை உருவாக்கி அதன் வழியே மக்களின் வாழக்கைக்குத் தேவையான சமய நெறி மற்றும் நன்னெறி மதிப்புணர்வு குறித்த அறிவாற்றலை மாணாக்கர்க்கு அளிக்க வேண்டிய கடமையானது இந்திய நாட்டில் உள்ள ஒவ்வொரு மாநிலத்துக்கும் உரியது' என்று கூறினார். மேலும் அவர் கல்வி நிறுவனங்களில் இறை வழிபாடு, தியானம் முதலியவை கட்டாயமாக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தார்.

இந்திய நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் சமயக் கல்விக்கெனவும், நன்னெறிக் கல்விக்கெனவும் ஏற்படுத்தப்பட்ட கல்விக் குழுக்கள்.

**(அ) பல்கலைக் கழகக் கல்விக் குழு (1948-49) (University Education Commission):** டாக்டர் இராதாகிருஷ்ணனின் தலைமையிலான பல்கலைக் கழகக் கல்விக் குழுவானது இந்திய நாட்டில் பல்வேறு காலகட்டங்களிலும் கற்பிக்கப்பட்ட சமயக் கல்வியினைப் பற்றி ஆய்வு செய்தது. இந்திய நாட்டில் கல்வி அமைப்புகளின் மூலமாக நன்னெறிக் கல்வி மற்றும் சமயக் கல்வியனைப் போதிப்பதன் அவசியத்தை உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளை கீழ் உள்ளவாறு பரிந்துரைத்தது.

(1) கல்வி நிறுவனங்களில் தியானம், இறை வழிபாடு போன்றவற்றைக் கட்டாயமாக்குதல்.
(2) நன்னெறி மற்றும் சமயங்களைக் குறித்த அறிவாற்றலையும், சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் கூடிய புத்தகங்களையும் கல்வி நிறுவனங்களில் இடம்பெறச் செய்தல்.
(3) கல்வி நிறுவனங்களில் சிறந்த இலக்கியங்களை கற்பிப்பதற்கான வாய்ப்புகளைப் பல்கலைக் கழக பாட ஏற்பாட்டின் மூலம் ஏற்படுத்திக் கொடுத்தல்.

**(ஆ) இடைநிலை கல்விக் குழு (1952-53) (Secondary Education Commission):** இடைநிலைக் கல்விக்கான பாட ஏற்பாடுகளைக் குறித்த கல்விக் குழுவானது பின்வரும் பரிந்துரைகளை மதிப்புணர்வுக் கல்விக்கென எடுத்துரைத்தது.

(1) தேசத் தலைவர்களின் வரலாறு, இந்திய நாட்டின் பண்பாடு, வரலாறு குறித்து மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

(2) பெற்றோர் அல்லது பாதுகாவலரின் அனுமதியினைப் பெற்ற பின்பே பள்ளி நேரத்திற்குப் பின்பு மாணவர்களுக்கு சமயக் கல்வியானது போதிக்கப்பட வேண்டும்.

(இ) சமயம் மற்றும் நன்னெறிக்கான கல்விக் குழு (1959) **(Commission for Religious and Moral Education):** இக்கல்விக் குழுவானது மாணவர்களிடையே சமயங்களிலிருக்கும் நன்னெறிகளைப் போதிப்பதற்கும், மதிப்புணர்வுகளைப் போதிப்பதற்கும், கீழ் உள்ள பரிந்துரைகளை எடுத்துரைத்தது.

1. பல்கலைக் கழக அளவில் முது நிலையில் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்குச் சமய ஒப்பீட்டுக் கல்வி மற்றும் சமய வரலாறுகளைக் கற்பிப்பதற்கெனப் பாட ஏற்பாடு வடிவமைக்கப்பட வேண்டும்.
2. கல்வி நிறுவனங்களில் தியான முறையானது கட்டாயமாக்கப்பட வேண்டும்.
3. மாணாக்கர்களிடையே செய்யும் தொழிலே தெய்வம் என்னும் கருத்தினையும், நன்னெறியின் அவசியம், சமயங்களில் கூறப்பட்டுள்ள நன்னெறிகளைத் தகுந்த நூல்களின் வாயிலாக கற்பிப்பதற்கென வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தர வேண்டும்.

(ஈ) மனவெழுச்சி ஒருங்கிணைப்புக் குழு (1959) **(Emotional Integration Committee):** இக்குழுவானது மாணவர்களுக்கு நன்னெறிகளைப் போதிப்பதற்கெனக் கீழ் உள்ள பரிந்துரைகளை எடுத்துரைத்தது.

1. மாணவர்களிடையே சமய நல்லிணக்கத்தைப் பாராட்டும் குணத்தினை உருவாக்க வேண்டும். அதற்கு வழி செய்யும் வகையில் கல்வி, பாட ஏற்பாடு மற்றும் இணை கலைத் திட்டங்கள் வடிவமைக்கப்பட வேண்டும்.
2. உயர் கல்வி நிலையில் மாணாக்கர் சமயம் மற்றும் நன்னெறியுடன் தொடர்புடைய ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு விரிவுரையாளர்கள் ஊக்கப்படுத்த வேண்டும்.

(உ) கோத்தாரி கல்விக் குழு (1964-66) **(Kothari Educational Commission):** கோத்தாரி கல்விக் குழுவானது நேரிடையான, மறைமுகமான முறைகளின் வழியாக, மாணாக்கர்களுக்கு சமூகம் நன்னெறி, ஆன்மீக மதிப்புணர்வுகளைப் போதிக்க முடியும் என்றும் பல்கலைக் கழகத்தில் சமய ஒப்பீட்டிற்கான துறையானது மாணக்கர்களுக்கு சமூகம், நன்னெறி, சமயம், ஆன்மீகம் தொடர்பான மதிப்புணர்வுகளை போதிப்பதற்கென தகுந்த நூல்களை உருவாக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்தது.

(ஊ) புதிய தேசிய கல்விக் கொள்கை (1986) **(New National Educational Policy):** இக்கல்விக் கொள்கை, பகுதி III, பத்தி 8.5 ல் மதிப்புகள் பற்றி பரிந்துரைத்துள்ளது. இக்குழுவின் பரிந்துரையின்படி சிறந்த கல்வி அமைப்பானது உலகம் முழுவதும் சார்பற்ற மதிப்புணர்வுகளாகிய அன்பு, உண்மை, அமைதி, சமய நல்லிணக்கம், நேர்மை போன்றவற்றைப் போற்றி வளர்ப்பதாகவும், மக்களிடையே உள்ள சமய வெறியினைக் குறைத்து சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும். மேலும் மாணவர்களின் மனத்தில் சமத்துவத்திற்கு வித்திட்டு, வன்முறை எண்ணங்களை ஒழித்து, மனத்திலுள்ள தேவையற்ற மூட நம்பிக்கைகளை நீக்கி நாட்டின் ஒற்றுமைக்கு உதவுபவராக மாற்ற வேண்டும். இக்கல்விக்

குழுவானது கல்வி நிறுவனங்களில் சமயக் கல்வி, நன்னெறிக் கல்வியினை போதிப்பதற்கான அவசியத்தை வலியுறுத்துகிறது.

## 1.6 கோல்பெர்க்ஸின் ஒழுக்க வளர்ச்சி நிலைகள் (Kolherberg's Stages of Moral Development)

ஜான் டூவி மற்றும் ஜீன் பியாஜேயின் தாக்கத்தால் ஒழுக்க வளர்ச்சி நிலைகளுடைய அறிவுப்புல வளர்ச்சி தொகுப்பினை கோல்பெர்க் 1971 ல் வெளியிட்டார். அவருடைய கருத்துப்படி எல்லா குழந்தைகளும் ஒரே மாதிரியான நிலைகளையே பின்பற்றுகின்றனர், ஆனால் புலமையை அடையும் விகிதத்தில் பல்வேறு நிலைகளில் மாறுபடலாம். மேலும் ஒரு குழந்தையை உயர்நிலைக்கு தயார் செய்ய எவராலும் கற்றுக் கொடுக்க முடியாது. ஆனால், குழந்தை தயாராக இருந்தால் அது அடுத்த உயர் நிலைக்குச் செல்ல அக் குழந்தையைத் தூண்டுவதன் மூலம் நாம் உதவ முடியும். அரசியல், தத்துவம், நீதி மற்றும் சமுதாயத்திற்கு பயன்படும் வகையில் ஒரு குழந்தையை உயர் ஒழுக்க நிலைக்கு தூண்டச் செய்ய முடியும் என கோல்பெர்க் நம்புகிறாா். பல்வேறு கலாச்சாரங்கள் பல்வேறு வழிகளில் ஒழுக்க மதிப்பினை நமக்குத் தருகிறது என்பதனை இதன் மூலம் நாம் உணரலாம். பொதுவாக இதன் உச்ச மதிப்பு ஒன்றாகத் தான் இருக்கும். இவ்வாறாக பள்ளியின் முக்கிய நோக்கம் குழந்தைகளை கீழ் ஒழுக்க நிலையிலிருந்து மேல் ஒழுக்க நிலைக்குச் செல்ல உதவுவதே ஆகும். கோல்பெர்க்கின் ஒழுக்க நிலைகளில் குழந்தையின் செயல்முறை முன்வளர்ச்சி நிலையில் கலாச்சார பண்புகளுக்கு பொறுப்பான நிலையிலிருந்து வளர்ச்சியின் மூலம் தண்டனை குறித்த பயன் நிலையான மனப்பான்மை சமூக ஒழுக்கம் மூலம் மதிப்புகளை பெறுதல். தனக்கு எது சரி எனப்படுகிறதோ அதைச் செய்தல். வளர்ச்சி நிலையில், தன்னிட்சையான நிலை எங்கு ஒழுக்க மதிப்புகள் மற்றும் கோட்பாடுகள் அதிகாரத்திலிருந்து விலகி ஏற்புடையதாகிறதோ அதுவே ஆகும்.

கோல்பெர்க் (Kholberg) இவ்வணுகுமுறையில் மதிப்புணர்வு கற்பித்தலை மூன்று நிலைகளாக வகைப்படுத்தி உள்ளார். ஒவ்வொரு நிலையும் 2 படி நிலைகளைக் கொண்டவை ஆகும். அவரால் வகைப்படுத்தப்பட்ட 3 நிலைகள்.

1. வழக்கமான நிலைக்கு முன்பு (Pre-Conventional Level)
2. வழக்கமான நிலை (Conventional Level)
3. வழக்கமான நிலைக்கு பின்பு (Post Conventional Level)

என்று அழைக்கப்படுகின்றன. இவற்றிற்கான விளக்கத்தினைக் காணலாம்.

### 1. வழக்கமான நிலைக்கு முன்பு (Pre conventional Level)

குழந்தையானது பிறந்ததிலிருந்து இரண்டு அல்லது மூன்று வயதாகும்வரை ஏற்படக் கூடிய நடத்தை மாற்றங்களையும், அவை மதிப்புணர்வுகளோடு கொண்டுள்ள தொடர்புகளையும்

கோல்பெர்க் விவரித்துள்ளார். குழந்தையானது பெற்றோர்களிடம் இருந்து நல்லவை தீயவை, செய்யத் தகுந்தவை தகாதவை என வேறுபடுத்தி அறியக் கற்றுக் கொள்கின்றது. இவ்வறிவாற்றலானது இரண்டு படி நிலைகளின் மூலம், குழந்தையின் செயல்பாடுகளின் வழி வெளிப்படுகிறது.

**படிநிலை 1**

குழந்தையானது பெற்றோர்களின் மூலம் எவ்வாறு பேச வேண்டும், உணவு உண்ண வேண்டும், பழக வேண்டும் என்று கற்றுக் கொள்கிறது. பெற்றோர்கள் குழந்தைகளின் நற்செயல்களை வார்த்தைகளைக் கொண்டும் பரிசுகள் அளித்தும் ஊக்குவிக்கின்றனர். இந்நிலையில் பெற்றோர்கள் குழந்தைகளின் தவறான செயல்களை ஆக்கபூர்வமாகத் திருத்த வேண்டும்.

**படிநிலை 2**

இந்நிலையில் குழந்தையானது தன்னுடைய தேவைகளை வெளிப்படுத்தவும், தாமே செயலினைச் செய்யவும் ஆரம்பிக்கின்றது. அச்செயலானது நன்னெறியுடன் கூடியதாக இருப்பின் பெற்றோர்கள் அதனை ஊக்கப்படுத்துகின்றனர். (உ-ம்) தண்ணீரைச் சிந்தாமல் பருகுதல், தன்னுடைய விளையாட்டுப் பொருள்களை உரிய இடத்தில் வைத்தல்.

**2. வழக்கமான நிலை (conventional Level)**

இந்நிலையில் குழந்தையானது இல்ல உறுப்பினர்கள், சமூகத்தினரால், அங்கீகரிக்கப்படுகின்ற செயல்களை செய்ய கற்றுக் கொள்கின்றது. குழந்தையின் 3-4 வயதில் இந்நிலை காணப்படுகிறது.

**படிநிலை 3**

இந்நிலையில் குழந்தையானது பெற்றோர், உறவினர்களிடமிருந்து பாராட்டுதலை எதிர்பார்க்கின்றது. (உ-ம்) நல்ல மதிப்பெண்களை பெறும்போது தாய் தந்தையினர் பாராட்டுதல்.

**படிநிலை 4**

பள்ளியில் ஆசிரியர்கள், சக வகுப்பினர், நண்பர்களிடம் எவ்வாறு பேச வேண்டும், பழக வேண்டும், விதிமுறைகளை எவ்வாறு கடைபிடிக்க வேண்டும் என்பதனைக் குழந்தையானது கற்றுக் கொள்கின்றது.

**3. வழக்கமான நிலைக்குப் பின்பு (Post Conventional Level)**

வீடு, பள்ளி போன்ற இடங்களில் மட்டுமின்றி பொது இடங்களிலும் குழந்தைகள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதனைக் கற்றுக் கொள்கின்றனர். குழந்தையானது 5-6 வயதில் இவற்றைப் பற்றித் தெளிவுற புரிந்து கொள்கின்றனர்.

**படிநிலை 5**

பொது இடங்களில் அனைவரும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான விதிமுறைகளைக் குழந்தைகளுக்கு பெற்றோர் புரிய வைக்கின்றனர். பள்ளியிலும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இம்மதிப்புகளை அறிவுறுத்துகின்றனர். (உ-ம்) நூலகத்தில் பேசக் கூடாது, பூங்காவில் பூக்களைப் பறிக்கக் கூடாது.

**படிநிலை 6**

உலகம் முழுவதும் பின்பற்றப்படும் சார்பற்ற மதிப்புணர்வுகளான நேர்மை, ஒழுக்கம், வாய்மை, நேரந்தவறாமை முதலானவற்றின் முக்கியத்துவத்தைக் குழந்தையானது பள்ளியில் ஆரம்ப நிலை கல்வியிலிருந்து கற்றுக் கொள்கிறது. பின்பு இடைநிலை மேல்நிலைக் கல்வியின் மூலம் குடியுரிமை, மனித உரிமைகள், சமத்துவம், சமயத்துவம் முதலானவற்றைப் பற்றி அறிந்து கொள்கின்றன. பெற்றோர்கள், உறவினர்கள், ஆசிரியர்கள். குழந்தைகளின் மன வளர்ச்சி, உடல் வளர்ச்சி, உளவியலிலைக் கருத்தில் கொண்டு அவர்களின் வளர்ச்சி நிலைக்கேற்ப ஆக்கபூர்வமாக அவர்களை நெறிப்படுத்த வேண்டும்.

லாரன்ஸ் கோல்பெர்க் (Lawrence Kohlberg) நுண்ணறிவுடன் கூடிய நன்னெறி மேம்பாட்டிற்கான மாதிரி உருவினை உருவாக்கினார். இதன் மூலமாக ஆசிரியர் மாணவர்களின் முன்அனுபவங்கள் மற்றும் முன்னறிவாற்றலின் துணை கொண்டு மதிப்புணர்வு நெருக்கடிக்கான தீர்வினைக் காண பயிற்சி அளிக்கலாம். இம்மாதிரி உருவினைக் கொண்டு ஆசிரியர் மாணவர்களுக்கு மதிப்புணர்வு நெருக்கடியை தீர்ப்பதற்கான பயிற்சியினை அளிப்பார்.

1. முதலில் ஆசிரியர் மாணவர்களிடம் மதிப்புணர்வு நெருக்கடியுடன் கூடிய சூழல் ஒன்றினை அறிமுகப்படுத்துவார்.
2. மதிப்புணர்வு நெருக்கடியின் தன்மையினை மாணவர்கள் புரிந்து கொண்டனரா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வார்.
3. மதிப்புணர்வு நெருக்கடியின் போது தனி நபர் மற்றும் சமூகமானது எவ்வாறு பாதிப்படைகின்றனர் என்பதனை விளக்கிக் கூறுவார்.
4. பின்பு மாணவர்கள் அச்சூழலுக்கான தீர்வினை நிதானத்துடன் சிந்துத்துக் கூறும்படி ஊக்குவிப்பார்.
5. மாணாவர்கள் அந்நெருக்கடிக்கான தீர்வுகளைக் கூறும் போது, அவற்றினைக் குறித்த கலந்துரையாடலை ஊக்குவிப்பார். அவற்றின் பின்விளைவுகளை உணரச் செய்து, அத்தீர்வுகளுள் பொருத்தமான ஒன்றினைத் தேர்வு செய்யும்படி கூறுவார். இம்முறையின் மூலம் மதிப்புணர்வு நெருக்கடியைத் தெளிவாக்குதல், மதிப்புணர்வு போராட்டங்களை ஆக்கபூர்வமாக சந்திக்கும் ஆற்றல் ஆகியன மாணவர்களிடையே வளர்கின்றன.

**நன்னெறி அல்லது அறத்தைக் கற்பித்தல் (Moral Indoctrination)**

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நன்னெறியை கற்பிக்கும் போது அவர்களின் சிந்திக்கும் ஆற்றலினை மனத்தில் கொள்வதில்லை. நன்னெறியினை இன்றைய இளம் சமுதாயத்தினராகிய

மாணாக்கர்களுக்குப் போதிக்கும் போது, அவற்றின் முக்கியத்துவம் மற்றும் அவற்றைப் பின்பற்றாவிட்டால் ஏற்படக் கூடிய பின் விளைவுகளை ஆசிரியர் கூற வேண்டும். இதன் மூலம் மாணவர்களுக்கு நன்னெறிகளைக் குறித்து நேர்மறையான மனப்பான்மை உருவாகும். மாணவர்கள் நன்னெறிகளைத் தம் வாழ்நாள் முழுவதும் பின்பற்றுவதற்கான வழி பிறக்கும்.

**நன்னெறிக் கல்வியின் வடிவம் (Form of Moral Education)**

நன்னெறிக் கல்வியானது கல்வி நிறுவனங்களில் பல்வேறு வடிவங்களில் அளிக்கப்படுகிறது. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை:

1. கல்வி நிறுவனங்களில் காலை வழிபாட்டின் வழியே மாணாக்கர்களுக்கு ஒழுக்கம், நேரந்தவறாமை, இறைவழிபாடு, தேசிய உணர்வு, சமய நல்லிணக்கம் போன்றவை கற்றுத் தரப்படுகின்றன.
2. மாணாக்கர்களுக்கென தியான வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதன் மூலம் அவர்களின் மனம் ஒருநிலைப்படுகிறது, கவனம் ஒழுங்குபடுத்தப்படுகிறது, நினைவாற்றல் பெருகிறது.

## 1.7 மதிப்புணர்வுக் கல்வியின் நோக்கங்கள் (Aims of Value Education)

மதிப்புணர்வுக் கல்வியானது கீழ் உள்ள நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். மதிப்புணர்வுக் கல்வியின் மூலம்;

- மாணவர்களைப் பொறுப்புணர்வுடன் கூடிய குடிமக்களாக உருவாக்க முடியும்.
- அவர்களிடையே நன்னடத்தையை உருவாக்க முடியும்.
- அவர்களால் நன்னெறிகளையும், எதனை எவ்வாறு தக்க தருணங்களில் பின்பற்ற வேண்டும் என்பதையும் புரிந்து கொள்ள முடியும். எந்த நிலையிலும் நெறி பிறழாமல் நடக்க வேண்டும் என்ற மன உறுதியைப் பெற இயலும்.
- மதிப்புணர்வுகள் தொடர்பாக மனத்தில் எழும் போராட்டங்களின் அடிப்படைக் காரணத்தைப் பகுத்தாராய்ந்து, தெளிவுகண்டு வாழ முடியும்.
- ஒருங்கிணைந்த ஆளுமைப் பண்பு உடையவராக முடியும்.
- தம்முடைய மனத்தில் இருக்கும் மதிப்புணர்வுகளை மட்டுமின்றி பிறர் மனத்திலுள்ள கருத்துகளையும் புரிந்து கொண்டு மதிப்புணர்வுத் தொடர்பான மனப்போராட்டங்களைத் தவிர்க்க முடியும்.
- தன்னைப் பற்றிய கருத்தினை உருவாக்க முடியும்.


- பாரம்பரிய, நவீன மதிப்புணர்வுகளைப் பகுத்தாராய்ந்து தற்போதைய சூழலுக்கு ஏற்ற மதிப்புணர்வுகளைத் தேர்வு செய்து பின்பற்ற முடியும், மதிப்புணர்வுகளைத் தெளிவுபடுத்த இயலும்.
- மாணவர்களிடையே தம்மைப் பற்றியும், பிறரைப் பற்றியும் நேரிடையான மனப்பான்மையை உருவாக்க முடியும். இயற்கை வளங்கள், பொது உடைமைகள், சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்த முடியும்.
- கற்பவரை மேம்பட்ட மனிதனாக்கி, ஆளுமையில் விரும்பத்தகு மாற்றங்களை உருவாக்குவது.
- மாணவனிடம் நல்லது, கெட்டது, சரியானது, தவறானது என்பவற்றைப் பிரித்தறியும் ஆற்றலை வளர்த்தல்.
- விழுமங்களை சிந்தனையில் உள்வாங்கி செயல்கள் மூலம் வெளிப்படுத்தும் ‘தன்மயமாக்குதல்’ (Assimilate Internally) பெற்று திகழச் செய்தல்.
- விழுமக் கல்வி என்பது மாணவனை ஒழுக்க நெறிப்படுத்தும் செயல்முறையல்ல. நெறிப்படுத்துதல் விழுமக்கல்வியின் ஓர் உட்கூறு மட்டுமே.
- அறநெறிகளை அறிவது ஒழுக்க உணர்வுகளைப் போற்றி அதன்படி நடக்க முற்படுவது ஆகிய அனைத்தையும் மாணவனிடம் கற்பிக்க முயல்வதே விழுமக் கல்வியின் முக்கிய நோக்கமாகும்.
- சிறந்த விழுமக் கல்வித் திட்டத்தின் மூலம் மாணவனிடம் விழுமங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, அவற்றை சரியாகப் புரிந்து கொண்டு முக்கிய விழுமங்களான;
  - சமத்துவம்,
  - சகோதரத்துவம்,
  - சமயச் சார்பற்று செயல்படுதல்,
  - ஜனநாயகம்,
  - அறிவியல் மனப்பான்மை,
  - தன் சார்ந்த சமுதாயம் மற்றும் நாட்டின் மேம்பாட்டிற்குத் தன்னை அர்ப்பணித்தல்,
  - பிறர் உரிமைகளை மதித்தல்
- மதிப்புணர்வின் வரையறை, பொதுமைக்கருத்து, தன்மை மற்றும் வளமூலங்கள் பற்றிய அறிவாற்றல்.
- மதிப்புணர்வுகளின் வகைப்பாடு, அவற்றில் மனித வாழ்வியலுக்கு உள்ள தொடர்பு.
- மதிப்புணர்வுகளைப் பின்பற்றுவதன் அவசியத்தை உணர்ந்து, அவற்றைத் தேர்வு செய்து செயல்படுத்தும் திறன்.

- மாணவர்களுக்கு தம்மைப் பற்றியும், தம் தேசத்தைப் பற்றியும், பிற நாட்டினரைப் பற்றிய நேரிடையான தோழமை மனப்பான்மையை உருவாக்கி அதன் மூலமாகத் தேச ஒற்றுமை, உலக ஒற்றுமைக்கு வழி செய்தல்.
- பிறருடைய சமயம் மற்றும் நம்பிக்கைக்கு மதிப்பளித்தல்.
- சட்டதிட்டங்களை மதித்து நடத்தல்.
- சுற்றுச்சுழல் பாதுகாப்பதில் தனிநபரின் கடமை.
- சிறு குடும்ப நெறி பேணுவதில் பொறுப்புணர்வு.
- அடிப்படை பண்பு நலங்களாகிய வாய்மை, ஒற்றுமை, சகோதரத்துவம், அன்பு, அமைதி, தைரியம், சமத்துவம், சமயத்துவம், நீதி, பிற உயிரைத் துன்புறுத்தாமை, செய்யும் தொழிலைத் தெய்வதெனக் கருத்தில் கொள்ளும் குணம், கருணை, சகிப்புத்தன்மை, நல்லிணக்கம், அறிவியல் மனப்பான்மை மற்றும் உணர்வினை மாணவர்களிடையே ஏற்படுத்தும்.
- அவர்களை சாதி, மத, மொழி, சமய வேறுபாடு அற்றவர்களாக உருவாக்கல்.
- பரந்த மனப்பான்மையுடையவர்களாக்குதல்.
- ஒவ்வொரு நிலையிலும் மாணவர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று உணர்ந்து செயல்படும் திறன்.
- வயதிற்கேற்ப உள்ள மதிப்புணர்வுப் போராட்டங்களை தாமே எதிர்கொண்டு தெளிவுகாணும் திறனை உண்டாக்குதல்.
- முழுவதும் கற்றுத் தேர்ந்தவர்களாக்குதல். கல்வியின் உண்மையான பரப்பெல்லை அவசியத்தினை புரிந்து கொள்ளச் செய்தல்.

போன்றவற்றை வளரச் செய்து அதன்படி வாழ வகை செய்தலே நோக்கங்களாகும்.

## 1.8 மதிப்புணர்வுக் கல்வியின் குறிக்கோள்கள் (Objectives of Value Education)

ஆசிய – பசிபிக் நாடுகளில் விழுமக்கல்வி பிரச்சனைகளை ஆராய்ந்த சர்வதேச பயிற்றரங்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை விழுமக் கல்விக்கான முக்கியக் குறிக்கோள்களாக குறிப்பிட்டுள்ளது.



1. முழுமையான வளர்ச்சி

ஒவ்வொருவரிடமும் உடல்வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, மனஎழுச்சி வளர்ச்சி, சமூக வளர்ச்சி, ஒழுக்க வளர்ச்சி ஆகிய அனைத்திலும் சீரிய மதிப்புகளை முழுமையாக வளர்த்திடல்.

2. சமுதாய அக்கறையை வளர்த்தல்

ஒவ்வொருவரிடமும் தன் குடும்பம், சுற்றம், உறவுமுறை ஆகியவற்றைத் தாண்டி சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவு மக்களிடமும் அக்கறை கொள்ளும் பண்பை வளர்த்தல்.

3. சமூக நலன் காக்கும் உணர்வை வளர்த்தல்

ஒவ்வொருவரிடமும் ஜனநாயக நெறிமுறைகளைப் பின்பற்றுதல், பண்பாட்டு மதிப்புகளைப் போற்றுதல், சுற்றுச் சுழலின் வளமையைப் பாதுகாத்தல், அரசியல் விழிப்புணர்வைப் பெறுதல் போன்றவற்றில் ஈடுபாட்டினைத் தோற்றுவித்தல்.

4. தேசிய நலன்

ஒவ்வொருவரிடமும் தாய்நாட்டுப் பற்று, தேச நலனை முதன்மையாகக் கொண்டு செயல்படுதல், தேசிய ஒருமைப்பாட்டினைப் பாதுகாத்தல் போன்ற தேசிய மதிப்புகளை வளர்த்திடல்.

5. உலகளாவிய பரந்த மனப்பான்மை

ஒவ்வொருவரிடமும் பிறநாட்டு மக்களைப் புரிந்து கொள்ளுதல், அவர்களது நலனில் அக்கறை கொள்ளுதல் போன்ற பரந்த மனப்பான்மையை உருவாக்கல்.

6. விழிப்புணர்வு

மேலே குறிப்பிட்டுள்ள ஐந்து தளங்களிலும் ஏற்படக்கூடிய பிரச்சனைகள் பற்றிய விழிப்புணர்வையும், அவற்றிற்கேற்றவாறு உயர் நடத்தையையும் ஒவ்வொருவரிடமும் வளர்த்தல்.

## 1.9 மதிப்புணர்வுகளின் வகைகள் (Types of Values)

மதிப்புணர்வுகளை ஏழு (7) பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம். அவை பற்றி சற்று விரிவாகப் பார்க்கலாம்.

1. சுய மதிப்புகள்: **(Personal Values)**

ஒருவர் தான் வாழ்வில் பின்பற்றும் மதிப்புகள் இவை என்று எவற்றை பெருமையுடன் கூறுகிறானோ, அவையே அவரது 'சுய மதிப்புகள்' ஆகும். இவ்வகையில் விடாமுயற்சி, தேடிச் செல்லுதல் (Pursuits) ஆதிக்கம் செலுத்துதல், எதையும் தனதாக்கிக் கொள்ள முயலுதல், எதிலும் இன்பம் காண முயலுதல் போன்றவை அடங்கும். இவை பிற மனிதர்களை பாதிக்காதவரை உயர்மதிப்புகளே பிறரை பாதிக்கத் தொடங்கும் போது கீழ்நிலை மதிப்புகளாகக் கருதப்படும்.

2. சமய மதிப்புகள்: **(Religious Values)**

இறை நம்பிக்கை, இறைவனை அடையும் வழிமுறைகள், அத்தகைய வழிமுறைகளில் இருந்து விலகி நடப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகள் ஆகியவற்றுடன் தொடர்புடையவை, சமய மதிப்புகள் இயற்கை வாதிகள் இயற்கையை வணங்குவர். கருத்தியலாளர்கள் யாவற்றையும் கடந்து நிற்கும் கடவுளையும் இறைத் தூதர்களையும் வணங்குவர். பயனளவுக் கொள்கையாளர்கள் கருத்துப்படி சமய மதிப்புகள் சமூக இடைவினைகளால் தோன்றுகின்றன. எனவே சமூக மாறுதல்களுக்கு ஏற்ப மாற்றமடைபவை. ஆக சமய மதிப்புகள் மனிதருக்கு மனிதர் வேறுபடும்.

3. சமூக மதிப்புகள்: **(Social Values)**

எந்த ஒரு சமூகமும் முறையாக நன்கு இயங்குவதற்கு சில கட்டுப்பாடுகள் தேவை. இத்தகைய இயற்கை நியதிகளைப் பின்பற்றி வாழ்வதே சாலச் சிறந்தது என்பது இயற்கை வாதிகளின் கொள்கை. கருத்தியாளர்களோ தனி மனித சுதந்திரத்திற்கும் விடுதலை வேட்கைக்கும் மதிப்பளிக்கின்றனர். பயனளவுக் கொள்கையாளர்கள் சமூக மதிப்புகள், சமூத்தில் ஏற்படும் நிகழ்வுகளால், பெருவாரியான மக்களின் மனப்போக்கால் உருவாகின்றன என்கின்றனர். உதாரணமாக மதுபானம் அருந்துதல் மேலை நாடுகளில் சர்வ சாதாரணமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆனால் இந்திய மக்கள் அதை இழி செயலாகக் கருதுகின்றனர்.

4. பொருளாதார மதிப்புகள்: **(Economic Values)**

எப்பொருட்கள் அரிதாகக் கிடைக்கின்றனவோ அதிக மன நிறைவை அளிக்கின்றனவோ அவையே உயர் மதிப்பு உடையவை. எப்பொருட்கள் மிக அதிக அளவில் கிடைக்கின்றனவோ அவற்றால் விளையும் பயன்களும் குறைவோ அவை தாழ்நிலை மதிப்புடையவை.

5. அரசியல் மதிப்புகள்: **(Political Values)**

ஆரம்ப காலத்தில் மனசாட்சி மதிக்கப்பட்டு வந்தது. ஆனால் மக்களின் கல்வியறிவு சுதந்திர வேட்கை, அதிகாரப் பங்கீடு வேண்டும் என்ற மனப்போக்கு ஆகியவற்றால் ஜனநாயகம், சோஷியலிஸம், சமயச்சார்பின்மை (Secularism) போன்றவை செல்வாக்குப் பெறத் தொடங்கின.

6. அறிவுசார் மதிப்புகள்: **(Religious Values)**

இவை உண்மையின் பல வடிவங்களைப் புரிந்து கொள்வது தொடர்பானவை. வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்பது (Unity in Diversity) மோசமானவற்றிலும் நன்மையைத் தேடுவது. இருளிலும் வெளிச்சத்தைக் காண முயல்வது போன்ற அறிவார்ந்த செயல்களே உயர் மதிப்புடையவை. இவற்றிற்கு நேர்மாறான செயல்கள் தாழ்நிலை மதிப்புடையவை.

7. ஒழுக்க நெறி மதிப்புகள்: **(Ethical Values)**

ஆன்மீக மதிப்புகளும் (Spiritual Values) ஒழுக்க நெறி மதிப்புகளும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவை. சுயக்கட்டுப்பாடு, தன்னை உணர்ந்தறிதல் (Self-realisation), அகிம்சை (Non-violoence), உண்மையைப் பேசுதல் (Truthfulness), பரிவு (Sympathy) எளிமை (Celibacy), சுய கௌரவம் (Self-dignity), தன்னலமற்ற தொண்டு (Selfless Service) போன்றவை ஆன்மீக உயர் மதிப்புகளாகும். இவற்றிற்கு எதிரானவை தாழ்நிலை மதிப்புகளாகும். நாட்டில் வாழும் சமூகத்தினரின் பண்பாடு, கலாச்சாரம், வாழ்க்கை முறை மற்றும் தேவைகளுக்கேற்ப மதிப்புகள் வகைப்படுத்தப்படுகின்றன. இவற்றைக் கல்வியாளர்களும், தத்துவவியலாளர்களும் பல்வேறு வகைகளில் வகைப்படுத்தி உள்ளனர். வால்டர் ஜீ எவர்ரெட் (Wallter G Everett) தம்முடைய நன்னெறிக்கான புத்தகத்தில் (Book of Moral Values) மனித மதிப்புணர்வுகளை எட்டாக வகைப்படுத்தி உள்ளார்.

வால்டர் ஜீ.எவர்ரெட்டின் வகைப்பாடு

1. **பொருளாதார மதிப்புகள் (Economical Values)**: இவை செல்வத்தினையும், அதனால் பெறப்படுபவற்றைப் பற்றியும் குறிப்பதாகும். நாட்டின் வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றத்தையும் இவை குறிக்கின்றன. தனி மனிதரது பொருளாதார நிலை, சமூகத்தில் அவருடைய அங்கீகாரம் முதலியவற்றையும் இவை குறிக்கின்றன.
2. **உடல் சார்ந்த மதிப்புகள் (Physical Values)**: இவை உடல் நலம், மன நலம், உடல் தகுதியினைக் குறிப்பனவாகும்.
3. **பொழுதுபோக்கு மதிப்புகள் (Recreational Values)**: இவை ஓய்வு நேரத்தினைப் பயனள்ளதாகவும், மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாகவும் செய்யக் கூடிய பொழுதுபோக்கு அம்சங்களைக் குறிப்பதாகும். (உ.ம்) விளையாடுதல், புத்தகம் படித்தல்.
4. **தொடர்புடைய மதிப்புகள் (Associative Values)**: இவற்றைச் சமூக மதிப்புகள் (Social value) என்றும் கூறலாம். இவை மனித உறவுகளுக்கு இடையே இருக்க வேண்டிய நல்லிணக்கத்தைக் குறிப்பவையாகும். (உ.ம்) நட்பு, அன்பு, பாசம்.
5. **நடத்தை சார்ந்த மதிப்புகள் (Character related Values)**: இவை மனித நடத்தை நன்முறையில் அமைவதற்குப் பின்பற்ற வேண்டிய நீதிநெறி, சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், நேர்மை, நேரந் தவறாமை போன்ற குணநலன்களைப் பற்றியவையாகும்.

6. **அழகுணர்வு அல்லது கலையுணர்வு மதிப்புகள் (Aesthetic Values)**: இயற்கையழகு, கலைப் பொருள்களின் மீதுள்ள விருப்பம் ஆகியவற்றை இவை குறிக்கும். (உ-ம்) இயற்கைக் காட்சிகளை இரசித்தல், கலை நிகழ்ச்சிகளை ரசித்துப் பாராட்டுதல், கவிதை எழுதுதல், ஓவியம் வரைதல் முதலியவற்றைக் கூறலாம்.
7. **நுண்ணறிவு மதிப்புகள் (Intellectual Values)**: அறிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கம், நுண்ணிய கண்ணோட்டத்துடன் எதனையும் ஆராய்ந்து பார்க்கும் ஆற்றல் மற்றும் மனப்பாங்கினை இவை குறிக்கும்.
8. **சமயம் சார்ந்த மதிப்புகள் (Religious Values)**: இறை நம்பிக்கை, வழிபாடு, நேர்வழியில் நடத்தல், பாவ புண்ணியங்களை நம்புதல், விரதமிருத்தல், தானதர்மங்களைச் செய்தல், தியானம் செய்தல் முதலியவை இவற்றுள் அடங்கும்.

**ஸ்பெரன்ஜரின் வகைப்பாடு**

ஸ்பெரன்ஜர் (Spranger) என்பவர் மதிப்புகளை ஆறாக வகைப்படுத்தி உள்ளார். அவை;

1. **கருத்தியல் மதிப்புகள் (Theoretical Values)**: நன்னெறியைக் குறித்த கருத்துகள் மற்றும் தத்துவங்கள் ஆகியவை இவற்றுள் அடங்கும்.
2. **அரசியல் மதிப்புகள் (Political Values)**: அரசியலறிவு, அரசியலில் நாட்டம் முதலியவற்றை இவை குறிக்கும்.
3. **சமூக மதிப்புகள் (Social Values)**: சமூகத்தினரால் பிறர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற நற்பண்புகளை இவை குறிக்கும்.
4. **பொருளாதார மதிப்புகள் (Economical Values)**: பொருளாதாரத்தினை அடிப்படையாகக் கொண்ட மதிப்புகளைக் குறிக்கின்றன.
5. **அழகுணர்வு மதிப்புகள் (Aesthetic Values)**: கலையார்வத்தினை அடிப்படையாகக் கொண்ட மதிப்புகளை குறிக்கின்றன.
6. **சமயஞ்சார்ந்த மதிப்புகள் (Religious Values)**: சமயக் கருத்துகள், பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை ஆகும்.

இந்திய நாட்டில் மக்கள் ஆட்சியில் தற்போது கடைப்பிடிக்கப்படும் நவீன மதிப்புகள் பின்வருவனவாகும்.

1. நீதி (Justice)
2. சமத்துவம் (Equality)
3. சுதந்திரம் (Freedom)
4. ஜனநாயகம் (Democracy)
5. சமயச் சார்பின்மை (Secularism)
6. தனி நபர் உரிமையைக் காத்தல் (Maintianing Individual Rights)

7. அறியவில் முறையில் ஆராய்தல் (Scientific Inquiry)
8. அறிவியல் கண்டுபிடிப்புகளை உருவாக்கல் (Scientific Inventions)
9. சுதந்திரமான சிந்தனை (Independent Thinking)
10. தன்னைச் சார்ந்திருத்தல் (Self Reliance)
11. கல்விக்கும் மேம்பாட்டிற்கும் தொடர்பு காணுதல் (Seeking Relationship between Education and Development)
12. கல்வியினை உலகமயமாக்கல் (Globalisation of Education)
13. உற்பத்தியினை அதிகரித்து நாட்டின் பொருளாதாரத்தினை உயர்த்துதல் (Increasing Production and Enhancing Economic Development of the Country)
14. வாழ்க்கையைத் தரமுடையதாக்கி, புதியதொரு சமுதாயத்தினை உருவாக்குதல் (Forming New Society through Imporving Quality in Life)
15. பிற உயிரைத் துன்புறுத்தாமை (Ahimsa)
16. சகோதரத்துவம் (Broherhood)
17. பரந்த நோக்கு (Openmindedness)
18. மனித நேயம் (Humane Attitude)
19. ஒழுக்கம் (Ethics)
20. தனிநபர் மற்றும் சமூகத்தின் வளர்ச்சியானது ஒருங்கிணைந்து காணப்படல் (Integrated Development of Individual and Society)
21. சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல் (Environmental Protection)
22. சிறு குடும்ப நெறியின் அவசியத்தை உணர்ந்து செயல்படல் (Realising the Need for Small Family Norms and Act Accordingly)

**மதிப்புணர்வுகளை உலகமயமாக்குதல் (Internationalisation of Values)**

சார்பற்ற மதிப்புகள் உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இம்மதிப்புகள் ஐந்து முக்கிய கூறுகளைக் கொண்டதாக உள்ளன. அவை.

1. பெறுதல் (Receiving)
2. துலங்குதலை வெளிப்படுத்துதல் (Responding)
3. மதிப்பளித்தல் (Valuing)
4. ஒருங்கமைத்தல் (Organising)
5. பண்புடைமையாதல் (Characterisation)

இவற்றிற்கான விளக்கம் பின்வருமாறு;

1. **பெறுதல்:** பிறரின் மூலமாக நல்ல மதிப்புணர்வுகளைக் கேட்டறிந்து பின்பற்ற ஆரம்பித்தல். (எ.கா.) காலையில் எழுதல், உடற்பயிற்சி செய்தல்.
2. **துலங்குதலை வெளிப்படுத்தல்:** பிறரின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பது, பிறருக்கு உதவி செய்வது மதிப்புணர்வகளைச் செயல்பாடுகளில் தெரிவிக்கக் கூடியதாகும். (எ.கா.) பிறரின் மகிழ்ச்சி, துக்கங்களில் பங்கு கொள்ளுதல், ஏழை எளியவர்க்கு உதவி செய்தல்.
3. **மதிப்பளித்தல்:** மதிப்புணர்வுகளைப் பின்பற்றுவது மட்டுமன்றி அவற்றின் முக்கியத்துவத்தினையும் உணர்நது போற்றுதல். (உ.ம்) காலையில் எழுவது உடல் நலத்தையும், மன நலத்தையும் தரக் கூடியதாகும்.
4. **ஒருங்கமைத்தல்:** ஒருவர் நல்ல பழக்க வழக்கங்களைத் தான் மட்டும் பின்பற்றாமல் பிறருக்கும் அறிவுறுத்துதல் ஒருங்கமைத்தலாகும்.
5. **பண்புடைமையாதல்:** ஒருவர் நல்ல பழக்க வழக்கங்களைத் தொடர்ந்து மேற்கொள்வதால் அவர் நற்பண்பு உடையவராகிறார்.

## 1.10 மதிப்புணர்வுக் கல்வியின் பொருள் (Meaning of Value Education)

கற்போரிடத்தில் சரியான மனப்பான்மைகள், விழுமங்கள், உணர்வுகள், நடத்தைக் கோலங்கள் ஆகியவற்றை உருவாக்கிடும் அனைத்துக் கல்விச் செயல்களும், மதிப்புணர்வுக் கல்வி என்று குறிக்கப்படுகிறது. மதிப்புணர்வுக் கல்வி என்பது கற்பவரை மேம்பட்ட மனிதனாக்கி, அவரது ஆளுமையில் உரிய மாற்றங்களை ஏற்படுத்துவதே ஆகும். எனவே ஆளுமையின் மூன்று நிலைகளான அறிதல், உணர்தல், செயல்படுதல் ஆகிய அனைத்தும் மதிப்புணர்வுக் கல்வியில் உள்ளடங்கும். மதிப்புணர்வுக்கல்வி மூலம் மாணவன் நல்லது, கெட்டது, சரியானது தவறானது என்பனவற்றை பிரித்தறியும் ஆற்றலையும் அவற்றோடு தொடர்புடைய மன எழுச்சிகளையும் பெற்று விளங்குவதோடு, விழுமங்களை சிந்தனையில் உள்வாங்கி செயல்கள் மூலம் வெளிப்படுத்தும் "தன்மயமாக்குதலை" (Assimilate Internally) பெற்றுத் திகழ வேண்டும்.

மதிப்புணர்வுக் கல்வி என்பது மாணவனை ஒழுக்க நெறிப்படுத்தும் செயல்முறை அல்ல. நெறிப்படுத்துதல் மதிப்புணர்வுக் கல்வியில் ஒரு உட்கூறு மட்டுமே. மதிப்புணர்வுக் கல்வியும் சமூகப் பொருத்தப்பாடு அடையச் செய்தலும் ஒன்றல்ல. சமூகப் போக்குகளுக்கு ஏற்ப இணக்கமாக நடந்துகொள்வது சமூகப் பொருத்தப்பாடுடைய நடத்தையாகும். ஆனால் மதிப்புணர்வுக் கல்வி சிறந்த சமூக நடத்தை எவ்வாறு இருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டுகிறது. மதிப்புணர்வுக் கல்வியும் சமயக் கல்வியும் ஒன்றல்ல, மதிப்புணர்வுக் கல்வியை அளிப்பதற்கு சமயம் ஒரு கருவியாக வழிமுறையாக அமையலாம். அறநெறிகளை அறிவது ஒழுக்க உணர்வுகளைப் போற்றி அதன்படி நடக்க முற்படுவது ஆகிய அனைத்தையும் மாணவனிடம் கற்பிக்க முயல்வதே மதிப்புணர்வுக் கல்வியின் முக்கிய நோக்கமாகும்.

சிறந்த மதிப்புணர்வுக் கல்வித் திட்டத்தின் மூலம் மாணவனிடம் மதிப்புணர்வுகள் பற்றிய விழுப்புணர்வை ஏற்படுத்துவதோடு, அவற்றை சரியாகப் புரிந்து கொண்டு முக்கிய விழுமங்களான சமத்துவம், சகோதரத்துவம், சமய சார்பற்று செயல்படுதல், ஜனநாயகம், அறிவியல்

மனப்பான்மை, தான் சார்ந்த சமுதாயம் மற்றும் நாட்டின் மேம்பாட்டிற்கு தன்னை அர்ப்பணித்தல், பிறர் உரிமைகளை மதித்தல் போன்றவற்றை வளரச் செய்து அதன்படி வாழ வகை செய்தலே நோக்கம் ஆகும்.

## 1.11 மதிப்புணர்வுக் கல்வியின் பொதுமைக் கருத்து (Concept of Value Education)

சிறந்ததொரு கல்வி அமைப்பானது மாணவர்களிடையே ஆளுமைத் திறன், நுண்ணறிவுத் திறன், தேசபற்று, சேவை மனப்பான்மை, இறைநம்பிக்கை, நன்னடத்தை மேம்பாடு என அனைத்து பரிமாணங்களையும் மேம்பாடடையச் செய்வதாக இருக்க வேண்டும். இன்றைய சூழலில், அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் மதிப்புணர்வுக் கல்வி அளிக்கப்பட வேண்டும். மதிப்புணர்வுக் கல்வியின் மூலமாக மாணவர்களை ஒருங்கிணைந்த ஆளுமையுடையவர்களாக்க முடியும். இதனையே ஜே.எஸ். ராஜ்புட் என்னும் கல்வியாளர் “இன்றைய கல்வி அமைப்பானது மனித மதிப்புணர்வுகளை வளர்ப்பதில் பொறுப்புணர்வினை ஏற்றுக் கொள்ள வேண்டும்” என்று கூறுகிறார். கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களும், விரிவுரையாளர்களும் பாடஏற்பாடு, துணைகலைத் திட்டங்களின் துணை கொண்டு மாணவர்களுக்கு மதிப்புணர்வினை வலியுறுத்தவேண்டும். இதன் மூலமாக மாணவர்களின் சிந்தனை, உணரும் திறன், செயல்படும் விதமானது ஆக்கபூர்வமாக நெறிப்படுத்தப்படுகின்றன. ஆசிரியர் பாட ஏற்பாட்டில் உள்ள மதிப்புணர்வுக்கான தனிப்பாடத்தின் மூலமாக மட்டுமின்றி, அனைத்து பாடங்களின் வழியாகவும் மதிப்புணர்வுகளை போதிக்க வேண்டும்.

## 1.12 மதிப்புணர்வுக் கல்வி – வரையறு (Value Education - Definition)

- ★ மதிப்புணர்வுக் கல்வி எனப்படுவது சமூகமானது இளம் சமுதாயத்தினரிடம் எதிர்பார்க்கின்ற அறிவாற்றல், உடன்பாடான மனப்பான்மை, நன்னடத்தை மற்றும் செயல்படு திறனை உருவாக்கக் கூடியதாகும்.
- ★ இளம் சமுதாயத்தினரை ஆக்கபூர்வமாக நெறிப்படுத்தக் கூடிய கல்வி மதிப்புணர்வுக் கல்வி என அழைக்கப்படும்.
- ★ மதிப்புணர்வுக் கல்வி எனப்படுவது மாணவர்களுக்கு மனித மதிப்புணர்வுகளைக் குறித்துக் கற்பிப்பதாகும். இதனை விழுமக் கல்வி, மதிப்புக்கல்வி எனவும் அழைப்பர். இது மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் வழிகோலுவதாகும்.
- ★ சி.வி. குட் கூற்றுப்படி, மதிப்புணர்வுக் கல்வி என்பது ஒரு செயல்முறையின் மூலம் ஒரு நபரின் திறன், மனோபாவங்கள் மற்றும் பிற வகையான நடத்தை ஆகியவை அவர் வளரும் சமுதாயத்தில் நேர்மறையான மதிப்பீடுகளை அவருக்கு உருவாக்குகிறது.

## 1.13 மதிப்புணர்வுக் கல்வியின் தேவை (Need of Value Education)

இன்றைய இளம் சமுதாயத்தினரிடையே இந்திய நாட்டின் பண்பாடு, கலாச்சாரம் அதன் முக்கியத்துவம் பற்றிய அறிவாற்றலும், விழிப்புணர்வும் குறைந்து கொண்டே வருகின்றன. மனிதர்களுக்கு உரிய மதிப்புணர்வுகளும் நாளுக்கு நாள் குறைந்து வருவதைக் கண்கூடாகக் காணலாம், ஆசிரியர்கள், பெரியவர்கள், பெற்றோர்கள் அறிவுரைகூறுவதும், திருத்துவதும் நம்முடைய நலங்கருதித் தான் என்பதனை உணர்வதற்கு மாணவர்கள் தவறிவிடுகின்றனர். பிறரால் கண்டிக்கப்படுவதை அவமானமாகக் கருதுகின்றனர். சிறு தோல்விகளை சந்திக்கின்ற மனஉறுதி அவர்களிடையே இல்லை. தேர்வில் தேர்ச்சி பெறாவிட்டால், மீண்டும் நன்றாகப் படித்து வெற்றி பெறலாம் என்ற தன்னம்பிக்கை குறைந்து காணப்படுகிறது. தேர்வில் தோல்வி அடைவதை வாழ்வில் தோற்றுவிட்டதாகக் கருதி வீட்டை விட்டு ஓடிப் போவது, தற்கொலை செய்து கொள்வது எனத் தவறான முடிவுகளை எடுக்கின்றனர். வாழ்வில் முயன்றால் முடியாதது எதுவுமில்லை என்பதனை இன்றைய இளம் சமுதாயத்தினர் மறந்துவிடுகின்றனர். மேலும் திரைப்படங்களில் காண்பவற்றை உண்மையென்று நினைத்து இளம்வயதில் தடம்மாறிச் செல்பவர் அநேகர். அதில் வரும் வன்முறை காட்சிகளின் பாதிப்பினால் கொலை, கொள்ளை போன்ற தவறான செயல்களில் ஈடுபடுகின்றனர். மிகைப்படுத்திக் காட்டப்படுகின்ற காதல் காட்சிகளின் காரணமாக இளம் வயதிலேயே காதல், காதல் திருமணம் போன்ற நிகழ்வுகள் அதிகரித்து உள்ளன. இதனால் கல்வி, தொழில் என பலவகையில் பின்தங்கி விடுகின்றனர். தவறான பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகி விடுகின்றர்.

இன்றைய காலகட்டத்தில், அநேகருடைய குடும்பங்களில் தாய், தந்தை இருவரும் வேலைக்குச் செல்ல வேண்டிய பொருளாதார நெருக்கடி உள்ளது. குழந்தைகளுக்கு மதிப்புணர்வினைக் கற்றுத் தர வேண்டிய முக்கிய பங்கும், தலைமையான பங்கும் பெற்றோர்களுக்கு உரியதாகின்றன. கூட்டுக் குடும்பங்கள் இருந்த காலத்தில் வீட்டில் உள்ள பெரியோர்களைப் பார்த்து பிள்ளைகள் நன்னெறியினைக் கற்றுக் கொண்டனர். பிறருடன் எவ்வாறு பழக வேண்டும் என்பதனைக் கற்றுக் கொண்டனர். தனிக்குடித்தனங்கள், மிகுந்து வரும் இக்காலகட்டத்தில் பெற்றோர் தாம் ஒரு முன் உதாரணமாக செயல்பட்டுத் தம் பிள்ளைகளை நெறிப்படுத்த வேண்டும். குழந்தைப் பருவத்திலிருந்தே பெற்றோர்கள் தம் பிள்ளைகளை நல்லபடியாக வளர்க்க வேண்டும். குமரப்பருவத்தில் நண்பர்களின் சேர்க்கை, ஊடகங்களின் தாக்கம் முதலியவற்றினால் தம்முடைய பிள்ளைகள் தடம்மாறி செல்லாமல் அவர்களை நெறிபடுத்த வேண்டியது பெற்றோர்களின் கடமையாகிறது. பெற்றோர்களுக்கு அடுத்தபடியாக, பிள்ளைகள் அதிக நேரங்களை கழிப்பது கல்வி நிறுவனங்களிலே ஆகும். இதனால் இளம் சமுதாயத்தினரை வழிநடத்திச் செல்லும் சிறப்புப் பொறுப்பு ஆசிரியருக்கு உரியதாகிறது. மேலும் அவர்கள் வீடு, சமூகம் மூலமாக மதிப்புணர்வினைக் கற்றுக் கொண்டாலும், அதனை திண்மையாக வலியுறுத்துவது, கல்வியின் மூலமே சாத்தியமாகும். இதனால் மாணவர்களுக்கு நன்னடத்தை, நன்னெறி முதலியவற்றைச் சிறப்புற போதிக்க மதிப்புணர்வுக் கல்வி அவசியமாகிறது.

மேலும் இன்றைய சமுதாயத்தில் வன்முறை நாளுக்கு நாள் பெருகி வருகின்றது. மக்களிடையே ஒற்றுமையுணர்வு, தேசப்பற்று, பொது உடைமைகளின் மேல் உள்ள பொறுப்புணர்வு, சமூகப் பொறுப்புணர்வு குறைந்து கொண்டே வருகின்றது. சட்ட ஒழுங்கினை மீறுதல் அதிகரித்து வருகின்றது. இதனைப் பற்றிய விழிப்புணர்வை நாளைய குடிமக்களாகிய மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. 1972 ஆம் ஆண்டு உலக அளவிலான கல்வி மேம்பாட்டிற்கென யுனெஸ்கோவில் கூடிய குழுவமைப்பானது தனது அறிக்கையான "Learning to be" என்பதில் "மதிப்புக் கல்வியின் மூலம் ஒருவர் சமூகத்தில் நல்ல மனிதராக உருவாக முடியும்" என்று வலியுறுத்தியது. மதிப்புணர்வுக் கல்வியின் முக்கியத்துவத்தினை உணர்ந்த ரோகர் (Rogar) என்னும் உளவியல் அறிஞர் 1979 ஆம் ஆண்டில் "மதிப்புணர்வினை போதிக்காத கல்வியானது புரதச் சத்தற்ற உணவிற்குச் சமமானது" என்று கூறினார். மகாத்மா காந்தி அடிகளும் மதிப்புணர்வுக் கல்வியினைக் கருத்தில் கொணடு 'கல்வி எனப்படுவது குழந்தையின் உடல், மனம், ஆன்மாவிலிருந்து நன்னடத்தையினை வெளிப்படுத்தக் கூடியதாகும்' என்றார். மேலும் ஆர்.பி. சுக்லா (R.P. Shukla) என்னும் கல்வியாளர் 1984 ஆம் ஆண்டில் "தற்போது நிலவி வரும் ஏழை, பணக்காரன் எனும் பாகுபாடு, படித்தவர், படிக்காதவர் எனும் வேறுபாடு, சுயநலமுடைமை, வன்முறை, மாணவர்களுக்கு பொருளாதார அடிப்படையில் நல்ல முறையில் பிற்காலத்தில் நடத்துவதற்கு தேவையான அறிவாற்றல், திறனை தராத கல்வியின் தன்மை, வரதட்சணை கொடுமைகள், சாதி, மத, மொழிப் பிரிவினைகள் போன்றவை உண்மையான மதிப்புணர்வை போதிக்காத கல்வி முறையின் காரணமாக நிகழ்கிறது" என்கிறார். இவரும் இன்றைய சூழலில் மதிப்புணர்வுக் கல்வியினைக் கல்வி நிறுவனங்களில் கற்பிப்பது மிகவும் அவசியமாகும் என வலியுறுத்துகிறார்.

## 1.14 மதிப்புணர்வுக் கல்வியின் அவசியம் (Importance of Value Education)

### 1. ஒழுக்கச் சிதைவு: (Value Erosion)

சமுதாயத்தின் அனைத்துப்பிரிவு மக்களிடமும் "விழுமச் சிதைவு" அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் சமூகச் சீரழிவு தோன்றியுள்ளது. இதனைத் தடுத்து நிறுத்திட இளம் பிராயத்திலேயே குழந்தைகளிடம் விழும உணர்வுகளை விதைத்திடல் அவசியமாகிறது.

### 2. ஒழுக்க மேம்பாட்டை வலியுறுத்தாத கல்வி:

முன்பெல்லாம் மாணவர்களிடம் நல்லொழுக்கத்தை வளர்த்தலே கல்வியின் தலையாய நோக்கமாகக் கொள்ளப்பட்டது. ஆனால் இன்றைய கல்வி முறையில் 'அறிவைத் தேடுவதே கல்வி' என்று கருதப்பட்டு ஒழுக்க வளர்ச்சி குறித்து யாரும் கவலைப்படாத நிலை

தோன்றியுள்ளது. படித்தவர்கள் பழிபாவத்திற்கு அஞ்சுவதில்லை. சமூகத்தில் குற்றங்கள் மலிந்து, மக்கள் மாக்களாக வாழத் தொடங்கியுள்ளனர். இச்சீரழிவில் இருந்து சமுதாயத்தைக் காத்திட பள்ளிகளில் விழுமக்கல்வியை வழங்குவது உடனடித் தேவையாகிறது.

**3.** தன்னலப்போக்கு தலைதூக்கியிருத்தல்:

தான், தன் சுகம் என்ற தன்னலப்போக்கு அனைத்துப் பிரிவு மக்களிடமும் இன்று தலை விரித்தாடுகிறது. யார் எக்கேடு கெட்டால் என்ன, தன் தேவைகள் நிறைவு, பெற்றால் சரி என்ற போக்கே எங்கும் காணப்படுகிறது. சமுதாய அக்கறையுள்ள மனிதர்களைக் காண்பதே அரிதாக உள்ளது.

**4.** குறுக்கு வழியில் செயல்படுவதே சாமர்த்தியம் என்ற மனப்போக்கு:

'வலியவன் வகுத்ததே வாய்க்கால்' என்பதை நம்பி வன்முறை மூலம் பிரச்சனைகளைத் தீர்க்க முயலுதல். பணம் பாதாளம் வரை பாயும் என்ற கூற்றுக்கு ஏற்ப, கையூட்டுக் கொடுத்து எதையும் சாதிக்க முடியும் என்ற மனோபாவத்துடன் செயல்படுதல், சகிப்புத்தன்மை, நேர்மை, பரிவு, பொறுமை ஆகியவை கையாலாகாதவனின் பண்புகள் என எண்ணுதல் போன்றவை இன்று நம் சமூகத்தில் புரையோடிக் கிடக்கின்றன. இத்தகைய நிலையில் மாற்றங்களை ஏற்படுத்திட மதிப்புணர்வுக் கல்வியை அனைத்து மாணவர்களுக்கும் அளித்தல் அவசியமானது.

**5.** சமுதாய மற்றும் தேசிய நலனில் அக்கறையின்மை:

இன்றைய இளைஞர்களிடம் சமுதாய மற்றும் தேசிய நலனில் அக்கறை, தேசிய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை, தன்னலத் தியாகம் ஆகிய நற்பண்புகள் குறையத் தொடங்கியுள்ளன. இவற்றை மீண்டும் துளிர்விடச் செய்ய மதிப்புணர்வுக் கல்வி அவசியம் என்று உணரப்பட்டுள்ளது.

**6.** நுகர்வு மையக் கலாச்சாரம்

நுகர்வு மையக் கலாச்சாரத்தை அதிரடியாய் விளம்பரப்படுத்தும் ஊடகங்களின் அபரிமித செல்வாக்கு அன்றாட வாழ்வில் மக்களின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தி அவர்களை நன்னெறிப்படுத்தும் சமயச் செல்வாக்கு (Religious Influence) மங்கத்தொடங்கி நுகர்வு மையக் கலாச்சாரத்தை அதிரடியாய் விளம்பரப்படுத்தும் ஊடகங்களின் செல்வாக்கு அதிகரித்துள்ளது. இதனால் எப்பாடுபட்டாவது, நுகர் பொருட்களை வாங்கிட வேண்டும் என்ற வெறி மக்களிடம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து எழும் சமூகச் சீரழிவைத் தடுத்திட பள்ளிகளின் மூலம் விழுமக் கல்வியை அளித்து இளைய தலைமுறையினரைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

## 1.15 மதிப்புணர்வுகளின் வளமூலங்கள் (Sources of Values)

மதிப்புணர்வுகளின் ஆதாரங்களாக உள்ளவை வளமூலங்களாகும். இவற்றினை அடிப்படையாகக் கொண்டு மதிப்புணர்வுகள் உருவாகிச் செயல்படுகின்றன. அவற்றிலுள்ள நெறிமுறைகளைப் பின்பற்றி மதிப்புணர்வுகள் காலந்தொட்டு வழிநடத்தப்படுகின்றன.

மதிப்புணர்வுகளின் வளமூலங்கள்

1. இந்தியத் தத்துவங்கள் (Indian Philosophies)
2. சமூக-பண்பாட்டு பாரம்பரியங்கள் (Socio-Cultural Traditions)
3. சமயம் (Reliigion)
4. இந்திய அரசாங்க அமைப்பு (Indian Constitution)
5. புகழ் பெற்ற நிறுவனங்கள் மற்றும் மனிதர்கள் (Reputed Institutions and Eminent Persons)

### 1.15.1 இந்தியத் தத்துவங்கள் (Indian Philosophies)

இந்தியத் தத்துவங்கள் வாழ்க்கை நெறியினை விளக்குவதாக உள்ளது. தத்துவவியலாளர்கள் மனிதர்கள் பின்பற்ற வேண்டிய மதிப்புணர்வுகளை நான்காகப் பிரித்துள்ளனர். அவை,

1. **பிரம்மசரியம்** - திருமணமாகாதவர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு முறைகள் (உ.ம்) மனக் கட்டுப்பாட்டுடன் வாழ்க்கையை மேற்கொள்ளல்.
2. **கிரகஸ்தம்** - திருமணமானவர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு முறைகள். (உ.ம்) வாழ்க்கைத் துணைக்கு உண்மையாக இருத்தல், இல்லற நெறி மாறாமல் நடத்தல்.
3. **வானபிரஸ்தம்** - வாழ்க்கையின் சுக துக்கங்களைச் சமமாக கருதும் நிலை. எல்லாம் மாயை என்ற மனப்பக்குவமடையும் நிலையில் இருத்தல்.
4. **சன்னியாசம்** - துறவு வாழ்க்கையை மேற்கொள்ளல்.

வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில் மனிதனுடைய மதிப்புணர்வுகளும், கடமைகளும் மாறுபடுகின்றன. மனிதன் மதிப்புணர்வுகளினை ஆறு வழிகளில் பின்பற்றுவதாக வேதங்கள் எடுத்துரைக்கின்றன. அவை,

1. நியாயம் (Nyaya) – எந்நிலையிலும் நியாய தர்மத்தினைக் கூறுதல்.
2. வைசேசிகா (Baishesika) – தர்ம நெறியினைப் பின்பற்றல்.
3. சாம்கியா (Samkhya) – சுதந்திரமான சிந்தனை மற்றும் செயல்பாடு.
4. மிமிசா (Mimesa) – வழிபாடுகளின் மூலமாக இறைவனை திருப்திப்படுத்தல்.
5. தியானம் (Yoga) – தியானத்தின் வழியே மனத்தினை ஒருநிலைப்படுத்துதல்.
6. வேதாந்தம் (Vedanta) - இறைவன் ஒருவரே என்று நம்புதல்.

இந்தியத் தத்துவங்கள் மூலமாக மதிப்புணர்வுகளைப் பற்றி அறிந்து மக்கள் அவற்றைப் பின்பற்றினர். இவற்றின் வழியே மக்களிடையே அறிவியல் மனப்பான்மையும் (Scientific Attitude), அறிவியல் உணர்வும் (Scientific Temper) வளர்கின்றன. அறிவியல் உணர்வானது நான்கு முக்கிய உட்கூறுகளை உடையதாகும். அவை,

1. வாழ்வதற்கான நெறிமுறை (Way of Life)
2. சிந்திக்கின்ற முறை (Process of Thinking)
3. செயல்படும் முறை (Process of Acting)
4. பிறரோடு ஒத்து வாழுகின்ற முறை (Process of Adjustment with Others)

இவ்வுணர்வானது மதிப்புணர்வுகளோடு தொடர்புடையதாக விளங்குகிறது. இவ்வுணர்வு இந்திய மக்களிடையே பிற நாட்டு மக்களினைக் காட்டிலும் அதிகமாகவே உள்ளது. ஜவஹர்லால் நேரு அவர்கள் "மேற்கத்திய நாடுகளில் அறிவியல் உணர்வின் மேம்பாடு காணப்படுவதில்லை" என்று கூறுகிறார். இந்திய தத்துவங்கள் அறிவியல் உணர்வுகளை மூன்று நிலைகளில் உணர்த்துகின்றன. அவை,

1. அறிவியல் உணர்வின் பொருள்.
2. உலகத்தின் கண்ணோட்டத்தில் தனிநபருடைய அறிவியல் உணர்வின் நிலை.
3. அறிவியல் உணர்வுகளைச் செயலின் மூலம் வெளிப்படுத்தும் முறை முதலியன ஆகும்.

மக்கள் தாம் கேட்கின்ற, வாழ்கின்ற தத்துவங்களின் வழியே மதிப்புணர்வுகளின் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டு பின்பற்றுகின்றனர்.

### 1.15.2 சமூக – பண்பாட்டு பாரம்பரியங்கள் (Socio – Cultural Traditions)

இந்திய நாட்டில் உள்ள சமூக அமைப்புகளான இல்லறம், திருமண வாழ்க்கை முறை, சமயம், பொருளாதாரம், கல்வி, இனம், சட்டம் மற்றும் ஒழுங்கு முறை முதலியன மதிப்புணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகின்றன. மனிதனாகப்பட்டவனின் மதிப்புணர்வுகள் (Values) அவனின் நடை உடை பாவனை பேசும் பாங்குகளில் இருந்து வரையறுக்கப்படுபவை. அப்படிப்பட்ட மதிப்புணர்வுகளைப் பெறுவதற்கான இடங்கள் நற்பண்புகள் நிறைந்த நமது கலாச்சாரங்களை செவ்வனே பின்பற்றக் கூடிய நமது வீட்டுச் சூழல், பள்ளிகள், நல்ல நூல்கள், சிறந்த கல்வியாளர்களுடன் நட்பு, ஆசிரியப் பெருந்தகைகள் எனக் கூறிக்கொண்டே செல்லலாம். இந்த மதிப்புணர்வுகள் நமது சிறப்புமிகு பாரம்பரிய கலாச்சாரத்தைக் கட்டிக்காக்க வாரி வழங்கும் மதிப்புணர்வுகள். இவற்றை அளிக்க உதவும் கல்விதான் சிறந்த மதிப்புணர்வுக் கல்வியாக ஏற்றுக் கொள்ள முடியும்.

**மதிப்புணர்வுக்கல்விக்கான வளமைப் பொருட்கள்: (Resources for Value Education)**

1. இராஜாஜி (1973) அவர்களின் "மதிப்புணர்வு சார்ந்த பள்ளிக்கல்வி" என்ற நூல் குறிப்பாக அதில் உள்ள "விழுமங்களின் சூழ்நிலைப் பரிமாணங்கள்" விழுமங்களோடு தொடர்புடைய பள்ளிச் செயல்கள்" என்னும் இரு அத்தியாயங்கள் விழுமக்கல்வியை அளித்திடுதலில் ஆசிரியர்களுக்கு மிகவும் பயனுள்ளவையாக இருக்கின்றன.

2. ஹாலி - ஹாலி (1975) எழுதிய "வகுப்பறையில் மனிதநேய மதிப்புகள்" என்னும் நூல் மாணவர்களிடையே விழுமங்களை உருவாக்கிட உதவும் வகுப்பறைச் செயல்கள் பற்றி விவரிக்கிறது.

3. தகவல் பரிமாற்றத்தை மதிப்பீடு செய்யும் முறை மூலம் விழுமங்களை வளர்த்தல் என்னும் நூல் நாசாரத் மற்றும் வேப்லஸ் (Nasarath and veplas) ஆகியோரால் இயற்றப்பட்டுள்ளது.

4. 1987 - ல் ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிக்கும் தேசிய திட்டத்தின் கீழ் NCERT தயாரித்த வளமை நூல்கள் (பகுதி 1) பொதுவானது.

(பகுதி – 2) தொடக்க நிலை மற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கானது.

இது ஆசிரியர்களுக்கான மேற்பார்வை நூலாகப் பயன்படுகிறது.

5. "கல்வியில் மனித விழுமங்கள்" என்னும் தொடர் நூல்கள் "ஸ்ரீ சத்யசாயி" அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் ஆரம்ப நூல்களான I மற்றும் II பல்வேறு சமயங்களோடு தொடர்புகொண்ட வழிபாட்டுப் பாடல்களையும், பக்திப் பாடல்களையும் கொண்டுள்ளன. இவை ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் மிகவும் பயனுள்ளவையாகத் திகழ்கின்றன.

6. 1986 – ல் மு. இராமராவ் என்பவரால் இயற்றப்பட்ட "நன்னெறிக் கல்வி" ஒரு செயல்முறை அணுகுமுறை என்ற நூல் விழுமக் கல்வியை அளித்திடும் உத்திகளையும், மதிப்பிடும் முறைகளையும் தெளிவாக விளக்குகிறது.

7. கே. சுப்பிரமணியன் (1990) எழுதிய "விழுமக்கல்வி" என்னும் நூல், கடவுள், வழிபாடு, உண்மை, அறம், அன்பு, செயல், காணிக்கை செலுத்துதல் (Offering), சிக்கனம், மதம், அருள் போன்ற கருத்துக்களுக்கான விளக்கங்களை நமது இதிகாச புராணங்களிலிருந்து எடுக்கப்பட்ட உதாரணங்கள் மூலம் தெளிவாக்குகிறது.

### 1.15.3 சமயம் (**Religion**)

சமயங்கள் அடிப்படையில் நன்னெறிகள் போதிக்கப்படுகின்றன. இறைவன் ஒருவனே என்று நம்புதல், இறைவன் ஜோதி வடிவானவன் என்று போற்றுதல் அனைத்துச் சமயங்களிலும் காணப்படுகிறது. இறைவனை நம்புதல், அவருக்கு உண்மையாக இருத்தல், சரணாகதி அடைதல், உண்மை, சுயநலமின்மை, மன்னிக்கின்ற குணம், போதுமென்ற மனமுடைமை என்பன இறைவனை அடைவதற்கான வழிகள் என அனைத்துச் சமயங்களும் கூறுகின்றன. சமயங்கள் வேறுபட்டாலும் அவற்றால் போதிக்கப்படுகின்ற மதிப்புணர்வுகள் அடிப்படையில் ஒன்றாகவே உள்ளன. அவற்றின் வழியே இறையுணர்வு, கடமையுணர்வு, நன்னெறி, இல்லற தர்மம் முதலியவை மறைமுகமாகப் போதிக்கப்படுகின்றன.

சமயம் என்பது இறைவனிடம் ஒருவர் கொண்டுள்ள நெறி, இறை வழிபாடு, தான தர்மம், ஆன்மீகப் பயணம், சடங்குகள் முதலியன ஆகும். இறைவனை நம்புபவர், தமது சமயங்களுக்கு புண்ணியங்களை நம்புவர், தீய செயல்களுக்கு அஞ்சுவர், விரதமிருப்பர், தான தர்மங்களைப் புரிவார்கள், ஊழ்வினைப் பயனை நம்புவர். சமயங்கள் வேறுபட்டாலும், அவற்றின் வழியாகக் கூறப்பட்டுள்ள நற்கருத்துகள் அன்பு, பரிவு, பிறர்நலங்கருதுதல், அமைதி, ஒழுக்கம் முதலியவற்றையே போதிக்கின்றன. சமய நூல்களான பகவத் கீதை, பைபிள், திருக்குரான் முதலியவை இவற்றையே போதிக்கின்றன. சமய போதகர்களான இயேசு, நபிகள், ஆதிசங்கரர் முதலானோர் தீண்டாமையை வெறுத்துள்ளனர். இறைவன் ஒன்றே என்று அறிவுறுத்துகின்றனர்.

சமய வழிபாடுகளில் மரம், பறவை, விலங்கினம் முதலியவைகள் புனிதமாகக் கருதப்படுகின்றன, வழிபடப்படுகின்றன. (உ-ம்) வெள்ளைப் புறாவானது கிறிஸ்துவ மதம் மற்றும் இஸ்லாமிய மதத்தினரால் புனிதமாகக் கருதப்படுகிறது. மயிலானது முருகப் பெருமானின் வாகனமாகக் கருதப்படுகிறது. இவற்றை மறைமுகமாகப் பிற உயிரினங்களை நேசிக்கும் குணத்திற்கு வித்திடுகின்றனர்.

சமயத்தால் வேறுபட்டிருந்தாலும் பண்டிகை நாள்களில் இந்தியர்கள் ஒருவருக்கு ஒருவர் வாழ்த்தினை தெரிவித்தல், இனிப்புகளை வழங்குதல் முதலியவற்றின் மூலமாக தமது அன்பினைப் பரிமாறிக் கொள்கின்றனர். தீபாவளி நாள்களில் இந்துக்கள் மட்டுமின்றி கிறிஸ்துவர்களும், இஸ்லாமியர்களும் கூட வெடிகளையும், மத்தாப்புகளையும் வெடித்துக் கொண்டாடுகின்றனர். வட இந்திய பண்டிகைகளான ‘ஹோலி’ எனப்படும் வண்ணத் திருவிழாவானது அனைத்து சமயத்தில் உள்ள இளம் சமுதாயத்தினரும் இன்று மகிழ்ச்சிக்காக ஒருங்கிணைந்து கொண்டாடுகின்றனர்.

ஒரு சமயத்தில் கூறப்பட்டுள்ள கருத்துகளால் கவரப்பட்ட ஒருவர், அதற்கு மாறவும் இந்தியச் சட்ட அமைப்பில் மனித உரிமைச் சட்டம் உள்ளது.

### 1.15.4 அரசியலமைப்பு (Constitution)

இந்தியக் கலாச்சாரம் தொன்மையானது பாரம்பரியம் மிக்கது சமத்துவம் (Equality), சகோதரத்துவம் (Fraternity), நீதி மற்றும் நேர்மை (Justice and Honesty), சுதந்திரம் (Freedom),

வேற்று மத சகிப்புத் தன்மை (Religious Tolerance), ஜனநாயகம் (Democracy), மற்றும் சுற்றுச்சூழலைப் பேணுதல் (Protecting the Environment) போன்றவை இன்று மேம்பட்ட சமூகத்தின் அடையாளங்களாக வர்ணிக்கப்பட்டாலும் இவை நமது கலாச்சாரத்தின் ஆணி வேர்களாக இருந்து வந்திருக்கின்றன.

1. சமத்துவம்: **(Equality)**

இந்திய பண்பாட்டிலும் இந்திய அரசியல் அமைப்பிலும், ஆணுக்கும் பெண்ணுக்கும் சம முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. சம உரிமை என்பது ஒரே மாதிரியான முக்கியத்துவம் என்று பொருள் அல்ல. (Equality does not mean Uniformity) வெவ்வேறு வகைகளில் ஆணுக்கும் பெண்ணுக்கும் முக்கியத்துவம் சம அளவில் அளிக்கப்பட்டுள்ளது என்பதே இதன் பொருள். நம் நாட்டுக் கலாச்சாரப்படி பெரும்பான்மையோர் கடவுளை சக்தியின் உருவமாகவே வழிபடுகிறோம். நதிகளுக்கு பெண்பால் பெயர்களே வைக்கப்பட்டுள்ளன. சமயச் சடங்குளில் கணவன் மனைவி இருவரும் இணைந்து பங்கேற்றலே சிறப்பாகக் கருதப்படுகின்றது.

2. சகோதரத்துவம்: **(Fraternity)**

தாய், தந்தை, கணவன் மற்றும் மனைவியைத் தவிர அனைவரையும் உடன் பிறவா சகோதர சகோதரிகளாகக் கருதும் வழக்கம் நமது சமூகப் பாரம்பரியத்தில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. வீதியில் செல்லும் முன்பின் தெரியாத மனிதரையும், குழந்தைகள் “மாமா” என்று அழைப்பதை இந்தியாவில் எங்கும் காணலாம். மாமா என்றால் சிறப்புக்குரியவர், தாயோடு உடன்பிறந்தவர் எனப் பொருள்படும். அனைவரையும் சகோதரராக ஏற்கும் விழாவே “ரக்ஷாபந்தன்” என்ற பெயரில் வட இந்தியாவில் மிகப் பிரபலமாக உள்ளது என்பதை யாவரும் அறிவர். அப்படிப்பட்ட உயரிய கலாச்சாரத்தைக் கொண்டது நமது தாய்நாடு.

3. நீதி மற்றும் நேர்மை: **(Justice and Honesty)**

இந்தியர்கள் சமயப்பற்று மிக்கவர்கள். உலகத்தின் முக்கிய மதங்களான இந்து மதம், புத்த மதம், ஜைன மதம் போன்றவை இந்நாட்டு மண்ணில் தோன்றி உலகம் முழுவதும் விரவி இருக்கின்றன. சமயக் கோட்பாடுகளும், சடங்குகளும் அன்றாட வாழ்வில் மக்களின் நடத்தையைக் கட்டுப்படுத்துபவையாக இருந்து வந்துள்ளன. இன்று கூட உலகிலேயே இந்தியாவில் தான் குற்ற விகிதம் (Crime Rate) மிகக் குறைவு.

4. சுதந்திரம்: **(Freedom)**

பண்டைய இந்தியாவில் கூட சுதந்திரம் தழைத்தோங்கி இருந்தது. பல்வேறு சிறுசிறு நாடுகளாக இருந்த போதும் அவை செம்மையாக ஆளப்பட்டு தனிநபர் உரிமைகள்

பாதுகாக்கப்பட்டன. சோழர்கால கல்வெட்டுகளும், செப்பேடுகளும் அன்றைய தமிழகத்தில் "குடவோலை" முறை மூலம் மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்ததை வெளிப்படுத்துகின்றன. தளைகளில் இருந்து விடுதலை பெறுவதையே "வீடுபேறு" அல்லது மோட்சம் என்று அழைத்தனர். அனைவரும் தன் விருப்பப்படி வாழ, சுதந்திரமாகச் செயல்பட நமது அரசியலமைப்ப வழிவகை செய்துள்ளது. அடிப்படை உரிமைகளை அவருக்கு வழங்குகிறது.

### 5. வேற்றுமத சகிப்புத்தன்மை: (Religious Tolerance)

நம் நாட்டில் அனைத்து சமயத்தவர்களும் இணக்கமாக வாழ்வதற்கு பல்வேறு சான்றுகள் உள்ளன. ஹைதர் அலியும் திப்பு சுல்தானும் கோவில்களுக்கு மான்யங்கள் அளித்த வரலாறு நமக்குத் தெரியும். இன்றும் கூட இந்துக்கள் நாகூர் தர்காவுக்கும் வேளாங்கண்ணி மாதா கோவிலுக்கும் சென்று வழிபடுவதைக் காணலாம் ஸ்ரீரங்கத்தில் துலுக்க நாச்சியாருக்கு வழிபாடு நடைபெறுவது தொன்று தொட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

### 6. ஜனநாயகம் (Democracy)

ஜனநாயகம் என்னும் சொல் 'டெமான்ஸ்' மற்றும் 'கிரேடிக்' என்னும் இரு கிரேக்க வேர் சொற்களிலிருந்து உருவானது. டெமான்ஸ் என்றால் 'மக்கள்' என்றும், கிரேக்கம் என்றால் 'சக்தி' என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. ஜனநாயகம் என்பதற்கு 'மக்கள் சக்தி' அல்லது 'மக்களுக்கே அதிகாரம்' என்று பொருள் கொள்ளப்படுகிறது. மேலும் தேர்தல்கள், பதவிகள், சட்டமன்றங்கள், நீதிமன்றங்கள் என்பவை ஜனநாயகத்தின் அடையாளச் சின்னங்கள் ஆக காணப்படுகிறது. அமெரிக்காவின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆபிரஹாம் லிங்கனின் கருத்துப்படி, ஜனநாயகம் என்பது மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் ஆட்சி மக்கள் ஆட்சி முறையாகும். மேலும் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் கருத்துப்படி, ஜனநாயகம் என்பது ஒரு வாழ்க்கை முறை, வெறும் அரசியலமைப்பு முறை மட்டும் அன்று. அனைவருக்கும் சம சுதந்திரம் மற்றம் சம உரிமையை இனம், மதம், பாலினம், சமூக அந்தஸ்த்து என்ற எந்த வேற்றுமையும் பாராட்டாது அளித்தலை உறுதி செய்வதாகும். ஜனநாயகம் என்பது சமூகத்துவம் மற்றும் சமயச் சார்பின்மை அடிப்படையில் அமைந்த ஆட்சி முறையாகும்

### 7. சுற்றுச்சூழலைப் பேணுதல்: (Protecting the Environment)

நீர் நிலைகளைத் தூய்மையாக வைத்திருத்தல், கோவில்களைச் சுற்றி தெருக்கள் அமைத்து தூய்மையாகப் பராமரித்தல், கிராமக் குளங்களைத் தூர்வாருதல், மற்ற உயிரினங்களையும் நேசித்து கருணை காட்டுதல் (வீட்டு வாசலில் அரிசி மாவு கொண்டு கோலமிடுதல், காக்கைக்கு அன்னமிட்ட பின்பே உண்ணுதல், மாட்டுப் பொங்கல் கொண்டாடுதலை

நினைவில் கொள்ள வேண்டும்) போன்ற பண்புகள் நம் மக்களிடம் தழைத்தோங்க சமயக் கோட்பாடுகள் பெரிதும் உதவின. எனவே சுற்றுச் சூழலின் சமநிலை பாதுகாக்கப்பட்டது. சுருங்கக் கூறினால், இந்தியக் கலாச்சாரத்தின் ஆணிவேராக, வேற்றுமையில் ஒற்றுமை காணுதல் (Unity in Diversity), சகிப்புத்தன்மை, கூடி வாழ்தல், இறை நம்பிக்கை, அனைவரையும் சமமாகப்பாவித்தல் ஆகியவை செயல்பட்டு, அதற்கு தனித்தன்மையை அளித்தன. எளிய வாழ்க்கை, உயர் சிந்தனை, அறவழி நடத்தைகள் ஆகியவை இந்தியக் கலாச்சாரத்தின் தனிப்பெரும் முத்திரைகளாகும்.

### 1.15.4 புகழ் பெற்ற நிறுவனங்கள் மற்றும் மனிதர்கள் (Reputed Institutions and Eminent Persons)

பிரபலமான கல்வி நிறுவனங்கள் மற்றும் மக்களுக்கு மதிப்புணர்வுகளை வலியுறுத்துகின்றன. கல்வி நிறுவனங்களில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கலைத்திட்டம், இணை கலைத்திட்டம் வழியாக மதிப்புணர்வுகளைக் கற்பிக்கின்றனர். மேலும் வரலாற்று முறையினைக் கொண்டு புகழ் பெற்ற அறிவியலாளர், அறிஞர்கள், அரசர்கள், தலைவர்களைப் பற்றிய கதைகளைக் கூறுவதன் மூலமாக மதிப்புணர்வுகளை வலியுறுத்துகின்றனர்.

## 1.18 பள்ளி கலைத்திட்டத்தில் மதிப்புணர்வுக் கல்வி (Value Education in School Curriculum)

குழந்தைகள் பள்ளிகளில் ஆசிரியர்களின் மேற்பார்வையில் அதிகபட்சமாக ஒரு நாளைக்கு 6 மணி நேரமும் வருடத்தில் 210 நாட்கள் மட்டுமே இருக்கின்றனர். ஆனால் வீடு, சமுதாயம், தொலைக்காட்சி போன்ற மக்கள் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றின் செல்வாக்கின் பிடியில் அவர்கள் ஒரு நாளில் 18 மணி நேரமும் வருடத்தில் 365 நாட்களிலும் இருக்கின்றனர். எனவே பள்ளியில் அளிக்கப்படும் விழுமக்கல்வி ஆதிக்கத்தால் வலுவிழந்து போகதா என்ற ஐயம் பலர் மனதில் எழுவது இயற்கையே. ஆனால் எதைக் கற்றாலும் கற்கும் நேரத்தைக் காட்டிலும் கற்றவிதம் தான் முக்கியமானது.

விழுமங்கள் (Values) மாணவர்கள் மனதில் ஆழமாக வேரூன்றும் வண்ணம் கற்பிக்கப்பட்டால் அவை பள்ளிக்கு வெளியே செயல்படும் சக்திகளுக்கு ஈடுகொடுத்து வலுவிழக்காமல் தொடர்ந்து இருக்கும். அதனைத் தவிர, மதிப்புணர்வுக்கல்வி அளிப்பதைப் பொறுத்தவரை பள்ளிகளுக்கு மூன்றுவித சாத்தியக் கூறுகளே உள்ளன.

1. போதிய நேரம் இல்லாத காரணத்தாலும், குறுகிய காலம் அளிக்கப்படும் விழுமக் கல்வியினால் பள்ளிக்கும் வெளியே செயல்படும் சக்திகளுக்கு ஈடுகொடுக்க முடியாது என்பதாலும் விழுமக்கல்வியை பாடத்திட்டத்தில் இருந்தே எடுத்துவிடலாம். இவ்வாறு செய்தால் வெளிப்புற சக்திகளை எதிர்க்கும் ஒழுக்க ஆற்றல் ஒரேடியாக மாணவர்களிடம் இல்லாமலேயே போய்விடும்.

2. விழுமக்கல்வியை பள்ளிகள் அளிப்பதைக் காட்டிலும், மத நிறுவனங்கள் மூலம் அளிக்க ஏற்பாடு செய்யலாம். சமய வெறியர்களால், ஜாதிச் சமயச் சண்டைகள் பெருகுவதற்கான வாய்ப்புகள் மிக அதிகம்.

3. பள்ளிகள், சமய சார்பற்ற எப்பிரிவு மக்களையும் வேறுபடுத்திப்பார்க்காத நன்னெறி நடத்தைகளையும், ஒழுக்கத்தையும் மட்டுமே வலியுறுத்தும் மதிப்புணர்வுக் கல்வித் திட்டத்தை செயல்படுத்துதல்.

மேலே குறிப்பிட்டுள்ள வழிமுறைகளில் மூன்றாவது வழிமுறையே சாலச் சிறந்தது. அதன் மூலமே சமுதாயச் சீரழிவைத் தடுக்கும் ஆற்றலை மக்களிடம் இளம்பிராயத்திலேயே உருவாக்கிட முடியும். எனவே பொருத்தமான விழுமக் கல்வியை (Value of Education) முறையாக திட்டமிட்டு பள்ளிக் கல்விச் செயல்களிலும், ஆசிரியப் பயிற்சி திட்டத்தின் பாட ஏற்பாட்டிலும் இடம்பெறச் செய்தல் அவசியம்.

கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேசியக் குழுவின் இயக்குநரான பேராசிரியர் ஜே.எஸ். ராஜ்புட் (J.S. Rajput) அவர்களை அவைத் தலைவராகக் கொண்டு பள்ளிக் கல்விக்குரிய கலைத்திட்டத்திற்கான பரிந்துரைகள் கலைத்திட்டக் குழுவினரால் அளிக்கப்பட்டது. அவை.

1. இந்தியநாட்டின் பள்ளிகளில், கலைத்திட்டமானது நாட்டின் பாராம்பரியம், பண்பாடு, கலாச்சாரம் மற்றம் சமூக அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட வேண்டும்.
2. மாணவர்களிடையே தனிநபர் மதிப்பு, சமூக மதிப்பு, தேசிய மதிப்பு முதலியவற்றை மேம்படுத்துவதாகக் கலைத்திட்டத்தை வடிவமைக்க வேண்டும்.
3. மாணவர்கள் சமய நல்லிணக்கத்தையும், சகோதரத்துவத்தையும் போற்றுவதற்குரிய வகையில் கலைத்திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும்.
4. மதிப்புணர்வுக் கல்வி மற்றும் சமயக் கல்வியினைத் தனிப்பாடமாக்க கற்பிக்கக் கூடாது, அனைத்துப் பாடங்களையும் ஒருங்கிணைத்துக் கற்பிக்க வேண்டும். மதிப்புக் கல்விக்கென தனித் தேர்வினை நடத்தக் கூடாது, கலைத்திட்டம், இணைக் கலைத்திட்டம் போன்றவற்றின் வழியே மதிப்புணர்வினைக் கற்பித்து மதிப்பிட வேண்டும்.
5. மதிப்புணர்வுக் கல்வியினை ஆரம்ப நிலையிலிருந்தே பள்ளிகளில் கற்பிக்க வேண்டும்.
6. மாணவர்கள் அன்றான வாழ்வில் நன்மை, தீங்கினைப் பகுத்தாராய்ந்து பின்பற்றி நல்ல குடிமக்களாக உருவாக வழிவோலுவதாக மதிப்புணர்வுக் கல்வியை அமைக்க வேண்டும்.
7. இடைநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைகளில் பள்ளி மாணவர்கள் சமயத் தத்துவங்களை ஒப்பிட்டு நல்ல விவரங்களை அறிந்து கொள்ளும் வகையில் மதிப்புணர்வுக் கல்வியானது அளிக்கப்பட வேண்டும்.

இந்திய அரசாங்கத்தின்படி மாணவர்களின் கல்வி நிலை, மன வளர்ச்சி, மனவெழுச்சி, வயது, மனமுதிர்ச்சிக்கேற்ப மதிப்புணர்வுக் கல்வியானது அளிக்கப்படும் வகையில் கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் மாணவர்கள் பின்வருவனவற்றை அறிந்து கொள்வர்.

1. மதிப்புணர்வு பற்றிய பொதுமைக் கருத்தினை புரிந்துக் கொள்ளுதல்.
2. மாணவர்கள் தாம் சந்திக்கின்ற நபர்கள், வாழ்க்கை அனுபவங்களின் வழியே மதிப்புணர்வுகளைப் பகுத்தாராய்ந்து உணர்ந்து கொள்ளும்படி செய்தல்.
3. மதிப்புணர்வு தொடர்பான கற்றல் அனுபவங்களை மாணவர்களுக்கு ஏற்படுத்தித் தரல்.
4. மதிப்புணர்வினை வகைப்பாடுகளை விளங்கச் செய்தல்.
5. மனிதனுடைய வாழ்க்கைக்கும் மதிப்புணர்வுகளுக்கும் இடையேயான தெடர்பினை உணரச் செய்தல்.
6. உயர்நிலை மற்றும் தாழ்நிலை மதிப்புணர்வுகளை பிரித்துணரச் செய்தல்.
7. மனிதன் பிற உயிரினங்களைக் காட்டிலும் எவ்வாறு உயர்வானவன் என்பதனை வலியுறுத்துதல்.
8. மனிதன் பின்பற்ற வேண்டிய மதிப்புணர்வுகள் எவை என்பதனை அறியச் செய்தல்.
9. மதிப்புணர்வுகளை தெளிவுற உணரவைதத்தல்.
10. கணித மேதைகள், அறிஞர்கள், விஞ்ஞானிகள், தேசத் தலைவர்களின் சுயசரிதைகளின் வழியே மாணவர்களுக்கு மதிப்புணர்வுகளை கற்பித்தல்.
11. நாட்டின் பண்பாட்டினை நிலைநிறுத்தும் வகையில் கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டது.

# அலகு - II

## மதிப்புணர்வுகளை வளர்த்தல்

## (Fostering Values)

### 2.1 மதிப்புணர்வுகளின் வளர்ச்சி (Development of Values)

ராமகிருஸ்ணன் ஒழுக்க மற்றும் ஆன்மீக நிறுவனத்தின் முதல்வர் ஏ.ஆர் சீதாராம் அவர்கள் மதிப்புகளின் வளர்ச்சி குறித்த விளக்கப்படம் ஒன்றைத் தருகிறார்.

மதிப்புணர்வுகளின் வளர்ச்சி (Development of Values)

↓

மதிப்புணர்வுக் கல்வி (Value Education)

↓


மதிப்புணர்வுகளின் ஆதாரங்கள் (Sources of Values)

பள்ளிக்கு உள்ளே (Inside the School)

- பாடச்செயல்கள்
- பாட இணைச்செயல்கள்
- மறைமுக கலைத்திட்டம்
- பள்ளி, சூழ்நிலை
- நேரிடையான மதிப்புக் கல்வி

பள்ளிக்கு வெளியே (Outside the School)

- வீடு, சமுதாயம்
- ஊடகம், ஒப்பார் குழு




### 2.2 மனப்பான்மைகள் மற்றும் தனிப்பட்ட பண்புகள் (Attitudes and Personal Qualities)

1. தனிமனிதனின் ஒழுக்கப் பண்பினை புகழ்தல் மற்றும் ஏற்றுக் கொள்ளுதல். (Appreciate and Accept the Individual's Moral Character).
2. குடும்பத்தையும் குடும்பத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களையும் எந்தவித ஏற்றத்தாழ்வுகளும் பாராமல் மதித்தல். (Respect for the family and all of its members)
3. உலகின் பண்பாட்டு பாரம்பரியம் மற்றும் மனிதனின் சாதனைகளையும் மனமுவந்து பாராட்டுதல். (Appreciation of the world's cultural heritage and human achievement).
4. உணர்ச்சிப்பூர்வமான சமூக பாரம்பரிய பண்பாட்டு மாற்றங்கள். (Sensitive Socio- Cultural and Tratitional Changes)
5. உள்ள அமைதியை அடைய விரும்புதல் (Aspiring to Innerpeace).
6. சுதந்திரமான எண்ணம், மனசாட்சி மற்றும் நம்பிக்கை (Freedom of Thought, Conscience and Belief).

7. சுதந்திரமான மதம் சார்ந்த பயிற்சி (Freedom of Religious Practice).
8. மற்றவர்களின் மதம் சார்ந்த கோட்பாடுகளையும் புரிந்து கொண்டு மதிப்பளித்தல் அளித்தல் (Mutual respect for the religious observance of others).
9. மற்ற மாநிலங்களின் மதங்களுக்கும் சமமான மதிப்பளித்தல் (Equality of treatment of religion by the state).

போன்ற மனப்பான்மைகள் மக்களிடையே வளர்ச்சியடைந்துள்ளன.

### தனிப்பட்ட தகுதிகள் (Personal Qualities)

மதிப்புணர்வுக் கல்வியினைக் கற்றவர் தம்முடைய பண்பு நலங்களால் மேம்பட்டவராக விளங்குவார். அவரிடம் காணப்படும் தகுதிகளாவன;

- ★ ஒருங்கிணைந்த ஆளுமைப் பண்பு
- ★ மனித நேயம்
- ★ ஒழுக்கம்
- ★ கீழ்ப்படியும் இயல்பு
- ★ நேரந்தவறாமை
- ★ பெரியோரை மதித்து நடக்கும் குணம்
- ★ சமூகத்தோடு இணைந்து வாழும் குணம்
- ★ பிறர் நலங்கருதும் குணம்
- ★ அன்புடைமை
- ★ அமைதியை விரும்பும் குணமுடைமை
- ★ நேர்மையுடைமை
- ★ பணிவுடைமை
- ★ தேசப்பற்றுடைமை
- ★ உதவும் மனப்பாங்குடைமை
- ★ தூய்மையுடைமை
- ★ தொழிலில் உண்மையுடைமை
- ★ இறையுணர்வு, இறை நம்பிக்கை போன்ற தகுதிகள் மிகுந்திருக்கும்.

## 2.3 முக்கிய மதிப்புகள் (Core Values)

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவானது (National Council for Educational Research and Training (NCERT)) 1979இல் கல்வியில் உள்ள சமூக, நன்னெறி மற்றும் இறையுணர்வு மதிப்புகளைக் குறித்த அறிக்கையினை வெளியிட்டது. அதில் 83 வகையான முக்கியமான மதிப்புகளைப் பட்டியவிட்டு உள்ளது.

1. இச்சை அடக்கம் (Abstinence)
2. பிறரது கலாச்சார மதிப்புகளைப் பாராட்டுதல் (Appreciation of Cultural Values of Others)
3. தீண்டாமைக்கு எதிர்ப்பு தெரிவித்தல் (Anti-untouchability)
4. குடிமை (Citizenship)
5. பிறர் நலங்கருதுதல் (Consideration for Others)
6. பிறருக்காக உழைத்தல் (Working for the sake of Others)
7. ஒற்றுமை (Co-operation)
8. சுத்தம் (Cleanliness)
9. கருணையுள்ளம் (compassion)
10. பொதுவான காரணத்துக்காக உழைத்தல் (Working for Common Cause)
11. பொதுநலங்கருதல் (Concern for Common Good)
12. மனவலிமை (Courage)
13. நற்பண்பு (Courtesy)
14. தெரிந்து கொள்வதில் ஆர்வமுடைமை (curiosity)
15. ஜனநாயகமான தீர்வினை எடுத்தல் (Democractic Decision Making)
16. பக்தியுணர்வு (Devotion)
17. தனிநபரின் கௌரவம் (Dignity of the Individual)
18. கைத் தொழிலில் கௌரவம் (Dignity of Manual Work)
19. பணி (Duty)
20. ஒழுக்கம் (Decipline)
21. சகிப்புத்தன்மை (Endurance)
22. சமத்துவம் (Equality)
23. நட்பு பாராட்டல் (Friendship)
24. நம்பிக்மையுடைமை (Faithfulness)
25. தோழமையுணர்வு (Fellow Feeling)
26. சுதந்திரம் (Freedom)
27. முற்போக்குச் சிந்தனை (Forward Look)
28. நல்ல பழக்கங்கள் (Good Manners)
29. நற்பண்புகள் பெற்றவர் (Gentle Manliness)
30. நன்றியுணர்வு (Gratitude)


31. நேர்மை (Honesty)
32. உதவி செய்யும் எண்ணமுடைமை (Helping Tendency)
33. மனித நேயமுடைமை (Humane Attitude)
34. சுகாதாரமாக வாழ்தல் (Hygienic Living)
35. தைரியமாக ஒரு செயலை முனவந்து தானே துவங்கும் குணமுடைமை (Inititative)
36. மேன்மை (Integrity)
37. நீதி (Justice)
38. கருணையுள்ளம் (Kindness)
39. விலங்கினங்களிடம் அன்பு கொள்ளல் (Kindness to Animals)
40. தொழிலில் பற்றுருதியாக இருத்தல் (Loyalty to Duty)
41. தலைமைப் பண்புடைமை (Leadership)
42. தேசிய ஒருமைப்பாடு (National Integrity)
43. தேசிய உணர்வுடைமை (Natinal Consciousness)
44. அஹிம்சை (Non Violence)
45. தேசிய ஒற்றுமை (National Integration)
46. கீழ்ப்படியும் குணம் (Obedience)
47. அமைதியை விரும்புதல் (Peace Loving)
48. நேரத்தினைச் சரியான வகையில் பயன்படுத்தல் (Proper Utilisation of Time)
49. நேரந்தவறாமை (Punctuality)
50. தேசப்பற்றுடைமை (Patriotism)
51. தூய்மை (Purity)
52. அறிவுத்தாகமுடைமை (Quest for Knowledge)
53. திறனுடைமை (Resourcefulness)
54. ஒழுங்குணர்வு (Regularity)
55. பிறருக்கு மரியாதை அளித்தல் (Respect for Others)
56. முதியவர்களுக்கு மரியாதை அளித்தல் (Reverence for Old Age)
57. கபடமற்ற தன்மை (Sincerity)
58. எளிமையாக வாழ்தல் (Simple Living)
59. சமூக நீதி (Social Justice)
60. சுய உதவி (Self Help)
61. சுய ஒழுக்கம் (Self Discipline)

62. சுய மரியாதை (Self Respect)
63. தன்னம்பிக்கை (Self Confidence)
64. பிறரின் துணையின்றி வாழ்தல் (Self support)
65. சுய வேலை (Self Work)
66. தன்னை மட்டுமே சார்ந்திருத்தல் (Self Dependency)
67. சுயக்கட்டுப்பாடு (Self Control)
68. தன்னடக்கம் (Self Restraint)
69. சமூக சேவை (Self Service)
70. மனிதரிடையே ஒற்றுமையுணர்வு (Solidarity of Mankind)
71. சமூகப் பொறுபபினை உணர்தல் (Sense of Social Responsibility)
72. நல்லது, கெட்டதைப் பகுத்தாராயும் உணர்வுத் திறன் (Sense of Discriminaitn Between Good and Bad)
73. சமுகத்துவம் (Socialism)
74. இரக்கப்படுதல் (Sympathy)
75. சமயநல்லிணக்கம் (Secularism)
76. ஒத்துழைத்தல் (Co-operation)
77. ஆராய்ந்து அறியும் உணர்வு (Spirit of Enquiry)
78. குழுவுணர்வுடன் பணிபுரிதல் (Team Work)
79. உண்மையாக இருத்தல் (Truthfullness)
80. சகிப்புத் தன்மை (Tolerance)
81. உலக முழுவதிலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை (Universal Truth)
82. உலக முழுமைக்கும் பொதுவான அன்பு நெறி (Universal Love)
83. தேசிய மற்றும் பொதுச் சொத்துக்களை மதித்தல் (Respect for National and Civic Property)

## 2.4 குழந்தைகளிடம் மதிப்புணர்வுகளை வளர்க்கும் வழிகள் (The ways of Fostering Values in Children)

இன்றைய மாணவச் செல்வங்கள் நாளைய குடிமக்களாக விளங்கப் போகின்றவர்களாவர். எனவே அவர்களை நெறிப்படுத்துவதில் பெற்றோர், பள்ளி அமைப்பு மற்றும் சமுதாயத்திற்கு முக்கிய பங்கு உள்ளது. சமூகம், பள்ளி அமைப்பு மற்றும் மாணவர்களின் பெற்றோர் ஒருவரையொருவர் சார்ந்து செயல்படுகினறனர். எனவே அனைவருக்கும் மதிப்புணர்வைக்

கற்பிப்பதில் சம பங்கு உள்ளது. இதனைக் கீழ் உள்ள கோட்டுப் படத்தின் மூலம் உணர்நது கொள்ளலாம்.




மனித மதிப்புணர்வுகளை மாணவர்களுக்குக் கற்பிப்பதில் வீடு, பள்ளி மற்றும் சமூகத்தின் பங்கினை விளக்கும் கோட்டுப்படம்.

மனித மதிப்புணர்வுகளை இளம் சமுதாயத்தினர் தம்முடைய பெற்றோர் மற்றும் வீட்டுச் சூழ்நிலையிடமிருந்து கற்றுக் கொள்கின்றனர். பின்னர் தம்மைச் சுற்றியுள்ள சமூகத்திடமிருந்து மதிப்புணர்வுகளைக் கற்றுக் கொள்கின்றனர். பள்ளியில் சேர்ந்த பிறகு ஆசிரியர், சக மாணவர்கள் மற்றும் நண்பர்களிடமிருந்து மதிப்புணர்வுகளைக் கற்றுக் கொள்கின்றனர். பின்னர் மதிப்புணர்வுகளை பின்பற்றுவதற்கு அவர்களுடைய கருத்துகளும், அனுபவங்களும் உதவுகின்றன. இளம் சமுதாயத்தினர் ஒவ்வொரு நிலையிலும் பல்வேறு மதிப்புணர்களைக் கற்றறிகின்றனர். இதனைக் கீழே உள்ள விளக்கப் படத்தின் மூலம் அறியலாம். மதிப்புணர்வுகளை பிறரிடமிருந்து கற்றுக் கொள்ளும் அனுவங்கள் அவர்களை நெறிப்படுத்தி செயல்பட உதவுகின்றன.

மதிப்புணர்வுகளை பல்வேறு நிலைகளில் இளம் சமுதாயத்தினர் கற்றுக் கொள்வதை விளக்கும் கோட்டுப்படம்:

பணியிடம் (மேலதிகாரி சக ஊழியர்கள் மற்றும் பணி அனுபவங்கள்)

↑

| | |
|---|---|
| கல்வி நிறுவனங்கள் | (ஆசிரியா், நண்பா்கள் மற்றும் கற்றல் அனுபவங்கள்) |
| ↑ | |
| சமூகம் | (தம்மைச் சுற்றியுள்ள மனிதா்கள் மற்றும் மனித உறவுகள்) |
| ↑ | |
| வீடு | (பெற்றோா், உறவினா், மற்றும் அண்டை அயலாா்) |

## 2.5 மதிப்புணா்வுகளை வளா்ப்பதில் பெற்றோரின் பங்கு **(Role of Parents in Fostering Values)**

குழந்தைகளிடம் சீரிய விழுமங்களை வளரச் செய்வதில் ஆசிரியா்களைப் போன்றே பெற்றோா்களும் முக்கிய பங்கு வகிக்கின்றனா். இன்னும் சொல்லப்போனால் ஆசிரியா்களை விட பெற்றோா்களுக்கே அதிகக் கடமைப் பொறுப்புள்ளது. சிறு வயதிலேயே குழந்தைகளின் மனதில் விழும உணா்வுகளை விதைப்பவா்கள் பெற்றோா்களே. பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளிடம் அவற்றினை மேலும் செம்மைப்படுத்துவதோடு, விரிவுபடுத்துவதும் ஆசிரியா்களின் கடமை.

பள்ளியில் மாணவா்கள் கற்கும் விழுமங்களை வீட்டில் பாராட்டி வலுவூட்டுதல் வேண்டும். பள்ளியில் மாணவா் கற்கும் மதிப்புகள், வீட்டில் பெற்றோா்களின் மனப்பான்மைகள் மற்றும் செயல்பாடுகளோடு முரண்படுமேயானால், மாணவா்கள் விழுமச்சிக்கலில் அகப்பட்டுத் திண்டாடுவா். பெற்றோா்கள் தம் மக்கள் சீரிய விழுமங்களைப் பெற்றுத் திகழ நல்ல முன் மாதிரியாகத் திகழ வேண்டும். அது போன்று மாணவா்களது நண்பா்கள் குழு, தகவல் அளிப்பு சாதனங்கள், சமயத் தலைமை ஆகியனவும் மாணவா் பெற்றுள்ள விழுமங்களை நெறிப்படுத்தி செம்மைப்படுத்துவதாக அமைய வேண்டும். விழுமங்கள் கற்பிக்கப்படுவதில்லை, பிறரைப் பாா்த்து பின்பற்றுவதால் பெறப்படுகின்றன என்ற கூற்றில் உள்ள உண்மை மறுக்க இயலாதது.

மதிப்புணா்வுகளுக்கும் மரபியலுக்கும் தொடா்பிருப்பதாக உளவியல் அறிஞா்கள் கூறுகின்றனா். தாய், தந்தை, நன்னடத்தை உடையவராக இருந்தால் அவா்களின் சந்ததியினரும் மரபணுக்களின் காரணமாக அவ்வாறே விளங்குவா். "தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை", "விதை ஒன்று போட்டால் சுரை ஒன்றா முளைக்கும்" என்னும் பழமொழிகள் பழங்காலந்தொட்டுக் கூறப்படுகின்றன. தாயானவள் கருவுற்றிருக்கும்போது குழந்தையின் நலன் கருதித் தமது உணவுப் பழக்கங்களை திருத்திக் கொள்வாள். அவ்வேளைகளில் அவள் நல்ல

பாடல்கள் கேட்பது, நல்ல நூல்களைப் படிப்பது, இறை வழிபாட்டில் ஈடுபடும்போது கருவிலிருக்கும் குழந்தையானது பிறக்கும்போது நல்ல மனநலம், உடல் நலம் பெற்றதாத் திகழும். மனத்தில் தேவையற்ற குழப்பங்களின்றி அமைதியாக இருக்க வேண்டும் என இல்லத்தில் இருக்கும் பெரியவர்கள் கர்ப்பிணிப் பெண்களிடம் கூறுவர். தாய் கேட்கும் பாடல்கள், படிக்கும் நூல்கள் குழந்தையின் மன நலனுக்கு வழிகோலுவனவாக அமையும் என ஆராய்ச்சியானது நிரூபணம் செய்துள்ளது. இதனை நமது புராணக் கதைகளான பிரகலாதன், அபிமன்யு கதாபாத்திரங்களின் வழியே அன்றே நம் முன்னோர் அரவணைப்பும், தந்தையின் கண்டிப்புடன் கூடிய அன்பும் குழந்தையை நெறிப்படுத்துகின்றன என்று கூறியுள்ளனர். தாய்ப்பாலினை உண்ட குழந்தைகள் திட ஆரோக்கியத்துடன் விளங்குவது மட்டுமின்றி பாதுகாப்பு உணர்வுடன் திகழ்கின்றன. தாய்ப்பாலினைச் சரிவர ஊட்டப்படாத குழந்தை பாதுகாப்பற்ற உணர்வின் காரணமாக விரல் சூப்பும் பழக்கத்துக்கு ஆளாகின்றன நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து காணப்படுகின்றன.

குழந்தைக்கு அடிப்படை மதிப்புணர்வுகளான உடல் நல மதிப்பு, இறை நம்பிக்கை, மரியாதை, அன்பு முதலியவற்றைக் கற்றுக் கொடுப்பது தாயே ஆவாள். குழந்தைக்கு தந்தை மற்றும் உறவினர்களை அடையாளங்காட்டுவது மட்டுமின்றி அவர்களுக்கு மரியாதை அளிக்கவும் கற்றுத் தருகின்றாள், உணவு உண்பதிலிருந்து மலங்கழிப்பது வரை முதல் ஆசிரியராக விளங்குவது தாயே ஆவாள். "மாதா, பிதா, குரு, தெய்வம்" என்பவற்றுள் மாதாவாகிய தாய்க்கு அடுத்தபடியாக குழந்தையை நெறிப்படுத்துவர் தந்தையாவார் என இந்தியர்கள் கருதுகின்றனர். பெற்றோர்கள் தம் பிள்ளைகளிடையே நன்னடத்தைகளை வளர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும். தம் பிள்ளைகளுக்குச் சிறந்த முன் உதாரணமாக பெற்றோர்கள் விளங்க வேண்டும். அதற்கென அவர்கள் கீழ் உள்ள வழிகளில் செயல்பட வேண்டும்.

- ✓ பிள்ளைகளுக்குத் தாம் கூறும் அறிவுரைகளை தாம் முதலில் பின்பற்ற வேண்டும்.
- ✓ அவர்கள் எதிரில் சண்டையிடாமல் இருக்க வேண்டும்.
- ✓ உறவினர்களிடம் நட்புறவு பாராட்ட வேண்டும். குடும்பப் பிரச்சினைகள், சண்டைகள் குறித்துப் பிள்ளைகள் எதிரில் பேசக் கூடாது.
- ✓ வயதில் பெரியவர்களுக்கு மரியாதை அளிக்க வேண்டும்.
- ✓ இந்திய நாட்டின் பாரம்பரியம், கலாச்சாரம் குறித்து அவ்வப்போது பிள்ளைகளுக்கு எடுத்துரைத்துத் தாமும் பின்பற்ற வேண்டும்.
- ✓ நேரந்தவறாமை, ஒழுக்கம், கட்டுப்பாடு, வாய்மை, தூய்மை முதலியனவற்றின் முக்கியத்துவத்தைப் பிள்ளைகளுக்கு எடுத்துரைத்துத் தாமும் பின்பற்ற வேண்டும்.
- ✓ கூடுமானவரை வெளியே உண்பதைத் தவிர்க்கக் கற்றுத்தர வேண்டும்.
- ✓ அண்டை அயலாருடன் நட்புறவுடன் விளங்க வேண்டும்.
- ✓ சமூக நெறிகள், சட்டதிட்டங்களைப் பின்பற்றுவது மட்டுமன்றி பிள்ளைகளுக்கும் கற்றுத் தரவேண்டும்.

- ✓ இறைவழிபாட்டு முறைகள், இறை மதிப்புகள், அதன் முக்கியத்துவத்தினைப் பிள்ளைகளுக்கு எடுத்துரைத்துப் பின்பற்றச் செய்ய வேண்டும்.
- ✓ பிற சமயத்தைச் சார்ந்த நண்பர்களுடன் நட்புறவு பாராட்டுவதன் மூலம் சமய நல்லிணக்கத்திற்கு வித்திட வேண்டும்.
- ✓ இயன்றவரை தம்முடைய வேலைகளைத் தாமே செய்ய வேண்டும் என்று பிள்ளைகளுக்கு அறிவுறுத்த வேண்டும்.
- ✓ உணவு பொருள்களை வீணாக்கக் கூடாது, இயற்கை உணவுகளை உண்ண வேண்டும் என்பதனைப் பிள்ளைகளுக்கு எடுத்துரைக்க வேண்டும்.
- ✓ பிற உயரிரினங்களைத் துன்புறுத்தக் கூடாது என்பதனைப் பிள்ளைகளுக்கு அறிவுறுத்த வேண்டும்.
- ✓ இயன்றவரை பிள்ளைகளை அடிக்காமல், வார்த்தைகளால் திருத்தி நெறிப்படுத்த வேண்டும்.
- ✓ தம்முடைய பிள்ளைகளின் உணர்வுகளை மதிக்க வேண்டும். பிற பிள்ளைகளோடு ஒப்பிடுவதையும், தகாத வார்த்தைகளால் தண்டிப்பதையும் தவிர்க்க வேண்டும்.
- ✓ தம்முடைய அன்பினை வார்த்தைகளாலும், செயலாலும் பிள்ளைகளுக்கு உணர்த்த வேண்டும்.
- ✓ வீட்டின் பொருளாதார நிலையைப் பிள்ளைகளுக்கு பக்குவமாகவும், நிதானமாகவும் விளங்க வைக்க வேண்டும்.
- ✓ பிள்ளைகளின் பிடிவாத குணத்தைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்த வேண்டும்.
- ✓ அவர்களின் நண்பர்கள் வட்டாரத்தைப் பற்றிப் பெற்றோர்கள் அறிந்து வைத்திருத்தல் என்றும் நன்றாகும்.
- ✓ ஒன்றிற்கு மேற்பட்ட பிள்ளைகள் இருக்கும் வீட்டில், இயன்றவரை அனைத்துக் குழந்தைகளையும் சமமாக நடத்த வேண்டும்.
- ✓ வெற்றி, தோல்விகளைச் சமமாகச் சந்திக்கும் மனோதிடத்தை பிள்ளைகளுக்கு உருவாக்கித் தரவேண்டும். சில பிள்ளைகள் அடைவுத் திறனில் குறைந்து காணப்படுவர். அவர்களின் தனித் திறன்களைப் பெற்றோர் கண்டுணர்ந்து அதனை வெளிக் கொணர்வதில் கவனம் செலுத்த வேண்டும்.
- ✓ பிள்ளைகள் பெற்றோர்களைத் தம்முடைய முதல் நண்பர்களாகக் கருதி அவர்களிடம் ஒளிவு மறைவின்றி தம் பிரச்சினைகளைக் கூறலாம் எனும்படியாக நட்புறவோடு விளங்க வேண்டும். இதனால் தீய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்த்து, தீர்க்க இயலாது என கருதும் பிரச்சினைகளுக்குக் கூட எளிதில் தீர்வு காண இயலும்.
- ✓ பிள்ளைகளை இல்லத்தில் முக்கிய நபர்களாகப் பெற்றோர் கருதுகினறனர் என்பதனை அவர்கள் உணரச் செய்ய வேண்டும். பெற்றோர் தம்மிடம் அன்பாகவும், நம்பிக்கையுடனும்

இருக்கிறார்கள் என உணரும் பிள்ளைகள் என்றும் தவறான வழியில் செல்ல மாட்டார்கள்.

- ✓ பிள்ளைகளின் வெற்றிகளைப் பாராட்டுதல், மகிழ்ச்சியில் பங்கு கொள்ளுதல், தோல்விகளின் போது ஆதரவு அளித்தல், ஊக்கப்படுத்துதுல், பெற்றோர்களின் தலையாய கடமையாகும்.
- ✓ இயன்றரை விடுமுறை நாட்களிலாவது இல்ல உறுப்பினர்கள் ஒன்றாக அமர்ந்து உண்பது, தொலைக்காட்சி பார்ப்பது போன்றன உள்ள நெருக்கத்தை அதிகப்படுத்தும்.
- ✓ அன்றாடம் பள்ளியில் நடந்தவை முதலியவற்றை உணவு உண்ணும் போது பேசிக் கொண்டே பிள்ளைகள் கூறும் போது அதனைப் பெற்றோர் செவிசாய்த்துக் கேட்க வேண்டும். இதன் மூலம் நாம் கூறுவதைக் கவனிக்கிறார்கள் என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்படும்.
- ✓ நல்ல நூல்களைப் படிக்க வழி செய்தல் வேண்டும். கணினி, இணையதளத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவது எவ்வாறு என்பதனைக் கற்றுத்தர வேண்டும். வன்முறை, ஆபாசக்காட்சி, மூட நம்பிக்கைகளற்ற திரைப்படங்களைத் தேர்வு செய்து குடும்பத்துடன் பார்க்க வேண்டும். நண்பர்களாகப் பிள்ளைகள் கூடிச் சென்று பார்க்கும் திரைப்படங்கள் நல்லவையாக இருக்க வேண்டும் என்பதில் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.
- ✓ பிள்ளைகளுக்குத் தாம் வாங்கித் தருகின்ற ஆடை, அணிகலன்கள் இந்திய நாட்டின் பண்பாட்டிற்குட்பட்டதாக இருப்பது நலம்.

## 2.6 மதிப்புணர்வுகளை வளர்ப்பதில் ஆசிரியர்களின் பங்கு **(Role of Teachers in Fostering Values)**

பெற்றோர்களுக்கு எந்த அளவிற்கு குழந்தைகளின் மதிப்புணர்வுகளைக் கற்பிக்க பங்கு இருக்கின்றதோ, அதைவிட அதிகமான பொறுப்பு பள்ளிக்கும், ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் உண்டு.

பிள்ளைகளிடையே மதிப்புணர்வுகளை வளர்ப்பதில் பள்ளிக்கு முக்கிய பங்கு உள்ளது. இன்றைய இளம் சமுதாயத்தினர் நாளைய குடிமக்களாவதால், நம் நாட்டின் பண்பாடு, கலாச்சாரம் முதலியவற்றைக் கற்பிப்பதில் கல்வி நிறுவனங்களுக்கு முக்கிய பங்கு உள்ளது. கல்வி அமைப்பானது பாடங்களைக் கற்பிப்பதற்கு மட்டுமின்றி நல்லதொரு நடத்தைக்கு வித்திடுவதாகவும் இருக்க வேண்டும். இந்திய நாட்டில் கல்வி நிறுவனங்களில் கலைத் திட்டங்கள், இணைகலைத் திட்டங்களின் வழியாக மாணவர்களுக்கு மதிப்புணர்வு புகட்டப்படுகிறது. பள்ளிகளில் இளஞ்சிலுவை அமைப்பு (Junior Red Cross), சாரணர் இயக்கம் (Guides), தேசிய சமூக சேவை செயல்பாடுகள் (National Social Serice Activities) மூலமாக மாணவர்களுக்கு சேவை மனப்பான்மை மற்றும் மனித மதிப்புணர்கள் கற்றுத்தரப்படுகின்றன. சுற்றுச் சூழல் மதிப்புணர்வுகளை மாணவர்களிடையே அறிவியல் கழகம் (Science Club),

இயற்கைக் கழகம் (Nature Club or Eco Club) மூலமாக பள்ளிகள் போதிக்கின்றன. இதன் மூலமாக மண் புழுவின் துணை கொண்டு இயற்கை உரம் தயாரித்தல், மரம் நடுதல், சுற்றுச் சுழலை சுத்தமாக வைத்திருத்தல் முதலிவற்றை மாணவர்கள் கற்றுக் கொள்கின்றனர். பள்ளிகள் அரசாங்கத்தின் முக்கிய நாள்களான ஊனமுற்றோர் தினம், மகளிர் தினம், ஆசிரியர் தினம், அறிவியல் தினம், ஐக்கிய நாட்டு அமைப்பு தினம், சுதந்திர தினம், குடியரசு தினம் முதலியவை கொண்டாடப்படுவதன் மூலமாக மாணவர்கள் அந்நாள்களின் முக்கியத்ததுவத்தினை அறிகின்றனர். பள்ளிகளில் அனைத்து சமய பிரார்த்தனைகளின் மூலமாக மாணவர்களிடையே சமய நல்லிணக்கம் வளர்கின்றது. இதற்கென சில பள்ளிகளில் அனைத்துச் சமய பண்டிகைகளும், பள்ளிகளிலேயே கொண்டாடப்படுவதும் உண்டு (உ.ம்) கிறிஸ்துமல் தினம், பொங்கல், கார்த்திகைத் திருநாள், தீபாவளி.

கிறிஸ்துமஸ் தினத்திற்கு முன்னர் பள்ளியில் கிறிஸ்துமஸ் மரத்தினை அலங்கரிப்பர். ஆசிரியர் (அ) மாணவருள் ஒருவர் கிறிஸ்துமஸ் தாத்தாவினைப் போல வேடமணிந்து விழாவன்று அனைவரையும் மகிழ்விப்பர். கிறிஸ்துமஸ் பாடல்களை அன்று மாணவர்கள் பாடுவர். கிறிஸ்து பிறப்பினை நாடக வடிவில் அரங்கேற்றுவர். இதன் மூலமாகப் பள்ளியில் படிக்கும் அனைத்து மாணவர்களும் கிறிஸ்துமஸ் பற்றி அறிந்து கொள்வர். சில பள்ளிகளில் முக்கிய பண்டிகை தினத்தன்று இந்திய நாட்டின் பாரம்பரிய உடைகளாகிய பாவாடை சட்டை, பாவாடை தாவணி முதலியவற்றை மாணவிகளும், குர்தா, பைஜாமா (அ) கதர் சட்டை, பேண்டினை மாணவர்களும் அணிந்து வருமாறு கூறுவர். பள்ளிகளில் மேலும் மதிப்புணர்வுகள் கீழ் உள்ள வகைகளில் மறைமுகமாக மாணவர்களுக்கு உணர்த்தப்படுகின்றன.

- பள்ளியில் அடிக்கப்படும் மணியோசையானது நேரந்தவறாமையைக் குறிக்கிறது.
- மாணவர்களின் சீருடை ஒழுக்கம், சம உணர்வினை அவர்களுக்கு உணர்த்துகிறது.
- பள்ளிகளில் காலையில் நடத்தப்படும் இறைவழிபாடு.
- பள்ளிகளின் கலைத் திட்டம்.
  (அ) நடத்தப்படும் பாடங்கள்
  (ஆ) ஒப்படைப்பு
  (இ) செயல் திட்டம்
  (ஈ) பரிசோதனை
- பள்ளிகளின் இணை கலைத் திட்டங்களான கண்காட்சி, போட்டிகள் முதலியன.
- பள்ளிகளின் கூடுதல் கலைத்திட்டங்களான விளையாட்டு முதலியன.


ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முன் உதாரணமாக இருக்க வேண்டும். அவர் தம்முடைய சொல், செயல் மூலமாக மாணவர்களுக்கு மதிப்புணர்வினைக் கீழ் உள்ள வகைகளில் கற்பிக்கலாம்.

- ★ மாணவர்களுக்கு ஆசிரியர் தாம் கூறும் அறிவுரைகளை நடைமுறையில் தாமும் பின்பற்ற வேண்டும்.
- ★ தூய்மையான உடைகளை அணிந்து வரல்.
- ★ பாடங்களை சுவைபடவும், பிழையின்றியும் தெளிவாக நடத்துதல்.
- ★ அனைத்து மாணவர்களையும் சமமாக நடத்துதல்.
- ★ மாணவர்களின் தனிப்பட்ட திறன்களைக் கண்டறிந்து ஊக்குவித்தல்.
- ★ மாணவர்களின் உணர்வுகளுக்கும் நியாயமான கருத்துகளுக்கும் மதிப்பளித்தல்.
- ★ மாணவர்களின் மனம் நோகும்படியாகக் கண்டிக்காமல் இருத்தல் (உ.ம். உனக்கு ஒன்றுமே தெரியாது, நீ எதற்கும் பயன்பட மாட்டாய் என்பது போன்ற வாக்கியங்களைப் பயன்படுத்தக் கூடாது).
- ★ சக மாணவர்களின் முன்னிலையில் குற்றம் புரிந்த மாணவரை திட்டவோ, கண்டிக்கவோ கூடாது. தனிமையில் அவர்களை அழைத்து ஆக்கபூர்வமாக நெறிப்படுத்த வேண்டும்.
- ★ மாணவர்களை உடல் ரீதியாக துன்புறுத்தக் கூடாது. (உ.ம்) அடித்தல், குட்டுதல், மண்டி இடச் செய்தல்.
- ★ மாணவர்களின் தனிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க வழி கூறுதல்.
- ★ பிரச்சினைக்குரிய மாணவர்களின் பெற்றோர்களுக்குப் பக்குவமாக அதனைத் தெரிவித்தல், அதற்கான தீர்வினைக் கலந்து ஆலோசித்து செயல்படுதல்.
- ★ மாணவர்களின் திறன்களை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துதல்.
- ★ மாணவர்களின் அடைவுத் திறனுக்கும் பிற திறன்களுக்கும் முக்கியத்துவம் அளித்தல்.
- ★ பிற ஆசிரியர்களைப் பற்றி மாணவர்களின் எதிரில் புறங்கூறாமல் இருத்தல்.
- ★ தம்முடைய சொந்த பணிகளுக்கு மாணவர்களைப் பயன்படுத்தாமல் இருத்தல்.
- ★ தவறான செயல்களில் ஈடுபடாமல் இருத்தல்.
- ★ நேரந் தவறாமையைப் பின்பற்றல்.
- ★ தாம் செய்கின்ற அனைத்து செயல்களையும் செவ்வனே செய்தல்.
- ★ தாம் நடத்துகின்ற பாடங்களின் வழியே மதிப்புணர்வுகளைக் கற்பித்தல்.
- ★ தம் சொந்த விருப்பு வெறுப்புகளை மாணவர்களின் மீது காட்டாமல் இருத்தல்.
- ★ மாணவர்களிடம் கனிவுடனும், கண்டிப்புடனும் இருத்தல்.
- ★ அரசியல், திரைப்படம் குறித்து எக்காரணம் கொண்டும் மாணவர்களிடையே பேசாமல் இருத்தல்.
- ★ தம்முடைய கருத்துகளை மாணவர்களின் மீது திணிக்காமல் இருத்தல்.

## 2.7 மதிப்புணர்வுகளை வளர்ப்பதில் சமூகத்தின் பங்கு (Role of Society in Fostering Values)


மாணவர்கள் சமூகத்தின் மூலமாகவும், மதிப்புணர்வுகளைக் கற்றுக் கொள்கின்றனர். சமூகம் என்பது நாமும், நம்மைச் சுற்றி உள்ள மக்களே ஆகும். சமூகத்தினுடைய பழக்க வழங்கங்கள், வாழிடம், பண்பாட்டினைப் பொறுத்து மனித மதிப்புணர்வுகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. சில மதிப்புணர்வுகள் அனைத்து நாடுகளிலும் சீராகப் பின்பற்றப்படுகின்றன (உ.ம்) அன்பு, நேரந்தவறாமை, உண்மை, ஒழுக்கம் முதலியவை. அவை அந்நாட்டில் வாழும் மக்கள் சமுதாயத்தினால் பாதிக்கப்படுவதில்லை. எனவே இவற்றைச் சார்பற்ற மதிப்புகள் (Absolute Values) (அ) நிரந்தர மதிப்புகள் (Permanent Values) என்பார்கள். சில மதிப்புணர்வுகள் அந்நாட்டில் வாழும் மக்கள் சமுதாயத்தின் கண்ணோட்டம், மனப்போக்கு, கருத்தின்படி மாறுபடும் (உ.ம்) மேலை நாடுகளில் ஆசிரியரின் பெயருக்கு முன்னர் Sir, Madam, என்று சேர்த்து அழைப்பர். ஆனால் இந்திய நாட்டில் பெயரிட்டு அழைக்காமல் Sir, Madam என்று மட்டுமே அழைக்கின்றனர். இவ்வாறு நாட்டு மக்களுடைய பண்பாட்டின் காரணமாக மாறுபடுகின்ற மதிப்புகள் (Relative Values) சார்புடைய மதிப்புகள் (அ) (Temporary Values) தற்காலிக மதிப்புகள் என அழைக்கப்படுகின்றன.

மேலை நாடுகளில் குறிப்பிட்ட வயதிற்கு மேல் பிள்ளைகள் பெற்றோர்களைச் சார்ந்து வாழ்வதில்லை, சுயமாக வேலை செய்து பணம் ஈட்டுகின்றனர் தனியாக வாழ்கின்றனர். தனி நபர் சுதந்திரத்திற்கு அதிக முக்கியத்துவத்தினைத் தருகின்றனர். ஆண் பெண் பாகுபாடின்றிப் பழகுகின்றனர். குடும்ப வாழ்க்கைக்கு அதிகப்படியான முக்கியத்துவம் தரப்படுவதில்லை. இந்திய நாட்டில் பிள்ளைகள் பெற்றோர்களுக்கு உட்பட்டு நடக்கின்றனர். மனித உறவுகளுக்கும், குடும்ப வாழ்க்கை, ஒழுக்கம், கட்டுப்பாட்டிற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஆண் பெள் நண்பர்களாக இருப்பதால் வரையெல்லை பின்பற்றப்படுகிறது. பெற்றோர்களின் கருத்துகளுக்கு கட்டுப்பட்டு ஒழுக்கத்துடன் இருக்கும் பிள்ளைகள் சமூகத்தால் மதிக்கப்படுகின்றனர். அவ்வாறே பிள்ளைகளும் சமூகத்தில் நடைபெறும் சம்பவங்களால் வழிநடத்தப்படுகின்றனர். மனித மதிப்புணர்வுகளைப் பாதுகாப்பதில் தனிநபர் ஒவ்வொருவருக்கும் பொறுப்புணர்வு உள்ளது. இதனை உணர்ந்து செயல்பட்டால் சமூகம் நன்றாக விளங்கும். இதனால் சமூகத்தினைப் பார்த்து மதிப்புணர்வுகளை கற்றுக் கொள்ளுகின்றனர். இளம் சமுதாயத்தினரும் நல்வழியில் செல்வர். இன்றைய மாணவர்கள் அவ்வாறு நடந்தால் வருங்கால சமுதாயம் நல்ல முறையில் திகழும் இதனையே இயல்பான சுழற்சி (Virtous Cycle) என உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். இதனைக் கீழ் உள்ள கோட்டுப்படம் விளக்குகிறது.



(உ.ம்) பேருந்தில் பயணி ஒருவர் கர்ப்பிணிப் பெண்ணிற்கு இருக்கையளித்து உதவுகிறார். இதனைக் காணும் மாணவன் பின்னால் இதே போன்ற தருணத்தில் பிறருக்கு உதவும் எண்ணம் ஏற்பட்டு உதவி செய்வான். இது இயல்பான சுழற்சிக்கு எடுத்துக்காட்டு ஆகும்.

அவ்வாறின்றிச் சமூகமானது மதிப்புணர்வுகளைப் பின்பற்றாவிட்டால், அவர்களைப் பார்த்து மாணவர்களும் அவ்வாறே நடப்பர். அதனுடைய பின் விளைவு சமூகத்தினை மீண்டும் பாதிக்கும். சமூகம் பாதிக்கப்படுமானால் மாணவர்களின் மோசமான சுழற்சி (Vicious cycle) என்பர். இதனை பின்வரும் கோட்டுப்படத்தின் மூலமாக அறியலாம்.




(உ.ம்) நியாய விலைக் கடையில் மக்கள் வரிசையில் நிற்காமல் இருப்பதைக் காணும் மாணவன் தானும் அவ்வாறு நிற்பது மட்டுமன்றி பிற்காலத்தில் ஒழுங்கு முறையினைக் கடைப்பிடிப்பதைத் தவிர்க்க நினைக்கக் கூடும். இதன் தாக்கம் சமூகத்தினையே வந்து சேரும். இது மோசமான சுழற்சிக்கு எடுத்துக்காட்டாகும்.

## 2.8 மதிப்புணர்வுகளை வளர்ப்பதில் ஒப்பார் குழுக்களின் பங்கு (Role of Peer Groups in Fostering Values)

கல்வி உளவியல் அறிஞர்களின் கருத்தின்படி ஒருவருடைய நடத்தைக்கும், அவரைச் சேர்ந்த நண்பர்களின் தாக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. மேலும் இதனை 'புவோடு சேர்ந்த நாரும் மணக்கும்', 'உன் நண்பனைக் கூறு, உன்னைப் பற்றிக் கூறுகிறேன்' போன்ற பழமொழிகள் உறுதிப்படுத்தும். குழந்தைப் பருவத்திலிருந்தே நண்பர்களின் சேர்க்கை ஒருவருடைய நடத்தையில் தாக்கத்தை ஏற்படுத்தத் துவங்குகிறது. அவர்களுடைய எண்ணம், குணம், செயல்பாடு முதயலிவை நேரிடையாகவோ, மறைமுகமாகவோ ஒருவருடைய மனத்தில் மாறுதல்களைக் கொண்டு வருகின்றன. இதனால் பெற்றோர்கள் தம் பிள்ளைகள் குழந்தைப் பருவத்திலிருந்தே யாருடன் பழகுகின்றனர் என்பதனில் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

''கூடா நட்பு பெரும் தீங்கில் முடியும்'' என்பதனை தம் பிள்ளைகளுக்குப் பக்குவமாக எடுத்துக் கூற வேண்டும். பிள்ளைகளும் பெற்றோர் தமது நன்மைக்காகத் தான் கூறுகின்றனர்

என்பதனை உணர்ந்து செயல்பட வேண்டும். பிள்ளைப் பருவத்தைக் காட்டிலும் மாணவர்களுக்கு குமரப் பருவத்தில் தான் நண்பர்களின் பாதிப்பு அதிகமாகக் காணப்படுகிறது. நண்பர்களின் வார்த்தைக்கு அப்போது அதிகமாக மதிப்பு தர ஆரம்பிக்கின்றனர். (உம்) வீட்டில் நல்ல நாளில் புடவை கட்டிக் கொள் என்று தாய் கூறும்போது சிணுங்குகின்ற பெண், நண்பர்கள் பள்ளிக்கோ, கல்லூரிக்கோ ஒருநாள் புடவையை கட்டி வரச் சொன்னால் மறுக்காமல் கட்டிச் செல்கின்றாள். அவர்கள் புடைவையில் நீ அழகாக இருக்கிறாய் என்று கூறினால், அன்றிலிருந்தே புடைவை அணிவதை பெருமையாகக் கருத ஆரம்பிக்கின்றாள். இதேபோல குமரப் பருவத்திலிருக்கும் மாணவனை வீட்டில் தலைக்கு எண்ணெய் தேய்த்துவாரு என்று கூறினால் மறுக்கிறான். வற்புறுத்தலின் காரணமாக வாரிச் சென்றால், அதனை நண்பர்கள் வரவேற்றால் மீண்டும் அதே போல் தலை வாரவே நினைக்கின்றான். வீட்டில் பெரியவர்கள் கூறுகின்ற நல்ல விஷயங்களை ஏற்பதைக் காட்டிலும் அதே விஷயத்தினை நண்பர்கள் கூறும்போது துரிதமாக ஏற்றுக் கொள்ளும் மன நிலையில் இன்றைய மாணவர்கள் உள்ளனர். இந்நிலையில் நண்பர்களின் சேர்க்கையானது தீமையாகவும், நேர்மாறானதாகவும் இருந்தால் அது அவர்களையும் அறியாமல் பாதிக்கின்றது.

உதாரணமாக வீட்டிற்கு தெரியாமல் திரைப்படம் பார்க்க அழைப்பது, போதை பொருள்களுக்கு அடிமையாக்குவது, மது அருந்த கற்றுத் தருவது, பொய் கூறுவது தவறல்ல என்று கூறுவது, பெற்றோர் சொற்படி கேட்டு நடத்தல் மற்றும் பெரியோர்களை மதித்தல் சிறுபிள்ளைத்தனம் என்று கூறுவது, சட்ட ஒழுங்குகளை மீறத் தூண்டுவது என விளையாட்டாக ஆரம்பித்து வினையாக முடிந்த உண்மைச் சம்பவங்களைக் கொண்டு தீய நண்பர்களின் சேர்க்கையினால் இன்றைய இளம் சமுதாயத்தினர் எவ்வாறு பாதிப்புக்கு உள்ளாகின்றனர் என்பதை அறிந்து கொள்ளலாம். இன்றைய சூழலில் இளம் பிள்ளைகளுடன் பெற்றோர்கள் எப்போதும் கூடவே இருக்க முடியாது. அதனால் அவர்களே முன் வந்து தாம் எதனைச் செய் வேண்டும், எதனைச் செய்யக் கூடாது என்பதனை உணர்ந்து செயல்பட வேண்டும். ஆபத்துக் காலத்தில் உதவுபவனே சிறந்த நண்பன் என்பதனை உணர்ந்து நல்ல நண்பர்களுடன் பழக வேண்டும். தவறான சேர்க்கையினை கூடுமானவரை தவிர்க்க வேண்டும். தாமும் தன்னுடைய நண்பர்களை நன் முறையில் ஊக்குவிப்பவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் கூறுகின்ற ஏற்கத் தகுந்த நல்ல கருத்துகளைப் பாராட்ட வேண்டும் அதன்படி நடக்க வேண்டும். அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில், நட்பினைகுறித்த இளம் பிராயத்தினர் என்ன கருதுகின்றனர் என்பதைத் தெரிந்து கொள்ள ஒரு ஆய்வாளர் ஆய்வு ஒன்றினை மேற்கொண்டார். ஆறாம் வகுப்பு, ஏழாம் வகுப்பு மாணவர்களிடம் நீங்கள் நண்பர்களாக கருதுபவரின் பெயர், அவரை நண்பர்களாக ஏற்றுக் கொண்டதற்கான காரணத்தை எழுதுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவுகளானது மாணவர்கள் நட்பினைக் குறித்து பெரும்பான்மையானவர் தவறான கருத்தினைக் கொண்டிருப்பதை உணர்த்தியது. அவர்கள் நண்பர்களை தேர்ந்தெடுத்ததற்கு கூறிய காரணங்களுள் சில கீழே குறிக்கப்படுகின்றன.

1. என் நண்பனின் குரல் மென்மையாக இருக்கும்.

2. பார்க்க அழகாக இருப்பார்.
3. அவருடைய பொருள்களை என்னுடன் பங்கிட்டுக் கொள்வார்.
4. என்னைத் திட்டமாட்டார்.
5. எங்களுக்குள் கருத்து வேறுபாடு கிடையாது.
6. நன்றாகப் படிக்கக் கூடியவர்.
7. எங்கள் வீட்டுக்கு அருகாமையில் வசிப்பவர்

இதனைக் குறித்து ஆய்வாளரின் முடிவுகள் பின்வருமாறு:

நண்பர்களை அவர்களது உருவம், குரல், போன்றவற்றை வைத்து தேர்வு செய்வது தவறாகும். அவற்றினை அடிப்படையாகக் கொண்டு நட்புக் கொள்வது உண்மையான நட்பாக இராது. பெரும்பான்மையான நேரங்களில் நண்பர்களால் தம்முடைய பொருள்களை பங்கிட்டுக் கொள்ள இயலாது. சந்தர்ப்பச் சூழநிலைகளை நாம் தாம் புரிந்து கொள்ள வேண்டுமே. நம்முடன் கருத்து வேறுபாடு வராதவர்தான் நண்பர் என்று அனைத்துத் தருணங்களிலும் கருதக் கூடாது. பிறருடைய விருப்பு வெறுப்புகளுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும், நம்முடைய கருத்துகளை நண்பர்களின் மேல் திணிக்கக் கூடாது. நல்ல நண்பன் நாம் தவறு செய்யும் போது சுட்டிக் காட்டுவான், திருத்த முற்படுவான், அதற்குப் பெயர் கருத்து வேறுபாடு இல்லை. நாம் செய்யும் நற்செயல்களைப் பாராட்டுவான். நம் தோல்விகளின் போது தோள் கொடுப்பான். அதே போன்ற நாமும் அவன் நட்பினைப் பாராட்ட வேண்டும். எப்போதும் நன்றாகப் படிப்பவர்களே நண்பர்களாக அமைவதில்லை, உன்னுடைய நண்பர்களுக்கும் தனித்திறன், தனிப்பட்ட குணமிருக்கும். அதனால் நட்பு என்பது என்ன, நண்பர்களை எவ்வாறு தேர்வு செய்வது, நட்பினை எவ்வாறு பேணுவது என்பது குறித்து மாணவர்கள் தெளிவான கண்ணோட்டத்தைக் கொள்ள வேண்டும்.

## 2.9 மதிப்புணர்வுகளை வளர்ப்பதில் மதத்தின் பங்கு (Role of Religion in Fostering Values)

இந்திய நாட்டில் பல்வேறு மதங்களைச் சார்ந்த மக்கள் வாழ்கின்றனர். தங்களுடைய பிள்ளைகளுக்கு இளம் வயதிலிருந்தே சமயங்கள் பற்றியும், தாம் வழிபடுகின்ற இறைவன், பின்பற்றுகின்ற இறைநெறிகள், வழிபாடுகளைப் பற்றியும் பெற்றோர்கள் கற்றுத் தருகின்றனர். இதனால் அவர்களிடம் இறை நம்பிக்கையும், சமய மதிப்புணர்வும் ஏற்படுகின்றன. அவ்வாறு பெற்றோர் சமயத்தினைப் பற்றிக் கற்றுத் தரும் போது பிற சமயங்களையும் மதிக்க வேண்டும் என்பதையும் அவர்களுக்குக் கற்றுத்தர வேண்டும். பல்வேறு சமயங்களில் இறைவனின் வடிவம் குறித்த நம்பிக்கை, இறை வழிபாடு முறைகள் வேறுபாடு உடையனவாக இருந்தாலும் அவற்றில் கூறப்பட்டுள்ள நன்னெறிகள் ஒன்றாகவே உள்ளன. (உம்) ஏழை, எளிவர்க்கு உதவுதல், விரதமிருத்தல், தூய்மையாக இருத்தல், இறைவனை வணங்குதல், வாக்கில் இனிமை, மது அருந்தாமை, சூதாடுதலில் ஈடுபடாமை, இல்லறம் பேணுதல் முதலியவை. இதனை இளம் சமுதாயத்திற்கு எடுத்துரைப்பது பெற்றோர்களின் கடமையாகும். இன்றைய காலகட்டத்தில் சமய நல்லிணக்கம் (Religious Tolerance), சமயச் சார்பின்மை (Secularism) குறித்தும் மாணவர்கள்

அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. சமயங்களைப் பற்றிய தெளிவற்ற கண்ணோட்டத்தால் மக்களிடையே நடக்கும் சமயப் பூசல்கள், வன்முறைகளை இதன் மூலமாக அறவே ஒழிக்க முடியும். இன்றைய இளம் பிள்ளைகளே வருங்கால சமுதாயமாக மாறுவதால், சமயங்களைப் பற்றிய தெளிவான கருத்தினை அவர்களுள் உருவாக்குவதால் நாட்டில் அமைதி உருவாகும். இதற்கெனப் பெற்றோர்களும், பள்ளிகளும் தலைமைப் பொறுப்பு ஏற்க வேண்டும். மேலும் இதற்கெனத் தற்போது சமய அமைப்புகளும், அரசாங்கமும் தனிக்கவனம் எடுத்து நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. இதன் மூலம் மக்களிடையே சமயங்களைப் பற்றிய மறுமலர்ச்சியான கண்ணோட்டம் ஏற்பட்டுள்ளது. இவை இந்திய நாட்டில் சமய நல்லிணக்கத்துக்கும், சமய சார்பின்மைக்கும் வழிகோலுவதாக உள்ளன.

மதிப்புணர்வுகளை வளர்ப்பதில் சமய அமைப்புகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை சமய மதிப்புணர்வுகள் ஒழுக்கம், தூய்மை, நேர்மை, நன்னடத்தை, வாய்மை, இறைவழிபாடு, இறை நம்பிக்கை, வாழ்வியல், தன்னை அறிந்திருத்தல் (Self-Realisation), ஆன்மீக நெறி முதலியவற்றை மக்களுக்குக் கற்றுத் தருகின்றன. இன்றைய இளம் சமுதாயத்தினர் நல் வழியில் செல்வதற்குச் சமய மதிப்புகள் போதிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு சமய அமைப்புகள் பல்வேறு வகைகளில் இப்பணியினைச் செய்து வருகின்றன. இந்திய நாட்டில் விஸ்வ இந்து பரீட்சத் என்னும் அமைப்பானது பள்ளி ஆசிரியர்களுக்கு நடனப் போட்டி, பேச்சுப் போட்டி முதலியவற்றை நடத்துகிறது. பள்ளி ஆசிரியர்கள் விருதுகளைப் பெறுகின்ற விழாவில் இவ்வமைப்பினர் பள்ளி மாணவர்களுக்கு இந்து சமயத்தில் உள்ள நன்னெறிகளையும், மதிப்புணர்வுகளையும் எவ்வாறு கற்றுத் தருவது என்பது பற்றிய விளக்கமளிக்கின்றனர் ஆர்ய சமாஜத்தின் கீழ் இயங்கும் பள்ளிகளில் மாணவர்களுக்கு யோகா, வேதங்கள் முதலியவை கற்றுத் தரப்படுகின்றன. சத்ய சாய் சேவா அமைப்பானது மாணவர்களுக்கு வேதங்கள், பகவத் கீதை முதலியவற்றில் உள்ள ஆழ்ந்த கருத்துக்களைக் கற்றுத் தருகிறது. சமயப் பாடல்களைப் பொருள் கூறி மாணவர்களுக்கு கற்றுத் தருகின்றன. மாணவர்களை ஊக்கப்படுத்த போட்டிகளும் நடத்தப்படுகின்றன. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் பார்த்தசாரதி சமய அமைப்பானது இளம் பிராயத்தினருக்கு திருப்பாவை, திருவெம்பாவை ஒப்பித்தல் போட்டியினை நடத்துகின்றது. இராமாயணம், மகாபாரதம் பற்றிய உபன்யாசங்கள் சமய அமைப்புகளால் நடத்தப்படுகின்றன. இவற்றைக் கேட்போர்க்குச் சமய மதிப்புகளுக்கும் வாழ்வியலுக்கும் இடையேயான அடிப்படை தத்துவங்கள் தெளிவுற விளங்கும்.

தேவாலயங்களில் இளம் சமுதாயத்தினருக்கு பைபிள் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பைபிள் கதைகள், வாசகங்கள் முதலியன பிள்ளைகளுக்குக் கற்றுத் தரப்படுகின்றன. இறைவனின் துதிப் பாடல்கள் பக்தியுடன் பாடுவதற்கு கற்றுத் தரப்படுகிறது. இளம் சிறார்கள் நாடக வடிவில் பைபிள் கதைகளை நடித்துக் காட்ட கற்றுத்தரப்படுகின்றனர். அவர்களுக்கு பைபிள் வாசகங்களுக்கான போட்டி, மாறுவேடப் போட்டி முதலியவை நடத்தப்படுகின்றன. இறைவனைச் சேவிப்பதற்கும் சேவை செய்வதற்கும் அனைவருக்கும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

இஸ்லாமிய சமய அமைப்பானது திருகுரான் வாசிப்பதற்கென சிறப்பு வகுப்புகளை இளம் சிறார்களுக்கென நடத்துகின்றனர். விருப்பப்படுவோருக்கு அரேபிய மொழியில் குரான் ஓதவும் கற்றுத் தருகின்றனர். அவர்களுக்கு திருக்குரானின் மகிமை, வாசகங்கள், பொருள், தன்மை, முக்கியத்துவம், பலன், ஓதும் விதமானது கற்றுத் தரப்படுகிறது. இஸ்லாமியர் பின்பற்ற வேண்டிய சமய நெறிகளும், ஒழுங்கு முறைகளும் முறைப்படி ஆசானால் இளம் பிராயத்தினருக்கு கற்றுத் தரப்படுகின்றன.

## 2.10 மதிப்புணர்வுகளைப் வளர்ப்பதில் அரசாங்கத்தின் பங்கு (Role of Government in Fostering Values)

அரசாங்கமானது, நவீன மதிப்புகளான ஜனநாயகம், சமத்துவம், சமயத்துவம், நீதி, சுதந்திரம், முற்போக்கு சிந்தனைக்கு வித்திடும் வகையில் செயல்பட்டு வருகிறது. மக்கள் ஆட்சியில் அனைவருக்கும் சம உரிமை அளிக்கப்படும் வகையில் இந்திய அரசு பல செயல் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தி உள்ளது. அவை மனித மதிப்புணர்வுகள், உரிமைகளுக்கு வழிகோலுவனவாக உள்ளது. அவை,

- அனைவருக்கும் கல்வி அளிக்கபட்ட வேண்டும் என்பதற்கான சட்டம் அமுலாக்கப்பட்டது.
- அனைவருக்கும் கல்வி இயக்கம் (சர்வ சிக்ஷா அபியான்) தொடங்கப்பட்டது.
- அனைவருக்கும் கல்வி பெறுவதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. சாதி, மத வேறுபாடின்றி அனைவரும் கல்வி பயில்கின்றனர். இதற்கென இலவசக் கல்வி, மதிய உணவு, சீருடை, புத்தகங்கள், பேருந்து வசதி, விடுதி, இரு சக்கர வாகனம் முதலியவை தரப்பட்டு உள்ளன.
- கல்வி உதவித் தொகையானது பிற்படுத்தப்பட்டோர்க்கு அளிக்கப்படுகிறது.
- கல்வி வேலைக்கென பிற்படுத்தப்பட்டோர்க்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.
- சுய வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தித் தந்துள்ளது.
- வீரச் செயல் புரியும் இளம் சமுதாயத்தினருக்கு விருது அளித்து கௌரவிக்கிறது.
- அடைவுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ மாணவியரை ஊக்குவிக்க பரிசுத் தொகை அளிக்கிறது.
- சமூக சேவைகளில் ஈடுபடும் மாணவர்களுக்கு சான்றிதழின் அடிப்படையில் கல்வி மற்றும் பணியிடைச் சேர்க்கையில் கூடுதல் மதிப்பெண் அளிக்கப்படுகிறது.
- மாநில, மத்திய அளவில் விளையாட்டுத் துறையில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மாணவ மாணவியர்க்குக் கல்வி மற்றும் பணியிடச் சேர்க்கையில் கூடுதல் மதிப்பெண் மற்றும் சிறப்பு இட ஒதுக்கீடு தரப்பட்டு உள்ளது.
- ஊனமுற்றோர், இராணுவ வீரரின் வாரிசுகள், விதவை முதலானோர்க்குக் கல்வி மற்றும் பணியிடைச் சேர்க்கையில் சிறப்பு இடஒதுக்கீடு அளிக்கப்பட்டு உள்ளது.

- உயர்கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சி புரியும் மாணவர்கள்களுக்கு ஊக்கத்தொகை மத்திய அரசால் அளிக்கப்படுகிறது.
- கல்வியைத் தொடர இயலாதவர்க்கென முறைசாராக் கல்வி அமைப்பினை அரசு செயல்படுத்தி வருகிறது. தொலைதூரக் கல்வியின் மூலம் பணிபுரிபவர்களும் கல்வியினைத் தொடர வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்து உள்ளது.
- பள்ளிக் கல்வியில் தேர்ச்சி பெறாதோர், மேலும் அதிக மதிப்பெண் எடுக்க விரும்பியவர்க்கென மறுதேர்வு முறையினை அமுல்படுத்தியது.
- மனித மதிப்புணர்வுகளைக் கருத்தில் கொண்டு, அவற்றோடு தொடர்புடைய நாள்களென அரசாங்கம் விழாக்களாகக் கொண்டாடுகின்றது. (உ.ம்)

  அறிவியல் தினம் - பிப்ரவரி 8

  சுற்றுச் சூழல் தினம் - ஜுன் 5

  உலக எய்ட்ஸ் தினம் - டிசம்பர் 1

  மனித உரிமை தினம் - டிசம்பர் 10
- தேசத் தலைவர்கள் தியாகத்தினைக் கருத்தில் கொண்டு அவர்களின் பிறந்த நாள், இறந்த நாளினை சிறப்புற அரசு கொண்டாடுகிறது. அவற்றை அரசு விடுமுறை நாள்களெனவும் அறிவித்து உள்ளது. (உ.ம்)

  காந்தி ஜெயந்தி – அக்டோபர் 2 (காந்தியடிகளின் பிறந்த தினம்)

  குழந்தைகள் தினம் - நவம்பர் 14 (ஜவஹர்லால் நேரு பிறந்த தினம்)
- சமய நல்லிணக்கத்தைக் கருத்தில் கொண்டு அனைத்துச் சமயங்களுக்கான முக்கிய பண்டிகைகளை அரசு விடுமுறை நாள்களாக அறிவித்து உள்ளது. அரசியல் தலைவர்கள் ஊடகங்களின் வழியே அந்நாள்களில் அனைவருக்கும் வாழ்த்துத் தெரிவிக்கின்றனர். அரசியல் தலைவர்கள் சமயத் தலைவர்கள் ஒருங்கிணைந்து பண்டிகைகளைக் கொண்டாடுகின்றனர். (உ.ம்) தீபாவளி, கிறிஸ்துமஸ், ரம்சான் நோன்பு, ஹோலி பண்டிகை முதலியன.
- தேசிய மதிப்புணர்வினைக் கருத்தில் கொண்டு இந்திய நாட்டுடன் தொடர்புடைய முக்கிய நாள்களை அரசு கொண்டாடுகிறது. (உ.ம்) சுதந்திர தினம், குடியரசு தினம், இந்திய நாட்டிலிருந்து அனைத்து பள்ளி மாணவர்களும் இந்நிகழ்ச்சிகளின் பேரணிகள், கலை நிகழ்ச்சிகளில் பங்கு பெறுகின்றனர்.
- பிறரின் உள்ளத்தைப் புண்படுத்தாமல் மனித மதிப்புணர்வுகளைப் பாதுகாக்கும் எண்ணத்துடன் இந்திய அரசானது நடைமுறையல் புதிய வார்த்தைகளை அறிமுகப்படுத்தி வருகிறது. (உ.ம்)

  வயதானவர்கள் - மூத்த குடிமக்கள்

  (Aged People – Senio Citizons)

  கற்பழிப்பு – பலாத்காரத்தாக்குதல்

(Rape – Sexual Assultment)

- மதிப்புணர்வுகளின் முக்கியத்துவத்தினைக் கருத்தில் கொண்டு மதிப்புக் கல்வியினை இந்திய அரசு வலியுறுத்துகிறது. ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவ ஆசிரியர்களுக்கு மதிப்பு கல்வி அளிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது.
- பள்ளிகளில் மதிப்புக் கல்வி தனிப்பாடமாகவோ, தேர்வாகவோ, நடத்தாமல் கலைத் திட்டங்கள், இணை கலைத் திட்டங்களின் மூலமாக மறைமுகமாகவோ, நேரிடையாகவோ கற்பிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது.
- சுற்றுச் சூழல் மதிப்புக்கு அதிகப்படியான முக்கியத்துவம் அளித்து ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கலைத்திட்டங்கள், இணைகலை திட்டங்கள் வழியாக கற்பிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது.
- தேசத்தின் முக்கிய தினங்களன்று சிறப்புத் தபால் தலைகளை வெளியிடுகின்றது.
- தேசியத் தலைவர்களின் பிறந்த நாளன்று சில சிறப்பு சட்டங்களையும் அமுல்படுத்தி உள்ளது. (உம்) காந்தி ஜெயந்தி அன்று மதுவிலக்கு சட்டமானது அமுலாக்கப்படும். அன்று அனைத்து மதுக்கடைகளும் மூடி வைக்கப்படும்.
- இளம் சிறார்களின் நலனைக் கருதி குழந்தைத் தொழிலாளர் தடைச் சட்டத்தை கட்டாயப்படுத்தி உள்ளது. இதன் மூலம் பள்ளிகளில் ஏற்படும் கழிவு (Wastage) முதலியவற்றைத் தடுக்கலாம். பள்ளிப் படிப்பினை பாதியில் நிறுத்துபவர்களின் எண்ணிக்கையும் (Number of Dropouts) கணிசமான அளவில் குறைக்கலாம்.
- கல்வி, பணியிடைச் சேர்க்கையில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு சதவிகிதத்தை அதிகரித்து உள்ளது. பெண்களுக்கு, ஆண்களுக்கு இணையான ஊதியம் அளிக்கப்படுகிறது, சொத்துரிமையும் அளிக்கப்பட்டு உள்ளது.
- பெண் சிசுக் கொலை, கருக்கலைப்பினைச் சட்டப்படி குற்றமாக அறிவித்துள்ளது. மருத்துவமனைகளில் சிசுக்களின் பாலினத்தைக் கண்டறிவதையோ, கூறுவதையோ தடை செய்துள்ளது.
- பொது இடங்களில் புகைப் பிடிப்பதை சட்டப்படி குற்றமாக அறிவித்துள்ளது. மேலும் சுற்றுச் சூழலில் மதிப்புணர்வுகளைக் கருத்தில் கொண்டு நள்ளிரவில் பட்டாசுகள் வெடிப்பது, பள்ளிகளின் அருகில் ஒலிப்பானை பயன்படுத்துதல், மரங்களை வெட்டுதல், பாதுகாக்கப்பட்ட விலங்கினை வேட்டையாடுதல், பொது இடங்களில் சாலைகளில் பூசணிக்காய் உடைத்தல் முதலியவற்றைச் சட்டப்படி குற்றமாக அறிவித்துள்ளது. குப்பைகளை எரிப்பதற்கு தடைவிதித்து உள்ளது.
- மனித உரிமையினைக் கருத்தில் கொண்டு தகவலறிதலின் உரிமைச் சட்டம் (Right to Information Act) அரசால் அமுலாக்கப்பட்டு உள்ளது. இதன்படி அரசாங்கத்துக்கு உட்பட்ட அனைத்துத் துறைகளிலும் மக்களுக்குத் தேவைப்படுகின்ற தகவல்களைத் தெரிந்து கொள்வதற்கு உரிமை தரப்பட்டுள்ளது.

- வாடிக்கையாளர்கள் மற்றும் பொருளாதார மதிப்பினைக் கருத்தில் கொண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தினை செயல்படுத்தி உள்ளது. நுகர்வோர் நீதிமன்றமும் செயல்பட்டு வருகிறது. வாடிக்கையாளர்கள் பொருள்களின் தரமின்மை, விலை குறித்த பிரச்சினைகளுக்கான தீர்வினை இதன் மூலம் பெற ஏதுவாகிறது.
- பள்ளிகளில் மாணவ, மாணவியர்கள் ஆசிரியர்கள் உடல் ரீதியாக அடித்து துன்புறுத்தலைத் தடை செய்துள்ளது. குழந்தை வதைப்புச் சட்டம் (Child AbusementAct) இளம் பிள்ளைகளை பிறர் அடிப்பது, திட்டுவது, பயமுறுத்துவது, விரும்பத்தகாத வகையில் தம்முடைய உடலினைப் பிறர் தொடுவதினை வன்மையாகக் கண்டிக்கிறது. இச் சட்டத்தின்படி குழந்தைத் தொழிலாளர்களைப் (15 வயதுக்குட்பட்டவர்கள்) பணியில் அமர்த்துவோர் தண்டனைக்கு உரியவராகக் கருதப்படுவர். இளம் பிள்ளைகளைப் பாலியல் ரீதியாக துன்புறுத்துவோர் கடும் தண்டனைக்கு ஆட்படுவர்.
- சட்டத்தின்படி சில வார்த்தைகளைப் பொதுமக்கள் பொதுவிடங்களில் பயன்படுத்துவதும், திரைப்படங்களில் வசனங்களாகப் பயன்படுத்துவதும் தடை விதிக்கப்பட்டு உள்ளது. (உம்) செருப்பால் அடிப்பேன் (தகாத வார்த்தைகள்), இனத்தைக் குறிப்பிட்டு திட்டுவது (பிற்பட்ட இனத்தார்), விலங்கினத்தைக் குறிக்கும் வார்த்தைகள் (நாய், பன்றி) போன்றவை.
- பெண்களின் நலங்கருதி, இரவு நேரங்களில் காவல் நிலையங்களுக்கு விசாரணைக்குக் கூட அவர்களை அழைத்துவரக் கூடாது என்பது இந்திய அரசின் சட்டமைப்பாகும்.
  நடமாடும் தெய்வங்களாக கருதப்படுகின்ற மருத்துவத் தொழிலில் கூட பெண் மருத்துவர், செவிலியர் தனது பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு தெரியாத இடத்திற்குச் சென்று மருத்துவம் பார்ப்பதற்கு மறுக்கக் கூட உரிமை இருக்கின்றது. தன்னுடைய கற்பினையோ, உயிரினையோ, காப்பாற்றும் பொருட்டு பெண்ணொருவர் செய்யும் கொலையினைக் கூட மனித நேயத்துடன் இந்திய சட்டமைப்பானது அணுகின்றது.
- இந்திய அரசியல் சட்டமைப்பினை மீறி பிறரால் செய்யப்படுபவை அனைத்தும் சட்டப்படி குற்றமாகக் கருதப்படுகிறது.

## 2.11 மதிப்புணர்வுகளை வளர்ப்பதில் மக்கள் தொடர்பு சாதனங்களின் பங்கு (Role of Mass Media in Fostering Values)

மக்கள் தொடர்பு சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள், பத்திரிகைகள் மற்றும் செய்தித்தாளிகள், கைபேசிகள் மற்றும் கணினி மற்றும் இணையதளம் போன்றவை மனித மதிப்புணர்வுகளைப் பெரிதும் பாதிக்கின்றன. மக்கள் தொடர்பு சாதனங்களின் முக்கிய பணிகள் மக்களுக்கு அன்றாட தகவல்களை அளிப்பது, பொழுது போக்கிற்குப் பயன்படுவது, விளம்பரங்களின் வழியே வர்த்தக வளர்ச்சிக்குப் பயன்படுவது என்றாலும், மனித மதிப்புணர்வுகளுக்கும் இவற்றின் பயன்பாட்டிற்கும் மறைமுகமாகப் பெருந்தொடர்பு உள்ளது. அவற்றினைப் பற்றிய விளக்கத்தினை அறிந்து கொள்வோம்.

### 2.11.1 வானொலி (Radio)

இந்தியாவில் வானொலி ஒலிபரப்பானது 1927இல் மும்பாய் மற்றும் கொல்கத்தாவில் தனியார் துறையினரால் ஆரம்பிக்கப்பட்டது. 1937இல் அனைத்து இந்திய வானொலி (All India Radio) என அழைக்கப்பட்டது. பின்னர் 1950 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கமானது வானொலியினை இந்திய ஒலிபரப்பு சேவை (Indian Broadcasting Service) என பெயரிட்ட அழைத்தது. 1957 ஆம் ஆண்டு வானொலியானது இந்திய நாடு முழுவதும் ஆகாசவாணி எனும் பெயரினால் பிரபலம் அடைந்தது. இந்திய நாடு விடுதலை அடைவதற்கு முன்பிருந்து செயல்பட்டு வரும் வானொலியானது தனது தரத்தினால் இன்றளவும் உயர்ந்து இருக்கிறது. வானொலியில் செய்திகள், நாடகங்கள், சிறுவர்க்கான நிகழ்ச்சிகள், கல்வி ஒலிபரப்புகள், இசை நிகழ்ச்சிகள் என அனைத்துத் தரப்பினராலும் விரும்பப்படும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. கிராமத்துப்புறம், நகர்ப்புறம் என அனைத்து மக்களும் வானொலி நிகழ்ச்சிகளால் பயன்பெறுகின்றனர். தற்போது வானொலியில் ஒலிபரப்பப்படும் தனியார் இசை அலைவரிசைகள் மக்களின் இசையார்வத்தினை அதிகரித்து உள்ளன.

### 2.11.2 தொலைக்காட்சி (Television)

இந்திய நாடு விடுதலை அடைந்த பிறகு 1959 ஆம் ஆண்டு ஆய்வுக்காக முதன் முதலில் தில்லி நகரத்தில் தொலைக்காட்சியானது அறிமுகப்படுத்தப்பட்டது. ஆரம்ப காலத்தில் கருப்பு வெள்ளை தொலைக்காட்சிகள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டன. பின்னர் ஆகஸ்டு மாதம் 1982 ஆம் ஆண்டு வண்ணத் தொலைக்காட்சி பெட்டி முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இன்சாட்-பி சாட்டிலைட் வாயிலாக மக்களுக்கு ஒளிபரப்பப்பட்டு வருகின்றன. 1991 ஆம் ஆண்டு தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தொலைக்காட்சியானது வானொலியினைப் போன்று கல்வி நிகழ்ச்சிகள், உடல்நல நிகழ்ச்சிகள், விளையாட்டு நிகழ்ச்சிகள், தொடர்பு நாடகங்கள், திரைப்படங்கள், கலை நிகழ்ச்சிகள் என மக்களுக்குப் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகின்றன. வானொலியினைக் காட்டிலும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் மனித மதிப்புணர்வுகளில் மறைமுகமாக மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளன. அவற்றுள் நன்மை, தீமை இரண்டும் காணப்படுகின்றன. அவற்றைப் பற்றி விவரமாகக் காண்போம்.

**நன்மைகள்**

1. வீட்டிலிருந்தபடியே ‘டிஸ்கவரி’ அலைவரிசையின் மூலமாக உலக நிகழ்வுகளையும், அறிவியல் செய்திகளையும், அறிந்து கொள்கின்றனர். இதனால் அவர்களுடைய நுண்ணறிவு மதிப்புணர்வு, அறிவியல் மனப்பான்மை அதிகரிக்கிறது.
2. செய்திகளுக்கான அலைவரிசைகளின் வாயிலாக, உலகச் செய்திகளை உடனுக்குடன் மக்கள் அறிந்து கொள்கின்றனர்.

(உ-ம்) பிபிசி (BBC), என்.டி.டி.வி. (NDTV), சன் செய்திகள் (Sun News) இவற்றின் மூலமாக மக்களின் அரசியல் மதிப்புணர்வு, சமூக மதிப்புணர்வு, பொருளாதார மதிப்புணர்வு அதிகரிக்கிறது.

3. விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கான அலைவரிசையின் வாயிலாக மக்களின் ஆர்வம், அறிவு பெருகுகிறது. இதனால் நுண்ணறிவு மதிப்புணர்வு, உடல் நல மதிப்புணர்வு பெருகுகிறது. (உ-ம்) ஸ்டார் ஸ்போர்ட்ஸ் (Star Sports) அலைவரிசை
4. இசை நிகழ்ச்சிகளுக்கெனவே செயல்படும் அலைவரிசைகளின் வாயிலாக மக்களின் மன அழுத்தம் குறைகிறது, மகிழ்ச்சி அதிகரிக்கிறது, இசையார்வம் பெருகுகிறது. இதனால் கலையுணர்வு மதிப்புணர்வு அதிகரிக்கிறது.
5. நகைச்சுவை நிகழ்ச்சிகளின் வாயிலாக மக்களுக்கு மன அமைதி கிடைக்கிறது. மன அழுத்தமானது பெருமளவு குறைகின்றது. அவை அவர்களுக்கு உடல் நலத்திற்கும், மன நலத்திற்கும் வழிகோலுகின்றது.
6. தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் திரைப்படங்களின் வழியாக மக்களின் பொழுதுபோக்கு அம்சமானது நிறைவேறுகிறது. ஒரு குடும்பமானது திரையரங்குக்குச் சென்று பார்க்கும் செலவினையும் குறைக்கிறது.
7. மகளிர்க்குப் பயன்படும் சமையல் குறிப்புகள், அழகுக் குறிப்புகள், சிறு தொழில் பற்றிய நிகழ்ச்சிகள் அவர்களின் தன்னம்பிக்கையை அதிகரிக்கின்றன, அழகுணர்வு, உடல்நல மதிப்புணர்வில் ஆர்வத்தினை அதிகரிக்கின்றன.
8. இறை மதிப்புணர்வு தொடர்பான நிகழ்ச்சிகளில் பல சமயங்களைச் சார்ந்த ஆலயங்களைப் பற்றிய சொற்பொழிவுகள், சமய தலைவர்களின் சொற்பொழிவுகள் ஒளிபரப்பப்படுகிறது. இதன் வாயிலாக சமயங்களில் கூறப்படுகின்ற நன்னெறிகள் மக்களைச் சென்றடைகின்றன.
9. குழந்தைகளுக்கான பிரத்யேக அலைவரிசைகளில் பொழுது போக்கு நிகழ்ச்சிகள் மட்டுமின்றி, அவர்களின் கலையார்வத்தினை வளர்க்கும் நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன. குழந்தைகளுக்குப் பிடித்த சித்திர பட கதாபாத்திரங்களின் வாயிலாக கணிதம், ஆங்கிலம், தமிழ் முதலியவை கற்றுத் தரப்படுகின்றன. குழந்தைகளுக்கான போட்டிகளை நடத்தி அவர்களின் தன்னம்பிக்கையையும் வளர்க்கின்றனர். (POGO அலைவரிசை, டிஸ்னி அலைவரிசை, சுட்டி டிவி)
10. குற்றவியல் தொடர்பான நிகழ்ச்சிகளின் வழியே மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருகின்றன.
11. மக்களிடையே உள்ள பேச்சாற்றல், சிந்திக்கும் திறனை பயன்படுத்தும் வகையில் அலைவரிசைகளில் அரட்டை அரங்குகள் நடத்தப்பட்டு இன்று சமுதாயத்தில் காணப்படும் பிரச்சினைகளையும், அவற்றிற்கான தீர்வினையும் கண்டறியச் செய்கின்றனர்.
12. அலை வரிசைகளில் திரைப்பட நடிகர்கள் மற்றும் தொழில் நுட்ப கலைஞர்களின் பேட்டிகள் ஒளிபரப்பப்படுகின்றன இதன் மூலமாக திரைப்படக் கல்லூரியில் இருக்கும்

பல்வேறு துறைகளினைப் பற்றியும், தொழில் நுட்பங்கள், அவற்றின் பயன்பாடுகள் பற்றியும் மக்கள் அறிந்து கொள்கின்றனா். இன்றைக்கு அதிக அளவில் மாணவா்கள் B.Sc., Visual Communication போன்றவை தோ்வு செய்து படிப்பதற்கு இவையும் ஒரு காரணமாகும்.

13. மருத்துவத் துறை தொடா்பான நிகழ்ச்சிகளின் வழியே மக்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை மருத்துவா்களே தீா்த்து வைக்கின்றனா். மேலும் உடல் நலத்தோடு வாழ்வதற்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் பெறுகின்றனா். மருத்துவா்கள் புரியும் அறுவை சிகிச்சைகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகின்றன. தொலைக்காட்சியின் மூலம் இயற்கை உணவு வகைகளின் பயன்கள், தியான முறைகள் ஆகியவற்றையும் அவற்றின் முக்கியத்துவத்தினையும் மக்கள் அறிந்து கொள்கின்றனா்.
14. தற்காப்புக் கலைகளான, சிலம்பம், களரி, கராத்தே போன்றவற்றைப் பற்றிய நிகழ்ச்சிகளின் வழியே செய்முறையின் மூலமாக அவற்றின் முக்கியத்துவத்தினை வல்லுநா்கள் விளக்குகின்றனா். இவை மக்களிடையே பயன்பாட்டு மதிப்புணா்வினை பற்றி அறிந்து கொள்ள வழி செய்கிறது.
15. அரசியல் என்பது மேடையில் மட்டும் தான் என்று இருந்த நிலை மாறி, அரசியல் நிகழ்வுகள், அரசியல் கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், கலந்துரையாடல்கள், ஒளிபரப்பப்படுவதால் இன்றைய அரசியலை பற்றிய தெளிவான கண்ணோட்டம், அறிவு, ஆா்வம் மக்களிடையே அரசியலில் மதிப்புணா்வினை அதிகரிக்கச் செய்கிறது. மனித உரிமைகளுக்கு வழிகோலும் வகையில் தோ்தல் முடிவுகள் உடனுக்குடன் தெரிந்து கொள்ள இயல்கிறது.

தொலைக்காட்சியின் வழியே நன்மைகள் பல இருப்பினும் தீமைகளும் பெருமளவில் ஏற்படச் செய்கின்றன. அவை பின்வருவமாறு.

**தீமைகள்**

1. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் மீது கொண்ட ஈா்ப்பின் காரணமாக மக்களிடையே நூல்களை வாசிக்கும் ஆா்வம் சிறிது குறைந்துள்ளது.
2. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பொழுதுபோக்கிற்கு என்று இருந்த நிலை மாறி, நம்முடைய பெரும் பொழுதினையே தொலைக்காட்சியின் முன்பு மக்கள் வீணாக்குகின்றனா். எந்த நிகழ்ச்சிகளை காண வேண்டும், என்பதனை திட்டமிட்டு பாா்க்காததினால் மக்களுடைய சக்தி, நேரம் பெருமளவில் வீணாகின்றது.
3. பொழுது போக்கிற்கான தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் தொடா் நாடகங்கள் மனித மதிப்புணா்வுகளை பெரிதும் பாதிப்பனவாக உள்ளன. அவற்றில் பெண்கள் எப்போதும் அழுது கொண்டே தன்னம்பிக்கை அற்றவா்களாகவோ, கொடுமைக்காரா்களாகச் சித்தரிக்கப்படுகின்றனா். ஆண்கள் சா்வாதிகாரிகளாகச் சித்தரிக்கப்படுகின்றனா். மக்களின் மனத்தில் மறைமுகமாக வஞ்சம், பொய்மை, எதிா்மறை எண்ணங்களைத் தூண்டுவனவாக பெரும்பாலான தொடா்கள் உள்ளன. இந்தியப் பண்பாட்டிற்குப் பொருந்தாத வகையில் ஒரு

பெண் பல ஆண்களைத் திருமணம் செய்து கொள்வது, திருமணமான ஆணை விரும்புவது, திருமணமான பெண் திருமணமாகாதவரை விரும்புவது, ஒரு ஆண் பல பெண்களைத் திருமணம் செய்வது என தகாத விவரங்கள் கதைகளாக வடிவமைக்கப்பட்டு ஒளிபரப்பப்படுகின்றன. இத் தொடர்களை தவறாமல் பார்க்கும் மக்களிடையே அதன் தாக்கம் மறைமுகமாகத் தீய விளைவுகளையே ஏற்படுத்தும்.

4. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் மீது கொண்ட மோகத்தின் காரணமாக வீட்டிலிருக்கும் பெண்கள் வெளியில் வருவதைத் தவிர்க்கின்றனர். மேலும் விருந்தினர் வீட்டிற்கே வந்தால் கூட அவர்களின் மனத்தினை நிலைப்படுத்த அவர்களால் இயல்வதில்லை. வெளியில் முக்கியமான குடும்ப நிகழ்ச்சிகளுக்குச் சென்றால் கூட தொடர்களைப் பற்றிய கவனம் உள் மனத்தில் அவர்களுக்கு இருந்து கொண்டே இருக்கிறது. இதனை ஒருவிதமான அடிமைநிலை (Addiction) என்று கூறலாம்.
5. இந்திய நாட்டில் கொண்டாடப்படும் பண்டிகைகளுக்கெனச் சிறப்பு நிகழ்ச்சிகள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுகின்றன. ஆனால் அவை அப்பண்டிகைகளின் முக்கியத்துவம், பின்னணியைப் பற்றி விளக்குவதாக பெரும்பாலும் இருப்பதில்லை. இதன் காரணமாக இளம் சமுதாயத்தினருக்கு அப்பண்டிகைகளைப் பற்றி அறிந்து கொள்ள முடியாமல் போகிறார். அந்நாள்களில் திரைத்துறை தொடர்பான நிகழ்ச்சிகளுக்கே மக்களிடையே வரவேற்பு இருக்கிறது. வர்த்தக ரீதியாக தனியார் அலைவரிசைகளுக்கு இதனால் அந்நாள்களில் விளம்பரங்களின் மூலம் அதிக வருவாய் கிடைக்கிறது.
6. சிறுவர் சிறுமியர்க்கென ஒளிபரப்பப்படும் அலைவரிசைகளில் வீரசாகசம் எனும் பெயரில் காண்பிக்கப்படும் சில தொடர்கள் அவர்களிடையே வன்முறையினையும், விபரீத எண்ணங்களைத் தூண்டுவனவாகவும் உள்ளன. கற்பனையை விட கொடிய வினோதமான உருவ அமைப்புடைய கதாபாத்திரங்கள் மீது கொண்ட ஆர்வத்தின் காரணமாக குழந்தைகள் அக்கதாபாத்திரங்கள் தொடர்பான பொம்மைகள், ஒட்டும் படங்கள் (Stickers) முதலியவற்றைச் சேகரிப்பதால் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். அத்தொடர்களில் வரும் சம்பவங்களில் உள்ள ஈடுபாட்டின் காரணமாக அதனை வீட்டில் பெரியவர்கள் இல்லாத நேரங்களில் கதாபாத்திரங்கள் விபரீத சாகசங்களை முயன்று பார்த்து அதனால் உயிரிழந்த பச்சிளம் சிறுவர்கள் அநேகர். இச்சம்பவங்கள் கேட்போர் நெஞ்சினை அதிரச் செய்வனவாக உள்ளன. இத்தகைய நிகழ்ச்சிகளைப் பார்க்க விடாமல் குழந்தைகளைத் தடுப்பதும், அவர்களுக்குப் பக்குவமாக அறிவுரை கூறுவதும் பெற்றோர்களிடம் தான் உள்ளது. கதாநாயகர்களின் வீரசாகசங்களில் மகத்தினை பறிகொடுத்து அவர்களை தாமும் பின்பற்றும் எண்ணத்தினை (Hero Worshipism) மாணவர்களின் மனத்தில் இருந்து அறவே ஒழிப்பது ஆசிரியர்களின் கடமை மட்டுமன்று, அவர்களுடைய பெற்றோர்களின் கடமையுமாகும்.

இதனால் பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் கவனம் சிதறாமல் இருக்க, பாடல்களில் நாட்டம் அதிகரிக்க முதலில் அவர்கள், கூடுமானவரை நல்ல நிகழ்ச்சிகளைத் தேர்வு செய்து

பார்க்க வழிகாட்ட வேண்டும். தவிர்க்க வேண்டிய நிகழ்ச்சிகளைக் கூடுமானவரை அறிவுரையினாலோ, தொழில் நுட்பத்தை (Child lock – தேவையற்ற நிகழ்ச்சிகளை காணாதவாறு பூட்டி வைத்தல்) பயன்படுத்தியோ, சிறுவர் சிறுமியர் காணாதவாறு தடுக்கலாம். பிள்ளைகள் குறிப்பிட்ட நேரம் மட்டும் தொலைக்காட்சியினைக் காணுமாறு அறிவுறுத்த வேண்டும். அவர்களின் தேர்வு நேரத்தில் பெற்றோர்கள் தொலைக்காட்சியின் முன்பு தாமும் அமர்வதைத் தவிர்க்க வேண்டும்.

### 2.11.3 திரைப்படங்கள் (Films)

மக்கள் தமது பொழுது போக்கிற்காகவும், மன அழுத்தத்தைக் குறைக்கவும், தாம் நடைமுறையில் பார்க்கவும், செய்யவும் முடியாதவற்றைக் கண்டு ரசிக்கவும் பெரும்பாலும் திரைப்படங்களுக்குச் செல்கின்றனர். பெரும்பாலும் திரைப்படங்கள், சமூகம் மற்றும் சரித்திரத்தைப் பின்னணியாகக் கொண்டு எடுக்கப்படுகின்றன. திரைப்படங்களுள் சில நல்ல கதைக் கருவினைக் கொண்டு வியாபார ரீதியா வெற்றி பெறுகின்றன. பெரும்பாலான திரைப்படங்கள் வன்முறை, பாலுணர்வு போன்றவற்றைத் தூண்டுபவையாக அமைகின்றன. இத்தகைய படங்கள் கதைக்கு முக்கியத்துவம் அளிக்கமால் பொழுதுபோக்கு அம்சம், வியாபார நோக்கு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டவை ஆகும். பெரும்பாலும் திரையரங்குகளுக்கு அனைவரும் குடும்பத்துடன் வருகின்றனர். பெற்றோர்கள் நல்ல கதையம்சமுள்ள திரைப்படங்களைத் தேர்வு செய்து குடும்பத்துடன் சென்று பார்க்க வேண்டியது இன்றைய காலகட்டத்தில் அவசியமாகிறது. ஏனெனில் திரைப்படங்களில் வருகின்ற கதை பின்னணி, காட்சி அமைப்பினைக் கண்டு, மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வது, பள்ளிப் பருவத்தில் காதலிப்பது, நண்பர்களோடு சேர்ந்து வீட்டுக்குத் தெரியாமல் சுற்றுலா செல்வது, பெரியோர்களைப் பெயரிட்டு அழைப்பது, மரியாதையின்றிப் பேசுதல், காதல் திருமணம் செய்து கொள்ளல் போன்ற சம்பவங்கள் தற்போது அதிகரித்து உள்ளன. சில நேரங்களில் மாணவ மாணவியர் நண்பர்களோடு, சேர்ந்து பெற்றோர்களுக்குத் தெரிந்தும், தெரியாமலும் திரைப்படங்களைக் காண்கின்றனர்.

பெற்றோர்களுக்கு அவர்கள் அவ்வாறு யாருடன் செல்லவிருப்பது முன் கூட்டியே தெரியுமானால், அவர்கள் யாருடன் செல்லவிருக்கிறார்கள், எந்தத் திரைப்படத்திற்குச் செல்ல விரும்புகிறார்கள் என்பதில் தனிக் கவனம் செலுத்தவேண்டும். கூடுமானவரை பெற்றோர்களுக்குத் தெரிவிக்காமல் அவர்கள் திரையரங்குகளுக்குச் செல்லுதல் தவறு என்பதைப் பக்குவமாக உணர்த்தவேண்டும். மேலும் திரைப்படங்களை இயக்குபவர்களும் நல்ல கதையம்சங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். நல்ல கதைகளைக் கொண்ட திரைப்படங்களுக்கு எந்தக் காலத்திலும் மக்களிடையே வரவேற்பு உள்ளது என்பதனை அவர்கள் மறந்து விடக் கூடாது. சமுதாயத்தில் திரைப்படத்துறையினர்க்கும் முக்கிய பங்கு உள்ளது என்பதனைக் கருத்தில் கொண்டு மனித மதிப்புணர்வுகள் கெடாதவாறு திரைப்படங்களைத் தயாரித்து வெளியிட வேண்டும்.

### 2.11.4 பத்திரிகைகள் மற்றும் செய்தித்தாள்கள் (Magazines and Newspapers)

இந்தியாவில் முதன் முதலில் ஜெ.ஏ.ஹிக்கி (J.A. Hickey) என்பவர் வங்காள மொழியில் "Bengal Gazette" எனும் பத்திரிகையினை ஆரம்பித்தார். அதில் ஆங்கிலேயரின் கிழக்கிந்திய கம்பெனியின் நடவடிக்கைகளைப் பற்றிய முக்கிய செய்திகள் உடனுக்குடன் வெளியிடப்பட்டன. தற்போது, இந்திய நாட்டில் ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் தமிழ் என அனைத்து மொழிகளிலும் பத்திரிகைகள் உள்ளன. ஆரம்ப காலத்தில் இந்திய நாட்டில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் அன்றாடம் இவற்றில் அச்சிடப்பட்டன. அப்போது பிற ஊடகங்களின் தாக்கம் குறைவாக இருந்ததால், சுதந்திரத்திற்கு முன்பு அவற்றின் விற்பனை அமோகமாக இருந்தது. பிறகு படிப்படியாக தொலைக்காட்சி, திரைப்படங்கள் போன்றவற்றின் நுழைவிற்குப் பிறகு பத்திரிகை விற்பனை சரியத் தொடங்கியது. அதனை மீண்டும் நிலைபெறச் செய்வதென புலனாய்வு செய்திகளடங்கிய பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின. இதனை புலனாய்வு பத்திரிகையியல் (Investigative Journalism) என்றழைத்தனர். இதன் காரணமாக பன்னாட்டுச் செய்திகள், அரசியல் செய்திகள், கலவரங்கள், கட்சி பூசல்கள், வன்முறை சம்பவங்கள், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, மோசடி சம்பவங்கள் போன்றவை பத்திரிகைகளில் வெளிவர ஆரம்பித்தது. இதனால் மக்களிடையே விழிப்புணர்வு அதிகரித்தாலும், மறைமுகமாக அவர்களின் மனத்தில் தீய எண்ணங்களும், செய்திகளும் விதைக்கப்பட்டன. குற்றங்களை எவ்வாறு புரிவது என்பது போன்ற தேவையற்ற தகவல்களும் அவர்கள் மனத்தில் பதிகின்றன.

மக்கள் தாம் வாங்குகின்ற நாளிதழ்களை தரமானதாக வாங்க வேண்டும். சில பத்திரிகைகள் சமீப காலங்களாக ஆக்கப்பூர்வமாக தம்முடைய விற்பனையினை அதிகரித்து உள்ளன. அவை பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்புக்கான மாதிரி வினாத்தாள், சிறுவர் மலர், ஆன்மீக மலர், போன்றவற்றை இலவச இணைப்புகளாக வாடிக்கையாளர்களுக்கு அளிக்கின்றன. இதனால் மக்களிடையே பத்திரிகைகளை வாசிக்கும் பழக்கம் அதிகரித்து உள்ளது. பெற்றோர்கள் தாம் தேர்வு செய்து வாங்க வேண்டும். குழந்தைகளுக்கென பெற்றோர்கள் வாங்கித் தருகினற புத்தகங்கள் அவர்களின் அறிவுத்திறனை வளர்ப்பனவாகவும், பண்பாட்டினை மேம்படுத்துவனவாகவும், படைப்பாற்றலை ஊக்குவிப்பனவாகவும் இருக்க வேண்டும். (உம்) புராணங்கள், தேசத்தலைவர்கள் பற்றிய சித்திரக்கதைகள், அறிவியல் நகைச்சுவைப் புத்தகங்கள், வண்ணம் தீட்டுவதற்கான புத்தகங்கள் முதலியவற்றை வாங்கிப் படிக்கும்படி வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டும். நூலகம் சென்று படிக்கும் பழக்கத்தினைப் பிள்ளைகளுக்கு உருவாக்க வேண்டும். பெற்றோர்கள் நூலகத்தில் உறுப்பினர்களாக இருப்பது மட்டுமின்றி தம்முடைய பிள்ளைகளையும் நூலகத்தில் உறுப்பினர்களாகச் சேர்வதற்கு அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

### 2.11.5 கைபேசிகள் (செல்போன்கள்) (Cellphones)

மக்கள் தொடர்பு சாதனங்களுள் ஒன்றான இவை ஒரு தொடக்க நிலையில் அனைவராலும் ஆடம்பரப் பொருளாக கருதப்பட்டன. தற்போது வளர்ந்து வரும் தொழில்

நுட்பத்தின் காரணமாக மக்களிடையே இவை சர்வ சாதாரணமாக காணப்படுகின்றன. இன்றைய இளம் சமுதாயத்தினரிடையே இவற்றின் பயன்பாடு அதிகமாகக் காணப்படுகிறது. இவற்றின் மூலம் தொலைத் தொடர்பு வசதி, செய்திகளை பரிமாறிக் கொள்ளும் வசதி, இணையதள வசதி, கணக்கிடல், படம் எடுத்தல் போன்ற பலவற்றைத் துரிதமாகச் செய்ய முடியும். ஆனால் அவற்றை எந்த அளவிற்கு மக்களும் இளம் சமுதாயத்தினரும் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துகின்றனர் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. அவசரமாக ஒருவரைத் தொடர்பு கொள்ளவும், தகவல்களைப் பரிமாறிக் கொள்வதும் அடிப்படையில் செல்போனின் முக்கிய பணியாகும். ஆனால் இன்றைய காலகட்டத்தில் பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு அதனை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்துவதற்கு அறிவுறுத்துவதில்லை. தேவையின்றித் தம் பிள்ளைகளின் வற்புறுத்தலுக்கு இணங்கி வாங்கித் தரப்படுகின்ற செல்போன்கள் இன்றைய இளம் சமுதாயத்தினால் ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்தப்படுவதில்லை. நேரம் காலமின்றி நண்பர்களுடன் அரட்டை அடிக்கவும், பொருளற்ற செய்திகளைப் பரிமாறிக் கொள்ளவும் செல்போனைப் பயன்படுத்துகின்றனர். வாகனத்தை ஓட்டும் போது செல்போனில் பேசக் கூடாது என்று இந்திய அரசாங்கமானது சாலை விதிகளுக்கான சட்டங்களின் வழியே வலியுறுத்துகின்றது. இதனை நடைமுறையில் செயல்படுத்தாமல் வாகன விபத்தில் உயிரிழக்கும் இளைஞர்களின் பெற்றோர்கள் படும் மன உளைச்சல் வேதனைக்குரியதாகும். மேலும் உணர்வு பூர்வமான விஷயங்களையும், அந்தரங்க விஷயங்களையும், உரத்த குரலில் பொது இடங்களில் செல்போன்களில் பேசுபவர்களை நாம் அன்றாடம் காணலாம்.

செல்போன்களை ஆண்கள் தம்முடைய சட்டைப் பையில் வைக்கின்றனர். அதிலிருந்து வெளிவரும் கதிரியக்கம் இதயத்தைப் பாதிக்கக் கூடியதாகும். மேலும் மழைக் காலங்களில் மின்னலொளி அதனைத் தாக்கினால் அதனை வைத்திருப்பவரின் உயிருக்கு ஆபத்தாக முடியும். இதனைப் பற்றிய அறிவாற்றல் அநேகருக்கு இருந்தும் யாரும் அதனை நடைமுறையில் பின்பற்றுவதில்லை. செல்பேசிகளை முதன் முதலில் வாங்குபவர்கள் அதன் பயன்பாடுகளை குறிப்புகளின் மூலம் தாமே அதனை அறிந்து கொள்கின்றனர். இதனை Mobile Learning (M-Learning) என்கின்றனர். அதனைப் பயன்படுத்துவதனை பிறகு அவர்களால் தவிர்க்க முடிவதில்லை. இதனை ஒருவிதமான அடிமைத்தனம் (Addiction) என உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். செல்போன்களில் விளையாட்டுகளுக்கென பிரத்யேக பொத்தான்கள் உள்ளன. அதனைப் பயன்படுத்தி விளையாடும்போது ஏற்படுகின்ற ஒளியானது கண்களைப் பாதிக்கக் கூடியதாகும். இவ்விளையாட்டுகளில் ஈடுபடுவோர் மணிக் கணக்கில் நேரத்தினை வீணடிக்கின்றனர். இவை ஒருபுறமிருக்க இப்போது இந்திய நாட்டை உலுக்கிக் கொண்டிருக்கும் Cyber Crimes போன்றவற்றிற்கு முக்கிய காரணமாக செல்போன், இணையதளமிருக்கின்றன.

இவற்றினைப் பயன்படுத்துபவர்கள் அதிலுள்ள தொழில் நுட்ப வசதிகளை சமூக விரோதச் செயல்களுக்குப் பயன்படுத்துகின்றனர். உதாரணமாக,

(அ) கேமரா வசதியுடைய செல்போனைக் கொண்டு பெயர்தெரியாத அறிமுகமில்லாத ஆண், பெண்ணை அனுமதியின்றிப் புகைப்படமெடுத்தல்.

(ஆ) அறிமுகமற்ற நபர்களுக்கு ஆபாச நகைச்சுவைத் துணுக்குகள், படங்கள், செய்திகளை அனுப்புதல்.

(இ) அறிமுகமற்ற நபருடன் ஆபாசமாகவோ, அச்சுறுத்தும் வகையிலோ பேசுதல். இவ்வாறு சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோர் சட்ட ரீதியாக குற்றவாளிகளாக இந்திய அரசாங்கத்தால் கருதப்படுகின்றனர். கல்வி நிறுவனங்கள் சிலவற்றில் கல்லூரி, பள்ளி வளாகத்திலும், தேர்வு எழுதும் இடங்களிலும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் செல்போன்களைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டு உள்ளது. தனியார் வங்கிகளான பன்னாட்டு வங்கிகளில் பணிபுரிபவர்க்குக் கேமிரா வசதியினையுடைய செல்போன்களைப் பயன்படுத்துவதற்கான தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

செல்போனின் பயன்பாட்டில் தற்போது சமூக நோக்குடன் கவலைப்பட வேண்டிய மற்றொரு விஷயம் செய்திகளை பரிமாறிக் கொள்கின்ற விதமாகும். கால நேரமின்றி நகைச்சுவை துணுக்குகளை நண்பர்களுக்கு அனுப்புதல் தற்போது சர்வ சாதாரணமாகக் காணப்படுகின்றது. நெருங்கிய நண்பர்கள், உறவினர்களிடமிருந்து வாழ்த்துகள், முக்கிய செய்திகள், அலுவலகத்தில் இருந்து முக்கிய செய்திகள் என்ற நிலை மாறி, எதற்கெடுத்தாலும் இச் சேவையினைப் பயன்படுத்துவது தற்போது சாதாரணமாகி விட்டது. இதில் குறிப்பாக கல்வித் துறையில் இருப்பவர்கள் பெரும் அவதிக்குள்ளாகின்றனர். இன்றைய இளம் சமுதாயத்தினராகிய மாணவர்களிடையே SMS அனுப்புகின்ற பழக்கம் அதிகமாகக் காணப்படுகின்றன. இச் செய்திகள் பெரும்பாலும் ஆங்கில மொழியிலேயே அனுப்பப்படுகின்றன. இன்றைய மாணவர்களைப் பிற நாடுகளிடையே ஒப்பிடும்போது ஆங்கில மொழியில் தொடர்பு திறன் (Communicative Skill) அடிப்படையில் குறைவாகவே உள்ளது. ஆங்கில மொழியில் சரளமாகப் பேசுவதற்கும், எழுதுவதற்கும் இயல்பாகவே சிரமப்படுகின்றனர். இவ்வாறிருக்க SMS என்ற பெயரினில் அவர்களின் மூலம் ஆங்கிலத்தில் அனுப்பப்படும் நகைச்சுவை துணுக்குகள், செய்திகள் அம்மொழியினை மேலும் சிதைப்பதாகவே உள்ளன. துரிதமாகச் செய்தினை அனுப்ப வேண்டுமென்பதற்காக சில வார்த்தைகளுக்கென அவர்கள் ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்துகின்றனர். இவை அவர்களின் படைப்பாற்றல், துரிதமாக சிந்திக்கும் திறனைக் காட்டினாலும் ஆக்கபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் இவை நல்லனவா என்பது கேள்விக்குறியாகும். அவ்வாறு அன்றாட வாழ்வில் SMS இல் பயன்படுத்தப்படும் சில வார்த்தைகளுக்கான எழுத்துக்கள் பின்வருமாறு அளிக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| you விற்கு பதிலாக | U |
| Are | R |
| Gayathri | Gaya3 |
| To | 2 |
| Because | Becoz |

| | |
|---|---|
| What | wat |
| Yes | s |

ஆங்கில தட்டெழுத்துகளில் பயன்படுத்தப்படும் சுருக்கெழுத்துகளைப் போல இவை தற்போது பிரபலமடைந்து வருகின்றன. இதனை அவர்கள் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பாடக் குறிப்புகளை எடுத்துக் கொள்ளப் பயன்படுத்தினால் அதனைக் கொண்டு படிப்பவர்கள் மற்றும் திருத்துபவர்களின் நிலை என்னவாகும். இதே பழக்கத்தின் தலையீடு, தேர்வுகளை எழுதும்போது மாணவர்களிடையே வராமல் இருக்க வேண்டும். இதனால் அவர்களுடைய நுண்ணறிவு மதிப்புணர்வான தொடர்புத் திறன் கெடுவதற்கு வாய்ப்பு உள்ளது. இதனைப் பெற்றோர்களும், ஆசிரியர்களும் உணர்ந்து செல்போனினை ஆக்கபூர்வமாக பயன்படுத்தக் கற்றுத்தர வேண்டும். பெற்றோர்கள் காலத்தின் முக்கியத்துவத்தை பிள்ளைகளுக்கு உணர்த்தி அவசியம் ஏற்பட்டாலொழிய அவர்களுக்கு செல்போன்களை வாங்கித் தருவதை தவிர்க்க வேண்டும். மேலும் செல்போன்களில் பேசிக் கொண்டே வாகனங்களை ஓட்டக் கூடாது என்று அறிவுறுத்த வேண்டும். இளம் சமுதாயத்தினரும் ஆக்கபூர்வமாக தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்த வேண்டும்.

### 2.11.6 கணிப்பொறி மற்றும் இணையதளம் (Computer and Internet)

இந்திய நாட்டில் தற்போது கணிப்பொறி, இணையதளமற்ற துறையே இல்லையென்று கூறலாம். பள்ளிகளல் ஆரம்ப நிலையிலிருந்தே மாணவர்கள் கணிப்பொறியினைப் பற்றி அறிந்து கொள்கின்றனர். மேல்நிலைகளில் விருப்பப்பாடமாகவும் படிக்கின்றனர். அநேகருடைய இல்லங்களில் தொலைக்காட்சியினைப் போன்று கணிப்பொறியும் உள்ளது. இளம் சமுதாயத்தினருள் பலர் கணிப்பொறி சார்ந்த தொழில்களில் பணிபுரிகின்றனர், அதிக வருவாயும் பெறுகின்றனர். கணிப்பொறி மற்றும் இணைய தளத்தின் காரணமாகத் தகவல் தொழில் நுட்பம் மற்றும் நாட்டின் பொருளாதார முன்னேற்றம் குறிப்பிடும்படியாக உள்ளது.

கணிப்பொறியானது அனைத்து வசதிகளையும் பெற்றதாக திகழ்கிறது. கணிப்பொறி, இணையதளத்தினைக் கொண்டும் செய்ய முடியாத வேலைகளே இல்லை எனக் கூறலாம். படங்களை வரைதல், வண்ணம் தீட்டுதல், கணக்கிடுதல், ஆவணங்களை பாதுகாத்தல், கருத்தரங்குகளுக்குப் பயன்படுத்துதல், திரைப்படங்களை காணல், இசைத்தட்டுகளைக் கேட்டு ரசித்தல், விமான, ரயில் நிலையத்தில் பயணச்சீட்டுகளை பதிவு செய்தல், போன்றவற்றிற்கு கணினி, இணையதளம் பயன்படுகின்றது. இணையதளத்தினை இளம் சமுதாயத்தினர் தவறான வழிகளில் பயன்படுத்துவது தற்போது நாட்டினை அச்சுறுத்துவதாக உள்ளது. உதாரணமாக, பாலுணர்வினை தூண்டுகின்ற படங்களைப் பார்த்தல், வன்முறையினைத் தூண்டுகின்ற ஒளிநாடா விளையாட்டுகள், இணையதள விளையாட்டுகளில் ஈடுபடல், அச்சுறுத்தும் செய்திகளை பரவச் செய்தல், கிராபிக்ஸ் எனப்படும் நவீன தொழில் நுட்பத்தின் மூலம் பொய்யான படங்களை இணையதளத்தில் ஒளிபரப்புதல் போன்றவை தற்போது அதிகரித்து உள்ளது. இதனில் வேதனைக்குரிய விஷயம் என்னவென்றால் இவ்வாறு ஒளிபரப்பப்படுகின்ற படங்களை யாராலும் தடுக்க முடியாது என்பதுதான். இதற்கு ஒரே வழி பெற்றோர்களின் வழிகாட்டுதலும்,

சுயக்கட்டுப்பாடு மட்டுமே ஆகும். ஆசிரியர்களும் ஆக்கப்பூர்வமாக கணினி, இணையதளத்ததை எவ்வாறு பயன்படுத்துவது என்பதனை மாணவர்களுக்குக் கற்றுத்தர வேண்டும். இணையதளங்களை பயன்படுத்தி செய்யக் கூடிய செயல் திட்டங்கள், ஒப்படைப்புகளை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அதற்குரிய செய்திகள், படங்களைச் சேகரிக்கும் விதத்தினையும் அவர்களுக்குக் கற்றுத்தர வேண்டும். இதன்மூலம் மனித மதிப்புணர்வுகள் பாதுகாக்கப்படும்.

## 2.12 மதிப்புணர்வுகளை வளர்ப்பதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கு (Role of Voluntary Organisations in Fostering Values)

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மதிப்புணர்வுகளைப் பரப்புவதில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. ரோட்டரி கிளப், லயன்ஸ் கிளப் (Rotary Club, Lions Club) போன்ற சமூக அமைப்புகள்

(1) இரத்ததான முகாம்,

(2) இலவச மருத்துவ முகாம்,

(3) எய்ட்ஸ் விழிப்புணர்வு பிராச்சாரம்

முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்கின்றன. மக்களிடையே சேவை மனப்பான்மையை வளர்ப்பதற்கென இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவுதல், அவர்களின் பிள்ளைகளை ஆற்றுப்படுத்துதல், இலவச கல்விக்கான ஏற்பாடுகளைச் செய்தல் எனப் பல வகைகளில் அவர்களுக்கு உதவிகளைப் புரிகின்றது. சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சுற்றுச் சூழல் மதிப்புணர்வுகளை மக்களிடையே பரப்புவதற்கு ஆவன செய்து வருகின்றன. இவற்றின் மூலமாகச் செய்யப்படும் பணிகளாவன:

- ★ சுற்றுச் சூழல் ஆராய்ச்சியில் ஈடுபடல்.
- ★ சுற்றுச் சுழல் குறித்த சொற்பொழிவு, பணிமனை மற்றும் கருத்தரங்கத்தினை நடத்துதல்.
- ★ சுற்றுச் சுழல் குறித்த ஆவணங்களைத் தயாரித்து வெளியிடல்.
- ★ சுற்றுச் சுழலில் ஆர்வமிக்கவர்களைக் குழுவினராக ஒருங்கிணைத்தல்.
- ★ அவர்களுக்குச் சுற்றுச் சூழல் விழிப்புணர்வை மக்களிடையே உருவாக்குதற்கெனப் பயிற்சியளித்தல்.
- ★ சுற்றுச் சுழல் அழிவிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் போராட்டங்களில் ஈடுபடல்.
- ★ சுற்றுச் சுழல் பாதுகாப்பு குறித்த சட்ட ரீதியான ஆற்றுப்படைத்தலில் ஈடுபடல்.
- ★ சுற்றுச் சுழல் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கண்காணித்தல்.

(உம்) Eco Greens எனும் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கான தொண்டு நிறுவனமானது உலகத்தினை நச்சுப் பொருள்கள், கதிரியக்கம், காற்று மாசுபடுதலில் இருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி வருகிறது.

## 2.13 ராத்ஸின் மதிப்புகளின் செயல்முறை (Rath's Process of Valuing)

### மதிப்புணர்வினை தெளிவுபடுத்தும் மாதிரி உருக்கள் (Value Clarification Model)

லூயிஸ் ராத்ஸ், மெர்ரில் ஹார்மின் மற்றும் ஸிட்னிசைமன் (Louis Raths, Merill Harmin and Sidney Simon) 1978 ஆம் ஆண்டு மதிப்புணர்வினைத் தெளிவுபடுத்தும் மாதிரி உருவினை உருவாக்கினர். இதன் மூலமாக மாணவர்களுக்கு மதிப்புணர்வுகளைக் குறித்து ஏற்படுகின்ற குழப்பங்கள், போராட்டங்களைத் தெளிவுபடுத்தி, அவர்கள் அவற்றிற்கான தீர்வினைக் கண்டறிய முடியும். இம்மாதிரி உருவானது நான்கு முக்கிய கூறுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். அவை

1. வாழ்க்கையைப் பற்றிய தெளிவான கண்ணோட்டத்தினைக் கொளல்.
2. வாழ்க்கையின் தன்மை மற்றும் இயல்பானதை உணர்ந்து அவற்றின் வழியில் நடத்தல்.
3. வாழ்க்கை முறையினைக் குறித்துச் சிந்தித்து ஆராய்ந்து தெளிவு பெற்றுப் பின்பற்றல்.
4. தனிநபர் ஆற்றலை அதிகரித்துக் கொள்ளுதல்.

இம்மாதிரி உருவானது ஏழு படிநிலைகளைக் கொண்டதாகும். அவை,

1. மதிப்புணர்வுகளைப் பின்பற்றுவதில் ஏற்படுகின்ற பிரச்சினைகளைக் கண்டு உணர்தல்.
2. அப்பிரச்சினைகளுக்கான தீர்வினைத் தேர்வு செய்தல்.
3. அத்தீர்வினைச் செயல்படுத்தினால் ஏற்படுகின்ற பின்விளைவுகளை முன்கூட்டியே ஊகித்து, நல்ல விளைவுகள் ஏற்படுத்தக் கூடியதாக அத்தீர்வு இருக்குமானால் அதனை செயல்படுத்தல், தீய விளைவுகள் ஏற்படுத்துகின்ற தீர்வாக இருக்குமானால் அதனைத் தவிர்த்தல்.
4. நல்ல விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய தீர்வினைப் பாராட்டுதல்.
5. தீர்வினை உறுதி செய்து கொள்ளுதல்.
6. அத்தீர்வினைச் செயல்படுத்துதல்.
7. வாழ்வில் பின்னால் அதேபோன்று பிரச்சினைகள் வருமானால் அத்தீர்வினைப் பின்பற்றல்.

பிரச்சினைகள் ஏற்படும்போது, அவற்றிற்கான தீர்வுகளையும், அவற்றின் பின்விளைவுகளையும், ஆராய்ந்து, நல்ல தீர்வுகளை, பிரச்சினைகளை எதிர் கொள்பவரே தேர்வு செய்யும்படியாக பயிற்சி செய்து கொள்ளல். இவ்வாறு ஆசிரியர் வகுப்பறையில் நன்னெறியைக் கற்பிக்கும் போது கற்பனையாக மதிப்புணர்வுத் தொடர்பான பிரச்சினைக்குரிய சூழலைக் கூறி, மாணவர்களை அவற்றிற்கான தீர்வினைக் காணுமாறு சிந்திக்கக் கூறுதல். அவர்களிடையே சிந்திக்கும் ஆற்றலை வளர்ப்பது மட்டுமின்றி, பிரச்சினைகளுக்கான தீர்வு காணும் திறனையும் மறைமுகமாக வளர்க்கின்றது.

### மதிப்புணர்வுப் போராட்டங்கள் (Value Conflicts)

இன்றைய சமுதாயத்தில் இளைஞர்கள் தம்முடைய அன்றாட வாழ்வில் ஏற்படக் கூடிய நெருக்கடியான சந்தர்ப்பங்களில் மதிப்புணர்வு குறித்த மனப் போராட்டங்களுக்கு உள்ளாகின்றனர். இதனை மதிப்புணர்வுப் போராட்டங்கள் என உளவியலாளர் கூறுகின்றனர். அந்நேரங்களில் அவர்களால் எவ்வாறு பேச வேண்டும், எவ்வாறு நடந்து கொள்ள முடியும் என்று தீர்வெடுக்க முடிவதில்லை. பல நேரங்களில் எது சரி, எது தவறு, எதனைப் பின்பற்ற வேண்டும், எதனை நிராகரிக்க வேண்டும் என்று வேறுபடுத்திச் செயல்பட அவர்களால் இயலவில்லை. வாழ்வில் சில தருணங்களில் அவர்களே முடிவெடுக்கவும், செயல்படவும் வேண்டி உள்ளது. அந்நேரங்களில் மனம் தடுமாறாமல் தன்னம்பிக்கையுடன் தெளிவான முடிவினை எடுக்க அவர்களுக்கு மதிப்புணர்வு குறித்த தெளிந்த கண்ணோட்டம் அவசியமாகும். இம்மதிப்புணர்வுத் தெளிவினை ஏற்படுத்த வேண்டிய தலையாய கடமை ஆசிரியருடையதாகும்.

**மதிப்புணர்வுப் போராட்டங்களின் வகைகள் (Types of Value Conflicts)**

கல்வியாளர்கள் மதிப்புணர்வுப் போராட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மனிதர்களை எட்டு வகையினராகப் பிரித்துள்ளனர். அவ்வகைப்பாடு பின்வருமாறு:

1. உலகத்தில் மட்டுமின்றி தம்மைச் சுற்றி என்ன நடந்தாலும் அதில் ஆர்வமும், அக்கறையுமின்றி வாழும் மனிதர்கள். அவர்களை ஆங்கிலத்தில் Apathetic People என்று அழைப்பர்.
2. சிலர் காண்பவை, செயல்படுபவை அனைத்திலும் ஆர்வமுடையவர்களாகக் காணப்படுவர். ஆனால் அவர்கள் ஒரு செயலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போதே, பிற செயலில் ஆர்வம் ஏற்பட்டு அதனில் ஈடுபட ஆரம்பிப்பர். முதலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த செயலை அரைகுறையாக விட்டு விடுவர். இத்தகையோரை Flighty People என்று ஆங்கிலத்தில் அழைப்பர்.
3. சிலர் சுயமாகச் சிந்திக்காமல் எப்போதும் பிறர் கூறுவதை அப்படியே ஏற்று நடப்பவர்கள். இவர்களை ஆங்கிலத்தில் Over Obedient People என்று கூறுவர்.
4. சிலர் நிலையற்ற மனமுடையவர்களாக எப்போதும் இருப்பர். ஒரே நபர் சில தருணங்களில் வித்தியாசமாக சிந்தித்துச் செயல்படுவர் (உ-ம்) ஒருவர் ஒரு சில நேரங்களில் கருமி யாகவும், சில நேரங்களில் ஊதாரியாகவும் இருத்தல். இவர்களை ஆங்கிலத்தில் Inconsistent People என்று அழைப்பர்.
5. சிலர் எந்தவொரு குறிக்கோளுமின்றித் தம்முடைய வாழ்க்கையை நடத்துவர். இவர்களை drifters என்று ஆங்கிலத்தில் அழைப்பர்.
6. வாழ்க்கையில் தான் என்ன சாதிக்க வேண்டும் என்பதனை நீண்ட நாள் குறிக்கோளின் மூலம் தீர்வு காணாமல், அந்த நேரத்தில் தோன்றும் எண்ணத்தினைக் கொண்டு இலக்கினை நிர்ணயம் செய்கின்ற பழக்கமானது சிலருக்கு இருக்கும். அவர்களை Over Conformers என்று ஆங்கிலத்தில் அழைப்பர்.

7. சிலர் தம்முடைய குறைகளைப் பற்றி நினைத்துப் பாராமல், எப்போதும் பிறரைக் குறை கூறிக் கொண்டே இருப்பவர்களாக இருப்பார்கள். அவர்களை ஆங்கிலத்தில் Over Dissenters என்று அழைப்பர்.
8. சிலர் தமக்கெனக் கொள்கையினை வகுத்துக் கொள்ளாமல், பிறருக்காகத் தம்முடைய கொள்கை, குணம், தோற்றத்தினை மாற்றிக் கொள்வார்கள். இவர்களை ஆங்கிலத்தில் Role Players என்று அழைப்பர்.

இத்தகைய எட்டு வகைகள் ஏதேனும் ஒன்றினைச் சார்ந்தவர்களாக மாணவர்கள் இருப்பர். அவர்களின் எண்ணம், செயல்பாடுகளில் தெளிவினை ஏற்படுத்த வேண்டும். அவர்களுக்கு உள்ள மதிப்புணர்வுப் போராட்டங்களைத் தீர்க்க வேண்டும். அவர்களுடைய மதிப்புணர்வுகளைத் தெளிவுபடுத்த ஆசிரியர் அவர்களுக்குப் பயிற்ச்சி அளிக்க வேண்டும். இதற்கென ஆசிரியர் மதிப்புணர்வுகளைத் தெளிவுபடுத்தும் செயல்முறையினைப் பயன்படுத்த வேண்டும்.

**மதிப்புணர்வுகளைத் தெளிவுபடுத்தும் செயல்முறை (Value Clarification Process)**

மதிப்புணர்வுகளைச் செயல்படுத்துவதற்கெனத் தெளிவுபடுத்தும் அணுகுமுறையினை ஆசிரியர்கள் நான்கு வழிகளில் செயல்படுத்த வேண்டும். அவை,

(1) வாழக்கையில் ஏற்படும் பிரச்சினைகளை வெவ்வேறு கோணங்களில் அணுகுவதற்கான பயிற்சி முறை.
(2) அன்றாட வாழ்வோடு தொடர்புப்படுத்தி அளிக்கின்ற பயிற்சி முறை (Lifeline Approach)
(3) பயன்தரக் கூடிய சொற்பொழிவுகள் (அல்லது) விரிவுரைகளின் வாயிலாகப் பயிற்சி அளிக்கும் முறை.
(4) பரிசு அளித்தல், கண்டித்தலின் மூலமாக மதிப்புணர்வுக்கான பயிற்சி அளிக்கும் முறை.

இவ்வணுகுமுறைகளுக்கான விளக்கம்:

**வாழ்வில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை வெவ்வேறு கோணங்களில் அணுகும் பயிற்சி முறை**

வாழ்வில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை அணுகும் முறையை நான்கு வகைகளில் செயல்படுத்தலாம்.

(அ) மாணவர்கள் அவர்கள் அன்றாட வாழ்வில் சந்திக்கின்ற பிரச்சினைகளுள் ஒன்றினைத் தலைப்பாக அறிவித்து அதற்கான தீர்வினைச் சிந்தித்துக் கூறுமாறு ஆசிரியர் ஊக்குவிக்க வேண்டும். (உ-ம்) தேர்வு நேரத்தில் ஏற்படுகின்ற பயத்தினை எவ்வாறு எதிர்கொள்வது. மாணவர்களுக்கு ஆசிரியர் இம்முறையில் வழிகாட்டியாக விளங்குகிறார். மாணவர்களின் கருத்துகளைக் கேட்டு அப்பிரச்சினைக்கான தீர்வு எடுக்கப்படும்.

(ஆ) மாணவர்களை அவர்கள் அன்றாட வாழ்வில் சந்திக்கக் கூடிய பிரச்சினையை கற்பனை செய்து அதற்கான ஏதேனும் ஒரு தீர்வினை ஆசிரியர் சொல்வார். இதன் மூலம்

மாணவர்கள் அச்சூழலில் என்ன தீர்வு எடுப்பார்கள் என்பது பெரும்பான்மையினரின் கருத்தினால் தெளிவாகும்.

(இ) மாணவர்களிடம் அவர்கள் சந்திக்கக் கூடிய பிரச்சினையான சூழலுக்குரிய பல்வேறு தீர்வுகளைச் சிந்தித்துக் கூறுமாறு ஆசிரியர் கேட்பார்.

(ஈ) மாணவர்கள் எதிர்காலத்தினைக் குறித்து திட்டமிடுவதனைப் பற்றி ஆசிரியர் கருத்து கேட்பார் (உ-ம்) (1) காலாண்டு விடுமுறையினைப் பயனுள்ள வகையில் எவ்வாறு கழிப்பாய்? (2) எதிர்காலத்தில நீ என்னவாக ஆக விரும்புகிறாய்? அதற்கு உன்னை எவ்வாறு தயார் செய்து கொள்வாய்? என்பன போன்ற கேள்விகளைக் கேட்டு மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவார்.

**அன்றாட வாழ்வோடு தொடர்புபடுத்தி அளிக்கின்ற பயிற்சி முறை (Lifeline Approach)**

ஆசிரியர் பள்ளியிலுள்ள பாட ஏற்பாடு, இணைகலைத் திட்டங்களின் வாயிலாக மறைமுகமாக மதிப்புணர்வுகளை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தலாம். அன்றாட வாழ்வில் நடைபெறுகின்ற சம்பவங்கள், ஊடகங்களில் கேள்விப்படுகிற சம்பவங்களை உதாரணங்களாகக் கூறி மாணவர்களின் மனத்தில் எழுகின்ற மதிப்புணர்வுப் போராட்டங்களைத் தெளிவுபடுத்தலாம்.

வகுப்பறையில் பாடம் நடத்துகையில் பாடத் தலைப்பினோடு தொடர்புடைய மதிப்புணர்வுப் பிரச்சினையைக் கூறி, மாணவர்களை கலந்துரையாடலில் ஈடுபடச் செய்து அதற்கான தீர்வினைக் காண முடியும். ஆசிரியர் விவாத முறையின் மூலமாகவும் மதிப்புணர்வுகளைத் தெளிவுபடுத்தில் மாணவர்களின் பங்கேற்பினை அதிகரிக்க முடியும்.

மதிப்புணர்வினைத் தெளிவுபடுத்துவதற்கு ஆசிரியர் விளையாட்டு முறையினைத் திறம்பட பயன்படுத்த வேண்டும். அன்றாட வாழ்வில் மாணவர்கள் சந்திக்கக் கூடிய நெருக்கடியான சந்தர்ப்பங்களைக் குறித்த விளையாட்டினை ஆசிரியர் வடிவமைக்க வேண்டும். இதற்கு விளையாட்டு அட்டைகளைப் பயன்படுத்தலாம். (உதாரணமாக) பிரச்சினையைக் குறித்த அட்டை ஒன்றினை (Situational Card or Sensitivity Card) மாணவர்களுள் ஒருவரை அட்டைகள் அடங்கிய பெட்டியில் இருந்து ஓர் அட்டையை எடுக்கும்படி கூற வேண்டும். அதில் கற்பனையான பிரச்சினைக்குரிய சந்தர்ப்பத்தைப் பற்றிய வாசகம் இருக்கும். அதற்கான தீர்வினை அப்பெட்டியினை எடுத்த மாணவர்கள் சிந்தித்துக் கூற வேண்டும். (உ-ம்) நீ உணவு அருந்தி பின்பு கை கழுவச் செல்லுமிடத்தில் குழாயிலிருந்து தண்ணீர் சரியாக மூடப்படாததினால் ஒழுகுவதைக் காண்கிறாய். அதனைப் பார்த்த பின்பு நீ என்ன செய்வாய்? அதற்குப் பெரும்பாலும் மாணவன் நான் கைகழுவிய பின் குழாயினை நன்றாக மூடிவிட்டு வருவேன் என்று பதில் கூறுவர்.

சில நேரங்களில் இவ்விளையாட்டு அட்டையின் மூலம் மதிப்புணர்வுகளைத் தெளிவுபடுத்தும் போது பின் விளைவுகளையோ, தீர்வுகளையோ குறித்த அட்கைளைக் கொடுத்து மாணர்களைத் தேர்வு செய்யக் கூறலாம். இவ்வட்டைகள் Consequence Cards என்று

அழைக்கப்படும். இதில் பிரச்சினைக்குரிய சூழலுக்கான அட்டை ஒரு பெட்டியில் இரக்கும். ஆதனை எடுத்த மாணவன் மற்றொரு பெட்டியில் இருக்கின்ற பின் விளைவுகள் (அ) தீர்வுகளைக் கொண்டிருக்கும் அட்டைகளுள் பொருத்தமாக அட்டை ஒன்றினைச் சிந்தித்துத் தேர்வு செய்ய வேண்டும். பிறகு பிரச்சினைக்குரிய சூழலைப் பற்றியும், அதற்கு அவன் தேர்வு செய்த தீர்வு, அதற்கான காரணம் குறித்தும் கூற வேண்டும். (உ-ம்) பிரச்சினைக்குரிய அட்டையில் இருக்கும் வாசகம்:

விளையாடும் போது பள்ளி வளாகத்தில் நீ ஒரு கால் கொலுசினைக் காண்கிறாய். அப்போது நீ என்ன செய்வாய்?

தீர்வுகள் பலவற்றைக் கொண்ட அட்டைகளில் இருக்கின்ற வாசகங்கள்:

1. நான் அக்கொலுசைக் கண்டெடுத்ததினால் எடுத்துக் கொள்வேன்.
2. அக் கொலுசினை என் தாயிடம் கொடுப்பேன்.
3. அக்கொலுசினைத் தலைமை ஆசிரியரிடம் ஒப்படைத்து விவரத்தினைக் கூறுவேன்.
4. கொலுசினைக் கோவில் உண்டியலில் போட்டு விடுவேன்.

இவ்வாசகங்களைப் படித்துப் பார்த்து, அம் மாணவர் தமக்குப் பொருந்துகின்ற வாசகம் கொண்ட அட்டையினைத் தேர்வு செய்து அதற்கான காரணத்தைக் கூற வேண்டும். இவ்வாறு விளையாட்டு முறையின் மூலம் சிக்கலான பிரச்சினைகளுக்கு மாணவர்கள் தீர்வு காண பயிற்சி அளிக்க முடியும்.

**பயன் தரக் கூடிய சொற்பொழிவுகள் அல்லது விரிவுரையின் மூலம் பயிற்சி அளிக்கும் முறை**

பள்ளி விழாக்களுக்குச் சிறப்பு விருந்தினராக சிறந்த சொற்பொழிவாலர்களை அழைத்து அவர்களை, மாணவர்கள் இன்றைய சூழலில் மதிப்புணர்வுகளை எவ்வாறு பின்பற்ற வேண்டும் என்று உரையாற்றச் செய்ய வேண்டும். அவர்கள் கூறுகின்ற கதைகள், கவிதைகள், உதாரணங்களின் மூலமாக மதிப்புணர்வில் தெளிவு ஏற்படும்.

**பரிசளித்தல் கண்டித்தலின் மூலம் பயிற்சி அளிக்கும் முறை**

உளவியலினை அடிப்படையாகக் கொண்ட இம்முறையின் மூலமாக மாணவர்களை நெறிப்படுத்த முடியும். மாணவர்களின் நற்செயல்களை வார்த்தைகளின் மூலமாக ஊக்குவித்தல், பரிசளித்தல். அவர்களை ஊக்குவிக்கும் வகுப்பறையில் மாணவர்களின் நற்செயல்களை மட்டுமின்றி பங்கேற்பினையும் ஊக்குவிப்பது அவசியமாகிறது. மாணவர்களை ஆக்கப்பூர்வமாக நெறிப்படுத்தல் ஆசிரியரின் பணியாகும். உடல் ரீதியாக அடித்து, மண்டியிடச் செய்து துன்புறுத்துவதைக் காட்டிலும், மாணவர்களின் தவறான செய்கைகளை வார்த்ததைகளின் துணை கொண்டு திருத்துதல் சிறந்ததாகும். ஆசிரியர் கண்டிக்கும்போது கூட தகாத வார்த்தைகளையும் மனத்தைப் புண்படுத்தும் வார்த்தைகளையும் பயன்படுத்தக் கூடாது. மாணவர்களை அனைவரின் முன்னிலையிலும் கண்டிப்பது அவன் மனத்தை புண்படுத்தும் எனக் கருதினால், அவனைத்

தனியாக அழைத்து நெறிப்படுத்துதல் நலமாகும். இதன் மூலம் அவா்களின் மதிப்புணா்வுகளைத் தெளிவுபடுத்தி, நெறிப்படுத்துவது மட்டுமின்றி, ஆசிரியரும் மனித மதிப்புணா்வுகளைப் பின்பற்ற முடியும்.

## 2.14 மதிப்புகளை வளா்க்கும் முறைகள் (Methods of Fostering Values)

‘‘மாதா, பிதா, குரு, தெய்வம்’’ என பெற்றோா்களுக்கு அடுத்தபடியாக படைத்த இறைவனுக்குக் கூட நான்காவது இடத்தைக் கொடுத்து குருவிற்கு சிறந்த இடத்தைக் கொடுத்துள்ளதற்குக் காரணம் ஆசிரியப் பெருமக்கள் என்றாலே ‘‘ஏணிப்படிகள் தான்’’ ஏனெனில் தான் நின்ற இடத்திலேயே அசையாமல் நின்று கொண்டு மாணவச் செல்வங்களை அவா்களின் திறமைகளை அறிந்து அவா்களின் பிஞ்சு உள்ளங்களின் அன்பு, பாசம், பற்று, உண்மை, நீதீ, நோ்மை, சகோதரத்துவம், ஒற்றுமை, ஒழுக்கம், பிறரை மதித்து நடக்கும் பாங்கு என அத்தனை பண்புகளையும் விதைத்து கொழுந்துவிட்டு வளரச் செய்து குன்றிலே அவா்களை ஏற்றி புகழ்க் கொடியில் மிளிர வைப்பது ஆசிரியப் பெருமக்கள் அவா்கள் மனம் வைத்தால் மாணாக்கா்களை எப்படிப்பட்ட உயா் நிலைக்கும் கொண்டுச் செல்ல முடியும்.

ஒரு மனிதன் எந்த நாட்டினன் ஆயினும், எம்மொழி பேசினாலும் எந்நிறத்தவனாயினும் விழுமங்கள் நன்மதிப்புகள் யாவருக்கும் ஒன்றே; எனவே பொய் பேசாமல் இருப்பது, பெரியோா்களை மதித்து நடப்பது, சுத்தமாக இருப்பது. தீய சொற்களைப் பேசாமல் இருப்பது, அந்நியரை உபசரித்து இன்முகத்துடன் வரவேற்பது போன்ற பண்புகள் எந்த ஒரு தனி மனிதனையம், மனித நேயம் உள்ளவனாக மாற்றும். இப்படிப்பட்ட விழுமங்களை விழுமக் கல்விஇ போதனா வகுப்புகள் மூலம் மாணவா்களுக்கு அளித்தல் வேண்டும். நல்ல மாணவனை உருவாக்கும் பெரும் பொறுப்பு ஆசிரியா் கைகளில் தான் உள்ளது. எனவே ஆசிரியப் பெருந்தகைகள் விழுமக்கல்வி வகுப்புகளை விழுமக் கல்வி கற்பிப்பதற்கே உபயோகிப்போம் என உறுதி ஏற்க வேண்டும்.

பரந்த மனப்பான்மை என்பது மேலே நாம் படித்த அனைத்துப் பண்புகளையும் உள்ளடக்கிய பொக்கிஷம் எனலாம். மாணாக்கா்களை வழி நடத்திச் செல்லும் ஆசிரியா் முதலில் இப்பண்புகளைத் தன்னில் உடையவராக இருத்தல் வேண்டும். ஆசிரியா் ஒரு நல்ல முன் மாதிரியாக தன்னை மாணாக்கா்கள் முன் நிறுவுதல் அவசியம்.

‘‘அழுக்காறு டையான்கண் ஆக்கம்போன்று இல்லை

ஒழுக்கமிலான்கண் உயா்வு’’.

பிறப்பின் மேன்மை மட்டும் அல்ல. பொறாமை உள்ளவனுக்கு செல்வம் சேராது. சேர்ந்தாலும் நிலைக்காது, அதுபோல ஒழுக்கம் இல்லாதவனுக்கு மேன்மை இருக்காது, இருந்தாலும் தங்காது.

- திருக்குறள்

ஆசிரியர்கள் மாணாக்கர்களுக்கு பாடம் நடத்தும் பொழுது பேச்சு மொழியைத் தெளிவாகப் பேசி, மாணாக்கர்களின் கேள்விகளுக்கு தகுந்த பதிலை விளக்குவதே சிறந்த பயிற்றுவிக்கும் முறையாகும். அப்படி பாடம் கற்பிக்கும் பொழுது, கல்வி கற்பதற்கான நோக்கம் என்ன? கல்வி கற்பதற்கான நோக்கங்களை அதாவது இலக்குகளை அடைவதற்கான சிறந்த வழிகள் யாவை? போன்ற ஐயங்களையும், விளக்கங்களையும் தெளிவாகக் கற்பித்து அறியச் செய்ய வேண்டும்.

ஏனெனில் கல்வி முறைகள் பெரும்பாலும் முறைப்படி அமையாதவையாகத் தான் காணப்படுகின்றன. (எ.கா) குழந்தைகள் அவர்கள் தம் மூத்தோர்களை பெரும்பாலும் காப்பியடித்தோ அல்லது மாதிரியாகவோ அவர்களின் நடை, உடை, பாவனைகளைப் பின்பற்றுகின்றனர். பெரும்பாலும் பெரியோர்களை உற்றுநோக்கியும், விளையாட்டு மூலமும் கற்றுக் கொள்கின்றனர். பெரும்பாலான பயிற்று முறைகள் ‘‘புதைப்பொருள் மூலம் அறிந்த வரலாற்றுப் பழமையைத்’’ தழுவியதாக உள்ளன. ஆகவே படிப்படியாக, குழந்தைகள் மாணாக்கர்களைப் பார்த்து செய்ய, மாணாக்கர்கள் ஆசிரியர்களைப் பார்த்து செய்ய ஆசிரியர்களாக உயர்வு பெறுகின்றனர். அப்படியெனில் ஆசிரியர்கள் மாணாக்கர்களுக்கு எல்லா வகையிலும் சிறந்த முன் மாதிரியாக விளங்க வேண்டும் என்பது புலனாகிறது. ஆசிரியர்கள், பயிற்றுவிப்பதற்கு சிறந்த பாடப் பொருட்களைத் தயார் செய்ய வேண்டும். அவற்றை மாணாக்கர்களுக்குப் புகட்டி அதன்படி நடக்க வலியுறுத்த வேண்டும்.

ஆசிரியர்கள் மாணாக்கர்களுக்குப் பயிற்றுவிக்க ‘‘ஆசிரியர் இயல்’’ (Pedagogy) பல வழிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அது அந்தந்த ஆசிரியர்களின் தனிக்கலை, தனி நாகரீகம் ஆகும். ஆம் ஆசிரியர்களைப் பொறுத்தவரை அவர்கள் வளமான எண்ணங்களைக் கொண்டவர்களாக, நல்ல பயிற்சியுடையவராக புதிது புதிதாக மாணாக்கர்களை விட ஆர்வத்துடன் கற்றலில் விருப்பம் உள்ளவர்களாக எல்லாவற்றிற்கும் மேலாக மாணாக்கர்கள் எந்த வகையில் கேள்விகள் கேட்டாலும். அதற்குத் தகுந்த முறையில், அன்போடு விளக்கம் தரும் ஆற்றல் பெற்றவராக இருப்பது மிக மிக அவசியம். இங்கே கற்பிக்க கசடு அற: அதாவது பயிற்றுவிக்கும் போது எந்த விதக் குற்றங்களும் இல்லாமல், அவை நீங்க தெளிவுபடுத்த வேண்டும் என்பது அறியப்படுகிறது.

கருத்துள்ள சிந்திக்கத்தக்க கதைகளை மாணவர்களுக்குக் கூறி, நெறிப்படுத்துதல் ஆசிரியரின் தலையாய கடமை. மாணவர்கள் நடிப்புத்திறன், வார்த்தைகளின் உச்சரிப்பு,

உடல்மொழி, கருத்துச்செறிவு அனைத்திலும் தேர்ச்சி பெறுவது மட்டுமின்றிச் சிறந்த கலைஞர்களாகவும் உருவாக வாய்ப்பு ஏற்படுகின்றது.

### 2.14.1 கதை சொல்லுதல் (**Story Telling**)

சுற்றுப் பயணம் பற்றிய கதைகளைச் சொல்பவர்கள் வகுப்பறையில் ஒன்று கூடி, அவர்கள் மேற்கொண்ட சுற்றுப்பயணம் பற்றிய கதைகளைக் கீழ் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்குக் கூற வேண்டும்.

#### 1001 வீரர்களுக்கான திருவிழா (1001 **Nights Festival**)

வகுப்பறையில் கதை சொல்வதற்கென்றே தினமும் ஒரு நேரத்தை ஒதுக்கி, ஒவ்வொரு மாணவராகக் கதை சொல்ல வேண்டும். (எ.கா) அரபியப் போர் வீரர்கள் பற்றிக் கதை கூறும் போது, கதை சொல்வதில் மிகுந்த திறமை பெற்ற ஷராசத் ஸ்டைலிலேயே கூறவேண்டும். முதல்நாள் கதையின் முக்கியப் பகுதியில் நிறுத்தி விட்டுப்பின் அதன் தொடர்ச்சியை அடுத்த நாள் கூற வேண்டும். இப்படிச் செய்தால், மாணவர்களின் கேட்கும் திறனும், ஆக்கத்திறனும் அதிகரிக்கும்.

#### ஆயிரம் வார்த்தைகளைக் கொண்ட படம் (**A picture is worth of 1000 words**)

வகுப்பு மாணவர்கள் ஒன்று கூடி ஓர் அழகான வண்ணப்படத்தைத் தேர்ந்தெடுத்து, அதனை நன்கு உற்று நோக்கி, அப்படம் பற்றிய இரண்டு மூன்று வரிகளைக் கதை வடிவில் உருவாக்க வேண்டும். பிறகு இப்படியே அதைப்பல வகுப்புகளுக்கு அனுப்பி, அவர்களின் கதைக் கருத்துக்களையும் சேகரித்து, குறைந்த பட்சம் 1000 வார்த்தைகள் கொண்ட சுவாரஸ்யமான கதையை உருவாக்க வேண்டும்.

#### பழங்கால வானொலி கேட்கும் முறை (**Old Period Radio Listening Method**)

முந்தைய நாட்களில் பின்பற்றப்பட்ட வானொலி வகுப்புகளைக் குறிப்பிட்ட நேரத்தில் பள்ளி மாணவர்கள் அனைவரும் கேட்பதற்கு ஏற்பாடு செய்து, வானொலியில் கூறப்படும் கதைகளைப் பதிவு செய்துகொண்டு, மாணவர்கள் திரும்பத்திரும்ப அதனைப் போட்டு, கேட்டு, உச்சரிப்புகள், வார்த்தைகளின் ஏற்ற இறக்கம், சப்தம் ஆகிய அனைத்தையும் உள்வாங்கிக் கதை சொல்லுதல், நடித்துக் காட்டுதல், கலந்துரையாடல், நேர்முகம் காணல் என அனைத்துத் துறையிலும் பயிற்சி பெறுதல் வேண்டும்.

#### பாடல்களில் உள்ள கதைகளைக் கண்டறிதல் (**Finding Stories in Songs**)

வகுப்பறை மாணாக்கர்கள் ஒன்று கூடி நாட்டுப்புறப் பாடல்களைக் கேட்டும், கற்றும் அதில் உள்ள கதைகளைப் புரிந்து கொண்டு, தம் சொந்த வார்த்தைகளின் மூலம் அக்கதைகளை மறுபடியும் கூறுதல் வேண்டும். ஒரு மாணவன் கதை சொல்ல ஆரம்பித்து இரண்டு மூன்று வரிகள்

சொல்லிவிட்டு நிறுத்துவது, அதை மற்ற மாணவர்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கதைக் கருவைப் புரிந்து கொண்டு சொல்லி முடிப்பது. கடைசியில் அதனை டேப்பில் பதிவு செய்து கொண்டு, அனைவரும் போட்டுக் கேட்பதுடன் வருங்கால மாணவர்களுக்காகப் பத்திரப்படுத்தியும் வைக்க வேண்டும்.

### வகுப்பறையில் கதை சொல்லும் செயல்கள் (Story Telling Activities in the Classroom)

ஆசிரியர் கதை சொல்லி முடித்தவுடன், அதனைத் திரும்பச் சொல்லுதல், இதன் மூலம் மாணாக்கர்களின் உள்வாங்கும் திறன், ஆர்வம், ஞாபகசக்தி புத்திக் கூர்மை போன்ற விழுமங்கள் அறியப்படுகின்றன. உதாரணமாக ஆசிரியர் கூறிய கதை ஒன்று, ஓர் ஊரில் நேர்மையும் பண்பாடும், கல்வி அறிவும் மிக்க சிறந்த ஆசிரியர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஏழை, பணக்காரர் என்ற பேதம் பாராமல் மாணவர்களுக்குக் கல்வி புகட்டி வந்தார். அது தானே நல்லாசிரியருக்கான சிறப்பு. அவர் வகுப்பில் எண்ணற்ற பணக்கரரர் மாணவர்கள் பயின்றாலும், ஒரேயொரு ஏழை மாணவர் மீது மிகுந்த அன்புடனும் அரவணைப்புடனும் நடந்து கொள்வார். இதனால் மற்ற பணக்கார மாணவர்கள் பொறாமைப்பட்டு, ஆசிரியர் மீது மிகுந்த கோபம் கொண்டு, அவர்களின் பெற்றோர்களிடமும் புகார் மனுக்களைச் சமர்ப்பித்தனர்.

இதில் சிறப்பு என்னவென்றால், அது ஓராசிரியர் பள்ளி அந்தக் கிராமத்தில் உள்ள பணக்காரர்கள் ஒன்று கூடித்தான் ஆசிரியருக்குச் சம்பளம் தருகிறார்கள். எனவே, ‘‘என்னடா இது கொடுமையாக இருக்கிறது? அந்த ஆசிரியருக்கு வேண்டிய அனைத்துச் சலுகைகளும் நாம் தருகிறோம், அப்படியிருக்க நமது குழந்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அந்த ஏழை மாணவனுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார் என ஆசிரியரிடம் சண்டையிடுவதற்கும் அவரைப் பள்ளியில் இருந்து விலக்கிவிட்டு, வேறு புதிய ஆசிரியரை நியமிப்பதற்கும் வந்து விட்டனர்.

அறப்பணி செய்யும் ஆசிரியருக்கு அதைப் பற்றியெல்லாம் கவலையில்லை என்றாலும், தம்மீது சுமத்தப்பட்ட குற்றத்தைப் போக்க வேண்டும் என்ற கடமையுணர்ச்சியுடன் அவர்கள் அனைவரையும் பொறுமையுடன் அமரச் செய்து, ஆசிரியர் பேச ஆரம்பித்தார். என் மாணவச் செல்வங்களின் பெற்றோர்களே! இப்பொழுது உங்கள் அனைவரது அனுமதியுடனும் மாணவர்கள் அனைவருக்கும் ஒரு தேர்வு வைக்கப் போகிறேன். அதுவும் உங்கள் முன்னிலையில் தான் எனக் கூற, அவர்களும் ஒத்துக் கொண்டனர்.

இப்பொழுது ஆசிரியர் மாணவர்களைப் பாாத்து, மாணவச் செல்வங்களே! நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு கோழி முட்டையை எடுத்து, யாருக்கும் தெரியாமல் உடைத்து, அதைச் சிந்தாமல், சிதறாமல், ஒரு பாத்திரத்தில் ஊற்றி எடுத்துக்கொண்டு வந்து என்னிடம் தர வேண்டும். ஏனெனில், நான் உங்களுக்கெல்லாம் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருப்பதால் மிகவும் பலவீனமாக இருக்கிறேன். நீங்கள் கொண்டு வரும் முட்டையைச் சாப்பிட்டு என் பலவீனத்தைப் போக்கிக் கொள்ளப் போகிறேன். அப்பொழுது தானே நான் உங்களுக்கு நல்ல முறையில் பாடம் கற்றுத்தர முடியும்? என்றார்.

மாணவர்கள் அனைவரும் உற்சாக மிகுதியால் சரியெனக் கூறி அவரவர் வீட்டிற்குச் சிட்டாகப் பறந்தனர். ‘என்னதான் நடக்கப்போகிறது?’ என்று மிகுந்த குழப்பத்துடன் பெற்றோர்களும் காத்திருந்தனர். சிறிது நேரத்தில் அனைத்துக் குழந்தைகளும் முட்டையை உடைத்து ஒரு கிண்ணத்தில் எடுத்துக் கொண்டு வந்து ஆசிரியரிடம் கொடுத்தனர். ஆனால் அந்த ஏழை மாணவனான வெங்கட்கிருஷ்ணன் மட்டும் தாமதமாக வந்தான். வந்தவன் கையில் உடைக்காத முட்டை இருந்தது. இதைப் பார்த்த மற்ற மாணவர்களின் பெற்றோர்கள் தங்களுக்குள் வெகுண்டு, பார்த்தீர்களா, பரதேசிப்பயல்! ஆசிரியருக்கு ஒரு முட்டையைக் கூடக் கொடுக்கக்கூடாது, உடைத்தால் வீணாகி விடும். எனவே, சும்மா காண்பித்து விட்டு எடுத்துச் சென்றுவிடலாம் என முழுதாகக் கொண்டு வந்திருக்கிறான். இவனிடம் இந்த ஆசிரியருக்கு என்னதான் ஈர்ப்பு? என முணுமுணுத்து நிகழ்ச்சியின் முடிவிற்காகக் காத்திருந்தனர்.

ஆசிரியரும் வெங்கட்கிருஷ்ணன் என்னும் அந்த ஏழை மாணவனை அருகில் அழைத்தார். அவனும் கவலை தோய்ந்த முகத்துடன் முட்டையுடன் வந்தான். “என்ன கிருஷ்ணா! முட்டையை உடைக்காமல் கொண்டு வந்திருக்கிறாய் என்ன காரணம்?” என்று வினவினார். அதற்கு அம்மாணவன் கூறினான், எங்களுக்கு “எழுத்தறிவிக்கும் இறைவனே” தாங்கள் என்ன கூறினீர்கள்? ‘முட்டையை யாருக்கும் தெரியாமல் உடைத்து வரச்சொன்னீர்கள் அல்லவா?” ஆமாம் ஆனால் என்று சொல்ல வாய் எடுக்குமுன், மற்ற மாணவர்கள், “சார்! உலோபி! (கஞ்சன்) அதனால் தான் உடைக்காமல் கொண்டு வந்திருக்கிறான். நான் பாட்டிக்குத் தெரியாமல் உடைத்து வந்தேன். இன்னொருவன் என் மாமா படுத்திருந்தார் அவருக்குத் தெரியாமல் உடைத்து வந்தேன் என ஆளாளுக்குக் கூறினர். ஆசிரியர் அவர்களையெல்லாம் சற்று அமைதியாகவும் பொறுமையாகவும் இருக்கும்படி கூறி, மீண்டும் வெங்கட்கிருஷ்ணனிடம் வந்தார்.

“சொல் வெங்கட்கிருஷ்ணா, உன் பெற்றோர்களும் இங்கு வந்துவிட்டார்கள், வீட்டில் வேறுயாராவது இருக்கிறார்களா? எனக் கேட்டார். அதற்கு அவன், “ஆசிரியர் அவர்களே! வீட்டில் மானிடப் பிறவிகள் யாரும் இல்லை தான். ஆனால், “அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் இறைவன் வியாபித்திருக்கிறானே!” என்றான். ஆசிரியர், என்ன சொல்கிறாய்? என மீண்டும் கேட்டார். அதற்கு அவன், “ஆம்” நான் முட்டையை எடுத்துக்கொண்டு அடுப்பறைக்குச் சென்றேன், உடைத்து ஒரு கிண்ணத்தில் எடுத்து வரலாம் என்று, ஆனால், இறைவன் பார்த்துக் கொண்டிருக்கிறான். வராண்டா, கொல்லைப்புறம், வெட்டவெளி என எங்கு சென்றாலும் இறைவன் பார்த்துக் கொண்டே இருக்கிறான். நீங்கள் யாரும் பார்க்காமல் தானே உடைத்து எடுத்துக் கொண்டு வரச் சொன்னீர்கள்? என வினா ஆசிரியருக்கே திருப்பிவிட்டான்.

அனைத்துப் பெற்றோர்களும், மாணவர்களும் வெங்கட்கிருஷ்ணனின் புத்திக் கூர்மையைக் கண்டு வியந்து பாராட்டினர்! இப்பொழுது அவர்கள் புரிந்து கொண்டனர், ‘ஆசிரியர் ஏன் வெங்கட்கிருஷ்ணன் மீது கூடுதலாக அன்பு பாராட்டுகின்றார் என்று!’ ஆம் மாணவச் செல்வங்களே, நன்கு படிக்கும் மாணவர்கள் அனைவரையுமே ஆசிரியருக்குப் பிடிக்கும்? என்பதை

விளக்கிக் கூறினார் ஆசிரியர். இப்படியாக வகுப்பறையில் கதை சொல்லும் செயல்கள் மாணவர்களுக்கு புரிய கூடிய ஒன்றாகும்.

### 2.14.2 நாடகமயமாக்கல் (Dramatisation)

ஆசிரியர்கள் ஆரம்பப்பள்ளி மாணவர்கள் முதல் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் வரை, நல்ல கதையம்சம் உள்ள கருத்துள்ள படங்களில் இருந்து நாடக வடிவமாக்குவதற்கு வேண்டிய கருவைத் தேர்ந்தெடுத்து, 10 நிமிடத்திற்குள் நடித்துக்காட்டி பிற மாணவர்களையும் நாடகத்திற்குள் ஈடுபடுத்திப் புரிய வைத்தல், இதற்கு உடை, மேடை, ஜோடனை எதுவும் தேவையில்லை. அப்பொழுது பாடக்கருத்து எளிதில் புரிவதுடன், ஒவ்வொரு மாணவருக்கும் நாடகத்தில் நடிக்கும் ஆசை ஏற்படும். இந்த மகிழ்ச்சி, ஆசிரியர்களையும், பிற மாணாக்கர்களையும் தொற்றிக் கொள்ளும். மேலும், ஆசிரியர்கள் மாணவர்களைத் தேர்வு செய்து, சொல்லப்படாத, அதே நேரம், எல்லாருக்கும் விளங்கக் கூடிய கதையையும் தேர்வு செய்து, அதை நாடகப்படுத்தி, மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

**நாடகத்தை நடித்துக்காட்ட பயிற்சி அளித்தல்**

பயிற்சி கொடுக்கும் போது, நடத்தல், ஓடுதல், அதிகாலையில் விழித்தல், காலைக் கடன்களை முடித்தல், எழுதுதல், வேலைக்குச் செல்லுதல், மகிழ்ச்சியாய் இருத்தல், கடமையைச் செவ்வனே செய்தல், கவலை, பிரச்சனைகளைச் சமாளித்தல், சவால்களை ஏற்றல், போன்ற பல்வேறு உணர்ச்சிகளை, வார்த்தைகள், முகபாவங்கள், மற்றும் உடல் அசைவுகளில் வெளிப்படுத்தக் கற்றுக் கொடுக்க வேண்டும். பின்பு நாடகத்தை மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், பொது மக்கள், ஆசிரியர்கள், நிர்வாக உறுப்பினர்கள் முன்னிலையில் தகுந்த இடத்தைத் தேர்வு செய்து, நல்ல ஒப்பனையும், பள்ளி ஆண்டு விழா, சுதந்திர தின விழா, குடியரசு தின விழா, பொங்கல் விழா போன்ற நாட்களில் மாணவர்களை நடித்துக்காட்ட ஏற்பாடு செய்ய வேண்டும்.

**உட்கதை அல்லது சிறுகதை எழுதுதல் (Episode writing)**

இந்த முறையில் குழந்தைகளுக்கு வாசித்தலிலும் எழுதுதலிலும் நல்ல பயிற்சி கிடைக்கிறது. அதனால், இரண்டு துறைகளிலும் குழந்தைகள் தேர்ச்சி பெறுகின்றனர். குழந்தைகளுக்குக் கற்றுத்தரும் போது, வீட்டிற்குள் உள்ள பந்து, பொம்மை, ஆப்பிள், ∴பேன், நாற்காலி போன்றவற்றை ஒவ்வொன்றாய் உச்சரித்து அவற்றை எழுதச்சொல்ல, வாசிக்கச் செய்ய எனப் பயிற்சி அளிக்க வேண்டும். பிறகு அது சம்பந்தமான சிறிய கதைகளைச் சொல்ல வேண்டும். ஒத்த வார்த்தைகளை எழுதக் கற்றுக்கொடுத்து, ஒரு வார்த்தையை மாற்றி எழுதும் போது புதிய வார்த்தைகள் தோன்றும் விந்தையைக் குழந்தைகளுக்கு விளக்க வேண்டும். (எ.கா) Tall, Wall, Ball, Cat, Rat, Hat

**உரைநடை மற்றும் கவிதையைப் படித்துப் புரிந்து கொள்ளும் விழுமங்கள் (Identification of values in learning prose and poetry)**

இந்த முறையில் இரண்டு வகையான எழுத்துக்கள் பின்பற்றப்படுகின்றன. ஒன்று, தொழில் சம்பந்தமான எழுத்து, இரண்டாவது, செய்தித்தாள் அல்லது பத்திரிக்கை போன்றவற்றில் இருந்து பெறப்படும் எழுத்துக்கள். எழுத்தாளர்கள் தாம் பெற்ற அனுபவ அறிவு, தன்னறிவு, தம் கல்வி வளங்களால் உரைநடை, கவிதைகளை எழுதிப் பிரசுரிகின்றனர். எழுத்தாளரின் எழுத்துக்கள் யாவும் அவரது எண்ணங்களையும் கற்பனை வளங்களையும் பிரதிபலிக்க கூடியவை ஆகும். வாசகர்களைச் சிந்திக்க வைக்கக்கூடிய படைப்புகளாகக் கவிதை வடிவிலும், கதைகள், நாவல்கள் வடிவிலும் வெளிவருகின்றன.

இந்த எழுத்தாளர்களின் படைப்புகள் நமது கலாச்சாரத்தையும், பாரம்பரியம் செயல் முறைகளையும், கருத்துச் செறிவுகளையும் உள்ளடக்கி வருவதால் அனைவராலும் ஈர்க்கப்பட்டு வாசிக்கப்படுகிறது. செய்தித்தாள்களும், பத்திரிக்கைகளும், அன்றாட நிகழ்வுகள் உண்மைச் சம்பவங்கள் பல வகையான வாழ்க்கைக் குறிப்புகள், அரசியல், பொருளாதார, சமூகச் செய்திகள் அனைத்தையும் வெளியிடுகின்றன. எனவே, மக்கள் இருவகை எழுத்துக்களாலும் மிகுந்த விழுமங்களைப் பெற்று வாழ்வில் மேன்மையடைய வழிகள் பிறக்கின்றன. ‘‘பறவைகள் பல விதம் ஒவ்வொன்றும் ஒரு விதம்’’ என்பதைப் போல, மாணவச் செல்வங்கள் ஒவ்வொருவரிடமும் எண்ணற்ற விழுமங்கள் புதைந்து கிடக்கின்றன.

### 2.14.3 கதாபாத்திரமாக நடித்தல் (Role Plays)

இதனை ∴பானி ஷாப்டல் (Fannie Shaftel), ஜார்ஜ் ஷாப்டல் (George Shaftel) என்போர் 1967 ஆம் ஆண்டு உருவாக்கினர். இதில் ஆசிரியர் மதிப்புணர்வினைக் குறித்த நாடக வடிவம் ஒன்றினை தேர்வு செய்வார். பிறகு அதில் மாணவர்களை நடிக்கச் செய்வார். இம்மாதிரி உருவானது ஒன்பது படிநிலைகளாகச் செயல்படுத்தப்படுகிறது.

1. முதலில் ஆசிரியர் மாணவர்களுக்கு மதிப்புணர்வு குறித்த கதையினை விளங்க வைப்பார் ( Warming up).
2. பிறகு மாணவர்களை கதாபாத்திரங்களில் நடிப்பதற்கென தேர்வு செய்வார் (Selection of Students for Role Playing).
3. வகுப்பறையிலிருக்கும் பிற மாணவர்களை பார்வையாளர்களாக தயார் நிலைப்படுத்தப்படுவார்கள் (Preparing the Audience for Listening Observing).
4. நாடகத்தினை அரங்கேற்றுவதற்கு முன்னர் அதற்கேற்ற சூழலை உருவாக்கல் (Setting the stage).
5. நாடகத்தினை அரங்கேற்றுதல் (Acting).
6. மாணவர்களை மதிப்புணர்வினைக் குறித்து விவாதிக்க செய்தல், மதிப்பிடச் செய்தல் (Discussing about the Value and Evaluating).
7. மீண்டும் மாணவர்களை நடிக்கும்படி செய்தல் (Acting Again).

8. மீண்டும் மதிப்புணர்வு குறித்து, விவாதிக்கவும், மதிப்பிடவும் செய்தல் (Discussing and Evaluating about Value Again).
9. மாணவர்களின் சொந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல், நாடகத்தினைப் பற்றிய தீர்வினை பொதுமைப்படுத்தி. நன்னெறியை பின்பற்றுவதன் அவசியத்தை உணரச் செய்தல் (Sharing the Expreince, Genreatlising, The Findings, Establishing Morality).

இதற்கென ஆசிரியர் மதிப்புணர்வினைச் சிறந்த முறையில் உணர்த்தக் கூடிய கதைக் கருவினைக் கொண்டு நாடகமொன்றினைத் தேர்வு செய்து, மாணவர்களையும், நடிகர்களையும் ஒவ்வொரு நிலையிலும் சிறந்த முறையில் தயார் நிலைப்படுத்த வேண்டும். பிறகு கலந்துரையாடலின் மூலம் மதிப்புணர்வினைக் குறித்த, அவர்கள் உணர்ந்தவற்றை வெளிப்படுத்தும்படி ஊக்குவிக்க வேண்டும். நாடகததின் மூலமாக அவர்கள் உணர்ந்த நன்னெறியினை வெளிப்படுத்துமாறு ஆசிரியர் கூற வேண்டும்.

## 2.15 தனிப்பட்ட/சொந்த எடுத்துக்காட்டுகள் (Personal Examples)

நாம் முதன் முதலில் பெற்றோர்களிடம் இருந்தும், பிறகு ஆசிரியர்கள், பெரியோர்கள், கல்வியாளர்கள் மற்றும் புத்தகங்கள் வாயிலாகக் கற்று நம் அறிவை விரிவுபடுத்திக் கொள்கிறோம். அதன் மூலம் நமது மூளையைச் சலவை செய்தல், விழுமங்களை வளர்த்து நடத்தையைச் சீர்படுத்துதல் பெற்றோர்களுடனும் உற்றார் உறவினர்களுடனும் பண்போடும் பாசத்தோடும் நடத்தல், பிறரது உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்தல் என அனைத்துப் பண்புகளையும் வளர்த்துக் கொள்கிறோம். அதற்குப் பயன்படுதல் தெளிவாக எதையும் கற்று அதன்படி நடத்தல் தான், நமது மூளையை சலவை செய்து கூர்மையாக்குவது எது என எடுத்துக் கொண்டால் நாம் அனைவரும் கண்ணை மூடிக்கொண்டு சொல்வது கணிதம் பற்றிய சில வினாக்கள் நம்மை வழிகாட்டும்.

**(எ.கா)**

1. எப்படி கணிதத்தை முழுமையான ஈடுபாட்டுடன் கற்றுக் கொள்கிறாய். அதற்கான விமையைக் காண்கிறாய்?

2. கணக்குப் பாடங்களை எவற்றின் ஆதரவுகளைப் பெற்று வடிவமைக்கின்றாய்?

ஆம் கணிதப் பாடத்தை முழு ஈடுபாட்டுடன் கற்கும் மாணவனுக்கு அதில் முழுமையான வெற்றியை அடைய முடியும். ஏனெனில் கணிதத்திற்கும் அறிவிற்கும் இடையே நெருங்கிய உறவு உள்ளதை யாராலும் மறுக்க முடியாது.

**(எ.கா)**

ஆசிரியர் அறிதிறன் வளர்ச்சி அணுகுமுறையில் (ஊழவெைரெந னநளநடழிஅநவெ யீசழயஉா) நன்னெறி தொடர்புடைய சில பிரச்சினைகளை எழுப்பி, அவற்றிற்கான மிகச் சிறந்த பொருத்தமான தீர்வுகளை பரிந்துரைக்கும்படி மாணவர் பொருத்தமான தீர்வுகளை பரிந்துரைக்கும்படி மாணவர் குழுக்களை கேட்டுக் கொள்வார். அதாவது ஒரு மதகுரு, நேர்மையும், ஒழுக்கமும் மிக்கவராக மக்களை இறைவழியில் செல்ல அறிவுரை பகர்ந்து வழிநடத்துபவராக வாழ்ந்து வருகிறார். அப்பொழுது ஒரு குற்றவாளி சரண் அடைந்து நடந்த உண்மையைக் கூறி பாவ மன்னிப்பு (ஊழகெநளளழைெ) பெற்று திருந்தி வாழத் தொடங்குகிறான் அத்தருணம், காவல்துறை அதிகாரி, மத குருவை அணுகி குற்றவாளி பற்றிய விபரங்களைக் கூறி அவனைத் தெரியுமா எனக் கேட்கிறார். மதகுருவோ தான் வகிக்கும் பொறுப்பான பதவியை நினைத்தும், அதன் தர்மப்படி பாவ மன்னிப்புக்கு முன் தன்னிடம் கூறிய வாக்குமூலம் விபரத்தை வெளியிடுவது தவறு என நினைப்பார். அதே நேரம் சட்டப்படி குற்றவாளி பற்றி தனக்குத் தெரிந்த உண்மையை மறைப்பதும் ஒரு குடிமகன் என்ற முறையில் தவறு என்றும் உணர்கிறார். இவ்வாறு சிக்கலில் இருக்கும் மத குரு என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் பரிந்துரைக்கிறீர்கள் என்று கேட்கப்படும். பதில்கள் வருவாறு.

1. உண்மையைக் கூறுவது தான் சிறந்தது.
2. உண்மையைக் கூறக் கூடாது.
3. மதகுரு பதவியைத் துறந்து பின் இன்ஸ்பெக்டரிடம் உண்மையைக் கூற வேண்டும்.
4. மத குரு அவனுக்கு எடுத்துரைத்து அவன் தானே முன் வந்து தன் குற்றத்தை ஒப்புக் கொள்ளும்படி செய்ய வேண்டும்.

இவ்வித விவாதங்களைக் கேட்டறியும் போது உண்மையின் முழுப் பரிமாணமும் நமக்குப் புலப்படும். பெரும்பாலானவர்கள் இப்பிரச்சினையை எவ்வாறு அணுகுகிறார்கள் என்பதையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

## 2.16 மதிப்புணர்வு நெருக்கடிகள் (Value Crisis)

வெள்ளம் வருமுன்னே அணைக்கட்டு கட்ட வேண்டும் என்ற முது மொழிக்கு ஏற்ப பிரச்சனைகள் வருவதற்கு முன்னே அவை வராமல் தடுப்பதற்கான வழிமுறைகளைக் கையாளுதலே அறிவுடைமை, நாம் எவ்வளவோ விழிப்புணர்வுகளோடு செயல்பட்டாலும் பிரச்சனைகள் முளைத்து விடுவது சகஜம். ஒரு குழந்தையை சிறந்த குடிமகனாக சமூகத்திற்கு அளிக்க வேண்டும் என்றால் அக்குழந்தையின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பள்ளிச் சூழல், குழந்தை வளரும் சமுதாயம், அதன் அரசாங்கம் ஆகியோர்களின் ஒட்டு மொத்த கூட்டணியின் முயற்சியும் அவசியமாகிறது. குழந்தைகளின் முப்பரிமாண வளர்ச்சியை ஆரோக்கியமாக நிகழ்த்திடச் செய்ய முயற்சிகளையும் எடுக்கும்போது பிரச்சினைகளை அவை ஏற்படுவதற்கு முன்னரே தடுக்க வாய்ப்புகள் அதிகம்.

தற்பொழுதெல்லாம் நன்கு படித்து அறிந்தவர்கள் கூட வன்முறைகளில் ஈடுபடுவதற்கான காரணம் அவர்கள் தங்கள் பள்ளி வயதினில் தங்கள் ஆசிரியர்களால் சரியான முறையில் நெறிப்படுத்தப்படாததும் இதற்குக் காரணமாக இருக்கலாம். தற்காலக் கல்விச் சூழலில், மாணவர்கள் ஒரு நாளில் பெரும் பகுதியை தங்கள் பள்ளிகளில் தானே செலவிடுகிறார்கள் என பெறறோர்கள் மெத்தனமாக இருப்பதும் இதில் பெரும்பங்கு வகிப்பது மிகவும் வேதனைக்குரியது.

### மதிப்புணர்வு நெருக்கடிக்கான காரணங்கள் **(Reasons for Value Crisis)**

மதிப்புணர்வுகளைப் பற்றிய தெளிவின்மை காரணமாக போராட்டங்கள் மனத்தில் உருவாகின்றன. இதனால் மதிப்புணர்வினைச் செயல்படுத்துவதில் நெருக்கடிகள் உண்டாகின்றன. மதிப்புணர்வு நெருக்கடி உண்டாவதற்கு முக்கிய காரணங்கள் பின்வருமாறு:

1. தலைமுறையினருக்கு இடையே உள்ள மன இடைவெளி, கருத்து வேறுபாட்டின் காரணமாக மதிப்புணர்வுகளைப் பின்பற்றுவதில் சிக்கல் ஏற்படுகின்றன.
2. பாரம்பரிய மதிப்புகள், நவீன மதிப்புகளுள் எதனைப் பின்பற்ற வேண்டும் என்பதில் தெளிவின்மை தற்போதும் நிலவுகின்றது.
3. நவீன மதிப்புணர்வுகளுள் பெரும்பாலானவை மேற்கத்திய நாகரிகத்தினால் பாதிப்படைந்து உள்ளதால் அவை தேசிய மதிப்புணர்வுகளைப் பிரதிபலிப்பதாக இல்லை. (உ.ம்) சுதந்திரம், கருத்து சுதந்திரத்தின் உண்மையான பொருளினை மக்கள் உணரவில்லை. கருத்து சுதந்திரம் பிறருடைய மனத்தினை புண்படுத்தாமல், பண்பாட்டினை நிலைநிறுத்துவதாகவும் இருக்க வேண்டும் என்பதனை, கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதனை நினைவுக்கூற மறந்து விடுகின்றனர்.
4. சமத்துவத்திற்குத் தவறான பொருளினைக் கற்பித்து, பின் விளைவுகளைச் சிந்திக்காமல் இளம் சமுதாயத்தினர் பலியாகின்றனர். (உ.ம்) ஆண், பெண் நட்பு.
5. பாரம்பரிய மதிப்புணர்வுகளுள் தற்காலத்திற்கு உகந்தவைகளைப் பின்பற்றி, தேவையற்றவையை ஒதுக்குவது எவ்வாறு என்பதனைப் பற்றிய அறிவாற்றலும், பகுத்தறிவும் இன்மை. (உ.ம்.) இன்றளவும் தாழ்ந்த இனத்தவரைக் குறித்து மக்களின் மனத்தில் உள்ள காழ்ப்புணர்வு அகற்றப்பட வேண்டிய ஒன்றாகும். பெண்களின் முன்னேற்றத்தைக் கருதி, அவாகள் கல்வி பயில்வதும், பணிக்குச் செல்வதும் ஊக்குவிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.
6. விரிவுரையாளர்கள், ஆசிரியருக்கு தேசிய மதிப்புணர்வுகளுள் மாணவர்களுக்கு எதனை முக்கியத்துவம் வாய்ந்ததாக எடுத்துரைக்க வேண்டும் என்பதனைக் குறித்த தெளிவின்மை இன்றும் நிலவுகிறது.

7. தற்போதைய கல்வி முறையில் இந்தியப் பண்பாடு, தேசிய மதிப்புணர்வுகள் குறித்து போதுமான விவரங்கள் தரப்படாததும் ஒரு காரணமாகும்.
8. இந்திய சட்ட அமைப்பின்படி வலியுறுத்தப்பட்ட மதிப்புணர்வுகளின் முக்கியத்துவத்தினை மக்கள் முழு மனதாக உணராமை முக்கிய காரணமாக விளங்குகிறது. (உ.ம்.) சமத்துவம், சமயச் சார்பின்மை. இன்றளவும் கூட மக்களிடையே சமய பூசல்கள், சாதி கலவரங்கள் நடைபெற்றுக் கொண்டுதான் உள்ளன. அதீதமான சமயப்பற்றின் காரணமாக சமய நல்லிணக்கம் மக்களிடையே முழுமையாக உருவாகவில்லை.
9. மக்கள் ஆட்சியில் அரசாங்கம் முக்கியத்துவம் அளித்துள்ள மதிப்புணர்வுகளை பற்றிய முழுமையான விவரம் பாமர மக்களைச் சென்று அடையாமையும் இதற்கு ஒரு காரணமாகும். அரசாங்கம் இதற்கெனச் சிறப்பு செயல் திட்டங்களை அமைத்தும் மக்கள் அதன் அவசியத்தை உணர்ந்து கொள்ளவில்லை. (உ.ம்.) அனைவருக்கும் கல்வி இயக்கத்தினை இந்திய அரசாங்கம் அறிமுகப்படுத்தி உள்ளது. இதனைச் சமத்துவத்தினை கருதி செயல்படுத்தியது. கிராமப்புறத்தில் உள்ள அநேகருக்கு இதன் அடிப்படை காரணமாவது விளங்குவது.

## மதிப்புணர்வு நெருக்கடிகளை தவிர்ப்பதற்கான வழிமுறைகள் (Ways for Overcoming Value Crisis)


மதிப்புணர்வு நெருக்கடியானது மக்களிடையே மதிப்புணர்வு குறித்த தெளிவின்மை காரணமாக ஏற்படுகின்றது. இதனால் அவர்களால் மதிப்புணர்வுகளைப் பின்பற்றுவதில் மனப் போராட்டங்கள் உண்டாகின்றன. இதனால் நடத்தைப் பிறழ்வுகள் ஏற்படுகின்றன, சமூகத்தில் குற்றங்கள் அதிகரிக்கின்றன. இளம் சமுதாயத்தினர் நெறிமாறிச் செல்கின்ற ஆபத்தான நிலை ஏற்படுகின்றது. இதனைத் தவிர்க்க பின்வரும் வழிமுறைகள் கையாளப்பட வேண்டும்.

1. மதிப்புணர்வினைக் குறித்த தெளிவான கருத்தினை பெற்றோர்கள் தம் பிள்ளைகளிடையே உருவாக்க வேண்டும்.
2. கல்வி நிறுவனங்களில் மதிப்புணர்வுக் கல்வி கட்டாயமாக்கப்பட வேண்டும்.
3. ஒருங்கிணைந்த அணுகுமுறையின் மூலமாக மதிப்புணர்வுக் கல்வி அளிக்கப்பட வேண்டும்.
4. கல்வி ஏற்பாடானது இந்தியப் பண்பாடு, மக்கள் ஆட்சி, சட்ட திட்டங்கள், அரசாங்க அமைப்பினை தெளிவுபட எடுத்துரைப்பதாக இருக்க வேண்டும்.
5. மதிப்புணர்வுக் கல்வியினை பாட ஏற்பாடு, இணை கலைத்திட்டங்களின் வழியாகக் கற்பிக்க வேண்டும்.
6. தேசிய மதிப்புணர்வுகளை எவ்வாறு மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்பது குறித்து கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் விரிவுரையாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கல்வித் துறையானது சிறப்புப் பறிற்சி அளிக்க வேண்டும்.

7. பாரம்பரிய மதிப்புகள், நவீன மதிப்புகளின் தன்மை, வேறுபாடு, வெற்றியினைப் பின்பற்ற வேண்டும் என்பது குறித்த தெளிவான கண்ணோட்டத்தைக் கல்வி நிறுவனங்கள் மாணவர்களிடையே ஏற்படுத்த வேண்டும்.
8. கல்வி அமைப்பானது மேற்கத்திய பண்பாடு, கலவித் தத்துவங்களை சார்ந்திராமல், இந்தியப் பண்பாட்டினையும், கல்வித் தத்துவங்களையும் சார்ந்ததாக இருக்க வேண்டும்.
9. இந்திய அரசாங்கமானது மக்கள் தொடர்புச் சாதனங்களின் மூலமாக, தேசிய மதிப்புணர்வுகளைக் குறித்தும், சட்ட அமைப்புகளைக் குறித்தும் மக்களிடையே விழிப்புணர்வினை உருவாக்க வேண்டும். சமத்துவம், சமயத்துவத்தினை வலியுறுத்தும் செயல் திட்டங்கள் மக்களைச் சென்றடைந்தனவா என்பதனைக் கூர்ந்து கவனித்து ஆவன செய்ய வேண்டும்.
10. இந்திய அரசாங்கமானது கல்வித் துறை மனித மதிப்புணர்வுகளை கற்பிக்கக் கூடிய பாட ஏற்பாடுகளையும், இணைக் கலைத்திட்டங்களையும் பின்பற்ற பரிந்துரைக்க வேண்டும். கல்வி நிறுவனங்களில் இந்தியப் பண்பாட்டினை நிலை நிறுத்தக் கூடிய கற்பித்தல் கற்றல் அணுகுமுறைகளின் மூலமாக மனித மதிப்புணர்வுகள் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
11. ஆசிரியர்களும், விரிவுரையாளர்களும் மதிப்புணர்வுக் கல்வியினைக் குறித்து நேரிடையான மனப்பான்மை கொள்ள வேண்டும். அதனைக் கற்பிப்பதில் தமக்குள்ள முக்கிய பொறுப்பினை உணர்ந்து செயல்பட வேணடும்.

## 2.17 மதிப்பு வளர்ச்சி (Value Development)

தேசிய நிறுவனம் கல்வி திட்டமிடல் மற்றும் நிர்வாகத்தைச் (National Institute Educational Planning and Administration (NIEPA)) சார்ந்த மர்மர் முக்கோபதையை (Marmar Mukhopadhyay) மே 24, 2001ல் மதிப்பு வளர்ச்சி குறித்து கூறுகிறார்.



| |
|---|
| மதிப்பை சேகரித்தல்<br>(Value Collection) |

## 2.18 மதிப்புணர்வைத் தெளிவுபடுத்துதல் (Value Clarification)

மாணவர்களுக்கு ஏற்படக் கூடிய மதிப்புணர்வு போராட்டங்களைத் தீர்ப்பதற்கென ஆசிரியர் மதிப்புணர்வு தெளிவுபடுத்தும் அணுகு முறையினைப் பயன்படுத்த வேண்டும். இவ்வணுகுமுறையினை எல்.எஸ். ராத்ஸ், எம். ஹார்மின் மற்றும் எஸ்.பி. சைமன் (L.S. Raths, M, Harmen and S.B. Simon) முதலிய கல்வியாளர்கள் பரிந்துரைத்தனர். இவ்வணுகுமுறையின் மூலம் ஆசிரியர் அளிக்கும் பயிற்சியினால் மாணவர்கள் தம்முடைய எண்ணம், செயல்பாடுகளைச் சுயமாக மதிப்பீட்டுச் (Self - Evaluation) சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு மதிப்புணர்வுகளை எவ்வாறு நெறி பிறழாமல் கடைபிடிக்க வேண்டும் என்பதனை உணர்ந்து கொள்வர்.

கல்வியாளர்களின் கருத்தின்படி, மதிப்புணர்வுகள் என்பது தனி நபரின் எண்ணம், கருத்து, விருப்பத்திற்கு உட்பட்டதாக இருப்பதால் அனைவரும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் ஒன்றாகச் செயல்படுவர் என்று கூற முடியாது. மேலும் மதிப்புணர்வுகள் அவரவர் எதிர் கொள்கின்ற பிரச்சினைகள், போராட்டங்கள், அனுபவங்களின் சாதாரணமாக வேறுபடுகின்றன. எனவே மதிப்புணர்வுகளைத் தெளிவுபடுத்தும் அணுகுமுறையின் மூலம் ஆசிரியர் மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதனால் அவர்களுக்கு,

(1) சிந்திக்கும் ஆற்றல் பெருகுகின்றது.
(2) தீர்வு காண்பதில் மாணவர் பங்கேற்பு அதிகரிக்கின்றது.
(3) ஒரே பிரச்சினையைப் பல்வேறு கோணங்களில் அலசிப் பார்க்கும் திறன் (Divergent Thinking) அதிகரிக்கிறது.
(4) தன்னம்பிக்கை அதிகரிக்கிறது.

## 2.19 குடும்ப மதிப்புணர்வுகள் (Family Values)

இந்திய நாட்டில் பழங்காலந் தொட்டு கூட்டுக் குடும்பங்கள் உள்ளன. இத்தகைய சூழ்நிலையில் வளரும் குழந்தைகளிடத்தில் பெரும்பாலும் பாதுகாப்பு உணர்வு, சகோதரக் குணம், விட்டுக் கொடுக்கும் குணம், தோழமை உணர்வு, பங்கிட்டு உண்ணும் குணம், ஒத்துப் போகும் குணம், மரியாதை உணர்வு முதலியவை அதிகமாகக் காணப்படுகின்றன. இன்றைய சூழலில் தனிக் குடும்பங்கள் அதிகமாகி உள்ளன. இத்தகைய நிலையில் பிள்ளைகள் காப்பத்திலோ,

செவிலியர் துணைக் கொண்டோ வளர்கின்றன. இத்தகைய பிள்ளைகளிடம், கூட்டுக் குடும்பங்களில் வாழும் பிள்ளைகளைக் காட்டிலும் மதிப்புகள் சற்றுக் குறைந்தே காணப்படுகின்றன.

தனிக் குடும்பங்களில் வாழும் பிள்ளைகளிடம் பிறரைச் சார்ந்திராமல் சுயமாக செயல்படும் குணம், தன்னிச்சையாக சிந்திக்கும் குணம், தம்முடைய வேலைகளைத் தானே செய்து கொள்ளும் ஆற்றல், தன்னம்பிக்கை முதலியவை அதிகமாகக் காணப்படுகின்றன. இவற்றினை ஆக்கப்பூர்வமாக செயல்படச் செய்வது பெற்றோர்களின் கடமையாக விளங்குகிறது. கூட்டுக் குடும்பங்களாக இருந்தாலும், தனிக் குடும்பமாக இருந்தாலும் பிள்ளைகள் நெறிமாறாமல் வளரச் செய்வது பெற்றோர்களின் கையில் தான் உள்ளது. பிள்ளைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்கள், மனித உறவுகளின் முக்கியத்துவம், உடன்பாடான மனப்பான்மை, சிறந்த ஆளுமைத் திறன் வளரச் செய்வதற்கு பெற்றோர்கள் அனைத்து வகையிலும் வழி செய்ய வேண்டும்.

## 2.23 பண்புக் கல்வி/குணக்கட்டமைப்பு (Character Education)

குணம் என்பது ஒரு மனிதனின் பண்புநலன்களைக் குறிக்கும். ஒருவனது குணங்களை வைத்தே நல்லவன், தீயவன், நேர்மையாளன், நீதிதவறாதவன், அன்புகொண்டவன், ஒழுக்கமுடையவன் எனப் பல பண்புகளை வெளிப்படுத்துவர். இந்த குணங்களை வெளிப்படுத்த உதவும் காரணிகள் பற்றி விளக்கமாகக் காண்போம்.

**உண்மை**

''வாய்மையே வெல்லும்'' என்ற கூற்றிற்கு இணங்க என்றும் உண்மைதான் வெற்றிபெறும் என்பர். எனவே மனிதனுக்கு உண்மையின் சிறப்புகள் அறிந்து இருக்க வேண்டும். எனவே ஒரு மாணவனை அவனது சிறுவயதில் இருந்து உண்மையின் பயனைக் கற்று கொடுக்க வேண்டும். அவ்வாறு கற்றுக்கொடுத்தால் அவன் என்றும் உண்மையுடன் திகழ்வான், அனைவரின் நம்பிக்கையும் பெறுவான். இதை கற்று கொடுக்கும் விதம் திருக்குறளில் உள்ள வாய்மை அதிகாரம், அரிச்சந்திரன் கதை அனைத்தையும் மாணவருக்கு கற்றுக் கொடுத்தால் உண்மையின் சிறப்பை அறிவர்.

**தன்னடக்கம்**

தன்னடக்கம் என்பது மனிதனின் ஐம்புலன் ஆகிய பார்த்தல், கேட்டல், பேசுதல், நுகர்தல், தொடுதல் ஆகியவற்றுடன் சேர்த்து மனம், சிந்தனை ஆகியவற்றையும் அடக்கி தன் கட்டுப்பாட்டில் வைத்து வாழ்வதே தன்னடக்கம் என்பர். இது மனிதனுக்கு மிகவும் தேவையான ஒன்றாகும். இதை மாணவருக்கு கட்டாயமாக கற்றுக் கொடுக்க வேண்டும். தன்னடக்கத்தை உணர்த்தும் கதைகள், செய்யுள்கள் கற்றுக்கொடுக்க வேண்டும்.

**உதாரணம்:**

''தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே

நாவினால் சுட்ட வடு'',

இதில் நாவடக்கம் பற்றி வலியுறுத்தியுள்ளார் திருவள்ளுவர்.

**நம்பிக்கை**

நம்பிக்கை என்பது ஒவ்வொரு மனிதனும் தன்னை சார்ந்துள்ள நபர் மீது அன்பு அல்லது தன் கடமைகள் மூலம் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றனர். இதை மாணவரிடம் வளர்க்க வேண்டும். மேலும் மாணவரின் தன்னம்பிக்கை வளரும் படி பல பயிற்சிகள் அளிக்க வேண்டும். மேலும் நம்பிக்கைக்கு உதாரணமாக விளங்கும் நிறம் நீலநிறம் ஆகும்.

**நேர்மை**

ஒரு தொழிலாளி தன் முதலாளிக்கு விசுவாசமாக நடப்பதை நேர்மை என்பர். அதுபோல் இது குடும்பம், சமூகம், தேசம், உலகம் இதில் உள்ள அனைவருக்கும் இந்த நேர்மைப் பண்பு மிகவும் அவசியம் ஆகும். நேர்மை தவறாமல் வாழ நாம் அனைத்து மாணவருக்கும் பயிற்சி அளிக்க வேண்டும்.

**முழுமை**

ஒவ்வொரு மாணவரும், மனிதனும் ஒவ்வொரு திறன் அல்லது செயலில் முழுமை பெற்று விளங்குகின்றனர். ஒரு மனிதன் முழுமை பெற உதவுபவை பயிற்சி, முயற்சி, அனுபவம், கடின உழைப்பு ஆகியவை சேர்ந்தே ஒரு மனிதனை முழுமை நிலையை அடையச் செய்கிறது.

**நீதி நெறி**

நீதி நெறியை உணர்த்தும் திருக்குறள், செய்யுள்கள், கதைகளை மாணவருக்கு கற்றுக் கொடுத்து, மேலும் நாட்டின் சட்டதிட்டத்தையும் கற்று கொடுத்து சரியாக வாழவும், நீதிதவறாமல் வாழவும் கற்று கொடுக்க வேண்டும். இதனால் மாணவர்கள் உண்மை, பொய் இவற்றை அடையாளம் கண்டு கொள்வதுடன், நீதிநெறி அறிந்து வாழ்வர்.

**பிறர் நலன் கருதும் தன்மை**

ஒரு மனிதன் பிறரின் உடலும், மனமும் காயப்படாமல் வாழும் முறையே பிறர் நலன் கருதும் தன்மை என்பர். இது தோன்ற வேண்டும் என்றால் மாணவருக்கு இது தொடர்புடைய பயிற்சிகள் பல அளிக்க வேண்டும். மாணவரிடம் அனைவரிடமும் அன்பு காட்ட கற்றுக் கொடுக்க வேண்டும். மேலும் பல சேவை அமைப்பு, சேவை புரியும் நபர்கள் பற்றி கற்றுக் கொடுத்து இப்பண்பை வளர்க்க வேண்டும்.

**நவீன சமுதாயத்தை உருவாக்கும் நற்பண்புகள் மற்றும் உணர்ச்சிக் கட்டுப்பாடு**

நவீன சமுதாயம் உருவாக மாணவருக்கு பல அறிவியல் தொடர்புடைய தொழிற்கல்வி படிப்புடன் சேர்த்து, மதிப்புக் கல்வியும் கற்றுக் கொடுத்து நற்பண்பை வளர்க்க வேண்டும். மேலும் பிற நாட்டின் வளர்ச்சிக்கு, சிறப்பிற்கு காரணமான செயலை கண்டறிந்து கற்று நற்பண்புடன் நாட்டை மேம்படுத்த வேண்டும். மேலும் எந்த ஒரு நற்பண்பையும் மனிதனின் உணர்ச்சியால் சீரழிக்க முடியும். எனவே மனிதனின் உணர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், சமப்படுத்தவும் மாணவருக்கு சிறுவயதில் இருந்து பயிற்சி அளிக்க வேண்டும். இவை அனைத்தும் மனிதனின் குணநலத்தை தீர்மானிக்க உதவும் காரணிகள் ஆகும். இதன் மூலமே மனிதனின் குணக் கட்டமைப்பு நீர்படுத்தப்படுகிறது. இதனால் சிறந்த சமூகம் தோன்றுகிறது.

## 2.21 வாழ்க்கை விஞ்ஞானம் (Science of Living)

மக்கள் அதிக அளவில் கல்வியறிவு பெறத் தொடங்கியதால் அவர்களிடம் அறிவியல் தாக்கம் ஏற்பட்டு காரண காரியத் தொடர்பை அலசி ஆராயும் பண்பு வளர்ந்துள்ளது. இதனால் சமுதாயத்தில் சமயங்களின் செல்வாக்கு மங்கத் தொடங்கியுள்ளது. மக்களின் நடத்தைகளை நெறிப்படுத்தத் தோன்றிய சமயங்கள் செல்வாக்கு இழந்ததால் விழுமச் சீர்குலைவு ஏற்பட்டு குற்றங்கள் பல்கிப் பெருகுகின்றன. ஒவ்வொருவரும் தாம் செய்யும் குற்றங்களை பல்வேறு காரணங்களைக் கூறி நியாயப்படுத்த முயல்கின்றனர்.

- ஆசிரியர் பள்ளி காலை வழிபாட்டின் போது முக்கிய செய்திகளாக அறிவியலில் புதிய செய்திகளை வாசிக்கும்படி மாணவர்களை ஊக்குவித்தல்.
- நாடக வடிவில் அறிவியல் அறிஞர்களின் வரலாறு, கண்டுபிடிப்பு தோன்றியவிதத்தினை மாணவர்களின் மூலம் அரங்கேற்றுதல்.
- அறிவியல் கண்காட்சி, சந்தைகளை நடத்துதல்.
- அறிவியல் புதிய செயல் திட்டங்களை மாணவர்களுக்கு அளித்தல்.
- அறிவியல் தொடர்பான ஆவண திரைப்படங்களை மாணவர்களைக் காணச் செய்தல்.
- பள்ளியில் அறிவியல் கழகத்தின் பணிகளை மாணவர்களின் துணை கொண்டு சிறப்புறச் செய்தல்.
- அறிவியலுக்கெனத் தனி நூலகத்தினைப் பள்ளியில் பராமரித்தல்.
- பாடத்தினைக் கற்பிக்கும்போது மாணவர்களிடையே அறிவியலில் ஆர்வம், அறிவியல் மனப்பான்மையினைத் தோற்றுவித்தல், அறிவியல் தொடர்பான அறிவுப்பூர்வமானக் கேள்விகள் கேட்கின்ற பழக்கத்தினை மாணவர்களிடம் தோற்றுவித்தல், அறிவியல் பாடத்தினைக் குறித்த நேர்மையான மனப்பான்மையினை மாணவர்களிடம் உருவாக்கல்.
- மக்கள் பின்பற்றுகின்ற பண்டைய பழக்க வழக்கங்களுக்குப் பின்னால் இருக்கின்ற அறிவியல் உண்மைகளைப் பாடத்தினை நடத்துகையில் ஆசிரியர் மாணவர்களுக்கு கூடுதல் தகவல்களாக விளக்கிக் கூறுதல். (உ-ம்) உணவு அருந்திய பின்பு பெண்கள்

தாம்பூலம் உண்பது வழக்கம். இதன் மூலமாக உடலில் நாளடைவில் ஏற்படக் கூடிய கால்சியம் பற்றாக்குறையானது நிவர்த்தி செய்யப்படுகிறது.

- வல்லுநர்களையும், பேராசிரியர்களையும் அறிவியலில் உள்ள புதிய செய்திகளைக் குறித்து சிறப்புச் சொற்பொழிவாற்றப் பள்ளிக்கு வரவேற்றல்.
- அறிவியல் தொடர்பான தினங்களைப் பள்ளியில் கொண்டாடுதல்.
- அறிவியல் கழகத்தை மாணவர்களின் துணை கொண்டு நடத்துதல்.
- மாணவர்களின் மனத்திலிருக்கும் மூட நம்பிக்கைகளை ஒழித்து, ஆசிரியர் அவற்றின் பின்னாலிருக்கும் அறிவியல் உண்மைகளைத் தெளிவுற எடுத்துரைத்தல்.

  (உ-ம்) இரவு நேரத்தில் மரத்தினடியில் படுக்கக்கூடாது. அவ்வாறு படுத்தால் தீய சக்திகளின் உபாதைகளுக்கு உள்ளாவோம் என்பது மூட நம்பிக்கை. இரவு நேரங்களில் மரமானது மனிதர்களுக்குத் தேவையான ஆக்ஸிஜன் வாயுவினைத் தான் எடுத்துக் கொண்டு கார்பன் டை ஆக்ஸைடினை வெளியிடுவதே இதில் இருக்கக் கூடிய உண்மையான அறிவியல் பின்னணியுடன் கூடிய செய்தியாகும். இதனை மாணவர்களுக்கு ஆசிரியர் பாடத்தினை நடத்தும்போது கூடுதல் செய்தியாக அளிக்க வேண்டும்.

# அலகு III

# அமைதிக் கல்வி

# (Peace Education)

## 3.1 அமைதிக் கல்வி - பொருள் (Peace Education - Meaning)

அமைதிக்கான கல்வி பற்றிய பொருளை ஆராயும் பொழுது, இக்கல்வியின நோக்கமே ஒரு நல்ல முடிவை மனதில் கொண்டு செய்யப்படும் செயற்பாங்கினை அதன் அழகிய நடைமுறையைக் (a series of systematic action with a particular end in view) குறிக்கும். இந்த அமைதிக் கல்வியின் மூலம் முயன்று அடையக் கூடிய மதிப்பு, அறிவு, சூழ்நிலைக்கு ஏற்ற முறையில் சாயலை, மனப்பாங்கினை வளர்த்துக் கொள்ளும் ஆற்றல், திறமைகள் ஒருவர் தம்மையே அறிந்து புரிந்து இணக்கமாக நடந்து கொள்ளும் பாங்கு மற்றும் மற்றவர்களையும் நன்கு அறிந்து கொண்டு அவர்களுடன் கைகோர்த்து வாழப் பழகும் பாங்கினைக் கற்பிப்பதே அமைதிக்கான கல்வியின் பொருளாகும். அமைதி என்றால், போரற்ற, கவலையற்ற உள்நாட்டுக் குழப்பமற்ற, கொந்தளிப்பற்ற மன அமைதி என்பதாகும்.

அமைதிக் கல்வி என்பது கல்வியின் மூலம், உலக அமைதியை நிலைநாட்டுவது அதாவது, அமைதிக்கான புதிய கல்வித் திட்டத்தை உருவாக்குவது மற்றும் ஏற்கனவே நாம் பின்பற்றிவரும் கல்வித்திட்டத்தில் சிறு சிறு மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலம் அமைதிக்கல்வியை மாணாக்கர்களுக்குப் புகட்டுதல். மேலும் அமைதிக் கல்வியானது, மாணக்கர்களிடையே நீதி சரியான உறவு முறை, பகிர்ந்துண்டு மகிழ்தல், பிறர் பொருட்களை அபகரியாமை, மனித நேயம், அனைத்து உயிர்களிடத்திலும் கருணை காட்டுதல், இயற்கை வளங்கள் நிறைந்த நம் உலகைப் பாதுகாக்கும் பொறுப்புணர்வு போன்ற பண்புகளை உருவாக்க உதவும் கல்வியே அமைதிக்கான கல்வி. மாணவர் பெறும் அமைதிக்கல்வி அவரை சமூகம் மற்றும் சமுதாயத்தின் மேம்பாட்டுக்காகவும், அவரது அயலாரின் நன்மைக்காகவும் முழு மனதுடன் சேவை செய்யப்பக்குவப்படுத்துவதாக அமைய வேண்டும். அதற்கு முதலில் ‘மன அமைதியை’ விரும்ப வேண்டும்.

## 3.2 அமைதிக் கல்வி வரையறை (Peace Education - Definition)

அமைதிக்கல்வி பற்றி ‘ஜான் கால்டங்’ (John Galtung) 1976 ஆம் ஆண்டு, தன் கருத்தைத் தெரிவிக்கும் போது, அமைதிக் கல்விக்கான எந்தவித அறிவியல் கோட்பாடும் இல்லை எனினும் அதற்கான கலை அறிவியல் கோட்பாடு மிகத் துரிதமாகத் தேவை என்றார். அதாவது அமைதி என்னும் பண்பு மக்களிடையே வாழ வேண்டும் எனில் அதற்கான வழி கல்வியின் மூலமாகத்தான் வழங்க முடியும் என்றார்.

அமைதிக் கல்விக்கான தத்துவக் கோட்பாட்டை மக்களிடையே உணரச் செய்தலே, தலையாய கடமையாகச் செய்ய வேண்டும் எனக் கருத்துத் தெரிவிக்கிறார் ஜோசியம் ஜேம்ஸ் காலிஜா (Joachim James Calleja) என்ற கல்வியாளர்.

ஜேம்ஸ் பேஜ் என்பவர் கூறுகிறார், பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்ட அமைதிக் கல்வியானது மாணாக்கர்களிடையே ஒழுக்கத்தை வித்திடும் ஒழுக்க இயல், பலன்களை விளைவிக்கக் கூடிய ஒழுக்க இயல், மாற்றங்களை ஏற்றுக் கொள்ளாத அரசியல் ஒழுக்க இயல், அழகுணர்ச்சி சார்ந்த ஒழுக்க இயல் போன்ற பண்பு நலன்களை வித்திடும் கல்வியாகும் என்கிறார்.

## 3.3 அமைதிக் கல்வி - கருத்து (Peace Education - Concept)

'அமைதி' என்பது பொறுமை, நேசம், உதவுதல், கூட்டுறவு, அன்பு இவற்றிறன் வெளிப்பாடு ஆகும் இது நீதியை உள்ளடக்கியது. மனித நேயமே அமைதியின் அடிப்படைத் தத்துவம். இது சமூகம் தழுவியது என்றாலும் தனி மனிதனின் மனநிலையைப் பெரிதும் சார்ந்துள்ளது. எனவே அமைதி என்பது தனி மனிதனில் துவங்கி பிரபஞ்ச அமைதியாகிறது. தன்னுள் அமைதி இழந்தவர் பிறரையும் அமைதியிழக்கச் செய்து விடுவார். பிரச்சினை எவ்வகையினதாயினும், தனி ஒருவன் அதை எதிர் கொள்ளும் முறை சரியானதாக இருந்தால், அவன் தன் மனதில் அமைதியை நிலை நாட்ட முடியும். இந்த அமைதியே பெருக்கெடுத்து உலக அமைதியாக மாறுகிறது.

குழந்தைகளும் இளைஞரும் ஒன்றுசேரும் இடமான கல்விக் கூடங்களில், அவர்கள் பெறும் கருத்துகளில் இந்த நற்பண்புகளை உருவாக்கும் நல்ல கருத்துக்களையும் இணைத்து விட்டால், இக்கருத்துகள் பசுமரத்தாணியாகப் பள்ளி மாணவர்கள் மனதில் பதிந்து விடும். "முயற்சி திருவினையாக்கும்" என்பது போல, இம்முயற்சி சிறியதாயினும், அருமருந்தாக தினமும் இது வேலை செய்து, எதிர்காலத்தில் ஒரு அமைதியான உலகு உருவாக வழி கோலும். இந்நிலையில், முதலில் தனி மனிதன் தன் தேசத்திலும், இரண்டாவதாக உலக அளவிலும், தன் அடிப்படைக் கடமைகளையும், உரிமைகளையும் அறிந்திருத்தல் தலையாய கடமையாகும்.

அமைதிக்கான கல்வியின் இயல்பு என்று ஆராய்ந்தோமானால் எதையும் மிகத் துல்லியமாக வரையறுத்துக் கூற இயலாது. ஏனெனில் அமைதிக்கு எந்த வழியும் இல்லை. அமைதிதான் வழி (There is no way to peace, Peace is the way). எனவே கல்வியானது அமைதியை வலியுறுத்தி, அமைதி இலலையேல் வாழ்வே இல்லை என்ற தத்துவத்தை மாணாக்கர்களுக்கு புரிய வைக்க வேண்டும்.

அமைதிக்கல்வியானது, அமைதி பற்றி அறியவும், அமைதிக்காகவும் கற்க வேண்டிய ஒன்றாகும். அமைதி பற்றிய கற்றல் முறை என்பது அறிவும் புரிந்து கொள்ளலும் எந்த அளவிற்கு அமைதிக்காகத் தன் பங்களிப்பை அளிக்கின்றன, அமைதியை குலைக்கச் செய்வது என்ன? சண்டையை வலுப்படுத்துவதும் நடத்துவதும் எது? ஆமைதிக்கான வழிதான்

என்ன? அந்த அமைதியைக் காக்க என் பங்கு அதில் என்ன? எப்படி பல்வேறு நிலைகளும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுகின்றன என்பனவற்றை விளக்குவதாகும்.

அமைதிக்கான கற்றல் முறை எனபது திறமைகளைக் கற்றுக்கொள்வது, சூழ்நிலைகளுக்கு ஏற்ற மனப்பான்மைப் பெறுவதற்கான கலையைக் கற்றுக் கொள்வது, மதிப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்குக் கற்பது. இவை அனைத்தும் ஒவ்வொரு மனிதனும் அமைதிக்காகத் தன்னாலான பங்கினை அளித்தல் பற்றி கற்றறிவது. (எ.கா.) சண்டைகளை எந்தவித வன்முறைகளும் இல்லாமல் எப்படி சமாதானப்படுத்தி விலக்குவது என்பதை அறிதல், ஆக்கப்பூர்வமான சிந்தனையை வளர்த்துக் கொள்ளக் கற்றல், வன்முறையற்ற அமைதியான வாழ்வை தானும் பிறரும் வாழ்வதற்கான வழிமுறைகளைக் கற்றல் போன்றவை ஆகும்.

## 3.4 அமைதிக் கல்விக்கான தேவை (Need for Peace Education)

உலகமயமாதல் மற்றும் தாராளமயமாதல், தீவிரப்படுத்தப்பட்டுள்ள இந்தக் காலக்கட்டத்தில் எல்லா நாடுகளுமே ஒன்றை ஒன்று சார்ந்திருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகி உள்ளது. கி.பி. 1992 ஆம் ஆண்டு உருகுவேயில் நடந்த உலக நாடுகளின் மாநாட்டில் கல்வி, வியாபார ஷரத்தாக ஏற்கப்பட்டது. இந்த உடன்பாட்டில், நம் அப்போதைய பிரதமர் வி.பி. சிங் அவர்கள் கையெழுத்திட்ட போது பிற ஒன்பது நாடுகளும் கையெழுத்திட்டிருந்தன. இதன் விளைவாக மற்ற நாடுகளில், நாம் நம் நாட்டின் பல்கலைக் கழகங்களை உருவாக்கி, அதில் நம் மாணவர்களையும் அந்தந்த நாட்டின் மாணவர்களையும் சேர்த்துக் கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டது. அதேபோல மற்ற நாடுகளும், பல்கலைக் கழகங்களை நம் நாட்டில் நிறுவவும், அதில் நம் மாணவர்களையும் பிற நாட்டு மாணவர்களையும் சேர்த்துக் கொள்ளவும் உரிமை வழங்கப்பட்டது.

இதனையே MFN அந்தஸ்து அதாவது Most Favoured Nation – அந்தஸ்து என்கிறோம். மட்டுமின்றி, நம் நாட்டில் வந்து கல்வி கற்கும் பிற நாட்டவரை, நம் நாட்டவரை போலவே முழுச்சுதந்திரமும் கொடுத்து, நட்புறவுடன் நடத்த வகை செய்யும் NT அந்தஸ்து அதாவது (National Treatment) நமக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்ட அனைத்து நாடுகளுமே இச் சுதந்திரத்தை அனுபவிக்கின்றன. இந்த ஒப்பந்தத்தின் மூலம், பல கோடி மக்களின் (மாணவர்கள், ஆசிரியர்கள், உயர்கல்வி அதிகாரிகள்) ஈடுபாடு நிறைந்ததும், பல கோடி வருமானத்தை அரசாங்கத்திற்கு ஈட்டித் தருவதுமான கல்வித்துறை, வணிகத்துறைகளுள் ஒன்றாக ஏற்கப்பட்டுள்ளது.

இத்ததைகய சூழ்நிலையில் பிற நாடுகளுடனான நட்புறவும் நல்லிணக்கமும் அத்தியாவசியமாகிறது மட்டுமின்றி, பிற நாட்டு மாணவர் பலரும் வந்து நம் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்க ஈர்க்கப்படும்படி, நம் கல்வி, சுகாதார, கலாச்சார மற்றும் பண்பாட்டினை மேம்படுத்த வேண்டிய கட்டாயச் சூழலில் நாம் உள்ளோம். நம் மாணவர்கள் ஏராளமானோர் மேற்படிப்புக்காக மேலை நாடுகள் பலவற்றில் சென்று தங்கியுள்ளனர். வேலை தேடி மத்திய கிழக்கு மற்றும் மேலை நாடுகளில் நம்மவர் அதிக எண்ணிக்கையில் சென்று அடைக்கலம் புகுந்துள்ளனர்.

நம் இந்திய நாட்டின் கலாச்சாரத்தை விரும்பியும், நம் நாட்டவரின் அயரா உழைப்பு, நன்றி மறவாப் பண்பு மற்றும் விடா முயற்சியை பயன்படுத்திட எண்ணியும் வட அமெரிக்க நாடுகள் தங்கள் கணினித்துறை வேலைகள் பலவற்றை நம் நாட்டு நிறுவனங்களிடமும், தனி நபர்களிடமும் கையளித்து உலகமயமாதலைத் துரிதப்படுத்தி உள்ளது. இதனால் நம் நாட்டவரின் பொருளாதார நிலையும் உயர்ந்துள்ளது. உலக நாடுகளுடனான நல்லிணக்கமும் சமூக உறவும் அத்தியாவசியம் என்ற சூழலில் அமைதிக்கல்வி மிகவும் இன்றியமையாத ஒன்று என்பது புலனாகிறது.

## 3.5 அமைதிக் கல்வியின் நோக்கங்கள் (Aims of Peace Education)

- உலக சமாதானத்தை நிலைநிறுத்துதல்.
- போர் மற்றும் போரினால் வரும் பேரிழப்புகளைத் தவிர்த்தல்.
- இயற்கை பேரழிவுகளினால் ஏற்படும் இழப்புகளை சீரமைக்க பன்னாட்டு உதவிகளுடன் சேர்ந்து செயல்படுதல்.
- அனைத்து உயிர்களுடனும் நல்லுணர்வுடன் வாழ, வழிவகுத்தல்.
- இயற்கைச் செல்வங்கள் மாசுபடாமல், நீண்ட காலம் நிலைக்கச் செய்தல்.
- மனித இனத்தின் நல் வாழ்வினை செழிக்கச் செய்தல்.
- வெவ்வேறு வளங்களும் வெவ்வேறு தொழில்நுட்ப வளர்ச்சிகளும், உடைய பல்வேறு நாடுகளுடன் பொருந்தி இணங்கி செயல்படுவதால் நம் நாட்டின் முன்னேற்றத்திற்கும் வாழ்விற்கும் வழிவகுத்தல்.
- இந்த 21 ஆம் நூற்றாண்டில், திறன் வாய்ந்த இளைஞர்கள் பலருக்காக உலகம் காத்திருக்கிறது. பல துறைகளில் தொழில் நுட்ப அறிவும் திறனும் மிக்க துடிப்புள்ள இளைஞர்கள் பலர் தேவைப்படுகின்றனர். நம் நாட்டில், தற்போது நாற்பது மில்லியன் எண்ணிக்கையிலான இருபத்தைந்து வயதிற்கு உட்பட்ட வாலிப மாணவ மாணவியர் உள்ளனர்.
- கி.பி. 2050 ஆம் ஆண்டு வரை இந்த எண்ணிக்கை தொடர்ந்து கூடும். இவர்களுக்கு சிறப்புத் திறன்களில் பயிற்சி அளித்து உலகளாவிய அளவில் உயர்ந்து நிற்கச் செய்ய நம் கல்வித்துறை உறுதி ஏற்றுள்ளது. இவர்கள், தாங்கள், செல்லப் போகும் நாடுகளில், அரசாங்கத்திடமும், நாட்டவரிடமும், நட்புறவுடன் பழக, பள்ளிப் பருவத்தில் இருந்தே அவர்களிடம் உலக அமைதிக்கான வித்தை ஊன்றுதல்.
- உலக மனப்பான்மை மற்றும் உலக நல்லுணர்வை வளர்த்தல் ஆகியன அமைதிக்கான கல்வியின் நோக்கங்கள் ஆகும்.

## 3.6 அமைதிக் கல்வியின் குறிக்கோள்கள் (Objectives of Peace Education)

- UNESCO, உலக நாடுகள், உலக பண்பாடுகள், உலக சமுதாயங்கள், உலகக் கலைகள், உலக நாட்டுக் கவிதைகள், உலகின் இயற்கை வளங்கள் போன்றவை பற்றிய உலகளாவிய அறிவைப் பெறச் செய்தல்.

- ❖ எந்த நாடும் இனி ஒன்றை ஒன்று சார்ந்து வாழும் என்பதை உணரச் செய்தல்.
- ❖ மற்ற நாடுகளின், மக்கள் வாழ்க்கை முறை மற்றும் பண்பாடுகளை மாணவர் அறியச்செய்தல்.
- ❖ மனித இனத்தின் நம்மைக்கே உலகம் உள்ளது என மாணவர் உணரச் செய்தல்.
- ❖ உலக அமைதிக்கு ஒவ்வொரு தனி மனிதனும் பொறுப்பு என உணரச் செய்தல்.
- ❖ உலகப் பிரச்சினைகளிலும் உலக நடப்புகளிலும் மாணவர் அக்கறை கொள்ளச் செய்தல்.
- ❖ போரினால் ஏற்படும் இழப்போடு ஒப்பிடும்போது அமைதியின் வெற்றி மிகவும் பலம் வாய்ந்தது என்பதைச் சுட்டிக் காட்டுதல்.
- ❖ உலக நாடுகளுக்கு, தனித்தன்மை இருந்தாலும் உலகளாவிய பொதுத் தன்மையும் உள்ளதெனக் காட்டுதல்.
- ❖ சுயமாகச் சிந்திக்க மாணவரை ஊக்குவித்தல்.
- ❖ தாய்மொழியோடு பிறமொழிகளையும் கற்க ஊக்குவித்ல்.
- ❖ உலகக் குடிமகனாக வாழப் பழக்குதல்.
- ❖ ஆராய்ந்து பகுத்தறிந்து, முடிவெடுக்கப் பழக்குதல்.
- ❖ பொய்யான விளம்பரங்களாலும், பொய்யான செய்திகளாலும் பாதிப்படையாத திறனை அடையச் செய்தல்.
- ❖ நல்ல புத்தகங்களை நாடி கற்கும் மனப்பாங்கை உருவாக்குதல்.
- ❖ தன்னையும் தன் நாட்டையும் உலக அரங்கில் மேன்மையுறச் செய்வதில் ஆர்வமூட்டல்.

  ஆகியன அமைதிக் கல்வியின் குறிக்கோள்கள் ஆகும்.

**தேசிய ஒருமைப்பாட்டிற்கான குறிக்கோள்கள்:**

மாணவர் ஓர் உலகக் குடிமகனாக உருவாக்கப்படும் அதே நேரத்தில் ஒழுக்கமுள்ள ஒரு இந்தியக் குடிமகனாகவும் உருவாக்கப்படுதல் அத்தியாவசியமாவதுடன், அது உலக அமைதிக்குப் போடப்பட்ட ஒரு சரியான அடித்தளமாகவும் அமைகிறது. தேசிய ஒருமைப்பாட்டை ஊட்டுதல் இதற்கு உதவும். தேசிய ஒருமைப்பாட்டிற்கான குறிக்கோள்களைக் காண்போம்.

- ★ சுதந்திரத்திற்குப் பின் இந்தியா எதிர் கொண்ட சமூக சவால்களைத் தெரிந்து கொள்ளச் செய்தல்.
- ★ இந்தியாவின் சமூக சமுதாய முன்னேற்றத்திற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைக் கற்றறியச் செய்தல்.
- ★ தீண்டாமை ஒழிப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் புரியச் செய்தல்.
- ★ சுதந்திரம் அடைந்தது முதல் இன்று வரை ஏற்பட்ட சமூக முன்னேற்றம் பற்றி அறியச் செய்தல்.
- ★ சமூக மற்றும் கல்வி வளாச்சியினால் ஏற்பட்ட தாக்கங்களைக் கற்று அறியச் செய்தல்.

★ திட்டமிடலின் நோக்கங்கள் மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றிய அறிவினைப் பெறச் செய்தல்.

★ தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்றால் என்ன? இவற்றில் இந்தியாவின் பங்கு என்ன? ஏன தெரிந்து கொள்ளச் செய்தல்.

★ கூட்டாட்சி பற்றிய அறிவினைப் பெறச் செய்தல்.

★ இந்தியக் கூட்டாட்சி அமைப்பின் தன்மையைத் தெரிந்து கொள்ளச் செய்தல்.

★ மத்திய மாநில அரசுகள், யூனியன் பிரதேசங்களுக்கு இடையிலான உறவினைப் புரிந்து கொள்ளச் செய்தல்.

★ கூட்டாட்சி அரசின் அம்சங்களைத் தெரிந்து கொள்ளச் செய்தல்.

★ சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சிகளைப் புரிந்து கொள்ளச் செய்தல்.

★ மத்திய நிர்வாக, சட்டமன்ற, நீதித்துறை அங்கங்களின் அதிகாரங்கள், பணிகளைப் பற்றி புரிந்து கொள்ளச் செய்தல்.

★ குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத்தலைவர், பிரதம அமைச்சர் ஆகியோர் தேர்வுக்கான தகுதிகளைப் பற்றி அறியச் செய்தல்.

★ நாடாளுமன்றத்தின் அதிகாரம் மற்றும் பணிகளைப் பற்றி தெரிந்து கொள்ளச் செய்தல்.

★ இந்திய உச்ச நீதிமன்றம் செயல்படும் விதத்தைப் புரிந்து கொள்ளச் செய்தல்.

★ மாநில அரசு செயல்படும் விதம் பற்றிய அறிவைப் பெறச் செய்தல்.

★ மாநிலத் தேர்தல் ஆணையம் மற்றும் இந்தியத் தேர்தல் ஆணையம் பற்றி தெரிந்து கொள்ளச் செய்தல்.

★ தேர்தல் முறைகள் மற்றும் மக்கள் பிரதிநிகளின் பங்கினைப் பற்றி புரிந்து கொள்ளச் செய்தல்.

★ குடியுரிமைக்கு உரிய தகுதிகள் மற்றும் வாக்காளரின் கடமைகளைத் தெரிந்து கொள்ளச் செய்தல் என்பனவாகும்.

★ விடுமுறை நாட்களிலும், வேறு பொறுப்புகள் எதுவும் இன்றி இருக்கும் நாட்களிலும், இளைஞர் மற்றும் முதியோரைத் தன்னார்வத் தொண்டுகளில் ஈடுபடத் தூண்டுதல்.

★ சமுதாய முன்னேற்றத்தை ஊக்குவிக்கவும், தங்கள் சமுதாய ஏற்றங்களுக்கென்று, அச்சமுதாயத்தைச் சேர்ந்தோரையே, ஈடுபாடு கொள்ளச் செய்தல்.

★ நாட்டின் பல்வேறு பாகங்களைச் சேர்ந்த வாலிபர்கள், தங்கள் அனுபவங்களை, பிறநாட்டு வாலிபருடன் பகிர்ந்து கொள்வதற்கான, வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.

★ உலக நட்புறவு மற்றும் உலக நாடுகளுடன் இணைந்து செயல்படுத்தலின் முக்கியத்துவத்தை உணர்த்துதல்.

★ இளம் சமுதாயத்தினர், பல்வேறு நாடுகளின் கலாச்சாரங்களைப் புரிந்து, மதிக்கச் செய்தல்.

★ சமாதான சமநிலை, ஜனநாயக அணுகுமுறை, உலக நட்புறவு இவற்றை நோக்கமாகக் கொண்டு செயல்படச் செய்தல்.

## 3.7 பல்வேறு நிலைகளில் அமைதிக்கல்வி (Peace Education at Different Level)

கல்வி நிலையை மூன்று நிலைகளாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. தொடக்க நிலைக் கல்வி (Primary Level of Education)
2. உயர் நிலைக் கல்வி (Higher Level of Education)
3. கல்லூரி நிலைக் கல்வி (College Level of Education)

ஒவ்வொரு நிலைகளிலும் வழங்கப்படும் அமைதிக் கல்வியை சற்று விரிவாகக் காணலாம்.

### 1. தொடக்க நிலைக் கல்வி (Primary Level of Education)

தொடக்க நிலைப் பள்ளி மாணவர்களின் வயதானது 6 லிருந்து 11 வயது வரை இருக்கும். இவர்களிடம் நாம் உயிரின வாழ்க்கை பற்றிய எண்ணங்களும், வாழ்க்கைக்கான கண்ணியங்களும் (Ecological thinking and respects for life) பற்றி கற்பிக்க வேண்டும். மனித இனம் இவ்வுலகின் கண் வளமும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்க்கை நடத்த அமைதி இன்றியமையாத ஓர் அடித்தளமாகும். நாட்டின் அமைதி உலக அமைதிக்கு முதற்படி. உலக அமைதிக்கு ஒரு கருவியாக இயங்க வேண்டிய கல்வி, நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் வழிவகுத்து நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவி படிப்படியாக நாடுகளிடையே நல்லுணர்வினை வளர்க்கும் வலுமிக்க கருவியாக அடைதல் வேண்டும். இத்தகைய பண்பட்ட மனங்களை உருவாக்கும் கருவியாகக் கல்வி அமைதல் வேணடும். மாணாக்கரிடையே பரந்த மனப்பாங்கினைத் தோற்றுவித்துப் பிற நாட்டினைப்பற்றிய உண்மையறிவை அளித்து, சமூகப் பிரச்சனைகளில் உணர்ச்சி வயப்படாமல் நேர்சிந்தனை வழியே உண்மை நிலையை உணர்ந்து செயல்படும் மனப்பக்குவம் ஆகியவற்றைக் கல்வி தோற்றுவிக்க வேண்டும்.

தொடக்க நிலைப் பள்ளி மாணவர்களுக்கு இலக்கியம், வரலாறு, புவியியல் பாடங்கள் மூலமாக பலவித மனித சூழல்களைக் குறித்த கலந்துரையாடல் நடத்த வேண்டும். பொறுமையினால் வரும் பலன்களைக் குறித்த கதைகளை விவரித்துக் கூறவேண்டும். குடும்ப ஒற்றுமையைக் குறித்தான (கூட்டுக்குடும்ப) வரைபடத்தை மிருகங்களின் வாழ்க்கைக் காட்சியாக (குடும்பமாக) வரையச் செய்தல். சமய நம்பிக்கை குறித்தான தியானம் செய்ய பயிற்சி அளிக்க வேண்டும். சமுதாய திட்ட வளர்ச்சி குறித்தான செயல்திட்டங்கள் ஏழை மக்களின் வாழ்வு நிலைக்கு உதவுதல், கிராமத்தை சுத்தம் செய்தல், மரம் நடுதல், மருத்துவ மனைகளுக்குச் சென்று நோயாளிகளை கவனித்தல்.

### 2. உயர் நிலைக் கல்வி (Higher Level of Education)

உயர் நிலைப் பள்ளி மாணவர்களின் வயதானது 12 லிருந்து 16 வயது வரை இருக்கும். இவர்களிடம் நாம் சகிப்புத்தன்மை, மனித உரிமைகளை மதித்தல், திறனாய்வுடன் சிந்தித்தல், அஹிம்சை வழி செயல்படுதல் போன்ற பண்புகளை கற்பிக்க வேண்டும். மனிதர்களின் பிரச்சனைகளை சகிப்புத் தன்மையோடு எதிர்கொள்ளல் அல்லது பதிலளித்தல்.

வழிபாடுகளில் தியானங்களில் பயிற்சி அளிக்க வேண்டும். அஹிம்சையை மதித்து வன்முறையை வெறுக்க கற்றுக் கொடுக்க வேண்டும். பிறருடைய உணர்வுகளை மதிக்கவும் உயிர்களிடத்தில் கருணை காட்டவும் பொறுத்து மன்னிப்பதால் விளையும் பயன்களை அனுபவிக்கக் கற்றுக் கொடுக்கவேண்டும். மனிதம் நிறைந்த மனிதனை இயற்கையோடு ஒன்றிணைந்த செயல்பாடுகள் கல்வியின் முதலும் முடிவுமான நோக்கமாகும். இயற்கையோடு ஒன்றி வாழும் தியான நிலை, நடைமுறை அறமாகும் கல்விச் செயல்பாடுகள் மூலம் உயிர்களை மதித்து நடத்தல், மனிதர்கள், பறவைகள் விலங்குகளுக்கு தீங்கு செய்யாதிருத்தல், விலங்குகளைக் கல்லால் அடித்தல் கூடாது. இயற்கை தரும் மரம் செடி கொடிகளைப் பேணிக் காப்பதால் மழை வளம் பெருகும். இயற்கைச் சீற்றங்களில் இருந்து பாதுகாக்க மண்ணரிப்பைத் தடுக்க புல் பூண்டுகளை வளர்த்தல் அவசியம் வீட்டிற்கு ஒரு மரம் வளர்த்தால் நாட்டிற்கு நலம் கிட்டும்.

வாழ்க்கை வாழ்வதற்குத்தான் அந்த வாழ்க்கையும் தெளிந்த நீரோடை போல் அமைவதும், அமைத்துக் கொளவதும் அவரவர் கைகளில் தான் உள்ளது. ஆனால் மனிதன் என்னடா பெரிய வாழ்க்கையென மனம் வெதும்பி அர்த்தமற்றதாகக் கருதினால் அவன் மன நிம்மதியை இழப்பதோடு வாழ்வதற்கே தகுதியற்றவனாகிறான். இந்நிலை மாணவர்களின் தன்னிலையை உயர்த்தி திறமையை உறுதி செய்து ஆக்கச் செயல்களில் ஈடுபடச் செய்ய வேண்டும். நல்லெண்ணங்களை வளர்த்து எதிர்கால வாழ்க்கைக்குத் தயார் செய்து கொள்ள வேண்டும். காலை தியான கூடுகை வேளையில் எல்லோருக்கும் உயர்ந்த கருத்துக்களை சொற்பொழிவாகக் கூறச் செய்ய வேண்டும். தியாகத்தோடு பாடுபட்ட புத்தர், ஏசுபிரான், மகாத்மா காந்தி, ஆபிரகாம் லிங்கன், அன்னை தெரசா போன்றோர்களின் சொற்பொழிவுகளை வாழ்வில் நிகழ்த்திய சாதனைகளை எடுத்துக் கூறவேண்டும். இந்திய வரலாற்றுச் சிறப்புமிக்க மனிதர்களை நேரில் அழைத்து அவர்களின் அறிவுரை ஆலோசனைகளை மாணவர்கள் கேட்கும்படிச் செய்ய வேண்டும். கண்காட்சி, படைப்புத் திறன்களை வெளிப்படுத்தும் கவிதை, கட்டுரை, சிறுகதை, ஓவியப் படைப்புகளை வகுபபறையில் அமைத்து மாணவர்களை ஊக்குவிக்கவேண்டும்.

### 3. கல்லூரி நிலைக் கல்வி (College Level of Education)

கல்லூரி நிலை மாணவர்களின் வயதானது 17 லிருந்து 23 வயது வரை இருக்கும். இவர்களிடம் நாம் சமூக நீதி, குடிமைப்பொறுப்புகள், தலைமைப்பண்பு, உலகக்குடியுரிமை பற்றிய அறிவு, நடைமுறை பழக்கவழக்கங்கள், திறமைகள் போன்றவற்றை வகுப்பறைச் செயல்பாடுகள் மூலம் வளர்க்க வேண்டும். சமூக முன்னேற்றத்தினைக் கொண்டு வருவதில் கல்வியின் பங்கு வலிமை வாய்ந்ததாகும். கல்வி, ஒருங்கிணைந்த சமூக வளர்ச்சியைக் கொண்டுவர உறுதுணைப் புரிகின்றது. கல்விக் கலைத்திட்டத்தில் கூடி வாழ்ந்தால் கோடி நன்மை, சமாதான வாழ்வு பெற கூடி வாழ்தல், கூட்டுறவு நாட்டுயர்வு, கூடி குழுவாகத்

தீர்மானித்தல், குழுக் கற்பித்தல், பொறுப்பு வளர்த்தல், குழு மூலம் வளமடைதல் போன்றவற்றை இணைக்கவேண்டும். இன்றைய காலகட்டத்தில் பிரிவினைவாதங்கள் போராட்டங்களையும், போர்களையும், அழிவுகளையும் தோற்றுவிக்கின்றன. மத சம்பந்தமான பிரிவினைகள் மனிதனுக்கு மனிதன் வன்முறையைத் தூண்டுகின்றன. கல்வியில் கற்றல் கற்பித்தலில் இணைந்து செயலாற்றும் பொழுது உலக மக்களிடையே மதிப்புகள் உயர்கின்றது. பண்பாடு கலாச்சாரம் சமயக் கொள்கைகள் அடையாளம் காணப்பட்டு மூட நம்பிக்கைகள் களையப்படுகின்றன. இயந்திர யுகத்தில் தகவல் தொடர்புகள் கணினி சாதனங்களால் உலகம் சுருங்கி, ஒரு கிராமமாக வருகின்றது.

மனிதன் சில நொடிப் பொழுதில் பிற நாட்டினரோடு தகவல் பரிமாற்றம் செய்யக் கூடிய வசதிகள், இருக்கும் இடத்திலிருந்து வசதிகளைப் பெற்று வாழும் நிலை இன்றைய நிலை. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற கனியன் பூங்குன்றனாரின் கருத்துப்படி, சகோதரத்துவத்துடன் வாழாவிட்டால், மலைவாழ் ஆதிவாசிகள் போல் ஒதுங்கி, குகைகளில் பதுங்கிக் கொண்டு வாழும் நிலை ஏற்படும். அழிவின் விளிம்பிற்கு ஒருவரையொருவர் இழுத்துச் செல்லும் நிலை இனி ஏற்படலாம். எனவே கல்வி மூலமே உலக மக்கள் யாவரும் ஒரே குடும்பமாக படிப்படியாக எதிர்கால நோக்கில், தேசம் சாதி ஆகிய ஒழுங்கு முறைகளைத் தகர்த்து ஒட்டு மொத்தமாக கூட்டுறவுடன் பகிர்ந்து, பிரிவினையின்றி இணைந்து வாழ்ந்தால் உலகில் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மன அமைதி உண்டாகும். பிரிவினைகள் கல்வியில் ஏற்படாமல் இணைந்து கற்பதால் நாட்டுக்கு நாடு மனித வளம் பெருகும் ஆற்றல் உயரும், உற்பத்தியும் அதிகரிக்கும், இடப்பற்றாக்குறை அகலும், ஜனத்தொகை நெருக்கமும் கட்டுப்படும் என்பது உறுதி.

வாழ்க்கையில் குழுவாக குடும்பத்திலும் கல்வித் தளத்திலும், பணியிடங்களிலும் சேர்ந்து பணியாற்றினால், எல்லா நிலைகளிலும் பணியிடங்களிலும் வீடும் நாடும் உலகமும் முன்னேறும். ஒருவரையொருவர் புரிந்து கொண்டு பணியாற்றும் பொழுது கற்றல் கற்பித்தலில் சுமுகமான மன அமைதி கிட்டும். மாணவனது எதிர்காலம் வகுப்பறையில் தீர்மானிக்கப்படுகின்றது என்ற கூற்றிற்கு ஏற்றாற்போல் ஆசிரியர்கள், மாணவர்களிடையே குழு மனப்பான்மையினை ஏற்படுத்தி கல்வியின் இலக்கினை, நல் வாழ்வின் குறிக்கோளை எட்டிப்பிடிக்க சாதனை ஆற்ற வேண்டும். இணைந்து கற்பிக்கும் செயல்பாடுகளினால் சுமுகமான உறவு குழுக்களிடையே ஏற்பட்டு சாதனையாளர்களாக மாணவர்கள் விளங்க வழி உண்டாகிறது.

மாணவர்களிடம் தலைமை தாங்கி வழி நடத்துதல், கூட்டுறவுடன் ஒருவரையொருவர் சார்ந்து விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் இணைந்து கற்றல், படைப்பாக்கத்திலும் நடத்தையிலும் பங்கு பெறுவதில், உயர்ந்த தரத்தைக் கடைப்பிடித்தல், ஒருவரையொருவர் மதித்தல், புகழ்தல், பாராட்டுதல், உற்பத்திப் பொருட்களை உருவாக்குதல், ஏற்றுக் கொள்ளல், தீர்மானித்தல், பங்காளர்களோடு இணக்கமான தீர்வு காணல், ஒழுங்கான கூடுகை மூலம் திட்டங்களை தீட்டி மதிப்பிடுதல் வழிப்படுத்தி நெறிப்படுத்தல், சட்ட திட்டங்களுக்குக்

கீழ்படிதல், சமூகச் சூழலுக்கேற்றாற் போல் தன்னை ஆயத்தப்படுத்தல், எண்ணங்களை உணர்வுகளை தீர்வுகளை ஏற்று நடத்தல், தலைமைக்கு இணங்கிப் போதல், எல்லா சூழ்நிலைகளிலும் விட்டுக் கொடுத்து சகிப்புத் தன்மையோடு செயலாற்றும் திறனை வளர்க்க வேண்டும். மாணவர்களை ஒன்று கூட்டி, சமுதாயக் கூடத்தில் உருவ மாதிரிகளை அமைத்து வகுப்பறைப் பள்ளி நிர்வாகப் பொறுப்புகள் ஆகியவற்றில் பங்கு பெறச் செய்தல். மாணவர்களை பாதிக்கக் கூடிய நிகழ்வுகள் கொள்கைகள் குறித்து மாணவர்கள் குழு அமைத்து நிர்வாகத்துடன் இணைந்து வேலை செய்தல். புதிய முறைகளை கற்பித்தலில் கண்டுபிடிக்கவும் ஆசிரியர்களை ஊக்குவித்து அம்முறைகளை வகுப்பறையில அறிமுகப்படுத்துதல். பள்ளியில் மாணவர்களுக்கு கூடுதல் பொறுப்புகள் கொடுத்து விளையாட்டு, அறிவியல், நடனம், நாடகம், சொற்பொழிவு இசை, பரத நாட்டியம், ஓவியம் போன்ற கலைகளில் பயிற்சி கொடுத்து போட்டிகள் மற்றும் கண்காட்சிகளில் அவர்களை ஈடுபடுத்தி மாணவர்களின் திறமைகளை வளர்த்தல்.

## 3.8 இன்றைய காலகட்டத்தில் அமைதிக் கல்வியின் முக்கியத்துவம் (Importance of Peace Education in the Present Scenario)

அமைதிக் கல்வி என்பது பொதுக் கருத்துக்கள் சார்ந்த கொள்கைகளின் தொகுப்பேட்டுப் பணி என்றால் மிகையாகாது. இந்த உன்னதப் பணிக்கு திட்டமிட்டு செயலாக்கம் தருவதுடன், ஒட்டு மொத்த மதிப்புகளையும், நீடித்து நிலைத்திருக்கும் நல்ல மனப்பான்மையினையும், பல்வேறு திறமைகளும் நன்கு வளர்ச்சியடைந்து ஒரு நல்ல குடிமகன்களாக மாணாக்கர்களை உருவாக்குவதோடு நில்லாமல், அவர்களை பேரும் புகழும் அமையச் செய்து, எந்த ஒரு நல்ல காரியங்களும் உலக அமைதிக்கும் ஊன்றுகோல்களாக செயல்படுவதில் ஆலம் விழுதுகளாகவும் சுறுசுறுப்புடன் தொய்வின்றி வேலைகளைச் செய்து முடிப்பதில் தேனீக்களாகவும் உருவாக்குவதில் முதன்மை இடம் வகிப்பவை பள்ளிகள் தான். ஆம் மாணாக்கர்களிடையே அன்பு, பாசம், பற்று, நேர்மை, அடக்கம், பொறுமை, அழகுணர்வு போன்ற இன்னபிற சிறந்த பண்புகளை பிஞ்சு மனங்களிலேயே விதைத்துப் பயிர் செய்வதும் அதன் பொறுப்பும் நல்லாசிரியர்களைக் கொண்டுள்ள பள்ளிகளால் தான் முடியும். ஏனெனில் கடந்த 50 வருடங்களாகத்தான் வன்முறையற்ற, மனதிற்கு இதமான அமைதியைத் தேடி அலைகின்றோம். நமது முயற்சிக்குக் கிடைத்த பலனாக நாம் தேடிக்கொண்டிருந்த அமைதி நம் மக்களின் ஒற்றுமை மூலம் நிலவுகிறது. இது நீடிக்க வேண்டும் என்பது தான் நம் அனைவரின் விருப்பம்.

எனவே நாம் பின்பற்றி வரும் கலைத்திட்டத்தில் அமைதிக்கல்வியின் பல்வேறு வடிவங்கள் ஆங்காங்கே புலப்படுகின்றன. அவை தேசிய ஒருமைப்பாடு, சமுதாய நிலை, குடும்ப நிலை, கிராமங்களின் நிலை, அருகினில் வாழ்வோர் என பல்வேறு நிலைகளில் காணப்படுகின்றன. இந்தியா என்னுடைய நாடு, இந்திய மக்கள் அனைவரும் என்னுடைய சகோதர சகோதரிகள், என் தாய்த்திரு நாட்டை நான் மிகவும் நேசிக்கின்றேன், என் இந்திய நாட்டின் வளங்களையும், அதன் பல்வேறு பாரம்பரியப் பண்பாடுகளையும் எண்ணிப் பெருமிதம்

கொள்கிறேன் என்ற உறுதி மொழியை மாணக்கர்கள் மனதில் பதியச் செய்து, நமது செல்வம் கொழிக்கும் நாட்டில் அமைதியை நிலை நாட்ட வருங்கால மன்னர்களாகிய மாணவச் செல்வங்களை உருவாக்குவது ஒவ்வொரு பள்ளியின் கடமையாகும். நம்நாட்டின் செல்வச் செழிப்பைக் கண்டு வியாபார நோக்கில் உட்புகுந்த மேலை நாட்டினரோடு நம்மவரை விழிப்படையச் செய்யும். நல்ல நோக்கோடும் சில மேலை நாட்டுத் தொண்டு நிறுவனங்களும் உள் நுழைந்தன. அவற்றின் மூலம் தொண்டு செய்த சமயப் பரப்புக் குழுக்கள் முதன் முதலாகச் செய்ததெல்லாம் கல்வி நிறுவனங்களைத் துவங்கியது தான். இதன் முழு முதற்காரணம் என்னவெனில் கல்வியின மூலம் தான் எந்த ஒரு முழுமையான மாற்றத்தையும் சமுதாயத்தில் கொண்டு வர இயலும்.

உலகில் அமைதி நிலவ வேண்டுமானால் நாடுகளிலும் நாடுகளுக்கு இடையேயும் அமைதி நிலவ வேண்டும். பிற உலக நாடுகளுடன் நல்லிணக்கத்துடனும், நல்லுறவுகளுடனும் வாழ்ந்தால் தான் அமைதி மலர முடியும். இதற்கு அடித்தளமாக கல்வியில் அமைதிக்கு இடங்கொடுக்க வேண்டும். அமைதிக் கல்வியை கல்வி ஏற்பாட்டிலும், கலைத்திட்டத்திலும் கொண்டு வர வேண்டும். தனி மனித அமைதி சாத்தியமாகும் போது சமுதாயத்தில், நாட்டில், உலகில் என அமைதி படிப்படியாக முன்னேறும். அமைதி என்பது பிறரை தன்னைப் போல் நேசிப்பது, மற்றவர்களை தங்களைக் காட்டிலும் மேன்மை உள்ளவர்களாக எண்ணி, கனம் பண்ணுவது போன்ற மனித நேய உணர்வுகளால் ஒரு தனி மனிதனின் உள் மனதிலிருந்து தோன்றும் ஒரு பண்பே ஆகும். மாணாக்கர்களின் உள்ளத்தில் இந்தப் பண்பை விதைத்து, அவர்களை மாண்புடையவர்களாக மாற்றுமாறு அமையும் கல்வியே அமைதிக்கல்வி எனலாம். முன்பு கூறப்பட்டது போல, அமைதிக் கல்விக்கென தனி ஏற்பாடு கலைத்திட்டம் அமைக்கலாம் அல்லது அமைதிக்கான பயிற்சிகளை தற்போது உள்ள பாடங்களிடையே சேர்க்கலாம்.

ஆக தனி மனித அமைதியே உலக அமைதிக்கு வழிகோலும் என்பதால், இளமை முதல் அமைதிக் கல்வி மூலம் வித்திட சரியான பருவம் என்பதாலும், அமைதிக் கல்வியைப் பள்ளித் திட்டத்தில் இணைத்தல் வலியுறுத்தப்படுகிறது. எனவே தனி மனிதன் சீர்பெற, அவனது சிந்தையும் சீர் பெற வேண்டும். மன நலமே மனித மாண்புக்கு மிகவும் அவசியம் என்பது தெளிவாகிறது.

## 3.9 மனப்போராட்டத்திற்கு தீர்வுகாணுவதற்கான பயிற்சி அமைதிக் கல்வி (Peace Education as Conflict Resolution Training)

''நமது இன்றைய மாணவச் செல்வங்கள் வருங்கால இந்தியாவைத் தாங்கி நிற்கும் தூண்கள்'' என நமது முன்னாள் பாரதப்பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் கூறியுள்ளார். அப்படிப்பட்ட மாணவர்களை இதமாகப் பதமாக, அவர்கள் மனதில் எந்த ஒரு சிறு பாதிப்பும் ஏற்படாத வண்ணம் பாதுகாக்க வேண்டியது நமது பொறுப்பு. ஆனால் இன்றைய சூழ்நிலையில் பொருளாதாரப் பிரச்சனைகள், கட்டுப்பாடற்ற வாழ்க்கை, நகர நெருக்கடி,

தரக்குறைவான திரைப்படங்கள், வாழ்க்கைக்குப் பொருத்தமில்லா கல்வி முறை, அரசியல் குறுக்கீடு, பெற்றோர்களின் ஒத்துழையாமை முதலியன மாணவர்களிடையே மனப் போராட்டங்களை ஏற்படுத்தும். இதன் தன்மை அறிந்து இவற்றைத் தூய்மைப்படுத்தி, வெளிப்படுத்துவதே சாலச் சிறந்தது. மன நலத்தைக் காப்பதில் தற்காப்பு நடத்தைகள் பெரும்பங்கு வகிக்கிறது. இதனை ஆசிரியரும் மாணவரும் அறிந்திருந்தால் வீண்சச்சரவுகள் மாணவர் சமுதாயத்தில் எழுவதைத் தடுக்கலாம். பல்வேறு சூழ்நிலையில் நாம் எடுக்கும் எல்லாக் காரியத்திலும் தோல்வியே ஏற்படுகிறது. இதனால் மனமுறிவு ஏற்படுகிறது. இத்தகைய மன முறிவானது அமைதியின்மையையும் மன இறுக்கத்தையம் ஏற்படுத்துகிறது. ஆகவே, ஏதேனும் ஒன்றில் நாம் பொருத்தமுள்ளதைத் தேர்ந்தெடுத்து அதில் முழு மூச்சுடன் செயல்பட்டால் கூட தோல்வியைத் தழுவும் நிலை. இதுபோன்ற சூழ்நிலைகளில் இருந்து தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள தற்காப்பு நடத்தைகள் பயன்படுத்தப்படுகின்றன. இதனை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. தற்காப்பு நடத்தை
2. பொருத்தப்பாட்டு நடத்தைகள்
3. தப்பித்துக் கொள்ளும் நடத்தைகள்

இந்நடத்தைகள் பெரும்பாலோரிடம் காணப்படலாம். ஒவ்வொருவரும் ஒரு குறிக்கோளுடன் தான் செயல்படுகிறார்கள். சிற்சில சமயங்களில் நாம் எண்ணுவதை செயலாற்ற முடியாமல் மன முறிவு மன அதிர்ச்சி உண்டாகலாம். அச்சமயங்களில் அந்த தற்காப்பு நடத்தைகள் மன அதிர்ச்சியை ஈர்த்துக் கொள்கின்றன. மேலும் தோல்வியினால் ஏற்படும் அதிர்ச்சிகளைக் குறைத்து உயிரியின் உள் உடலமைப்பில் சம நிலையை உண்டுபண்ணும். மன இறுக்கம் ஏற்படும் போது இந்த தற்காப்பு நடத்தைகள், அதனைக் குறைக்காவிடில் ஒருவன் உள நோயாளியாக மாறுவதற்கும் வாய்ப்புகள உண்டு. எனவே மாணவச் செல்வங்களின் மனதைப் பண்படுத்த ஏற்ற வீடு மற்றும் பள்ளிச் சூழல்கள், பெற்றோரின் அன்பான அரவணைப்பு, பள்ளி ஆசிரியர்கள், மாணவர்களின் குணம் அறிந்து, திறமை அறிந்து பரிவுடன் அணுகும் முறை, மாணாக்கர்களைக் கவரும் அளவிற்கான கல்வி ஏற்பாடு, தேவையான சுதந்திரம் ஆகிய அனைத்தையம் ஒருங்கே அமைக்கப்பெற்ற அமைதிக் கல்வி மாணாக்கர்களின் மனப்போராட்டத்திற்கான சிறந்த தீர்வுகள் ஆகும்.

## மாணவர்களிடையே மனப்போராட்டங்களைக் குறைப்பதற்கான தீர்வுக்கான பயிற்சி (Resolution Training for Reducing Conflicts among Students)

சைக்கோதெரபி (Psychotherapy) எனப்படுவது மனநோய் பற்றி உளவியல் வாயிலாக ஆராய்ச்சி செய்த மருத்துவர் கையாளும் முறை. இவர்கள் மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்றவர்கள் அல்ல. அவர்கள் நோயாளிகளுக்கு மருந்து கொடுக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். அதற்கான பிரத்தியேக மருத்துவர் உள்ளனர். சைக்கோதெரபிஸ்ட் (Psychotherapist) பாதிக்கப்பட்டவரிடம் கலந்துரையாடி, நல்லுறவை

நிலைநாட்டி அவர்களுடைய கடந்த கால வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளை அலசி ஆராய்ந்து மனநோயின் மூல காரணத்தை அறிய முயற்சி செய்வார்கள்.

### குழு சிகிச்சை முறை (Group Psychotheraphy)

குடும்பப் பிரச்சனைகள், வேலை வாய்ப்புப் பிரச்சனைகள், கணவன் மனைவி இடையே எழும் பூசல்கள், குழந்தை வளர்ப்பு பற்றியவையே பெரும்பாலும் உள்ளவை. சில சமயங்களில் நான்கைந்து பேர் கலந்துரையாடுவதற்கான சிகிச்சை முறை கையாளப்படும். உதாரணமாக குடிப்பழக்கத்தில் இருந்து விடுபட்ட ஒருவர் தனக்கு குடிபோதையினால் ஏற்பட்ட இன்னல்களை மற்றவரிடம் பகிர்ந்து கொள்ளலாம், இதனால் திருந்தியவர்கள் பலர் இருக்கிறார்கள். ஒரு குழந்தையை அழைத்து அதன் கோளாறு பற்றி ஆராய்ச்சி நடத்தும் போது குடும்பத்தினரையும் சேர்த்து சிகிச்சை அளிக்க நேரலாம். குடும்பத்தில் தலைவன் ஒரு குடிகாரனாக இருக்கலாம், வீட்டில் ரகளை செய்யலாம், இதனால் மனைவி கணவனிடையே பலத்த சண்டை சச்சரவுகள் ஏற்படலாம். இவற்றைக் காணும் சிறுவர் சிறுமியர் மன நலம் பெரிதும் பாதிக்கப்படும், இதனால் குடும்ப சிகிச்சை முறை (Family Theraphy) கையாளப்படுகிறது.

### நடத்தை சிகிச்சை முறை (Behaviour Therapy)

நடத்தை சிகிச்சை முறை என்ற ஒரு முறை உண்டு. ஒருவனுடைய குடிப்பழக்கத்தைக் குறைக்க சில மாத்திரைகள் கொடுப்பார்கள். இதை உட்கொண்ட பின், இவர்கள் மறுமுறை குடிக்கும்போது முன்பிருந்த போதை மறைந்து விடும், படபடப்பு அதிகமாகும், தலைவலி, குமட்டல் வரும், இவ்வாறு குடிப்பதில் ஒரு வெறுப்புணர்ச்சி உண்டாகும்.

### மனவசிய முறை (Hypthotism)

புகை பிடிப்போரைக் குணப்படுத்த மனவசிய முறையை கையாளுவதுண்டு. படங்களைத் திரையில் காண்பித்தும் அவற்றைப் புகை பிடிப்பவர் பார்க்கும் சமயங்களில் ஒரு சில அதிர்ச்சியைக் கொடுப்பார்கள். இந்த ஆக்க நிலை நிறுத்தல் முறையில் புகை பிடிக்கும் பழக்கம் காலப்போக்கில் மறையும். கல்லூரி மாணவர்களிடையே தேர்வு நெருங்கும் சமயம், இரவு வெகு நேரம் விழித்திருப்பதற்காக ஒரு மாத்திரை உட்கொள்ளும் பழக்கம் உண்டு. இதனால் ஒருவித சுறுசுறுப்புணர்ச்சியும் படிப்பது யாவும் மூளையில் ஆழப்பதிவது போலும் தோன்றலாம். உண்மையில் இது ஒரு பிரமையே. முதன் முதலில் ஒருவித புத்துணர்ச்சி அளிக்கலாம். நாளடைவில் ஒருவன் இப்பழக்கத்திற்கு அடிமையாகி விடுவதுண்டு. அதை நிறுத்தி விட்டால் காரணமில்லாமல் சந்தேகங்கள் தோன்றலாம். எல்வோரும் கேலி செய்வது போன்ற உணர்வு உண்டாகலாம். இவை முற்றிப்போய் மன வியாதியில் முடியலாம்.

பொதுவாகக் கூறும்பொழுது, மனநோய் என்பது ஒரு சிக்கலான நோய் எனலாம். உடல் நோயைக் குணப்படுத்துவது போல் அவ்வளவு எளிதாக, இதனைக் குணப்படுத்த முடியாது. பொறுமை, கண்காணிப்பு, நோயாளியின் ஒத்துழைப்பு, சமூகத்தாரின் ஆதரவு,

மருத்துவ ஆராய்ச்சி, பிற்போக்கு எண்ணங்களை அறவே ஒழித்தல், போதிய மருத்துவமனை வசதிகள், போட்டி மனப்பான்மையை வளர்க்காத சுற்றுப்புறச் சூழ்நிலை ஆகியவை அவசியம். மனநோய் இருப்பதைக் கண்டால், மன நல மருத்துவரை அணுகி, நோய்க்கான காரணங்களை ஆராய்ந்தறிந்து, அதற்கான பரிகாரம் தேடுவதே சிறந்த முறையாகும். மனச்சிதைவு எனப்படுவது ஒரு தீவிர மன வியாதி, இதனைக் கட்டுப்படுத்த சில வழிமுறைகளைப் பார்க்கலாம். மகிழ்ச்சியான குடும்பச் சூழ்நிலையும் எந்த கெட்ட பழக்கமும் இல்லையென்றால் மன நலம் பாதுகாக்கப்படும். மனநலம் நன்கு அமைந்தால் தனி மனித அமைதியும் அதனால் சமூக அமைதியும் கைவசப்படும்.

## 3.10 ஜனநாயகக் கல்வி (Democracy Education)

இந்திய அரசாங்க அமைப்பு ஜனநாயகம் (Democracy), சமூகத்துவம் (Socialism), சமத்துவம் (Secularism) முதலியவற்றைச் சார்ந்து செயல்படுகிறது. இதற்கென நான்கு அடிப்படைக் கோட்பாடுகள் அரசாங்கத்தில் வகுக்கப்பட்டு உள்ளன. அவை,

(அ) நீதி (Jusitice): சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியல் அடிப்படையிலான நீதி நெறி முறைகள்.

(ஆ) சுதந்திரம் (Freedom)

(இ) சமவாய்ப்புடைமை (Equality)

(ஈ) சகோதரத்துவம் (Fraternity)

இவற்றை பின்னணியாகக் கொண்டு அரசாங்கம் பின்வரும் வகைகளில் செயல்படுகிறது.

அ) அரசாங்கமானது சட்டத்தின் முன்பு அனைவரையும் சமமாகக் கருதுகிறது.

ஆ) அனைவருக்கும் கல்வி, வேலைவாய்ப்பு முதலியவற்றில் சம உரிமை அளிக்கிறது.

இ) இறைவழிபாட்டிற்குச் சுதந்திரம் அளித்துள்ளது.

ஈ) ஆண், பெண் இருவரையும் சமமாகக் கருதி கல்வி, வேலை வாய்ப்பு, சொத்துரிமை அளிக்கப்படுகிறது.

உ) குழந்தைத் தொழிலாளர்களைத் தடை செய்துள்ளது.

ஊ) பெண்களின் மனநலம் மற்றும் உடல் நலம் கருதி அவர்களின் திருமண வயதினை அதிகரித்துள்ளது.

எ) கிராமப்புறங்களில் நடைபெற்று வந்த கட்டப்பஞ்சாயத்து முறைகளை ஒழித்து வருகிறது.

ஏ) தகவலறியும் உரிமைத் திட்டத்தினை அனைவருக்கும் அளித்துள்ளது.

மனித உரிமைகளுக்கு மக்கள் ஆட்சி முன்னுரிமை அளிக்கிறது. சமத்துவம், சமூகத்துவம், சமய நல்லிணக்கம் முதலியவற்றுக்கு அரசாங்கம், வழிவகுத்து உள்ளது. இதற்கென இந்திய சட்டமைப்பானது பல சட்டங்களை வடிவமைத்துள்ளது. அவை கீழ் உள்ளவாறு அளிக்கப்பட்டுள்ளன. சட்ட எண் 14 இன் படி அனைவருக்கும் சம உரிமையும், பாதுகாப்பும் அளிக்கப்பட வேண்டும்.

சட்ட எண் 19 இன் படி “மக்களின் பேச்சு உரிமை, எழுத்து உரிமை, ஓட்டு உரிமை, குடியுரிமை முதலியவற்றிற்கு தடை விதிக்கக் கூடாது. மேலும் முறையான வகையில் சொத்துகளை வாங்குதல், விற்றல், தொழிலில் ஈடுபடுதல் தவறெனக் கருதப்படமாட்டாது என்று அரசாங்கம் கூறுகிறது.

சட்ட எண் 25(1) இன் படி மக்களுக்கு எந்தவொரு சமயத்தினையும் பிறருக்குப் போதிக்கவும், பின்பற்றவும், உரிமை உள்ளது. சட்ட எண் 15இன்படி இனம், மொழி, நிறம் முதலியவற்றின் அடிப்படையில் மக்களிடையே வேறுபாடுகளைப் பாராட்டக் கூடாது.

சட்ட எண் 16இன் படி அனைவருக்கும் வேலைவாய்ப்பில் சம உரிமை அளிக்கப்பட வேண்டும்.

**சமூகத்துவம்**

மனிதன் தன்னுடைய ஆற்றலினைக் கொண்டு சுற்றுச் சூழலை கட்டுப்படுத்துகிறான். அனைவரும் ஒன்று கூடி சமூகமாக வாழ்கின்றனர். அச்சமூகத்தில் சகோதரத்துவம், சமய நல்லிணக்கம், ஒற்றுமை, அமைதி, பிறர் நலங்கருதுதல், சமூகத்துவம் போன்ற மதிப்புணர்வுகளைப் பின்பற்றி வாழ்வது மக்களின் கடமையாகும்.

**சமயச் சார்பின்மை**

இந்திய நாட்டில் பல்வேறு சமயங்களைச் சார்ந்த மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் தம்முடைய சமயங்களை மதித்து அவற்றில் கூறப்பட்டுள்ள நெறிமுறைகளைப் பின்பற்றுகின்றனர். மனித மதிப்புணர்வுகள் மேம்படுவதற்குத் தம்முடைய சமயத்தை மட்டும் மக்கள் போற்றாமல் பிற சமயங்களில் கூறப்பட்டுள்ள நற்கருத்துகளும் சமமெனக் கருதிச் செவிசாய்க்க வேண்டும். இவற்றின் மூலமாக நாட்டின் ஒற்றுமை மேம்படும், சமயப் பூசல்கள் குறையும். இதன் மூலம் சமய நல்லிணக்கம் ஏற்படும்.

## 3.11 மனித உரிமைக் கல்வி (Human Rights Education)

அனைத்து மனித உயிர்களும் சமமாகவே பிறக்கின்றனர். அவர்கள் அனைவரும் கண்ணியத்திலும், மதிப்பிலும் சமத்துவம் பெற்றவர்கள் தான். ஒவ்வொரு தனி மனிதனும் நாகரீகமாக வாழ, வாழ்வதற்குத் தேவையான பணியைப் பெற, பேச, தனது மொழியில் பேச, உலகின் எப்பகுதிக்கு வேண்டுமானாலும் செல்ல, தனது, பண்பாடு கலாச்சாரப்படி வாழ உரிமை படைத்தவர் தாம். அந்த மனிதகுல அடிப்படை உரிமைகளை 17ம் நூற்றாண்டில் இயற்கை உரிமைகள் என்றும், அவை சட்ட வடிவம் பெற்று 18ம் நூற்றாண்டில் மனிதனின் உரிமைகள் என்றும் அழைக்கப்பட்டன. 19ம் நூற்றாண்டில் பல சுதந்திர நாடுகள் இக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டன. பின்னர் மனிதனின் சமூக பொருளாதார உரிமைகள் கூட அங்கீகரிக்கப்பட்டன. இவ்வுரிமைகளையே நாம் மனித உரிமைகள் என அழைக்கிறோம்.

பொதுச் சமுதாயம் மனித உரிமைகளின் இந்த உலகளாவிய உரிமையை அனைத்து மக்களுக்கும் மற்றும் அனைத்து நாடுகளுக்கும் ஒரு பொதுவான தரமாக மதிப்பிடுவதாக கூறுகிறது. ஒவ்வொரு தனிநபரும் சமூகத்தின் ஒவ்வொரு அங்கமும் இந்த பிரகடனத்தை தொடர்ந்து மனதில் வைத்து கற்பிக்க வேண்டும். இந்த உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை

மதிக்கும் கல்வி மனித உரிமைக் கல்வி. என்பது மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய பிரகடனம் ஆகும்.

1995இல் ஐக்கிய நாடுகளின் பொன்விழா ஆண்டின் தொடக்கத்தில் மனித உரிமைக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. 1974ஆம் ஆண்டில் யுனெஸ்கோ தயாரித்த கட்டுரையில் சர்வதேச புரிந்துணர்வு, ஒத்துழைப்பு, சமாதானத்திற்கான கல்வி, மனித உரிமைகள், அடிப்படை சுதந்திரம் தொடர்பான கல்வி போன்றவற்றை பரிந்துரைசெய்தது. 1978ல் ஐக்கிய நாடுகளின் பங்கேற்பாளர்கள் மனித உரிமைக்கான முறையான பாடத்திட்டம் தேவை என்பதை உணர்ந்து, மனித உரிமை என்பதற்கான ஒரு குறிப்பிட்ட வரையறையை உருவாக்க வேண்டும் என்றும் அது பற்றிய அறிவையும் அதன் செயலாக்கங்களையும், சமூகத்தில் மனித உரிமைக்கான விழிப்புணர்வையும், அதை அறியவும் ஊக்குவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். 1993ல் நடைபெற்ற மனித உரிமைகள் பற்றிய உலக மாநாட்டிற்குப் பின்னர் மனித உரிமைக் கல்வியானது சர்வதேச ரீதியாக தேவையான ஒன்று என்றானது. மனித உரிமைக்கல்வியானது முறையான பள்ளி பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டு அரசு மற்றும் அரசு காரா நிறுவனங்கள் சாதாரண கல்வி மூலம் இணைத்து வழங்க வழிசெய்யப்பட்டது.

இன்று இதன் முக்கியத்துவத்தினை அறிந்து மனிதன் வாழத் தகுதி எவை என்பதைத் தீர்மானிக்கப் பயன்படும் ஒரு கருவி மனித உரிமைப் பிரகடனம் ஆகும். இதன் கருத்துக்கள் மற்றும் ஆவணங்கள் நமது அன்றாட வாழ்வு மற்றும் நடைமுறை நிகழ்வுகளை எடுத்துக்கூறுகிறது. இதனால் ஐக்கிய நாடுகள் சபையானது டிசம்பர் 10ம் நாளை மனித உரிமைகள் தினமாக அறிவித்துள்ளது. இது உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் பொதுவான ஒரு சாசனமாகும். பல பள்ளிகள் தங்கள் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக மனித உரிமைக் கல்வியை வழங்குகின்றன. உதாரணமாக வரலாறு, அரசியல், மற்றும் குடிமையியல் போன்ற பாடங்களுடன் மிக நெருங்கியத்தொடர்புள்ளது. உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு இது ஒரு தனிப்பாடமாக கொண்டு பல சிறப்புப் பயிற்சிகள் உள்ளன.

# அலகு – IV

## அமைதிக் கலாச்சாரத்தை வளர்த்தல்

## (Promoting Culture of Peace)

### 4.1 அமைதிக் கலாச்சாரம் மற்றும் அஹிம்சையின் பொருள் (Meaning of Culture of Peace and Non-violence)

"உலகில் காணமுடியாத, தொடஇயலாத, மிக அழகான, இதயத்தால் உணரக்கூடிய ஒரே பொருள் மனஅமைதி".

- **கெலன் கெல்லர்**

**அமைதிக் கலாச்சாரம் (Peace Culture)**

காந்தியடிகள், போரினையும் வன்முறையினையும் வெறுத்தார். அதனால் ஏற்படக் கூடிய பின் விளைவுகளைத் தெளிவுற உணர்ந்திருந்தார். அவர் அமைதியினைப் பெரிதும் விரும்பினார். அவருடைய கருத்தின்படி, "அமைதிக் கலாச்சாரம் என்பது மனிதனின் சுயமரியாதை, ஒழுக்கம், மனநிறைவு, புரிந்து கொள்ளும் ஆற்றல், தன்னை உணர்தல், கவனத்தை நிலைநிறுத்தல் மற்றும் வாழ்க்கையின் நன்மை, தீமைகளை மீள்பார்வை செய்வதினால் விளைவதாகும். அமைதியானது நாட்டில் மட்டுமின்றி தனி மனிதருடைய மனத்திலும் நிலவ வேண்டும். தேவையற்ற உணர்வுகளான, பயம், கோபம், குழப்பம், மன வெறுப்பு, பொறாமை, காமம் முதலியவற்றின் காரணமாக ஒருவரின் மன அமைதி குலைகிறது. தியானத்தின் மூலமாக அலைபாய்கின்ற மனத்தினை மனிதனால் ஒருமுகப்படுத்த முடியும். இதன் மூலம் அவனுக்கு மன அமைதி கிடைக்கிறது. அமைதியானது புலனடக்கம், காம, குரோதம் பேணுதல், உண்மையைக் கூறுதல், மனக்கட்டுப்பாட்டுடன் இருத்தல் முதலியவற்றின் மூலம் விளையக் கூடியதாகும்".

**வன்முறையின்மை (Non-Violence)**

காந்தியடிகள் தமது புத்தகமான சத்தியசோதனையில் (My Experiments with Truth) வன்முறையின்மையினைப் பற்றி வலியுறுத்தி உள்ளார். அதில் அவர் "நான் உலகத்திற்கு புதியதாக எதுவும் கற்பிக்க வேண்டியது இல்லை. உண்மை, வன்முறையின்மை முதலியவற்றின் முக்கியத்துவத்தை மக்கள் காலந் தொட்டு உணர்ந்து பின்பற்றி வருகின்றனர். அவை ஒன்றோடு ஒன்று இணைந்து காணப்படுகின்றன. உண்மையும், வன்முறையின்மையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக உள்ளன. புத்தமதம், ஜைன மதத்தில் உள்ளபடி மக்கள் அனைவரும் எண்ணம்,

சொல், செயல் முதலியவற்றால் யாரையும் புண்படுத்தக் கூடாது. வன்முறையானது உலகில் பிறரைப் புண்படுத்தும் எண்ணம், கொடுஞ் செயல், பழி வாங்கும் குணம், பொய்மை, சூழ்ச்சி, போர், பொருளாதார முறைகேடு, போட்டி, பொறாமை முதலியவற்றால் விளைகின்றன'' என்கிறார். போரின் தீமைகளை உணர்ந்து அவற்றைத் தவிர்க்க வேண்டும், வன்முறைகளை ஒழிக்க வேண்டும். இதனை அடிப்படையாகக் கொண்ட 'சத்தியாகிரகம்' என்னும் இயக்கத்தினைத் துவங்கினார். சத்தியாகிரகத்தில் 'அக்ரஹா' என்னும் குஜராத்தி சொல்லுக்கு 'உறுதியுடன் உண்மையினைப் பின்பற்றுதல்' என்று பொருள். மேலும் ஒத்துழையாமை இயக்கம், உண்ணாவிரதம் முதலியவற்றினையும் இதன் அடிப்படையில் செயல்படுத்தினார். இதன் மூலம் அன்பு, பரிவு, பிறர் நலங் கருதுதல், பிற உயிரைத் துன்புறுத்தாமை, ஒற்றுமையுணர்வு, சமூக சேவை, சமூக நீதி, தேசிய விழிப்புணர்வு, குடிமை உணர்வு போன்ற மதிப்புணர்வுகளையும் மறைமுகமாக மக்களுக்குப் போதித்து நாட்டின் ஒற்றுமைக்கும், விடுதலைக்கும் எழுச்சி மிகுந்த ஆக்கப்பூர்வமாக புதுமைப் போராட்டத்திற்கும் வித்திட்டு, வென்றும் காட்டினார்.

''அனுபவ ரீதியாகப் பார்த்தோமானால் வன்முறை நமது வாழ்வில் பல வழிகளில் ஈசலெனப் புறப்பட்டு வருவதைக் கண்கூடாகப் பார்க்கலாம் பள்ளி வளாகத்தில் மாணவர்களுக்கிடையே சிறு சிறு சண்டைகள், வீட்டுச் சூழலில் உறவினர்களுக்குள் ஏன் பெற்றோர்களிடையே கருத்து வேறுபாடுகள், நாடுகளுக்கு இடையிலான சண்டைகள், தனிப்பட்ட முறையில் சண்டை, சமூகப் பிரிவினர்களிடையேயான சண்டைகள் என எங்கு பார்த்தாலும் அமைதியைக் கெடுக்கும் மனக்கசப்புகள் ஏற்படுவதற்குக் காரணமே ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளும் தன்மையின்மை, சகிப்புத் தன்மையின்மை, பொறாமை, அறியாமை என மக்கள் தேவையற்ற அவப்பண்புகளால் நிரப்பப்பட்ட மன ஊனர்களாக வலம் வருவதே இத்தனை துன்பங்களுக்கும் சச்சரவுகளுக்கும் காரணம்.

ஆக 'அமைதி' என்ற அருமருந்து ஒரு தனி மனிதனில் உள்ளார்ந்து எழுவதே ஆகும். தனி மனிதன் அமைதியுற்றால் தான் உலகம் அமைதிச் சூழலைப் பெறும் இன்றைய மாணாக்கனை நாளைய பொறுப்புள்ள குடிமகனாக ஆக்கும் பெரும்பொறுப்பை ஆசிரியர் தன்னகத்தே வைத்துள்ளார். ஆசிரியருக்கும், பெற்றோருக்கும், தங்கள் பிள்ளைகள் பற்றியும், அவர்களின் உடல் உள வளர்ச்சி நிலைகளைப் பற்றியும் தெளிவாகத் தெரிந்திருத்தல் அவசியம், அப்பொழுதுதான் பிள்ளைகளை, மாணவச் செல்வங்களை செவ்வனே வளர்க்கவும், அவர்களை நல்வழிப்படுத்துவும் சமாதான வித்தினை அவர் மனதில் ஊன்றவும் உதவும். மேலும் வன்முறை உணர்வுகளுக்கு மனிதனின் பருவ மாற்றங்களும், முக்கியக் காரணங்களாக அமைகின்றன என்பதையும் நாம் யாவரும் உணர வேண்டும். குழந்தையின் வளர்ச்சி ஒவ்வொரு பருவத்திலும் பெற்றோரை மகிழ்விக்கிறது, சோதிக்கவும் செய்கிறது. பச்சிளங்குழந்தை

பாதுகாப்பை நாடுகின்றபோது, வளர்ந்த குழந்தையோ தாயின் முந்தாணையை உதறிவிட்டு, சுதந்திரமாக ஓடியாட முற்படுகிறான், இதனைப் பெற்றோர் உணர வேண்டும் அதிலும் தாய்மார்களுக்கு இதில் முக்கிய பங்குண்டு. ஒரு குழந்தை எந்தக் குறையும் இன்றி வளர அதற்குத் தேவையான சுதந்திரம் தரப்பட வேண்டும்.

**தனித்தன்மை**

பெற்றோர்கள், சிறிது சிறிதாக தங்கள் ஆதிக்கத்தையும், ஆசாபாசங்களையும் குறைக்கப் பழக வேண்டும். வெளியுலக அனுபவம், பாலகனுக்குப் புதுமையாகவும், பயத்தை உண்டு பண்ணுவனாகவும் அமையுமென எண்ணும் பெற்றோர் பலருண்டு. அதன் பொருட்டு ஒரு பாதுகாப்பான சூழ்நிலையிலேயே வளர்க்கப்படும் குழந்தையின் ஆளுமை வளர்ச்சி குன்றி விடுகிறது. வீட்டுச் சூழ்நிலையிலேயே சுற்றிச் சுற்றி வளைய வரும் சிறுவர், சிறுமியர்களுக்கு, சிறிது சிறிதாக செயல்முறை அறிவும், சொல்லறிவும் புகட்டுவது பெற்றோரின் கடமையாகும். பயமற்ற, போட்டியற்ற, மகிழ்ச்சியுற்ற சூழ்நிலையே அறிவு வளர்ச்சிக்குரிய அடிப்படை ஆகும். நிர்பந்தமான நிபந்தனைக்குட்பட்ட, கசப்புணர்வுடன் கற்கும் கட்டாயக் கல்வியால் எந்தப் பயனும் இல்லை, அது ஒரு கல்வியும் அல்ல. பலதரப்பட்டவர்களுடன் பழகி, கலந்து உறவாடி, வெற்றி தோல்வியினைப் பெற்று, வளைந்து, நிமிர்ந்து, தனக்கென ஒரு தனித்தன்மையை வளர்த்துக் கொள்வதே வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்க வேண்டும், இதற்குப் பெற்றோர் உதவ வேண்டும்.

**மாற்றங்கள் முன்னேற்றங்கள்**

கடந்த கால வாழ்வேடுகளைப் புரட்டுவோமானால் ஒவ்வொருவரின் உள்ளத்திரையிலே, உருவாகும் அழியாக் கோலங்கள் பல, தொட்டிலிலே முடங்கி, தரையில் தவழ்ந்து, தட்டுத் தடுமாறி நடந்து, மழலை மொழி பேசி, தாயின் மடிமேல் உறங்கி தந்தையுடன் பூங்கா சென்று. ஓடி வியைாடி, நண்பர் குழாமில் நாள்தோறும் கழித்து, பள்ளி செல்ல மறுத்து பள்ளியிலும் உறங்கி, பல மாணவரிடம் உறவாடி, சண்டையிட்டு, பிரிந்து, இணைந்து பற்பல பாடங்கள் கற்று, படிப்படியாக முன்னேறி, வளர்ந்து முதிர்ந்து பன்னிரண்டு வயதை அடைய பால காண்டம் நிறைவு பெறுகிறது, மாற்றங்கள் முன்னேற்றங்களே. இவ்வளவு பரிவும், பாதுகாப்பும் இறைவன் படைப்பில் எந்த உயிரினங்களுக்கும் இருப்பதாக, இருந்ததாகத் தெரியவில்லை.

## 4.2 மனப்போராட்டத்தை தடுத்தல் மற்றும் தீர்வுகாணுதல் (Conflict Prevention and Resolution)

‘‘மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்

மாற்றானை உளவென்று நம்ப வேண்டாம்''.

என்ற சிந்தனை வரிகளை நினைவில் நிறுத்தி ஒவ்வொருவரும் செயல்பட்டால் மனப் போராட்டங்களுக்கு இடம் கொடாமல் வாழலாம். ஒருவர் எதிர் நோக்கியுள்ள இலக்கும் அவன் உண்மையில் பெற்ற அடைவுக்கும் இடையே பெரும் வேறுபாடு எழுவதும் ஒன்றுடன் ஒன்று பொருந்தாத பல இலக்குகளை வாழக்கையில் அடைய முயல்வதும் மனப்போராட்டங்களைத் தோற்றுவிக்க வல்லவன் கட்டுப்பாடின்றி, மனம் போன போக்கில் நடப்பதன் வழியே நமது பிரச்சனைகளும் போராட்டங்களும் தீவிரம் அடையலாம். கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வளர்வது நல்ல பொருத்தப்பாட்டினை வளர்க்க வாய்ப்பளிக்கும். வாழ்க்கையில் ஓரளவு மனமுறிவு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். கட்டுப்பாடுகளே கூடாது என்பது இயலாதது மட்டுமன்று இது தவறானதுமாகும். கட்டுப்பாடுகள் முழுமையாக அகற்றப்பட்டால் தம் மனத்தில் போரிடும் ஊக்கிகள் ஆதிக்கத்திற்குட்பட்டு குழந்தைகள் சீரழிந்து போகலாம். தேவையற்ற அல்லது அளவுக்கு அதிகமான கட்டுப்பாடுகளே கூடாது என்று அவர்கள் சொல்வதில்லை. இதைச் செய்யாதே அதைச் செய்யாதே என்ற எதிர்மறையாகக் கட்டுப்பாடு அமைவது பயனற்றதென்றும் உடன்பாட்டு முறையில் அது அமைய வேண்டும் என்றும் இவர்கள் கூறுகின்றனர். மனப்போராட்டங்கள் மகிழ்ச்சியின்மையும் மனவிறைப்பு நிலையையும் உண்டாக்குகின்றன. இத்தகைய போராட்டங்களின் தன்மையை நன்குணர்ந்து இவற்றுக்குத் தீர்வு காண்பான் அல்லது இவற்றைத் தூய்மைப்படுத்தி (Sublimation) வெளிப்படுத்திப் போராட்டத்தைத் தவிர்ப்பான். இத்தகையவனை மன நூலறிஞர் சிறந்த பொருத்தப்பாட்டைப் பெற்றவன் (Well-Adjusted Individual) என்றழைக்கின்றனர், இவன் மனநலம் (Mental Health) பெற்றவனாவான்.

**சமூகச் சூழ்நிலை (Social Environment)**

பொருளாதாரப் பிரச்சினையே மனமுறிவுக்கு முக்கிய காரணம் எனலாம். விஷம் போல் ஏறிவரும் விலைவாசி நடுத்தரக் குடும்பத்தினரைப் பெரிதும் பாதிக்கின்றன. பெரும்பாலோர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வாடுகிறார்கள் எனச் சொல்வதுதான் பொருத்தம். வேலையில்லா பட்டதாரிகள் வருடா வருடம் கூடுவதால் நெருக்கடி நிலைமை உருவாகிறது. மனமுறிவு காரணமாக சிலர் குழப்பம் விளைவிக்கலாம். மேலும் மாணவரிடையே நற்பண்புகள் குறைவதற்கு காரணம் திரைப்படங்களில் காண்பிக்கப்படும் ஆபாசக் காட்சிகளும், உண்மைக்குப் புறம்பான நிகழ்ச்சிகளுமேயாகும். எது மெய் எது பொய் எனப் பகுத்தறியும் முதிர்ச்சி பெறாமையால், வாலிபர்கள் நெறி பிறழ்வாக செயல்படுகிறார்கள்.

கல்வித் திட்டம், மாணவர்களை வாழ்க்கைக்குத் தயார் செய்யும் முறையில் அமையவில்லை. அறிவு வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்காமல் மனப்பாடம் செய்வதற்கு பட்டம் பெறுவதற்குமே கல்வி என்ற முறைகேடு வருத்தத்தையளிக்கக் கூடியது. இறுதித் தேர்விற்கே முக்கியத்துவம் அளிப்பது மனஇறுக்கத்தை அளிக்கிறது. இறுதித்தேர்வில் வெற்றி

பெற குறுக்கு வழிகளை உருவாக்கும் எண்ணங்களை வளர்க்கிறது. இறுதியாகக்கூற வேண்டுமென்றால், கல்வியானது மாணவர்களுக்கு எந்த ஒரு நம்பிக்கையையும் உள்ளுணர்வுகளையும் ஊட்டுவதாகத் தெரியவில்லை. ஒழுக்கத்திற்கு மாறான நடவடிக்கைகளில் பங்கு கொள்ளத் தூண்டுகிறது. மாணவர் நலத்தை முன்னிட்டு நிறுவப்பட்ட மாணவர் மன்றம், அவர்களை ஒரு தீவிர அரசியல்வாதிகளாக உருவாக்குவதிலே இயங்குகின்றனவேயன்றி சொல்வன்மை, அடக்கம், பொறுப்புணர்வு, கூட்டு வாழ்க்கை, சமூக நலனுக்கான செயல்கள், பரந்த மனப்பான்மை, பரிவு போன்ற நற்பண்புகளை வளர்க்க உதவுவதாகத் தெரியவில்லை. ஆசிரியர் மாணவர் நல்லுறவு, தொன்றுதொட்டு நிலவிய சூழ்நிலையிலிருந்து முற்றிலும் மாறிவிட்டது. இனவேறுபாடுகள் பிளவுகளை உண்டு பண்ணி பிற்பட்டோரிடம் மனமுறிவை உண்டு பண்ணியது. தகுதியுள்ள ஆசிரியர்கள் நியமிக்கப் படாததால், மாணவர்கள் பயன்பெறும் கல்வியை வகுப்பறையில் பெற வாய்ப்பில்லை. தலைமை ஆசிரியர், உடன பணியாற்றும் ஆசிரியர்களிடம் சுமுகமான நல்லுறவை உருவாக்க முயற்சி செய்யாமல், ஆதிக்கம் செலுத்துங்கால் மன முறிவு ஏற்பட வாய்ப்புகள் பெருகும். இவை வகுப்பறையில் பிரதிபலிக்கும். இறுதியாக, பெற்றோர்கள் பள்ளியாசிரியர்களிடம் போதிய நல்லுறவும், கலந்துரையாடலையும் பெற பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினை உருவாக்காதலின் காரணமாக மாணவர்களின் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பது, திட்டவட்டமாகக் கூறும் நிலையில் இல்லை. மனமுறிவையகற்றும் பணியில் மாணவர், பெற்றோர், ஆசிரியர், அரசியலார், யாவரும் இணைந்து ஈடுபடுதல் இன்றியமையாததாகும்.

ஆழ்மன நிலையில் அல்லது நனவிலி நிலையில் புதைந்துள்ள பண்படா ஊக்கிகளும் மனவெழுச்சிகளுமே மனப்போராட்டங்களை விளைவிக்கிறது. தேவைகள் பெருகப் பெருக அவற்றை நிறைவு செய்யும் முயற்சி பயனளிக்காது, மனமுறிவு ஏற்பட வாய்ப்பளிக்கின்றன. மனப் போராட்டங்களை மூவகையாகப் பிரிக்கலாம். அணுகுதல்-அணுகுதல், விலகுதல்-விலகுதல், அணுகுதல்-விலகுதல் என்பவையாகும். அவாவு நிலை, கட்டுப்பாடற்ற வாழ்க்கை, நகர நெருக்கடி முதியவை மனமுறிவின் காரணிகளாகும். பொருளாதாரப் பிரச்சினைகள், தரக் குறைவான திரைப்படங்கள், வாழ்க்கைக்குப் பொருத்தமில்லா கல்விமுறை, அரசியல் குறுக்கீடு, பெற்றோர்களின் ஒத்துழையாமை முதலியன மாணவர்களிடையே மனப் போராட்டங்களை ஏற்படுத்தும். மனப்போராட்டங்கள் தவிர்க்க முடியாதவை. இதன் தன்மையுணர்ந்து, இவற்றைத் தூய்மைப்படுத்தி வெளிப்படுத்துவதே சிறந்தது எனலாம். இத்தகைய செயல், மனநலத்திற்கு வாய்ப்பளிக்கிறது. மனநலம் காக்கப்படுதலே, பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமைகிறது. மனநலத்தைக் காப்பதில் தற்காப்பு நடத்தைகள் பெரும் பங்கு வகிக்கிறது. இதனை மாணவரும் ஆசிரியரும் அறிந்திருந்தால், வீண் சச்சரவுகள் மாணவ சமுதாயத்தில் எழும்புவதைத் தவிர்க்கலாம்.

### 4.3 கல்வியின் மூலமாக அமைதிக் கலாச்சாரத்தை வளர்த்தல் (Fostering Culture of Peace through Education)

ஹெலன் கெல்லர் கல்வியின் மூலமாக அமைதிக் கலாச்சாரத்தை வளர்ப்பதற்கான சில வழிகளைக் கூறுகிறார்.

- ✓ அமைதியாக வாழ்தல்
- ✓ ஒழுங்கான அக அமைதி
- ✓ ஒழுக்கமான நடத்தைப் பாங்கு
- ✓ பேச்சில் செயலில் ஒழுக்கம்
- ✓ வாழ்வில் விழிப்புணர்வுடன் நடத்தல்
- ✓ தியானம்
- ✓ ஆன்மாவின் தேவைகள்
- ✓ தன்மை உணர்தல் நிலை
- ✓ சுய அறிவு
- ✓ மனப் போராட்டத்தில் இருந்து தீர்வு
- ✓ குழந்தைகளுக்கான தியான நிலை
- ✓ வகுப்பறை தியான நிலைகள்
- ✓ சுய அறிவும் ஆன்மீகத் தேவைகளும்
- ✓ இயல்பாகக் கற்றல்
- ✓ மனப்போராட்டத்தில் இருந்து தீர்வு
- ✓ மன அமைதியைப் புரிந்து கொள்ளல்
- ✓ மன அமைதியோடு கவனித்தல்
- ✓ தியானத்தோடு நடத்தல்
- ✓ கற்றலின் செயல் ஈடுபாடுகள்

மாணவர்களை ஒன்று கூட்டி, சமுதாயக் கூடத்தில் உருவ மாதிரிகளை அமைத்து வகுப்பறை பள்ளி நிர்வாகப் பொறுப்புகள் ஆகியவற்றில் பங்கு பெறச் செய்தல். மாணவர்களை பாதிக்கக் கூடிய நிகழ்வுகள் கொள்கைகள் குறித்து மாணவர்கள் குழு அமைத்து நிரிவாகத்துடன் வேலை செய்தல். புதிய முறைகளை கற்பித்தலில் கண்டுபிடிக்கும் ஆசிரியர்களை ஊக்குவித்து அம்முறைகளை வகுப்பறையில் அறிமுகப்படத்துதல். பள்ளியில் மாணவர்களுக்கு கூடுதல் பொறுப்புகள் கொடுத்து விளையாட்டு, அறிவியல், நடனம், நாடகம், செற்பொழிவு, இசை, பரத நாட்டியம், ஓவியம் போன்ற கலை பயிற்சி கொடுத்து கண்காட்சிகளில் அவர்களை ஈடுபடுத்தி மாணவர்களின் திறமைகளை வளர்த்தல்.

வகுப்பறை எனக்குக் கிடைத்த வெகுமதி அதை அமைதியோடு வகுப்பறைச் சூழலைப் பேணிக் கொள்ளுதல். கரும்பலகையில் அரிய புதிய கருத்துக்களை தினம் தினம் எழுதி கருத்துப் பங்களித்தல். வகுப்பறைகளில் சுத்தமானதாக ஒற்றுமையோடு இணைந்து பிறரோடு

கவனித்து கூட்டுறவை வளர்த்து சுமூகமாக வகுப்பறைச் சூழலை ஏற்படுத்திக் கொள்ளுதல். விவாதித்தல் வகுப்பறையில் நடத்திய பாடப்பகுதி குறித்த உரையாடலை நிகழ்த்தும் போது மாணவர்களின் நடத்தைப் பாங்கிற்கு ஏற்றாற்போல் பேசி, பின்னூட்டம் பெறச் செய்து மாணவர்களின் பங்களிப்பை வலுவூட்டுதல். குழந்தைகள் இசையில் நாட்டமிக்கவர்களாக்கி புதியதான படைப்பாற்றல் நிலையை அவர்களுக்கு ஊட்டி, திறமை மிக்கவர்களாக்குதல் போன்றவற்றை மாணவர்களிடையே வளர்த்தல். உயிரின வாழ்க்கை பற்றிய எண்ணங்கள், வாழ்க்கைக்கான கண்ணியங்கள், மனத உரிமைகளுக்கான சகிப்புத்தன்மை, மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், திறனாய்வு பற்றி சிந்தனைகள், செயல்திறன்மிக்க அஹிம்சை வழி செயல்பாடுகளும், சமூக நீதி, குடிமைப் பொறுப்புகளும், தலைமைப் பண்பு, உலக குடியுரிமை பற்றிய அறிவு, நடைமுறை செயல்பாடு, திறமைகள் போன்றவற்றை கல்வியின் மூலம் ஒவ்வொருவரும் கற்றல்.

### 4.3.1 உள்ள அமைதியை வளர்த்தல் (Promoting Inner peace)

உளவியல்ரீதியால் உள்ளத்தில் எழும் போராட்டங்களே மனித மனத்தை அமைதி இழக்கச் செய்கிறது. சிக்மண்ட் பிராய்டு என்ற உளவியலறிஞர் அகமுகம், புறமுகம் என்று கூறுவார். மனிதனின் அகப் போராட்டத்தின் விளைவு போர்களத்திதல் வெளிப்படுகிறது. விளைவு போராட்டங்கள், மரணம், மனசாட்சி வதைக்கப்பட்டு மன அமைதி கெடுகிறது. தன்னைப் போல் ஒவ்வொருவனும் பிறரை நேசிக்கக் கற்றுணர்ந்து நடந்தால் மனஅமைதி ஏற்படும். கார்ட்லுவின் என்பவர் மூன்று வித மனப் போராட்டங்களைக் குறிப்பிடுகிறார். அவையாவன: 1. போராட்டத்தை அணுகும் விதம். 2. போராட்டத்தை தடுக்கும் விதம், 3. போராட்டத்திற்கு எதிராக கைவிடும் அணுகுமுறை. மூன்று முறைகளிலும் மனிதன் சமத்துவ நிலையை நாடி சூழலுக்கேற்றவாறு அணுகுமுறைகளை அமைதியாகத் தேர்ந்தெடுத்து பணியைச் செய்தால் தவறான போராட்டங்கள் தவிர்க்கப்படும் என்கிறார். மனிதனின் உளவியல் வளர்ச்சியின் பலனாக அகப் போராட்டங்கள் நிழ்வதாக எரிக்சன் என்ற உளவியல் நிபுணர் எடுத்துரைகின்றார். அமைதியான தியான நிலையில், தெளிவான உள்ளத்தில் ஒளி பிறக்கும். அமர்ந்திருக்கும் பொழுது எல்லா ஜீவன்களும் மகிழ்ச்சியாக எந்தவிதத் தொந்தரவும் இல்லாமல் இருக்கின்றன என எண்ணுவதுடன், எவரிடத்திலும், எனக்கு பயமோ, வெறுப்போ அச்சுறுத்தலோ இல்லை என்று எண்ணுதல், அமைதியை நோக்கி இணைந்த தியானத்தில், இறைவனை நினைத்து பூமியின் சமாதானத்திற்காக வேண்டுதல். இந்த தியானத்தையே புத்தர், இயேசு, காந்தியடிகள் செய்தனர். உலகம் தர இயலா உள்ள அமைதியை இறைவன் மனிதனுக்கு வரப்பிரசாதமாக இலவசமாக அளிக்கின்றான். அதனால் இறை தியானம் மனிதருக்கு அவசியமாகின்றது.

### 4.3.2 புரிந்துகொள்ளுதல் (Understanding)

ஒருவரையொருவர் அனுபவத்தினடிப்படையில் புரிந்துகொள்ளாமலும் மதித்து நடவாமலும் சுயநல வாழ்க்கையை மட்டுமே கருதி, பொறுமையை இழந்து, அறிவையும் ஆன்ம ஆற்றலையும் உணராமல், படைப்பின் மகத்துவத்தை உணராமல், பாதுகாப்பை கொடுப்பதை விட்டுவிட்டு, அழிவை நோக்கி, பயணம் செய்வதாலேயே எங்கும் போர் நிகழ்கிறது. எல்லா மதங்களுமே, வாழ்வில் மனிதன் கடைபிடிக்க வேண்டிய பொறுமையையே வலியுறுத்துகின்றது. அன்பு, கருணை, இரக்கம், பரிவு, சகிப்புத்தன்மை, மனிதநேயம், பிறருக்கு உதவுதல் ஆகிய உயரிய கொள்கைகளையே இறைக் கொள்கைகளாக பொறுமையின் தூண்களாக மதங்கள் பறைசாற்றுகின்றன.

### 4.3.3 சகிப்புத்தன்மை **(Tolerance)**

‘‘தாயனவள் தன் ஒரே மகவிடம் எவ்வாறு அன்பு செலுத்துகிறாளோ, அதே போல் எல்லோரிடத்தும் மனித நேயத்தை கடைப்பிடி’’.

- புத்தர்

ஒவ்வொரு நாளும் கிடைக்கும் இருபத்திநான்கு மணிநேரமும் ஒவ்வொரு வினாடிகளையும் பொறுமையோடு, அன்போடு, இரக்கத்தோடு வாழ இறைவனிடம் தியானிக்க வேண்டும். மனிதர்கள் பிரச்சினைகளை சகிப்புத்தன்மையோடு எதிர்கொள்ளல் அல்லது பதிலளித்தல்.

### 4.3.4 ஒற்றுமை **(Solidarity)**

இந்திய நாட்டில் பல வேற்றுமைகள் காணப்பட்டாலும் இந்தியர்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். இந்நாட்டில் ஒவ்வொருவரும் முதலில் முக்கியமாக தான் ஒரு இந்தியன் என்று உணர்ந்து ஒற்றுமையுணர்வுடன் வாழ்கின்றனர். இது தேசிய ஒருமைப்பாட்டினை வளர்க்கிறது. இத தவிர வேறு சில காரணிகளும் தேசிய ஒருமைப்பாட்டினை வளர்க்கின்றன.

1. இந்தியாவின் தொடர்ச்சியான புவியியல் அமைப்பும் அதன் பாதுகாப்பும்.
2. பண்பாட்டு பாரம்பரியம் மற்றும் பண்பாட்டு ஒற்றுமை.
3. பரந்த மனப்பான்மையும் மற்றும் சமயக் காழ்ப்புணர்ச்சி இன்மையும்.
4. இந்திய அரசியலமைப்பின் சமய சார்பற்றதன்மை.
5. இந்திய தேசிய சின்னங்கள், கொடி மற்றும் தேசிய கீதம்
6. அனைத்து இந்தியர்களின் நல்வாழ்விற்கான பொதுவான பொருளாதார உணர்வுகள்.
7. நவம்பர் 19ம் நாளினை, ஒவ்வொரு ஆண்டும் தேசிய ஒருமைப்பாட்டு தினமாக கடைப்பிடித்தல், சுதந்திர தின விழா, குடியரசு தின விழா மேலும் தேசிய பண்பாட்டு விளையாட்டு நிகழ்ச்சிகள் ஆகியன ஒருமைப்பாட்டினை வளர்க்கின்றன.

## 4.4 அஹிம்சைக்கான கல்வி (Education for Non-Violence)

அஹிம்சையைக் குறித்த ஆன்றோர் வாக்குகள் அளவிடற்கரியன:

நீதி, நேர்மை, உண்மை, பொறுமை ஆகிய உயர்குணங்கள் அஹிம்சையின் நான்கு தூண்களாகும். 'வெறுப்பினால் வெறுப்பை மேற்கொள்ளாதே, பொறுமையினால் வெல்க' என மொழிந்தார் கிருஷ்ணர். உலக இரட்சகர் இடது கண்ணத்தையும் திருப்பக்காட்டு என்றார். பொய்யா மொழிப் புலவராம் திருவள்ளுவரும், இன்னா (துன்பம்) செய்தாரை தண்டித்தல் அவர் நாண (வெட்கப்படும்படியாக) நன்னயம் செய்துவிடல் என்று கூறியதோடு, 'இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு என்று கூறுகிறார். சான்றோர்களுக்கு அன்பு, நாண் (பழிபாவங்களுக்கு அஞ்சுதல்), ஒப்புரவு, கண்ணோட்டம் ஆகிய நான்கு குணங்களும் சால்பூன்றிய தூண்களாகக் கூறிச் செல்கிறார். 'வாளை எடுத்தவன் நிச்சயம் வாளால் மடிவான்' என்று விவிலியம் கூறுகிறது. கத்தியை தீட்டி பிரச்சனைக்கு தீர்வு காணாமல், புத்தியைத் தீட்டி பொறுமையாக வாழத் தெரிவதே புத்திசாலியின் விவேகமான பண்பு.

**1. சத்தியம்**

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் சத்தியத்தை கடைப்பிடித்து, நல்ல முறையில் நடந்தால், எந்த ஒரு நாட்டிலும், வன்முறைகள் நடக்க வாய்ப்பில்லை. (உ.ம்.) காந்தியடிகள் வாழ்க்கை, ஏசுபிரான் வாழ்க்கை.

**2. அஹிம்சை**

அஹிம்சை முறையில் நல்வழியில் நடந்து எதையுமே வன்முறையின்றி கையாண்டு செயல்படுதல் மிகவும் இன்றியமையாதவை ஆகும். (உ.ம்.) காந்தியடிகள்.

**3. திருடாமை**

உலகில் உள்ள அனைத்து மக்களும் திருடாமல் தனது உழைப்பில் வாழ்ந்தால் வன்முறையை அறவே ஒழித்து விடலாம்.

**4. உடைமை சேர்க்காமை**

உடைமை சேர்க்காமை என்பது நாம் உடைமைகளை சேர்த்து அதைக் கொண்டு போகப் போவதில்லை. எனவே உடைமை சேர்ப்பதை விட, அதனை விட்டு எளிமையான முறையில் வாழலாம். பெருந்தலைவர் காமராஜரை உதாரணமாகக் கூறலாம்.

5. **உடலுழைப்பு**

ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேல், நாம் நமது சொந்த உடலுழைப்பில் தான் வாழ வேண்டும். அப்படி வாழ்ந்தால், அமைதியாக வன்முறையின்றி வாழலாம்.

6. **சுதேசி மனப்பான்மை**

சுதேசி மனப்பான்மையுடன் வாழ்வது என்பது, நம்நாட்டின் மதிப்பினை பற்றி அறிந்து செயல்படுவது ஆகும். இதன் மூலம் வன்முறையைத் தடுக்கலாம்.

7. **அஞ்ஞாமை**

எந்த ஒரு செயலுக்கும் அஞ்சாமல் வாழ்ந்து காட்ட வேண்டும். அப்படி வாழ்வதன் மூலம் மனிதன், எதிலும் சிறந்து விளங்க முடியும். எனவே இதன்மூலம் வன்முறையைத் தடுக்க நிறைய தீர்வுகள் உண்டு.

8. **தீண்டாமை உணர்வு அகற்றுதல்**

இன்றைய சூழ்நிலைகளில், தீண்டாமை உணர்வு அனைத்து மாணவர்களிடம் அகற்றப்பட்டு வந்துள்ளது. இதன்மூலம் நிறைய நன்மைகள் ஏற்பட வாய்ப்புண்டு. வன்முறைகளும் தடுக்கப்படுகின்றன.

9. **சர்வ சமய ஒற்றமை**

சமய ஒற்றுமை இருந்தால் தான், நாம் அனைத்து நிலையில் ஒன்று கூடி ஒற்றுமையை வெளிப்படுத்தி வன்முறையை தடுக்க முடியும்.

10. **புலனடக்கம்**

வன்முறையை தடுக்க புலனடக்கம் கண்டிப்பாக தேவை, ஆயுதமின்றி ஐம்புலன்களையும் அடக்கி செயல்பட வேண்டும்.

மேற்கூறிய செயல்கள் அனைத்தும் வன்முறையைத் தடுக்க உதவுகிறது. இது வன்முறையைத் தடுப்பதில் நாம் அனைவரும் பெரும் பங்கு வகிக்கின்றோம் என்பதைத் தெளிவாக்குகிறது. எனவே அனைத்து பள்ளிகளில் செயல்படுத்தப்பட வேண்டும்.

## 4.5 யுனெஸ்கோ (UNESCO)

ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (United Nations Educational Scientific and cultural Organisation (UNESCO)) எனப்படும் யுனெஸ்கோ 1946ல்

உருவாக்கப்பட்டது. நாடுகளிடையே கல்வி மற்றும் பண்பாடு உறவுகளை வளர்த்து அறிவியல் மேம்பாட்டையும் கொண்டுவர இவ்வமைப்பு முயலுகிறது. இவ்வமைப்பில் 195 உறுப்பு நாடுகள் இருக்கின்றன. இதன் தலைமை இடம் பாரிசில் உள்ளது.

''பூசல்கள் மக்களது மனங்களில் தோன்றுகின்றன. எனவே அமைதிக்கான அரண்கள் மக்களது மனங்களிலே அமைக்கப்பட வேண்டும்'' என யுனெஸ்கோ அமைப்பின் ஓர் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

**யுனெஸ்கோ அமைதிக் கலாச்சாரத்தின் திட்டங்கள் (UNESCO Culture of Peace Programmes)**

- ❖ நேர்மறையாக சிந்தனை செய்தல்.
- ❖ அஹிம்சை வழியில் சிந்தித்தல்.
- ❖ உள்ளத்தில் அமைதியைக் காணுதல்.
- ❖ மனித மேன்மையைப் போற்றுதல்.
- ❖ சமுதாயத்தில் அமைதியை உருவாக்குதல்.
- ❖ கருத்து வேறுபாடுகளை அமைதியான வழியில் தீர்த்தல், கருணை கொண்டு தீங்கு செய்யாதிருத்தல்.

## 4.6 பன்னாட்டு அமைதி மற்றும் பாதுகாப்பு (International Peace and Security)

ஐ.நா. அமைப்பின் நிர்வாகப் பிரிவு போன்று செயல்படுவது பாதுகாப்புச் சபையாகும். இதைப் பற்றிச் சாசனத்தின் 23வது உறுப்பிலிருந்து 32 வரையிலான உறுப்புகள் கூறுகின்றன. இதில் மொத்தம் 15 உறுப்பு நாடுகள் உள்ளன. பிரிட்டன், பிரான்சு, அமெரிக்க ஐக்கிய நாடுகள், சோவியத் ஒன்றியம் மற்றும் சீனா ஆகிய ஐந்து நாடுகளும் நிலையான உறுப்பு நாடுகளாகும். முற்ற நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளைப் பொதுச் சபை இரண்டாண்டு பதவிக் காலத்திற்குத் தேர்ந்தெடுக்கிறது. அவ்வாறு தேர்ந்தெடுக்கும் போது பரவலாக உலகின எல்லா பகுதிகளுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கும் வகையில் பார்த்துக் கொள்ளப் படுகிறது. ஒவ்வொரு உறுப்பு நாட்டிற்கும் ஒரு வாக்குத்தான் உண்டு பாதுகாப்புச் சபை எப்பொழுதும் செயல்படும் அமைப்பு. எனவே இதன் உறுப்பு நாடுகள் தமது பிரதிநிதிகளை நிரையாகத் தலைமையகத்தில் வைத்திருக்கின்றன. நிலையான உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை பல நாடுகள் எழுப்பி வருகின்றன. இந்தியாவும் நிலையான உறுப்பினராக முயற்சி செய்து வருகின்றது.

**இராணுவப் பணிக்குழு**

பாதுகாப்புச் சபை பன்னாட்டு அமைதி மற்றும் பாதுகாப்பைப் பராமரிப்பதே முக்கியமான பணியாகக் கொண்டுள்ளது. ஏதாவது இரு நாடுகளுக்கிடையில் எழுகின்ற பிரச்சினையில் பேச்சு வார்த்தை, சமரச முயற்சி, ஆட்சித் துறைத் தீர்ப்பு போன்ற அமைதியான வழிமுறைகளில்

பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள இச்சபை கேட்டுக் கொள்ளலாம். பன்னாட்டு அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு ஊறுவிளைவிக்கக் கூடிய எந்தப் பிரச்சினை அல்லது சூழ்நிலையைப் பற்றியும் பாதுகாப்புச் சபை புலனாய்வு செய்யலாம். ஆமைதியான வழிமுறைக்கு ஒத்து வராமல் வலுச் சண்டைக்குச் செல்லுகின்ற நாட்டின் மீது சில நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரத்தை உறுப்புகள் 41, 42 ஆகியவை வழங்குகின்றன. அத்தகைய நாட்டின் மீது வாணிபம், பொருளாதாரம், போக்குவரத்து போன்றவற்றைத் தடை செய்கின்ற நடவடிக்கையை இச்சபை மேற்கொள்ளலாம். அவசியம் ஏற்பட்டால் பிரச்சினைக்குள்ளான இடத்திற்கு ஐ.நா. அமைப்பு தனது அமைதிப் படையை அனுப்பி வைக்கலாம். அத்தகைய அமைதிப் படையை உருவாக்கப் பாதுகாப்புச் சபை வேண்டுகிற நேரத்தில் அனைத்து உறுப்பு நாடுகளும் தங்களது படைப் பிரிவுகளைத் தேவையான அளவு கொடுத்துதவ வேண்டும் எனச் சாசனம் கூறுகின்றது. அத்தகைய இராணுவச் செயல்முறைகளில் பாதுகாப்புச் சபைக்கு உதவ ஒரு இராணுவப் பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

**மறுப்பாணை அதிகாரம்**

பிராந்திய அமைப்புக்களை ஊக்குவித்து, அவற்றின் வாயிலாகப் பிரச்சினைகைளை அமைதியாகத் தீர்த்துக் கொள்வதைப் பாதுகாப்புச் சபை ஊக்குவிக்க வேண்டும். படைக் குறைப்புத் தொடர்பான முயற்சிகளை மேற்கொள்வது, பாதுகாப்புச் சபையின் முயற்சிகளை மேற்கொள்வது பாதுகாப்புச் சபையின் முக்கியமான பொறுப்புகளில் ஒன்றாகும். இச்சபை பொதுச் சபையுடன் பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தையும், பன்னாட்டு நீதிமன்றததின் நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தையும் பகிர்ந்து கொள்கிறது. உறுப்பினர்களைச் சேர்த்தல் மற்றும் நீக்குதல் தொடர்பாகவும் இவ்விரு அமைப்புகளும் அதிகாரம் பெற்றுள்ளன.

ஐ.நா. வின் சாசனத்தின் 27-ஆவது உறுப்புப் பாதுகாப்புச் சபையில் வாக்களிப்பு பற்றிக் குறிப்பிடுகிறது. சாதாரணமான வழிமுறை தொடர்பான விஷயங்களில் ஒன்பது உறுப்பு நாடுகளின் ஆதரவுடன தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். சாதாரண வழிமுறைகள் தொடர்பற்ற முக்கியமான விஷயங்களில் ஆதரவு தரும் ஒன்பது நாடுகளின் வாக்குகளில் நிரந்தர உறுப்பு நாடுகள் அனைத்தும் அளிக்கும் ஒப்புதல் வாக்கும் இருத்தல் அவசியம் என்பதை இவ்வுறுப்பு வலியுறுத்துகிறது. இதன்படி நிலையான உறுப்பு நாடுகளில் ஏதேனும் ஒரு நாடு மறுப்பு வாக்களித்தால் பெரும்பான்மை பலம் இருந்தாலும் அத்தீர்மானம் செல்லாது. இதனை நிரந்தர உறுப்பினரின் மறுப்பாணை அதிகாரம் எனக் குறிப்பிடுகின்றனர். இந்த மறுப்பாணை அதிகாரம் (Veto power) ஐ.நா. அமைப்பினையே பலவீனப்படுத்துவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

# அலகு – V

## அணுகுமுறைகள் மற்றும் நுட்பங்கள்

## (Approaches and Strategies)

### 5.1 மூன்று வகையான கல்வி அமைப்புகள்

மாணவர்களுக்கு மதிப்புணர்வுகளைக் கற்பிக்க மூன்று வகையான கல்வி அமைப்புகள் உள்ளன. அவை

1. முறையான கல்வி (Formal Education)
2. பள்ளிசாராக் கல்வி (Nonformal Education)
3. ஒழுங்குமுறைசாராக் கல்வி (Informal Education) முதலியன ஆகும்.

### 1. முறையான கல்வி (Formal Education)

முறையான கல்வி என்பது பள்ளி மற்றும் கல்லூரிகளில் கற்பிக்கப்படும் கல்வியமைப்பாகும். முறையான கல்வி அமைப்பில் மதிப்புணர்வைக் கற்பிப்பதற்கான நோக்கங்கள், கல்வி நிறுவனங்களில் பின்பற்றப்படும் பாட ஏற்பாடு மற்றும் இணை கலைத் திட்டங்கள், அவற்றைக் கற்பிக்கும் முறைகள், மதிப்பீடு செய்யும் முறைகள், நிறுவன சூழல் முதலியன மதிப்புணர்வுக் கல்வியினை மாணவர்களுக்குத் திறம்படிப் போதிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே பள்ளி மற்றும் கல்லூரிகளில் பின்பற்றப்படும் கலைத்திட்டங்கள், இணை கலைத்திட்டங்கள் கல்வித் துறையினரால் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட வேண்டும். கல்வி நிறுவனங்களும் அவற்றை மதிப்புணர்வுக் கல்வியினை போதிப்பதற்குத் திறம்படி பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் பாடங்களைக் கற்பிக்கும் போது அதனூடே மதிப்புணர்வுகளையும் கற்பிக்க வேண்டும். (உ.ம்) உயிரியல் ஆசிரியர் பாடத்தினைக் கற்பிக்கும்போது அதனுள் புதைந்திருக்கும் அறிவியல் மதிப்புகள், நுண்ணறிவு மதிப்புகளை எடுத்துரைக்க வேண்டும். கல்வி நிறுவனங்களின் விதிமுறைகள் மனித மதிப்புணர்வுகளுள் சார்பற்ற மதிப்புகளான ஒழுக்கம், நேரந்தவறாமை, வாய்மையினைப் பாதுகாப்பதாக அமைக்கப்பட வேண்டும்.

### 2. பள்ளிசாராக் கல்வி (Nonformal Education)

நவீன உலகில் வழக்கமான முறையிலான கல்வியினைத் தவிர, பள்ளி சாராக் கல்வி முறை பல்வேறு வகைகளில் செயல்படுத்தப்படுகிறது. இதற்கென தொலைக்காட்சி அச்சகம், ஒட்டும் படங்கள், கிராமியப் பாடல்கள் முதலான பல ஊடகங்கள் அரசாங்கத்தால் பயன்படுத்தப்படுகின்றன. தனியார் தொண்டு அமைப்புகளும் மதிப்புணர்வுகளைக் கற்பிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. செய்தித்தாள்கள், பத்திரிகைகள் மற்றும் கண்காட்சிகள் மதிப்புணர்வுக் கல்வியினைப் போதிப்பதற்கென பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் வழியே மனித மதிப்புணர்வுகளின் முக்கியத்துவம் மக்களுக்குத் தெளிவாக உணர்த்தப்படுகின்றது.

### 3. ஒழுங்குமுறைசாராக் கல்வி (Informal Education)

இக்கல்வி அமைப்பில் தகவல் வழி (அ) அஞ்சல் வழியின் துணை கொண்டு ஒழுங்குமுறை சாராக் கல்வி மதிப்புணர்வுகளைப் போதிக்கின்றது.

## 5.2 மதிப்புணர்வுகள் வளர்ச்சிக்கான அணுகுமுறைகள் (Approaches to Values Development)

இம்மூன்று வழிமுறைகளின் துணை கொண்டு இந்திய அரசாங்கமானது மதிப்புணர்வுக் கல்வியினைக் கற்பிக்கின்றது. மேலும் மதிப்புணர்வுக் கல்வியினைத் திறம்பட கற்பிப்பதற்குக் கல்வியாளர்களும் உளவியல் அறிஞர்களும் மூன்று வகையான அணுகுமுறைகளைப் பரிந்துரைத்துள்ளனர். அவை

1. மதிப்புணர்வினைக் கற்பிக்கும் அணுகுமுறை (Value Inculcation Approach)
2. மதிப்புணர்வினைத் தெளிவாக்குகின்ற அணுகுமுறை (Value Clarification Approach)
3. மதிப்புணர்வினைப் பகுத்தாராயும் அணுகுமுறை (Value Analysis Approach)

இவ்வணுகு முறைகளைப் பற்றிய விளக்கத்தினை இப்போது காணலாம்.

### 1. மதிப்புணர்வினைக் கற்பிக்கும் அணுகுமுறை (Value Inculcation Approach)

கல்வி நிறுவனங்களில் மதிப்புணர்வினை நேரிடையாகவும் மறைமுகமாகவும் மாணவர்களுக்குக் கற்பிக்கின்றனர். இதனை மதிப்புணர்வினைக் கற்பிப்பதற்கான எளியதொரு முறையாகக் கல்வியாளர் கருதுகின்றனர்.

**(அ) நேரிடையாகக் கற்பித்தல்**

**காலை வழிபாடு (Morning Prayer)**

அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் காலையில் நடத்தப்படுகின்ற வழிபாட்டுக் கூட்டம் மாணவர்களிடையே மதிப்புணர்வைக் கற்பிப்பதற்கான நேரிடையான இணை கலைதிட்டமாகும். இதில் இடம் பெறுகின்ற தமிழ்த்தாய் வாழ்த்து, அனைத்து சமயப்பாடல்கள், சிந்திப்பதற்கான தகவல், ஓரிரு நிமிடங்களுக்குரிய தியானம், அன்றைய செய்திகளை வாசித்தல், தேசிய கீதம் முதலியன மாணவர்களுக்கு மதிப்புணர்வைப் போதிக்கின்றன. மனித மதிப்புணர்வுகளான ஒழுக்கம், கட்டுப்பாடு, சமய நல்லிணக்கம் போன்றவற்றைக் கற்பிக்கின்றன. இதன் மூலமாக மாணவர்களுக்குக் காலை வேளையில் மன அமைதியும், நிம்மதியும் ஒருங்கே கிடைக்கின்றன. காலை வழிபாட்டில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டியது அவசியமாக்கப்பட்டதால் நேரந்தவறாமையினைப் பற்றி மாணவர்கள் அறிந்து கொள்கின்றனர்.

**அமைதியாகத் தியானித்தல் (Silent Meditation)**

காலை வழிபாட்டின் போது மாணவர்கள் ஓரிரு நிமிடங்கள் அமைதியாக இறைவனை தியானிக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர். இதன் மூலம் அவர்களின் கவனத்தினை ஒருமுகப்படுத்த முடிகிறது. இதனால் அவர்களின் நினைவாற்றல், கவனிக்கும் திறன், கூர்ந்து ஆராயும் திறன் வளர்கிறது, மன அழுத்தமானது குறைகின்றது. தத்துவவியல் அறிஞர்களின் கருத்தின்படி ஒருவர் அமைதியாக இருக்கும்போது தன்னுடைய சொல், செயலினை மீள்

பார்வை செய்து மேம்படுத்திக் கொள்ள முடியும். உலகில் புகழ் பெற்று விளங்கிய அறிவியல் அறிஞர்கள், கலைஞர்கள், துறவிகள், இசை வல்லுநர்கள் அமைதியைப் பெரிதும் விரும்பியவர்களாவர்.

காலை வழிபாட்டின்போது மட்டுமின்றி, ஆசிரியர்கள் மாணவர்களை வகுப்பறையில் வகுப்பு ஆரம்பிப்பதற்கு முன்னரும், இறுதியிலும் இரண்டு நிமிடங்களுக்கு அமைதியாகத் தியானிக்கும் படி பயிற்சி அளித்து இம்முறையினை நடைமுறைப்படுத்தலாம். அவ்வாறு மாணவர்கள் தியானிப்பதற்கு முன்னர் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பொருளினை (உ-ம்) மலர், விளக்கு, இறைவனின் உருவம் மனதில் நிலைநிறுத்துமாறு கூறலாம். இதனால் மாணவர்களின் மனத்தினை எளிதில் பாடத்தில் நிலைநிறுத்த முடியும்.

உடற் கல்வி வகுப்பின் மூலமாக மாணவர்கள் உடற் பயிற்சிகளின் மூலம் உடல் நலம், மனநலம் பெற்றவர்களாகத் திகழ்கின்றனர். இதன் மூலமாக அவர்களின் தன்னம்பிக்கை, தலைமைப் பண்பு, சுய கட்டுப்பாடு, புலனடக்கம், ஒழுக்கம், குழு உணர்வு பெருகுகிறது. கல்வி நிறுவனங்களில் உள்ள சமூக சேவை அமைப்புகளின் மூலம் மாணவர்களிடையே சமூக சேவைக்குரிய நேரிடையான மனப்பான்மை உருவாகிறது. (உ-ம்) சாரணர் இயக்கம், செஞ்சிலுவை இயக்கம், தேசிய சமூக சேவை அமைப்பு முதலியன. சமூகத்திற்குப் பயன்படுகின்ற ஆக்கப்பூர்வமான பணிக்குரிய வகுப்புகளின் (Socially Useful Productive Work (SUPW)) மூலமாக மாணவர்கள் சிறு தொழில்கள், சிறு கைவினைப் பொருள்கள் செய்யக் கற்றுக் கொள்கின்றனர். இதனால் அவர்களின் கலையார்வம், கைத் தொழில் ஆர்வம் அதிகரிக்கிறது.

**(ஆ) மறைமுகமாகக் கற்பித்தல்**

1. போட்டிகளை நடத்துதல்: கல்வி நிறுவனங்களில் மதிப்புணர்வுகள் தொடர்பான கட்டுரை, கதை, ஓவியப் போட்டி போன்றவற்றை நடத்துவதன் மூலமாக மாணவர்களிடையே மதிப்புணர்வு பெருகுகிறது.
2. நாடகங்களை அரங்கேற்றுதல்: கல்வி நிறுவனங்களுக்கான விழாக்களின் போரு மதிப்புணர்வு தொடர்பான நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றன.
3. மனிதர்களின் உடல்நலம் பேணலுக்கான அவசியத்ததை வலியுறுத்துகின்ற நடவடிக்கைகள்: பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்களின் உடல் நலம் கருதி மருத்துவ பரிசோதனை நடத்தப்படுகிறது. பள்ளி வளாகம், வகுப்பறை தூய்மையாக வைப்பதில் நிர்வாகம் தனிக் கவனம் செலுத்துகிறது. இரத்ததான முகாம்கள் நடத்தப்படுகின்றன.
4. கல்வி நிறுவனங்களில் நடத்தப்படுகின்ற புத்தகக் கண்காட்சிகள் மாணவர்களிடையே மட்டுமின்றி பொதுமக்களிடையே இலக்கிய ஆர்வம், வாசிக்கும் திறன், ஆர்வம் பெருகுகிறது.
5. கல்வி நிறுவனங்களில் நடத்தப்படுகின்ற அறிவியல் கண்காட்சி, சந்தைகள் மாணவர்களிடம் அறிவியல் மனப்பான்மை, ஆர்வத்தினை வளர்க்கின்றன.

6. அரசாங்க முக்கிய நாள்களான தலைவர்களின் பிறந்த நாள், சுதந்திர தினம், குடியரசு தினம், அறிவியல் தினம், ஆசிரியர் தினம் போன்றவற்றைப் பள்ளிகளில் கொண்டாடுவதன் மூலமாக மதிப்புணர்வுகள் மாணவர்களிடையே வளர்கின்றன.
7. கல்விச் சுற்றுலாவிற்கு மாணவர்களை கல்வி நிறுவனங்கள் அழைத்துச் செல்வதன் மூலமாக அவர்களிடையே இந்திய நாட்டின் சுற்றுலாத் தலங்களின் முக்கியத்துவம் பற்றிய அறிவாற்றல், அழகுணர்வு பெருகுகிறது. சுற்றுலாவிற்குச் செல்வதால் அவர்களுக்குப் பொது அறிவு அதிகரிக்கிறது.

**இ) மதிப்புணர்வுகளைக் கற்பிப்பதற்கான பிற சிறப்பு முறைகள் (Other Speical Techniques for Teaching Values)**

மாணவர்களிடையே மதிப்புணர்வுகளை ஆசிரியர் மேலும் பல வழிமுறைகளைக் கொண்டு கற்பிக்கலாம். அவை,

1. தற்செயலாக நடைபெறுகின்ற சம்பவங்களின் துணைக் கொண்டு மதிப்புணர்வுகளை மறைமுகமாக மாணவர்களுக்குக் கற்பிக்கும் முறை (Indirect Incidental Approach)
2. ஆசிரியர் திட்டமிட்ட செயல்பாடுகளின் துணை கொண்டு மாணவர்களுக்கு மதிப்புணர்வுகளை மறைமுகமாகக் கற்பிக்கும் முறை (Indirect Planned Approach)
3. மதிப்புணர்வுகள் கற்பிக்கக் கூடிய அனைத்து வழிகளையும் அறிந்து, அவற்றைத் தகுந்த வகையில் பயன்படுத்தி மாணவர்களை நன்னெறிப்படுத்தும் முறை (Integrated or Ecletic approach) இதனை ஒருங்கிணைந்த அணுகுமுறை என்றும் கூறுவர். இம்முறைகளுக்கான விளக்கம்:

**1. தற்செயலாக நடைபெறுகின்ற சம்பவங்களின் துணைகொண்டு மதிப்புணர்வுகளை மறைமுகமான மாணவர்களுக்கு கற்பிக்கும் முறை: (Iindirect Incidental Approach)**

இம்முறையில் ஆசிரியர் இயல்பாக நடக்கக் கூடிய சம்பவங்களை தனக்கு சாதகமாக்கிக் கொண்டு மாணவர்களை நன்னெறிப்படுத்துவர். (உ-ம்) பள்ளி வளாகத்தில் உடற் கல்வி வகுப்பின் போது விளையாடிக் கொண்டிருக்கும் மாணவர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்படுகிறது. அப்போது ஆசிரியர் அவர்களை சமாதானம் செய்து அவர்களிடையே குழு உணர்வினை ஏற்படுத்துதல் இதற்கான உதாரணமாகும்.

**2. ஆசிரியர் திட்டமிட்ட செயல்பாடுகளின் துணைகொண்டு மாணவர்களுக்கு மதிப்புணர்வுகளை மறைமுகமாகக் கற்பிக்கும் முறை: (Indirect Planned Approach)**

பள்ளியல் பாடஏற்பாடு, இணகலைத் திட்டங்களில் பெரும்பான்மையானவை திட்டமிடப்பட்டுச் செயல்படுத்தப்படும். அவற்றின் துணை கொண்டு ஆசிரியர் மாணவர்களுக்கு மதிப்புண்வுகளைக் கற்பிக்க முடியும். (உ-ம்) கல்விச் சுற்றுலாவிற்கு மாணவர்களை அழைத்துச் செல்வதற்கு முன்பு மாணவர்களை சீருடையில் குறிப்பிட்ட மணியளவில்

பள்ளிவளாகத்திற்கு வரச் சொல்வா். இதன் மூலம் மாணவா்களுக்கு ஒற்றுமை, ஒழுங்கு, நேரந்தவறாமை போன்றவை போதிக்கப்படுகின்றன. வரிசையில் மாணவா்களைச் செல்லுமாறு கூறுதல், ஆசிரியரின் கட்டுப்பாட்டில் இருக்கச் செய்தல், சுற்றுலாத் தலங்களின் முக்கிய தகவல்களைக் கூறுதல் போன்றவை மாணவா்களிடையே கட்டுப்பாடு, அறிவாற்றல், அழகுணா்வினைப் பெருக்குவதாகும்.

## 3. ஒருங்கிணைந்த அணுகுமுறையினைப் பயன்படுத்தி மாணவா்களை நன்னெறிப்படுத்தும் முறை (Integratd or Eclectic Approach For Teaching Values)

மதிப்புணா்வுகளைக் கற்பிப்பதற்கான முறைகளில் எது சிறந்தது என்று ஆசிரியா் தோ்வு செய்து பயன்படுத்துவதைக் காட்டிலும், அனைத்து முறைகளையும் அறிந்து கொண்டு அவற்றை மாணவா்களின் வயது, முதிா்ச்சி நிலைக்கேற்ப தகுந்த வகையில் ஒருங்கிணைத்துப் பயன்படுத்தி மதிப்பணா்வுகளைக் கற்பிக்க வேண்டும். இவ்வாறு மதிப்புணா்வுகளைக் கற்பிப்பதற்கான உதாரணங்கள் கீழ் அளிக்கப்பட்டு உள்ளன.

**உதாரணம் (1)**

**சுற்றுச் சூழல் மதிப்புணா்வைக் கற்பித்தல்**

(1) ஆசிரியா் காலை வழிபாட்டின் போது அன்றாடம் சுற்றுச் சூழல் தொடா்பான தகவல்களைக் கூறும்படி மாணவா்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

(2) நாடக வடிவில் சுற்றுச் சூழல் மதிப்புணா்வு தொடா்பான கதைக் கருவினை மாணவா்களைக் கொண்டு அரங்கேற்ற வேண்டும்.

(3) சிறப்புச் செயல் திட்டங்களாகச் சுற்றுச் சூழல் தொடா்பான தலைப்புகளைத் தோ்வு செய்யும்படி மாணவா்களை ஊக்கப்படுத்த வேண்டும். தாமும் சில தலைப்புகளை மாணவா்களுக்குப் பரிந்துரைக்கலாம்.

(4) பள்ளியில் சுற்றுச் சூழல் தொடா்பான கண்காட்சிகளை நடத்துதல். (உ-ம்) அறிவியல் கண்காட்சி, ஓவியக் கண்காட்சி, புகைப்படக் கண்காட்சி. அறிவியல் கண்காட்சியில் மாதிரிகளைக் கொண்டு சுற்றுச் சூழல் பாதுகாப்பின் அவசியத்தை விளக்கும்படி மாணவா்களுக்கு ஆசிரியா் ஆலோசனை தரலாம்.

(5) சுற்றுச் சூழல் மதிப்புணா்வு தொடா்பான ஆவண திரைப்படங்களைப் பள்ளியில் மாணவா்களுக்கு காட்டுதல்.

(6) அனைத்துப் பாடங்களையும் நடத்தும் போது ஆசிரியா்கள் அதனூடே சுற்றுச் சூழல் மதிப்புணா்வினைக் கற்பித்தல்.

(உ-ம்) ஆங்கிலப் பாடத்தில் மரத்தினைப் பற்றிய கவிதையையோ, உரைநடையையோ விளக்கும்போது ஆக்கப்பூா்வமான அதன் பயன்களையும் மாணவா்களுக்குக் கூடுதல் செய்தியாகக் கூறலாம். அறிவியல் பாடத்தின்போது விலங்கினங்கள், உயிரினங்களின் ஆக்கபூா்வமான பயன்களைக் கூற வேண்டும். (உ-ம்) யானையின் பயன்களாக பள்ளிப் பாடப்புத்தகத்தில் சுமை சுமப்பது, கோவில் யானையாக இருப்பது, யானையின் தந்தத்தினைக் கொண்டு கலைப் பொருள்கள் செய்யப்படுகின்றன என்றே செய்திகள் அதிக அளவில் கொடுக்கப்பட்டு உள்ளன.

ஆசிரியர் யானையின் பயன்களைக் கூறும் போது கூடுதல் செய்திகளாக யானையானது பிற விலங்கினங்களைக் காட்டிலும் அதிக தூரம் பயணம் செய்யக் கூடியது. இதனால் செடிகள், மரங்களிலிருந்து அது உண்ணுகின்ற பழங்களின் விதையின் வழியே நீண்ட தூரம் பழ வகைகளின் உற்பத்தி மறைமுகமாகப் பரவுகின்றது. மேலும் யானை காட்டின் வழியே நடந்து செல்லும் போது மரங்களிலிருந்து கிளைகளை உடைப்பதினால் தரையிலிருக்கும் தாவரங்களுக்கு சூரிய ஒளிக்கு வழி உண்டாகிறது என்பன போன்ற தகவல்களைக் கூற வேண்டும்.

(7) இணைகலைத் திட்டங்களான சாரணர் இயக்கம், தேசிய சமூக சேவை அமைப்பு வழியே மாணவர்களை மரம் நடுதல், சாலையைச் செப்பனிடுதல் போன்றவற்றில் ஈடுபடுத்த வேண்டும்.

(8) தாவரவியல் பூங்கா, அருங்காட்சியகத்துக்கு மாணவர்களைக் கல்விச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லல். மாசு கட்டுப்பாட்டு வாரியம், கழிவுப் பொருள்களிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு மாணவர்களை அழைத்துச் செல்லல்.

(9) மேல்நிலை வகுப்பு மாணவர்கள், உயர் கல்வி பயிலும் மாணவர்களைச் சுற்றுச் சூழல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளச் செய்தல்.

(10) உயிரியில் ஆய்வகத்திலும் ஆசிரியர் மாணவர்களின் துணை கொண்டு மீன் தொட்டியினை அமைத்துப் பராமரித்தல்.

(11) பள்ளியில் நடத்தப் பெறும் போட்டிகள் சுற்றுச் சூழல் தொடர்பான தலைப்புகளோடு தொடர்புடையனவாக நடத்துதல். (உ-ம்) பேச்சுப் போட்டி கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி.

(12) பள்ளியில் இயற்கைக் கழகத்தை நடத்துதல்.

(13) பள்ளியில் மாணவர்களின் துணை கொண்டு தோட்டம் அமைத்தல்.

(14) அறிவியல் ஆசிரியர் மாணவர்களுக்கு மண் புழுவினைக் கொண்டு இயற்கை உரம் தயாரித்தல் குறித்துச் செய்முறையின் மூலம் கற்பித்தல்.

(15) சுற்றுச் சூழல் தொடர்பான தினங்களைப் பள்ளியில் கொண்டாடுதல்.

(16) வல்லுநர்கள், பேராசிரியர்களைச் சிறப்புச் சொற்பொழிவாற்ற வரவழைத்தல்.

**உதாரணம் (2)**

**மதிப்புணர்வு: சமய நல்லிணக்கம்**

(1) ஆசிரியர் காலை வழிபாட்டில் மாணவர்களைத் தமிழ்த்தாய் வாழ்த்தினை பொதுவாகப் பாடச் செய்வது சமய நல்லிணக்கம் மற்றும் தேசிய மதிப்புணர்வுக்கும் வழி வகுக்கும்.

(2) நாடக வடிவில் சமய நூல்களில் கூறப்பட்டுள்ள நீதிக் கதைகளை மாணவர்களின் துணை கொண்டு அரங்கேற்றுதல்.

(3) ஆசிரியர் பாடத்தினூடே சமயங்களில் கூறப்பட்டுள்ள நன்னெறிகளை வலியுறுத்தல். (உ-ம்) சரித்திரப் பாடத்தினை நடத்தும்போது பல்வேறு சமயங்களைப் பற்றியும் சமய போதகர்கள் வலியுறுத்திய நன்னெறிகளையும் விளக்கிக் கூறலாம். தமிழ்ப் பாடத்தினை நடத்தும் போது இறை வழிப்பாட்டுப் பாடல்கள், செய்யுள்களின் வழியே சமயக் கதைகளையும், நன்னெறிகளையும் விளக்கிக் கூறலாம்.

(4) அனைத்து சமய பண்டிகைகளையும் பள்ளிகளில் ஆசிரியர்கள் மாணவர்களின் துணை கொண்டு கொண்டாடுதல். (உ-ம்) சில கல்வி நிறுவனங்களில் பள்ளி வளாகத்திலேயே தீபாவளி தினத்திற்கு முன்னதாக அனைத்து மாணவர்களும் ஆசிரியர்களின் கண்காணிப்பின் கீழ் பட்டாசுகளையும், மத்தாப்புகளையும் குறிப்பட்ட நாளில் கொளுத்தி மகிழ்வர். கிறிஸ்துமஸ் தினத்தன்று ஆசிரியர் அல்லது மாணவர் ஒருவர் சாந்தா குரூஸ் தாத்தாவினைப் போல வேடமணிந்து அனைவரையும் பள்ளி விழாவில் மகிழ்விப்பர். இறைவழிபாட்டுப் பாடல்களைக் குழுவினராகப் பாடுவர், கிறிஸ்துவின் பிறப்பானது நாடக வடிவில் அரங்கேற்றப்படும். இஸ்லாமியர் பண்டிகை தினத்தன்று அம்மதத்தினைச் சார்ந்த ஆசிரியர்கள் மாணவர்களும், திருகுரானின் வாசகங்களையும் அவற்றின் பொருளினையும் அனைவர்க்கும் காலை வழிப்பாட்டில் கூறுவர்.

**2. மதிப்புணர்வினைத் தெளிவாக்குகின்ற அணுகுமுறை (Value Clarification Approach)**

லூயிஸ் ராத்ஸ், மெர்ரில் ஹார்மின் மற்றும் ஸிட்னிசைமன் (L.S. Raths, M. Harmin மற்றும் S.N. Simon) முதலிய கல்வியாளர்கள் மதிப்புணர்வினைக் கற்பிப்பதற்கென இவ்வணுகுமுறையினைப் பரிந்துரைத்தனர். பெரும்பாலும் இம்முறையில் ஆசிரியர்கள் மாணவர்களின் நடத்தையினை உற்று நோக்கலின் மூலமாக மதிப்பிடுவர். மாணவர்கள் தம்முடைய சொல், செயல்களைத் தாமே மதிப்பீடு செய்து கொள்ளவும் கற்றுத் தரப்படுவார்கள். இம்முறையில் வகுப்பறையில் பாடங்களை நடத்தும் போது, அதனுடன் தொடர்புடைய மதிப்புணர்வினைக் குறித்து விவாதிக்குமாறு ஊக்கப்படுத்துவார். மாணவர்கள் தம்முடைய அனுபவங்கள், கேள்வி அறிவு, கற்றல் அனுபவங்களின் துணை கொண்டு தம்முடைய கருத்துகளை வெளிப்படுத்துவர். (உ-ம்) புவியியல் ஆசிரியர் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் முறைகளைப் பற்றி கேள்வி எழுப்பி, அதற்கான தீர்வினை மாணவர்கள் கலந்துரையாடி கூறுமாறு ஊக்குவிக்கலாம். இம்முறையானது மாணவர் சார்ந்த அணுகுமுறையாகும். இதில் மாணவர்களுக்கு கருத்து சுதந்திரம் அளிக்கப்படுகிறது. அவர்கள் சிந்திக்கும் ஆற்றல் ஊக்கப்படுத்தப்படுகிறது. ஆசிரியர் அவர்களின் கருத்துகளைக் கட்டுப்படுத்தவோ, மறுக்கவோ கூடாது. ஆக்கப்பூர்வமாக பிரச்சினைகளுக்கான தீர்வினைக் காண்பற்கும், மதிப்புணர்வு குறித்த கருத்தினைத் தெளிவுபடுத்தவும் மாணவர்களுக்கு உதவி புரிபவராக ஆசிரியர் இவ்வணுகுமுறையில் செயல்படுகிறார்.

இவ்வணுகுமுறையில் ஆசிரியர் மாணவர்கள் பின்பற்ற வேண்டிய விழுமங்கள் என்று எவற்றையும் பரிந்துரைப்பதில்லை. மாறாக வகுப்பறை விவாதங்களை அல்லது பயிற்சிகள் மூலம் மாணவர்கள் தாம் ஏற்கனவே கடைபிடித்திடும் விழுமங்கள் எந்த அளவு சரியானவை என்பது பற்றி தெளிவுபெறும்.

(எ.கா) எல்லா நேரத்திலும் உண்மையைப் பேசுவது இயலுமா? என்ற விழுமக் கேள்வியை ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்கள் முன் வைப்பார். இதற்கு மாணவர்கள் சிலர், சில நேரங்களில் உண்மையைப் பேசுவதால் பெரும்பான்மையானவர்களுக்கு தீங்கு நேரிடும் என்ற நிலை எழும்போது மௌனமான இருத்தலே நலம் என்று சிலர் வாதிடுவர். வேறு சிலரோ ‘எத்தகைய விளைவைப் பற்றியும் கவலைப்படாமல் எப்போதும் உண்மையைப்

பேச வேண்டும் என்பர் பலதரப்புக் கருத்துக்களையும் கேட்டறிந்த பின்னர் ஆசிரியர் உண்மை என்ற விழுமத்தின் தன்மையை ''வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமை இலாத சொலல்'' என்ற குறள் மூலம் விளக்கி மாணவர்கள் புரிந்து கொள்ள உதவிடுவர்.

### 3. மதிப்புணர்வினைப் பகுத்தாராயும் அணுகுமுறை (Value Analysis Approach)

கூம்ஸ் (Coombs) என்பவர் மதிப்புணர்வினைப் பகுத்தாராயும் மாதிரி உருவினை உருவாக்கினார். இதன் மூலமாக மதிப்புணர்வு நெருக்கடியினைக் குறித்த சூழலைக் கற்பனையாக ஆசிரியர் கூறுவார், அதற்கான தீர்வுகள் சிலவற்றையும் கூறுவார். அத்தீர்வுகளுள் ஏதெனும் ஒன்றினைத் தேர்வு செய்து மாணவர்கள் அதற்கான காரணத்தையும் நியாயப்படுத்திக் கூறவேண்டும். இம்மாதிரி உருவினைப் பயன்படுத்தி ஆசிரியர் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். இம்மாதிரி உருவானது ஏழு படிநிலைகளைக் கொண்டதாகும். அவை

1. ஆசிரியர் மாணவர்களுக்கு மதிப்புணர்வு நெருக்கடி ஏற்படக் கூடிய குழப்பம் நிறைந்த சூழலொன்றைக் கற்பனையாகக் கூறுதல் அவற்றிற்கான தீர்வுகளைக் கூறி அவற்றைத் தேர்வு செய்யும்படி கூறுதல் (Presenting the Dilema)
2. மதிப்புணர்வு நெருக்கடியுடைய சூழலின் தன்மையை மாணவர்கள் நன்குணர்ந்து, அவற்றிற்கான தீர்வினைத் தேர்வு செய்வதற்கு முன்பு, மதிப்புணர்வு குறித்த பிரச்சினையைப் பகுத்தாராய்தல் (Identifying and Clarifying Value Conflict)
3. மதிப்புணர்வு பிரச்சினைகளுக்கேற்ற தீர்வு மற்றும் அவற்றிற்கான மாற்று தீர்வினைக் குறித்து மாணவர்கள் கலந்து ஆலோசிக்கும்படி கூறல் (Asking for Conceivable Alternatives)
4. ஒவ்வொரு தீர்விற்குமான விளைவுகளுள் சாத்தியமானவற்றைப் பற்றிக் கூறும்படி செய்தல். (Asking for Possible Consequences for each Alternativeevidences to Support the Likelihodod of Consequences Occurring)
5. அவ்விளைவுகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகளை உதாரணங்களுடன் கூறும்படி கேட்டல். (Asking for Evidences to Support the Likelihodod of Consequences Occurring)
6. அப் பின்விளைவுகளை மதிப்பீடு செய்யும்படி கூறுதல். (Asking for Evaluating the Likely Consequences)
7. எந்தத் தீர்வானது அக்கற்பனையானது மதிப்புணர்வு நெருக்கடியுடைய சூழலுக்குப் பொருத்தமுடையதாக இருக்கும் எனத் தேர்வு செய்து, அதனை தேர்வு செய்ததற்கான காரணத்தை நியாயப்படுத்தும்படி கூறல். (Asking for Judgement as to Which Alternative Seems to be the Best and Why) இவ்வாறாகப் பயிற்சி அளிப்பதன் மூலம் ஆசிரியர் மாணவர்களை மதிப்புணர்வினைப் பகுத்தாராயக் கற்றுத் தருகின்றனர்.

இவ்வணுகுமுறையில் மாணவர்கள், ஒரு குறிப்பிட்ட விழுமத்தைக் கடைபிடிக்க வேண்டியதன் அவசியத்தை தத்தம் நோக்கில் அறநெறி சார்ந்த காரணங்களைக் கொண்டு

ஆராய்வர். (எ.கா) பள்ளிகளில் சக மாணவர்களை கேலி செய்யும் மாணவர்களுக்கு தண்டனையளித்தல் ஏன் அவசியமெனக் கருதப்படுகிறது? மதுபான உற்பத்தியையும், விற்பனையையும் ஏன் தடை செய்ய வேண்டும்? என்பவற்றிற்கு விழுமம் சார்ந்த அறநெறிகளின் படி பதிலளிப்பர்.

## 5.3 நுட்பங்கள் (Strategies)

**மதிப்புணர்வுகளைக் கற்பிப்பதற்கான நுட்பங்கள் (Strategies of Teaching Values)**

கல்வி நிறுவனங்களில் மதிப்புணர்வினை ஆசிரியர் கலைத்திட்டம் மற்றும் இணைகலைத்திட்டங்களின் துணை கொண்டு கற்பிக்கலாம்.

1. கலைத்திட்ட செயல்பாடுகள் (Curricular Activities)
2. இணை கலைத்திட்ட செயல்பாடுகள் (Co-Curricular Activities) ஆகும்.

**1. கலைத்திட்ட செயல்பாடுகள் (Curricular Activities)**

### 5.3.1 களப் பயணங்கள் (Filed Trips)

சிறப்பு மிக்க இடங்கள், கோவில்கள், தொழிற்சாலைகள், அணைக்கட்டுகள் போன்ற இடங்களுக்குச் சென்று உற்றுநோக்கல், ஆராய்ந்துப் பார்த்தல் அடிப்படையில் மாணவர்களுக்கு அதிக அளவு அறிவு வளர்கிறது. மாணவர்களை பள்ளிக்கு அடுத்து உள்ள இடங்களுக்கு மற்றும் கற்கும் பாடத்திற்கேற்ப உள்ள மற்ற இடங்களுக்கு அழைத்துச்சென்று காண்பித்தல் களப்பயணம் அல்லது புறவெளிப் பயணம் என்பதாகும். களப்பயணம் மூலமாகவும் மாணவர்களுக்குக் கற்றலில் நேரிடை அனுபவங்களை ஏற்படுத்தலாம். பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மனின் அரண்மனை, புகழ்பெற்ற கோயில்கள், கட்டிடங்கள் ஆகியவற்றைச் சென்று பார்க்கலாம். செயற்கைக்கோள் ஏவுதளமான ஸ்ரீஹரிகோட்டா, பிர்லா கோளரங்கம் போன்ற இடங்களில் விண்வெளி செயற்கை கோள்கள், கோள்கள், அண்டவெளி போன்றவற்றைப் பாடக்காட்சிகளின் மூலம் பார்க்கும்போது நாமே விண்வெளி செல்வது போன்ற உணர்வு நமக்கு ஏற்படுகின்றது. மாணவர்களுக்கு புறவெளி அறிவு இன்றியமையாதது ஆகும். ஒவ்வொரு வருடமும் மாணவர்களுக்கு செயல் வழியாக எளிதாக அறிவைக் கற்றுக் கொள்ள களப்பயணங்கள் எல்லா வகுப்பு நிலை மாணவர்களுக்கும் அவசியம் ஆகும்.

**பேராசிரியர் மாக்னி கருத்து**

பாடங்களில் மாணவர்கள் எளிதாக பாடப்பொருள் பற்றிய அறிவைப்பெற புறவெளிப் பயணங்கள் அவசியம். வரலாற்று பாடத்தில் அதிக அளவு வகுப்புக்கற்பித்தல் முறையை குறைத்து பலவித வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு வரலாற்று நிகழ்வுகள் பற்றிய களப்பயணம் சென்று பார்த்து பாடத்திற்கு விளக்கம் கூறி கற்பிப்பது மிகுந்த பலனைத் தரும் என்கிறார்.

**களப்பயணத்தின் படிகள் (Steps of Field Trips):**

1. களப்பயணங்களை திட்டமிடல்
2. களப்பயணம் செல்லுதல்
3. தொடர்பணி

1. **களப்பயணங்களை திட்டமிடல்**

பாடத்துடன் தொடர்பான புகழ்வாய்ந்த இடங்களுக்கு மாணவர்களை அழைத்துச் செல்லும் வகையில் திட்டமிடல் வேண்டும்.

**பார்க்க வேண்டியதை உற்று நோக்கல்**

- ➢ சிறப்பு மிக்க இடங்கள்
- ➢ நிகழ்வுகள்
- ➢ நினைவு சின்னங்கள்
- ➢ கோவில்கள்
- ➢ அணைக்கட்டுகள்
- ➢ ஆறுகள்
- ➢ தொழிற்சாலைகள்
- ➢ தேசத் தலைவர்களது வாழ்க்கை குறிப்புகள்
- ➢ அருங்காட்சியகம்

போன்ற இடங்களை நேரடியாக கவனித்து பார்க்கும் போது உற்று நோக்கும் திறன் வளர்ந்து மாணவர்களுக்கு நேரடியான அனுபவம் கிடைத்து கற்றல் சிறக்கும்.

2. **களப்பயணம் செல்லுதல்**

களப்பயணம் வெறும் பொழுது போக்கிற்காகச் செல்லாமல் களப்பயணம் சென்ற இடத்தில் என்னென்ன செய்திகளை பார்த்தார்களோ அவற்றை தெளிவாக உற்றுநோக்கி குறித்துக் கொள்ளல் வேண்டும்.

**அங்கு உற்று நோக்கியதை பதிவு செய்தல்**

- ➢ மாணவர்கள் நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடங்களை உற்று நோக்கி பெற்ற நேரடி அனுபவங்களை குறிப்பு எடுத்துக் கொள்ள வேண்டும்.
- ➢ மாணவர்கள் குறிப்பு எடுத்ததை பதிவு செய்தல் வேண்டும்.
- ➢ இவ்வாறு மாணவர்கள் பதிவு செய்வதால் நிகழ்வுகள் செய்திகளை திரிபின்றி உண்மையாக அறிந்து கொள்ள ஏதுவாகிறது.

3. **தொடர்பணி**

களப்பயணம் சென்று இடங்களைப் பார்த்து செய்திகளை, கருத்துகளை அறிந்த பின் மாணவர்களை அவர்கள் பார்த்தது, பார்த்து சேகரித்தது போன்ற செய்திகளை வகுப்பில் கலந்துரையாடி கட்டுரையாக எழுதி சமர்ப்பிக்கலாம். களப்பயணம் உயிரோட்டம் உள்ள மிக முக்கியத்துவம் வாய்ந்த கற்பித்தல் முறையாக விளங்குகிறது.

**பதிவு செய்ததை விளக்க முற்படுதல்**

- ➢ மாணவர்கள் உற்று நோக்கி பதிவு செய்ததை பதிவு செய்து கொள்ள வேண்டும்
- ➢ பதிவு செய்ததை விளக்கமாக குறிப்பிட்டு எழுதுவதால் மாணவர்கள் நிகழ்வுகள், கருத்துகளை உண்மையாக தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது.

**களப்பயணம் மேற்கொள்வதால் ஏற்படும் சிறப்புகள்:**

- ➢ களப்பயணம் மேற்கொள்வதால் மாணவர்களுக்கு நேரடி அனுபவம் கிடைக்கிறது

- சின்னங்கள், கோவில்கள், போன்றவற்றை நேரடியாகச் சென்று பார்ப்பதால் மாணவர்களுக்கு உற்று நோக்கும் திறன் வளர்கிறது.
- மாணவர்களுக்கு பாடலை படிக்கும் போது ஏற்படும் சந்தேகங்கள் குழப்பங்களுக்கு நேரடி அனுபவத்தின் மூலம் தெளிவு கிடைக்கிறது.

### 5.3.2 பாட கழகச் செயல்கள் (Curricular Club Activities)

பள்ளிகளில் அல்லது கல்லூரிகளில் ஆசிரியர், பாட கழகங்களில் உறுப்பினராகக் கொண்டு பாடச் செயல்களில் சிறப்பாக ஈடுபடும் குழு அமைப்புக்கு கழகம் (Club) எனப்படும். பாடக் கழகம் மாணவரிடையே பாட எண்ணத்தை உருவாக்கும். முன்னோர்களைப் பற்றி தெளிவாகத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் ஏற்படும்.

**கழகத்தின் நோக்கங்கள்:**

i. பாட மனப்பான்மையை மாணவரிடையே வளர்த்தல்.
ii. மாணவர்கள் பாடப்பகுதியை திட்டமிட்டு உருவாக்கல்.
iii. ஒலியொளி சாதனங்கள் பயன்படுத்தி கற்பித்தல் மற்றும் நாடகம், சுற்றுலா, அருங்காட்சியகம் அமைத்தல்.
iv. மாணவர்களிடையே கூட்டுறவு மனப்பான்மை, பொறுப்புணர்வு வளர்த்தல்.
v. மற்ற பள்ளி கழகத்துடன் கருத்து பரிமாற்றம் செய்தல்.
vi. தலைமைப்பண்பு சில செயல் திட்டங்களை மாணவர்களே செய்ய வழிகாட்டி உதவுதல்.
vii. குழு மனப்பான்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை மாணவரிடையே வளர்த்தல்.

**கழக அமைப்பு:**

கழகத்தின் தலைவராகத் தலைமை ஆசிரியரும், பொருளாளராக பாட ஆசிரியரும் இருப்பார். மாணவர்கள் அனைவரும் கழகத்தின் உறுப்பினர்கள் ஆவார். தலைமை ஆசிரியரின் கடமை கழகம் செம்மையாக செயல்பட அனைத்து வசதியும் செய்து கொடுத்து, ஒத்துழைப்புத் தருதல். கழகத்திற்கு வழிகாட்டியாகச் செயல்பட்டு வழிநடத்திச் செல்பவர் ஆசிரியர் ஆவார். மேலும் பாட ஆசிரியர் சிறந்த அறிவுரையாளராகவும் செயல்படுவார். பாட குழு செயல்பாடுகளை மாணவர் குழு குழுவாகச் செயல்பட்டு நிறைவேற்றுவர்.

**கழகத்தின் செயல்பாடுகள்:**

**தேசியத் திருநாட்கள்:**

சிறப்புமிக்க மாமனிதர்கள் பிறந்த நாள், அசோகர் திருநாள், புத்தர் திருநாள், கப்பலோட்டிய தமிழன் திருநாள், வ.உ.சிதம்பரம் திருநாள் போன்ற நாட்களை தேசிய திருநாட்களாக கொண்டாடுதல்.

**நாடகங்கள்:**

சிறப்புமிக்க பெரியோர்கள், தலைவர்கள், வாழ்வில் நடந்தவற்றை நாடகமாக நடித்துக் காட்டுதல், புத்தகங்கள் மூலம் படித்துத் தெரிந்து கொள்வதைவிட மிக எளிதில் மாணவர் மனதில் பதியும்.

**போட்டிகள்:**

தலைவர்கள், முக்கிய நிகழ்வுகள் பற்றிய பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகள் வைப்பது கலை, பண்பாடு வளர மிகவும் உதவியாக இருக்கும்.

**சிறப்புச் சொற்பொழிவுகள்:**

சிறப்புமிக்க அறிஞர்கள், பேராசிரியர்கள் போன்றோரை அழைத்து சிறப்புச் சொற்பொழிவு வழங்குதல் வேண்டும்.

**திரைப்படம், வீடியோ படம் காட்டுதல்:**

வரலாற்று சிறப்புகள், நிகழ்ச்சிகள், இடங்கள் பற்றி விளக்கும் திரைப்படம், வீடியோ படம் வகுப்பில் காட்டுதல். அரசர்களின் வீரச்செயல்கள், தியாகிகளின் வரலாறு, கலை இலக்கிய வளர்ச்சி போன்றவற்றை விரைவில் கற்க உதவும்.

**சுற்றுலா செல்லுதல்:**

மாணவர்களை வருடத்துக்கு ஒரு முறை சிறப்புமிக்க இடங்களுக்கு சுற்றுலா அழைத்துச் செல்லுதல். தங்களது புத்தகத்தில் படித்த இடங்களை நேரில் காணும் போது, உள்ளம் உவகை கொள்ளும் வாழ்க்கையில் மகிழ்ச்சியும் அழகுணர்ச்சியும் கூடும்.

**அருங்காட்சியகம் அமைத்தல்:**

உள்ளூர், வட்டார அளவில் கிடைத்த வரலாற்றுப் பொருட்கள், தொல்பொருட்கள், பழங்கால கற்கருவிகள், மட்பாண்டங்கள், மாதிரிகள், நாணயங்கள், நினைவுச்சின்னங்கள், உருவமாதிரிகள், வானிலை ஆராய்ச்சிக் கருவிகள், விளக்கப்படங்கள், பழம் பொருட்கள் போன்றவற்றை சேகரித்து பள்ளியின் அருங்காட்சியகத்தில் வைத்து மாணவர்களுக்கு காண்பித்தல். அரும்பொருள் காட்சியகம் வட்டாரநிலை வரலாற்றுப் பகுதி, தேசிய நிலை வரலாற்றுப் பகுதி என இரு பகுதிகளாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**திறனாய்வு:**

புதிதாக வெளிவரும் நூல்களை மாணவர்கள் திறனாய்வு செய்ய பழக்குதல் வேண்டும். புத்தகத்தை தேர்ந்தெடுக்கும் போது ஆசிரியரின் புலமை, கற்பிக்கும் முறை, பொறி சார்ந்த ஆராய்வு போன்றவற்றை கவனிக்க வேண்டும். புத்தகத்தை பயன்படுத்தும் முறையையும் மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும்.

**நேர்காணல்:**

வரலாறு படைத்த சிறந்த சாதனையாளர்களை நேரில் பார்த்து அவர்களது அனுபவங்கள், அறிவுரைகளைக் கேட்டு, எழுதி தொகுத்து வைத்து வருங்கால மாணவர்களுக்கு கொடுத்து உதவுதல் வேண்டும். வரலாற்று இடங்களையும் நேரில் சென்று காணுதல் வேண்டும்.

**களப்பயணம் மேற்கொள்ளுதல்:**

புகழ் மிக்க இடங்களுக்கு மாணவர்களை களப்பயணம் அழைத்து சென்று காண்பித்தல், மேலும் புதைப்பொருள் ஆய்வுகளை மேற்க்கொள்ளுதல். பள்ளிக் கல்லூரிகளில் கழகம் ஆரம்பித்து மாணவர்களிடையே பாட மனப்பான்மை வளர்க்கணும். மேலும் மாணவர்களுக்கு கூட்டுறவு மனப்பான்மை, தேசப்பற்று, பொறுப்புணர்வு, விட்டுக் கொடுக்கும்

மனப்பான்மை, பெரியோர்களை நேசித்தல், கீழ்ப்படிதல் போன்ற பண்புகளை வளர்க்க ஆசிரியர் வழிகாட்டியாக உதவுதல் வேண்டும்.

**செய்திகள் சேகரித்தல்:**

செய்தித்தாள்கள், புத்தகங்கள், வார, மாத இதழ்களில் வெளிவரும் செய்திகள், தகவல்கள் மற்றும் முக்கிய செய்திகளை வெட்டி எடுத்து சேகரித்து ஒரு துண்டுப் பதிவுப் புத்தகம் (Scrap Book) செய்யலாம். மேலும் செய்திப் பலகையில் பொருத்தி மாணவர்களுக்கு காண்பிக்கலாம்.

**கையெழுத்துப் பிரதி நடத்துதல்:**

திறமையான மாணவர்களை வைத்து வார, மாத, தினசரி இதழ்கள் நடத்தலாம். பலவிதமான போட்டித் தேர்வுக்கு மாணவர்களை பயிற்சி கொடுத்து ஆயத்தப்படுத்துதல்.

**பயன்கள்:**

i. பின்தங்கிய மாணவர்களும் பாடக் கழகத்தில் குழுவாக பலவித செயல்பாடுகளில் பங்கேற்க வாய்ப்பு ஏற்படுவதால் மிகவும் ஆர்வமாக பலவித செயல்களில் ஈடுபட்டு சிறந்து விளங்குவர்.

ii. மாணவர்கள் பயனுள்ள கருத்துகளைக்கற்று திறன் வளர்ச்சி பெறுகின்றனர்.

iii. ஆசிரியர் மாணர்க்கர் உறவு மிகவும் வலுப்பெறும். மேலும் ஒவ்வொரு மாணாக்கரையும் மதிப்பீடு செய்ய எளிதாகிறது.

iv. கூட்டுறவு மனப்பான்மை மற்றும் பொறுப்புணர்வு மாணவர்களிடம் வளர்ச்சி அடைகிறது.

மேற்கூறிய பல்வேறு பயன்களை பாடக் கழகம் அதனுடைய பலவிதமான செயல்பாடுகள் மூலமாக மாணவர்களுக்கு வழங்குகிறது. மாணவர்கள் ஒவ்வொருவரும் கழகத்தில் உறுப்பினர்களாக செயல்படுவதால் மாணவர்கள் பலவித செயல்பாடுகளில் ஈடுபட்டு திறன் வளர்ச்சி, முன்னேற்றம், பன்முக பயிற்சியில் வளர்ச்சி ஏற்பட வழி ஏற்படுகிறது.

**5.3.3 மதிப்புணர்வினைப் பாட ஏற்பாட்டின் மூலம் ஆசிரியர் இரு வழிகளில் கற்பிக்கலாம்.**

(1) மதிப்புணர்வுக் கல்விக்கென இருக்கின்ற தனிப்பாடம் ஒழுக்க அறிவியல் (Moral Science).

(2) அனைத்துப் பள்ளிப் பாடங்களையும் ஒருங்கிணைக்கும் அணுகுமுறை மற்றும் மதிப்புணர்வுகளின் பாடஇயல் (Integration of Whole School Subjects Approach and Peadagogy of Values)

இவற்றிற்கான விளக்கத்தினைக் கீழே காணலாம்.

**(1) மதிப்புணர்வுக் கல்விக்கென இருக்கின்ற தனிப் பாடம் ஒழுக்க அறிவியல் (Moral Science)**

இத்தனிப் பாடத்தில் மதிப்புணர்வினைப் போதிப்பதற்கெனக் கதைகளும், பாடல்களும் பெரும்பாலும் தரப்பட்டுள்ளன. ஆரம்ப நிலைக் கல்வியிலிருந்தே இத்தனிப் பாடத்தின் வழியே மதிப்புணர்வுக் கல்வியானது மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு வருகிறது.

**(2) அனைத்துப் பள்ளிப் பாடங்களையும் ஒருங்கிணைக்கும் அணுகுமுறை மற்றும் மதிப்புணர்வுகளின் பாடஇயல் (Whole School Approach and Pedagogy of Values)**

கல்வி நிறுவனங்களில் ஆசிரியர்கள் தாம் கற்பிக்கின்ற மொழிப் பாடங்களாகிய தமிழ், ஆங்கிலம், கணிதம், வரலாறு, புவியியல், அறிவியல் முதலியவற்றின் மூலமாக மதிப்புணர்வுகளை மறைமுகமாகக் கற்பிக்கலாம். ஆசிரியர் இப்பாடங்களின் வழியே கீழ் உள்ள வகையில் மதிப்புணர்வினைக் கற்பிக்க வேண்டும்.

**(அ) மொழிப் பாடங்கள் (Language Subjects)**

**தமிழ் (Tamil)**: தமிழ்ப் பாடத்தில் வருகின்ற அனைத்துப் பகுதிகளுமே மதிப்புணர்வுகளோடு நெருங்கிய தொடர்புடையன என்று கூறலாம். உதாரணமாக தமிழ்த்தாய் வாழ்த்து, இறை வழிபாட்டு பாடல்கள், தேசபக்திப் பாடல்கள் போன்றவை தேசிய மதிப்புணர்வினையும், சமய நல்லிணக்கத்தையும் பற்றியதாகும். ஆரம்பநிலைக் கல்வியில் மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்ட ஆத்திசூடியில் வரும் வரிகளான

‘அறம் செய விரும்பு

ஆறுவது சினம்...’

மதிப்புணர்வினையே போதிக்கின்றன. தமிழ்ப் பாடப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள திருக்குறளின் வரிகள் வாழ்வியல் குறித்த மதிப்புணர்வினைத் திறம்பட மாணவர்களுக்குப் போதிக்கின்றது. செய்யுள்களில் இயற்கை அழகினைப் பற்றிய வர்ணிப்பானது மாணவர்களிடையே அழகுணர்வினைப் பெருக்குகிறது. சுற்றுச் சூழல் பாதுகாப்பினைக் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துகின்றன. உரைநடைப் பகுதியில் அறிவியல் அறிஞர்களின் வரலாறு, பாரி அதியமான் குறித்த கதைகள், தேசத் தலைவர்கள் பற்றி அறிந்து கொள்வதன் மூலமாக அறிவியலுணர்வு, கொடையின் உயர் தன்மை, தேசிய உணர்வு முதலியவை மாணவர்களிடையே வளர்கின்றன. இலக்கணப் பாடத்தின் வழியே நுண்ணறிவுத் திறன், பகுத்தாராயும் திறன் அவர்களிடையே உருவாகின்றது.

**(ஆ) ஆங்கிலம் (English)**: அனைத்துலக மொழியான ஆங்கிலத்தைக் கற்பதன் மூலமாக மாணவர்களிடையே தொடர்பு கொள்ளும் திறன் பெருகுகிறது. ஆங்கிலப் பாடத்தில் வருகின்ற கவிதைகளை வாசித்து, அதிலுள்ள நடையினைப் பாராட்டும் போது மாணவர்களின் ரசனை அதிகரிக்கின்றது. சொற்களஞ்சியத்தைக் குறித்த அறிவாற்றல் பெருகுகிறது. உரைநடைகளின் வாயிலாக மாணவர்கள் இலக்கிய அறிவினையும், வாசிக்கும் திறன், உச்சரிப்பினை சரிவர உபயோகிக்கும் திறன்களையும் பெறுகின்றனர். பிறமொழி இலக்கியங்களில் மாணவர்களின் ஆர்வம் அதிகரிக்கிறது. இலக்கணத்தைப் பயில்வதன் மூலம் அதன் பயன்பாடு மதிப்புணர்வினைப் பற்றி அறிந்து கொள்கின்றனர். இதன் மூலம் அவர்களின் நுண்ணறிவு மதிப்புணர்வு அதிகரிக்கிறது,

**(இ) வரலாறு (History)**: வரலாற்றுப் பாடத்தின் வழியாக இந்திய நாட்டின் வரலாறு, அரசர்களின் பெருமை, அவர்கள் கலை இலக்கியத்திற்கு ஆற்றிய நற்பணி, இறைத் தொண்டுகள், அவர்கள் காலத்தில் இருந்த பல்கலைக் கழகங்கள், சமயங்கள், இசை வல்லுநர்கள், தத்துவவியலறிஞர்கள் பற்றி மாணவர்கள் அறிந்து கொள்கின்றனர். இந்திய நாட்டினை ஆங்கிலேயர் கைப்பற்றியதன் காரணம், விடுதலைக்கு உழைத்த தேசத்

தலைவர்கள், இந்திய நாட்டின் விடுதலை, அரசாங்கமைப்பு, குடியுரிமை போன்றவற்றை அறிந்து கொள்கின்றனர். இந்திய நாட்டிற்கும் பிற நாடுகளுக்கும் இருந்த வணிகத் தொடர்பினைப் பற்றி உணர்ந்து கொள்கின்றனர். இதனால் அவர்களின் நுண்ணறிவு, தேசிய மதிப்புணர்வு அதிகரிக்கிறது.

**(ஈ) புவியில் (Geography)**: மாணவர்கள் புவியியல் பாடத்தின் மூலம் பூகோளத்தினைப் பற்றி அறிந்து கொள்கின்றனர். உலகம் முழுவதிலும் உள்ள இயற்கை வளங்களைப் பற்றி உணர்கின்றனர். ஏற்றுமதி, இறக்குமதி நாடுகள் ஒன்றை ஒன்று எவ்வாறு சார்ந்து உள்ளன என்பதனைப் புரிந்து கொள்கின்றனர். இதன் மூலமாகப் பொருளாதார மதிப்பினைப் பற்றியும், தேச ஒற்றுமை, உலக ஒற்றுமை, சார்புடைமை பற்றியும் அறிந்து கொள்கின்றனர்.

**(உ) கணிதவியல் (Mathematics)**: மாணவர்கள் கணிதப் பாடத்தின் வாயிலாக அன்றாட வாழ்வில் கணிதம் எந்த அளவிற்குப் பயன்படுகிறது என்பதனைப் புரிந்து கொள்கின்றனர். கணித பாடத்தின் அலகுகளான அளவீடு, புள்ளியியல் போன்றவை அன்றாட வாழ்வில் எவ்வளவு பயன்படுகின்றன என்பதனை உணர்ந்து கொள்கின்றனர். இதனால் அவர்களின் பகுத்தாராயும் திறன், உற்று நோக்கும் திறன், ஒப்பிடும் திறன், மதிப்பிடும் திறன் அதிகரிக்கின்றன. அவர்களின் பயன்பாட்டு மதிப்புணர்வுத் திறன் அதிகரிக்கிறது. அறிவியல் மனப்பான்மை வளர்வதால் எதனையும் சிந்தித்துப் பார்த்துத் தீர்வு காணும் திறன் வளர்கிறது, தன்னிச்சையாகவும் தெளிவாகவும் செயல்படும் திறன் அவர்களிடையே அதிகரிக்கிறது, மீள்பார்வை செய்யும் திறன் வளர்கிறது.

**(ஊ) அறிவியல் (Science)**: மாணவர்கள் அறிவியல் பாடத்தினைக் கற்பதன் மூலம் அவர்களிடையே கேள்விகள் கேட்கும் மனப்பான்மை வளர்கிறது. அறிவுப்பூர்வமான ஆராயக் கூடிய தகவல்களைப் பற்றி படிப்பதனால் அவர்களின் நுண்ணறிவுத் திறன் வளர்வது மட்டுமின்றி, எதனையும் சோதித்துப் பார்த்து உண்மையினைக் கண்டறிகின்ற அறிவியல் மனப்பான்மை அவர்களிடையே வளர்கிறது. அறிவியல் கண்டுபிடிப்புகளைப் பற்றிக் கற்பிக்கப்படுவதால், அவர்களுக்கு அறிவியல் பயன்பாட்டு மதிப்புணர்வு, சமூக மதிப்புணர்வு விளங்குகிறது. அறிவியல் பாடத்தினைக் கற்கும்போது ஆய்வகத்திலும் செய்முறை வகுப்பிலும் மறைமுகமாக அவர்கள் புறங்கூறாமை, ஒழுக்கம், ஒழுங்குமுறை, வாய்மை, நேரந்தவறாமை, அறிவியல் நோக்குடன் ஆராயும் திறன் முதலியவற்றைப் பற்றி அறிந்து கொள்கின்றனர். அறிவியல் பாடத்தினைக் கற்கும்போது மேல்நிலை மற்றும் உயர் கல்வியில் எப்பாடத்தினைப் பயில வேண்டும் என்று வழிகாட்டப்படுவதினால் அறிவியல் பாடம் பயன்பாட்டு மதிப்புணர்வினை மாணவர்களுக்குப் போதிக்கிறது.

### 2. இணை கலைத்திட்ட செயல்பாடுகள் (Co-Curricular Activities)

பாரம்பரிய அணுகுமுறைகள் மூலம் மாணவர்களின் கற்றல் விழுமங்களை ஆய்வு செய்து மதிப்படுதல் வேண்டும்.

1. அதிக வருடங்கள் பள்ளியில் படிப்பதாலேயே சமூக விழுமங்களில் மாணவர்களின் ஈடுபாடு அதிகரித்து விடுவதில்லை.

2. பெண்களை விட ஆண்களே மேலே குறிப்பிட்டுள்ள சமூக விழுமங்களில், அதிக வளர்ச்சி பெற்றுக் காணப்படுகின்றனர்.
3. மாணவர்களின் பொருளாதார நிலையில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகள், அவர்களின் விழும வளர்ச்சியைப் பாதிப்பதில்லை.
4. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நான்கு விழுமங்களின் வெளிப்பாடு, மாணவர்கள் சிறந்த குடிமகன்களாகத் திகழ்வதற்கு உறுதுணை புரிகிறது.
5. கார்க் (Garg) என்பவர், 1983-ல் நடத்திய ஆய்வில், பெற்றோர்களின் மனப்பான்மைகளும், பெற்றோர்களிடமிருந்து பிரிந்து இருக்கும் கால அளவும், குழந்தைகளின் விழும வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றன என்பது தெரியவந்துள்ளது.
6. சிங் (Sing-1983) என்பவர், பெற்றோர்களிடம் இருந்து தொடர்ந்து பிரிந்திருக்கும் குழந்தைகளின் விழும வளர்ச்சி பெரும் பாதிப்புக்கு உள்ளாவதைக் கண்டறிந்தார்
7. இராணி (Rani 1968) என்பவர் மாணவர்களின் வயது அதிகரிக்கும் போது அவர்களது நன்னெறி பற்றிய அறிவும் அதிகரிக்கிறது என்று கண்டறிந்தார்.
8. பார்க்கவா (1986) நடத்திய ஆய்வுகளின் படி குழந்தைகளின் அறிவு வளர்ச்சிப் படிநிலைகளில் பருப்பொருள் மற்றும் கருத்தியல் நிலைகளில் குழந்தைகளிடம் உருவாகும் விழும வளர்ச்சி, அவர்களின் குடும்பம் மற்றும் கல்விச் சூழலைப் பொறுத்து அமைகிறது என கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வித விவாதங்களைக் கேட்டறியும் போது, உண்மையின் முழுப் பரிமாணமும் நமக்குப் புலப்படும். பெரும்பாலானவர்கள் இப்பிரச்சினையை எவ்வாறு அணுகுகிறார்கள் என்பதையும் நாம் அறிந்து கொள்ள இயலும்.

**கதாபாத்திரமாக நடித்தல் (Role Plays)**

ஆசிரியர் இம்முறையில் மதிப்புணர்வு குறித்த கதையினை நாடக வடிவில் மாணவர்களின் மூலம் அரங்கேற்றுவர். இதன் மூலம் மதிப்புணர்வுகளைப் பற்றி மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியும். எட்கர் டேல் (Edgar Dale) என்னும் கல்வியாளர் கற்பித்தலில் ஒலி – ஒளி உபகரணங்களைப் பயன்படுத்தும் முறைகள் (Audio – Visual Aids in Teaching) என்னும் நூலில் நாடக வடிவத்திற்கான ஆறு படிநிலைகளைப் பற்றி விளக்கியுள்ளார். அவை,

(1) ஆசிரியர் குறிப்பிட்டதொரு மதிப்புணர்வினை பற்றிய கதைக் கருவினை உருவாக்குதல் அல்லது தேர்வு செய்தல்.
(2) மாணவர்களை கதாபாத்திரங்களில் நடிப்பதற்கென தேர்வு செய்தல்.
(3) நாடகத்திற்கான கதையினை அவர்களுக்குப் புரிய வைத்து, பயிற்சி அளித்தல்.
(4) பிற மாணவர்களாகிய அவையோருக்கு நாடகத்தில் கவனிக்க வேண்டிய விவரங்களைப் பற்றிய குறிப்புகளை ஆசிரியர் அளித்தல்.
(5) வகுப்பறையில் நடிக்கும் நாடகத்தில் அணிவதற்கு சிறப்பு ஆடை, ஆபரணங்கள் பயன்படுத்தப் படமாட்டது. நாடகமானது 10-15 நிமிடங்கள் மட்டுமே நடைபெறும். நாடகம் அரங்கேறும் போது ஆசிரியர் மாணவர்களுடன் அமர்ந்திருப்பார்.

(6) நாடகம் முடித்த பின்னர் மாணவர்கள் கதையினைப் பற்றிய கருத்தினை தெரிவிப்பர். அவர்கள் கற்றறிந்த மதிப்புணர்வினைப் பற்றி விளக்குவர்.

**கதைகள் (Stories)**

அனைத்து வயதினருக்கும் கதை கேட்பதில் ஆர்வமுண்டு. இம்மனவியல்பினைப் பயன்படுத்தி ஆசிரியர் மாணவர்களின் வயது, முதிர்ச்சியின் அடிப்படையில் மதிப்பணர்வுகளைக் கதையின் மூலம் கற்பிக்கலாம். கதைக் கேட்கும் போது ஒருவரின் கவனிக்கும் திறன், நினைவாற்றல் அதிகரிக்கிறது, கற்றலில் ஆர்வம் ஏற்படுகிறது என்று உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். மாணவர்களுக்குக் கூறுவதற்கெனப் பலவிதான கதைகள் உள்ளன. அவை பஞ்ச தந்திரக் கதைகள், புராணங்கள், நீதிக் கதைகள், சமய நூல்களான பகவத் கீதை, பைபிள், குர்ரானில் கூறப்பட்டுள்ள நீதிக் கதைகள் போன்றவை மதிப்புணர்வுகளைப் போதிப்பதற்கு ஏற்றவையாகும். இக்கதைகளின் மூலம் நன்னெறிகளான ஒழுக்கம், வாய்மை, நேர்மை, இறையுணர்வு, பெரியோரை மதித்தல், புறங்கூறாமை, நட்பின் பெருமை போன்றவற்றைச் சிறப்பாக மாணவர்களுக்கு எடுத்துரைக்க முடியும். கதையினைக் கொண்டு மதிப்புணர்வினை ஆசிரியர் இரண்டு படிநிலைகளில் போதிக்க வேண்டும். அவை.

(அ) மதிப்புணர்வினைப் புகட்டத்தக்க கதையினைத் தேர்ந்தெடுத்தல். (Selection of the Story for Teaching Values)

(ஆ) கதையினைக் கூறுகின்ற விதம் (Style of Telling Story)

இவற்றிற்கான விளக்கம் பின்வருமாறு அளிக்கப்பட்டுள்ளது. அவை,

**அ) கதையினைத் தேர்ந்தெடுத்தல்**

ஆசிரியர்களின் முக்கிய பணியாவது மதிப்புணர்வினைப் போதிக்கக் கூடிய கதையினை மாணவர்களின் வயது, முதிர்ச்சி நிலைக்கேற்ப தேர்வு செய்ய வேண்டும். அக்கதை மிக நீண்டதாகவோ, குறுகியதாகவோ இருக்கக் கூடாது. மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டக் கூடியதாகவும், கவனத்தை நிலைநிறுத்துவதாகவும் கதையானது இருக்க வேண்டும். ஆசிரியர் தாம் போதிக்க நினைக்கின்ற மதிப்புணர்வினை மாணவர்களிடையே எளிதில் பதிய வைக்கக் கூடிய கதையினைத் தேர்வு செய்ய வேண்டும்.

**ஆ) கதையினைக் கூறும் விதம்**

ஆசிரியர் கதையினைப் படங்களைக் கொண்டோ, பொம்மைகளைக் கொண்டோ விவரித்துக் கூறலாம். சில கதைகளை நாடகத்தைப் போன்று குரல் ஏற்றத் தாழ்வுடன் கூறினால் மாணவர்கள் மிகவும் ரசித்துக் கேட்பர். சில கதைகளை வர்ணித்துக் கூற வேண்டியது அவசியமாகிறது. கதையின் தன்மைக்கு ஏற்பவும், மாணவர்களின் வயது, ஆர்வம், முதிர்ச்சிக்கேற்ப ஆசிரியர் கதையினை திறம்பட கூற வேண்டும். கதையினை அதிகப்படியான வேகத்துடனோ, நிதானத்துடனோ கூறக்கூடாது. கதையினைக் கூறும் உச்சரிப்புகளில் கவனம் செலுத்தப்பட வேண்டும். ஆசிரியர் கதையினைக் கூறி முடித்த பின்னர் மாணவர்களிடம் அக்கதையினைக் குறித்த கருத்தினைக் கேட்க வேண்டும். அக்கதையின் மூலம் அவர்கள் உணர்ந்த நன்னெறியினைக் கூறுமாறு கேட்க வேண்டும்.

இதன் மூலம் மாணவர்களின் நினைவாற்றல், புரிந்து கொள்ளும் திறன், கற்பனையாற்றல், மதிப்பிடும் திறன் பெருகுகின்றன.

கதை கூறும் முறைக்கான உதாரணமொன்று கீழே தரப்பட்டுள்ளது.

மதிப்புணர்வு: விருந்தோம்பல்

கதை எடுக்கப்பட்ட புராணம்: மகாபாரதம்

**i) கதையினைத் தேர்வு செய்தல்**

ஆசிரியர் விருந்தோம்பலின் சிறப்பினை எடுத்துரைக்க மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ள கர்ணனின் கதையினைத் தேர்வு செய்கிறார்.

**ii) கதையின் விளக்கம்**

கொடையுள்ளத்திற்கு பேர் பெற்ற கர்ணன் இறந்த பிறகு தேவலோகம் சென்றான். அங்கு அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பதைக் கண்ணுற்றான். தேவலோகத்தில் கர்ணனுக்கு மட்டும் பசித்தது. அங்குள்ள விருந்தினை உண்ட பின்பும் அவனுடைய பசியானது அடங்கவில்லை. இதுபற்றி அங்கிருந்த தேவேந்திரனிடம் கூறிய போது அவன் "நீ உன்னுடைய வலது கையிலுள்ள ஆட்காட்டி விரலை சூப்புவாயாக" என்றான். கர்ணன் அவ்வாறே செய்ததும், அதுவரை அவனை வாட்டிய பசியானது அடங்கியது. வியப்பில் ஆழ்ந்த கர்ணன் காரணத்தை வினவ, அதற்கு இந்திரன் "கர்ணா நீ பூவுலகில் பல தானதர்மங்களைப் புரிந்தாய், ஆனால் அன்னதானம் புரியவில்லை. ஒருமுறை துரியோதனன் ஏழை எளியவர்க்கு அரண்மனையில் விருந்தளித்தான். அதற்கு வந்த ஏழை பிராமணனுக்கு நீ விருந்து நடக்கும் இடத்தினை உன்னுடைய ஆட்காட்டி விரலினைக் கொண்டு சுட்டிக் காட்டி வழி கூறினாய். இதனால் அன்னதானம் செய்ததற்கான பலன் அவ்விரலுக்கு வந்து சேர்ந்தது. அவ்விரலினை சுவைத்ததும் உன் பசி அகன்றது" என்று கூறினான். இதனைக் கேட்டதும் கர்ணன் விருந்தோம்பலின் பெருமையினை உணர்ந்து கொண்டான்.

ஆசிரியர் இக்கதையினை, குரல் ஏற்றத் தாழ்வு, தகுந்த இடத்தில் பேச்சு நிறுத்தம் முதலியவற்றைக் கொண்டு மாணவர்களுக்குக் கூற வேண்டும். கதையினால் மாணவர்கள் உணர்ந்த நன்னெறியைக் கூறும்படி கேட்க வேண்டும்.

### 3. வாழ்க்கைத்துணுக்குகள் பதிவேடு (Anecdotal Record)

வகுப்பாசிரியர் ஒவ்வொரு மாணவனுக்கும் 4 அல்லது 5 பக்கங்களை ஒதுக்கி 200-300 பக்கங்கள் கொண்ட ஒரு குறிப்பேட்டுப் புத்தகத்தை ஒவ்வொரு வகுப்புக்கும் நிர்வகித்து தர வேண்டும். இடப் புறத்தில் கீழ்க்கண்டவாறு மூன்று பத்திகளை உருவாக்கி, நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகள், ஏற்பட்ட நாள், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை ஆகியவற்றைப் பதிவு செய்ய வேண்டும். ஆண்டு முழுவதும் நிர்வகிக்கப்பட வேண்டும். இத்தகைய விரும்பத்தகாத நிகழ்ச்சிகளும் மேன்மையை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளும் எப்போதாவது தான் நிகழும்.

### ஆவணச் சான்றுகள் (Documentary Evidences)

(i) மாணவர்களின் நேரந்தவறாமை (Punctuality)

(ii) ஒழுங்கு முறை (Regularity)

(iii) ஒப்படைப்புகளைக் குறித்த காலத்தில் சமர்ப்பித்தல் (Submission of assignments in time)

(iv) காலை வழிபாட்டுக் கூட்டம் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளுக்குத் தவறாமல் செல்லுதல்.

விரும்பத்தக்க பல்வேறு பள்ளிச் செயல்களில் பங்கேற்றல், பணி அனுபவங்கள் போன்றவற்றில் பரிசுகள் பெறுதல் ஆகியவற்றை அவ்வப்போது குறிப்பேடுகளில் பதிவு செய்து, திரள் பதிவேட்டை உருவாக்குதல் முதல் மாணவர்களின் விழும உணர்வை மதிப்பிட்டு அதற்கேற்றவாறு மேம்பாட்டு நடவடிக்கைகளுக்குத் திட்டமிடலாம்.

**குழுப்பாடல்களைப் பாடச் செய்தல் (Group Singing)**

அனைத்து வயதினருக்கும் கதையினைப் போன்று பாடலையும் பாடவும், கேட்கவும் பிடிக்கும். பாடல்களைத் தனியாக பாடுவதைக் காட்டிலும் குழுவினராகப் பாடுகையில் மாணவர்களிடையே மறைமுகமாக குழு உணர்வு வளரும், மனவெழுச்சி ஒருமுகப்படும், அவர்களின் நினைவாற்றல் பெருகும். ஆசிரியர் மாணாவ்களுக்குக் குழுப் பாடல்களின் மூலம் மதிப்புணர்வுகளைச் சிறப்பாகக் கற்பிக்கலாம். இக்குழுப்பாடல்களுக்கு, தேசபக்திப் பாடல்கள், சமயப் பாடல்கள், இயற்கையழகு குறித்த பாடல்களை ஆசிரியர் பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்கென ஆசிரியர் முதலில் தாம் மாணவர்களுக்குக் கற்பிக்க நினைக்கின்ற மதிப்புணர்வினைக் குறித்த பாடலினை முதலில் தேர்வு செய்ய வேண்டும். அப்பாடல் வரிகளை கரும்பலகையில் எழுத வேண்டும். அவ்வரிகளுக்கான விளக்கத்தினை மாணவர்களுக்குத் தெளிவுறக் கூற வேண்டும். பிறகு அப்பாடலினை ஆசிரியர் பாடிக் காட்ட வேண்டும். பிறகு மாணவர்களுக்கு அப்பாடலை பாடுவதற்கான பயிற்சியினை அளிக்க வேண்டும். மாணவர்கள் ஒருங்கிணைந்து பாடலின் பொருள், இசை நயத்தினைப் புரிந்து பாடுகின்றனரா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(உ-ம்) குழுப்பாடல்களுக்காக தேசிய கீதங்களை மாணவர்களுக்கு கற்றுத் தரலாம். பாரதியரின் தேசிய கீதங்களுள் புகழ் பெற்ற வந்தேமாதரம் என்னும் பாடல் இந்திய நாட்டின் பெருமையையும், தேசப் பற்றையும் வலியுறுத்துகிறது. அப்பாடலின் வரிகள்:

பல்லவி

வந்தேமாதர மென்போம் - எங்கள்
மாநிலத் தாயை வணங்குது மென்போம் (வந்தே)

சரணங்கள்

ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்
ஜன்ம மித்தேசத்தி லெய்தின ராயின்
வேதிய ராயினும் மொன்றே – அன்றி
வேறு குலத்தின் ராயினு மொன்றே (வந்தே)

இது போன்ற சிறந்த பாடல்கள் மாணவர்களுக்குத் தேசிய மதிப்புணர்வுகளைப் போதிக்கக் கூடியனவாகும்.

**குழுச் செயல்பாடுகள் (Group Activities)**

ஆசிரியர் மாணவர்களுக்குக் குழுவினராகச் செயல்படக் கூடிய கல்வித் தொடர்பான பணிகளைத் தரலாம். குழுச் செய்லபாடுகளுள் குறிப்பிடத்தகுந்தவை:

அ) மதிப்புணர்வு நெருக்கடிகளைச் சமாளித்தல் (Dealing with Value Conflicts)

ஆ) சிறப்புச் செயல் திட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் (Special Projects and Exibitions)

இ) சமூக சேவை மற்றும் தற்சார்பு செயல்கள் (Social Service and Self Reliance Activities)

ஈ) மதிப்புணர்வுடன் தொடர்புடைய திரைப்படங்களைக் காணுதல், ஆவண திரைப்படங்களை காணுதல். (Seeing Films Related with Values and Documentaries)

**அ) மதிப்புணர்வு நெருக்கடிகளைச் சமாளித்தல் (Dealing with Value Conflicts)**

மதிப்புணர்வு நெருக்கடி என்பது வாழ்வில் மதிப்புணர்வினைப் பின்பற்றும்போது ஏற்படக் கூடிய சங்கடங்கள் பற்றியதாகும். அந்நிலையில் ஒருவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு ஆசிரியர் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். இதற்கென வகுப்பறையில் ஆசிரியர் மாணவர்களிடம் மதிப்புணர்வு குறித்த சங்கடமான ஒரு சூழ்நிலையைக் கற்பனையாக மாணவர்களுக்குக் கூறி அந்நேரத்தில் அவர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் எனக் கேட்பார். அப்பிரச்சினைக்குரிய தீர்வினைக் கூறும்படி ஊக்குவிப்பார். சில நேரங்களில் ஆசிரியர் அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சாத்தியமான இரு தீர்வுகளுள் ஒன்றினைத் தேர்வு செய்யுமாறு கூறுவார். இரு தீர்வுகளை மாணவர்களுக்குக் கூறுவார். மாணவர்கள் அவற்றிலிருந்து ஒன்றினைத் தேர்வு செய்து அதற்கான காரணத்தையும் விளக்க வேண்டும். (உ-ம்) ஆசிரியர் மாணவர்களிடம் 'நீ பள்ளிக்கு வரும் வழியே உடல் ஊனமுற்றவர் ஒருவர் சாலையைக் கடக்க உன்னிடம் உதவி கேட்கிறார். அவருக்கு நீ உதவி செய்தால், பள்ளிக்கு வரகாலதாமதமாகி விடும் சூழ்நிலை உள்ளது. இந்நிலையில் எதனைச் செய்வாய்? அவருக்கு உதவுவாயா? அல்லது பள்ளிக்கு குறித்த நேரத்தில் வரவேண்டும் என்பதற்கென அவரை உதாசீனம் செய்வாயா?" என்று கேட்டார். மாணவர்கள் அவர்களின் எண்ணம், கருத்துக்கு உகந்த பதிலினைத் தேர்வு செய்து அதற்கான விளக்கத்தை ஆசிரியரிடம் கூறுவார். இம்முறையானது மாணவர்களின் சிந்திக்கும் ஆற்றல், தீர்வு காணும் திறனை வளர்க்கிறது.

**ஆ) சிறப்புச் செயல் திட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் (Special Projects and Exhibitions)**

கல்வி நிறுவனங்களில் மதிப்புணர்வுகளைப் போற்றுவதற்கெனச் சிறப்புச் செயல் திட்டங்களை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அளிப்பர். (உ.ம்) உலக ஒற்றுமை, தேசிய நலம் போன்ற தலைப்புகளின் கீழ் விவரங்களைச் சேகரிக்கும்படி, ஆய்வுகளை மேற்கொள்ளும்படி ஆசிரியர் மாணவர்களை ஊக்குவிப்பார். இச் செயல் திட்டங்களை மாணவர்கள் தனி நபராகவோ குழுவினராகவோ செய்து முடிப்பர். செயல் திட்டங்களின் முடிவினை ஆய்வு

அறிக்கையாக ஆசிரியரிடம் அளிப்பர். இதனைப் போன்று மதிப்புணர்வுகளுடன் தொடர்புடைய புகைப்படக் கண்காட்சி, ஓவியக் கண்காட்சி, பள்ளிகளில் நடத்தப்படுகின்றன. இவற்றின் மூலம் மாணவர்களிடம் மதிப்புணர்வுகளைப் போற்றுகின்ற எண்ணமானது வளர்கின்றது. இக்கண்காட்சி குறிப்பிட்ட மதிப்புணர்வு தலைப்பினைக் குறித்ததாக நடத்தப் பெறும். (உ.ம்) சுற்றுச் சுழல் பாதுகாப்பு, சிறு குடும்ப நெறி, உடல் நலம் பேணல் போன்ற தலைப்புகளில் நடத்தப்படும்.

**இ) சமூக சேவை மற்றும் தற்சார்பு செயல்பாடுகள் (Social Service and Self Reliance Activities)**

பள்ளிகளில் மாணவர்களிடையே தேசிய சமூக சேவை அமைப்புகளின் மூலம் மதிப்புணர்வுகள் கற்பிக்கப்படுகின்றன. (உ.ம்) NSS, NCC அமைப்புகள் இதன் மூலமாக மாணவர்கள் சாலைகளைச் செப்பனிடுதல், மரங்களை நடுதல், இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுதல், குளங்களை சுத்தப்படுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர். பள்ளிகளில் நடைபெறும் சமூகத்திற்குப் பயன்படக்கூடிய ஆக்கப்பூர்வ பணி செயல்பாட்டின் (Socially Useful Productive Work (SUPW)) மூலமாக மாணவர்கள் சிறு தொழில்களைக் கற்றுக் கொள்கின்றனர். சிறு கைவினைப் பொருள்களை உருவாக்கத் தெரிந்து கொள்கின்றனர். சிறு கைவினைப் பொருள்களை உருவாக்கத் தெரிந்து கொள்கின்றனர். இதனால் அவர்களின் கலையார்வம் பெருகுகின்றது.

**ஈ) மதிப்புணர்வுடன் தொடர்புடைய திரைப்படங்கள், ஆவணத் திரைப்படங்களைக் காணல் (Seeing Films related with Values and Documentaries)**

இந்திய நாட்டின் தொலைக்காட்சிகளில் கல்வி நிகழ்ச்சிகளின் வழியாக மதிப்புணர்வுகளை மாணவர்களுக்குப் போதிக்கின்றனர். (உ.ம்) கல்வித் தொழில் நுட்பவியலுக்கான மாநில நிறுவனமானது (State Indtitue of Educational Technology – SIET) கல்வி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதன் மூலமாக மாணவர்களுக்குச் சுற்றுச் சுழல் பாதுகாப்பு குடும்ப நலம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துகின்றது. மதிப்புணர்வு தொடர்பான ஆவண திரைப்படங்களைத் தயாரித்து வெளியிடவும் செய்கிறது. இந்தியநாட்டில் சரித்திரத் திரைப்படங்கள், மதிப்புணர்வு தொடர்பான திரைப் படங்கள், குழந்தைகள் நலம் குறித்த திரைப்படங்களுக்கு அரசாங்கமானது வரிகளை விலக்குகிறது. கல்வி நிறுவனங்களுள் சில நல்ல கருத்துக்களைக் கூறக் கூடிய திரைப்படங்களுக்கு மாணவர்களைப் பள்ளியின் சார்பில் அழைத்துச் சென்று காண்பிக்கின்றனர்.

இவ்வாறு கல்வி நிறுவனங்களில் மதிப்புணர்வுகளைப் போதிப்பதற்குத் திரைப்படங்களைப் பயன்படுத்திக் கொள்ளும்போது அதில் ஆசிரியர் பணி மிகவும் குறிப்பிடத்தகுந்ததாகிறது. ஆசிரியர் இத்திரைப்படங்களைக் குறித்த கேள்விகளைளையும் கலந்துரையாடலுக்கான குறிப்புகளையும் முதலில் தயார் செய்து கொள்ள வேண்டும். மாணவர்கள் திரைப்படத்தினைப் பார்த்த பின்னர் வகுப்பறையில் ஆசிரியர் கேட்கும்

மதிப்புணர்வு குறித்த கேள்விகளுக்கு விடை அளித்து கலந்துரையாடல்களில் ஈடுபடுவர். மேலும் அப்படத்தில் கூறப்பட்டுள்ள மதிப்புணர்வு தொடர்பான செயல் திட்டங்களை ஆசிரியர் மாணவர்களுக்கு அளிப்பார்.

### வினாக்கேட்டல் (Questioning)

மதிப்புணர்வுக் கற்பித்தலுக்கு ஆசிரியரின் திறமைமிக்க கருவி வினாவாகும். பாடப் பொருளைக் கற்பிப்பதற்கு அவர் வினாக்கள் கேட்கின்றார். அவற்றைக் கற்பித்தல் வினாக்கள் என்பர். கற்பித்த பின்னர் அவர்கள் பாடப்பொருளை நன்கு அறிந்துள்ளனரா என்று அறியவும் வினாக்கள் கேட்கின்றார். அவற்றைத் தேர்ந்தறி வினாக்கள் என்பர். இவ்வாறு ஆசிரியர் வினாக்களை மிகுதியாக பயன்படுத்துகிறார். கற்பித்தலில் ஆசிரியர் கையாளும் வினாக்களின் தரம் ஒரே மாதிரி இருப்பதில்லை. சில வினாக்களுக்கு மாணவர்கள் தங்கள் நினைவிலிருந்தே விடை தருவர் சில வினாக்களுக்குத் தங்கள் பட்டறிவினின்றும் விடையளித்து விடுவர். மாணவர்கள் வினாக்கேட்டல் மூலம் மதிப்புணர்வுகளை வளர்த்துக் கொள்கின்றனர்.

### பிரதிபலிப்பு செயல்முறை (Reflective Process)

‘‘பறவைகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒரு விதம் எனபதைப் போல மாணவச் செல்வங்கள் ஒவ்வொருவரிடமும் எண்ணற்ற விழுமங்கள் புதைந்து கிடக்கின்றன.

(எ.கா.)

1. இயற்கையாகவே குடும்பத்திலும் சரி, கல்வித் தளத்திலும் சரி, ஒற்றுமையே வெற்றிக்கு வழி என்பதை அறிந்து எக்காரியத்தைச் செய்தாலும் தங்களுக்குள் குழு அமைத்து பணியாற்றும் ஒற்றுமை உணர்வைப் பெற்றிருத்தல்.
2. தலைமை தாங்கி வழி நடத்துதல்.
3. கூட்டுறவுடன் ஒருவரையொருவர் தாங்கி விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் இணைந்து கற்றல்.
4. படைப்பாக்கத்திலும், நடத்தையிலும் பங்கு பெறுவதிலும், உயாந்த தரத்தைக் கடைப்பிடித்தல்.
5. ஒருவரை ஒருவர் மதித்தல், புகழ்தல் அவர்களின் சிறந்த செயல்களைக் கண்டு மகிழ்ந்து மேலும் அவர்கள் உற்காசப்படுத்துதல்.
6. தனிப்பட்ட நபரின் நடத்தைகளை அலச்சியப்படுத்தாமல் அவர்கள் மனம் கோணாமல் நடந்து கொள்ளும் தனிக் கலையை பெற்றிருத்தல்.
7. ஒருவருக்குப் பின் ஒருவராக வரிசையில் நிற்கும் பண்பு.
8. சத்தியத்தைக் கடைபிடிக்கும் பாங்கு.
9. பெற்ற கடனைத் தகுந்த நேரத்தில் திருப்பிச் செலுத்தும் குணம்.
10. நோயாளிகளுக்கும் காயப்பட்டவர்களுக்கும் உதவுதல்.
11. பொது இடங்களைச் சுத்தமாக வைத்துக் கொள்வது.
12. பிறருடைய பொருட்களை அபகரிக்காமல் தன்னிடம் உள்ளவற்றைக் கொண்டு உவர்ந்து வாழ்வதே உயர்ந்த வாழ்வு என்ற உயரிய விழுமத்தைக் கடைபிடித்தல்.
13. அடுத்தவர்கள் இளைப்பாறும் பொழுது (ஓய்வு எடுக்கும் பொழுது) அவர்களைத் துன்புறுத்தாமல் இருப்பது.

14. அவரவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட குழு வேலைகளை அவரவர்கள் குழுக்களாகச் செய்தல்.

இவை யாவும் உயரிய விழுமங்கள் இது போன்ற விழுமங்களை மாணவச் செல்வங்கள் ஒவ்வொருவரிடமும் பிரதிபலிக்குமேயானால் அவற்றைவிட சிறப்பு வேறேதும் இவ்வுலகில் இல்லை.

**REFERENCES:**


1. Aggarwal, J.C., Educatin for Values, Environment and Human Rights. Delhi: Shipra Publications.
2. Chadha, S.C., (2008). Education Value and Value Education. Meerut: R.Lall Books.
3. Chand, J. (2007). Value Education. Delhi: Anshah Publishing House.
4. Gavriel Solomon; Baruch Nev0 (2002). Peace Education: The Concept, Principles and Practices around the World Lawrence Erlbaum Associates.
5. பாத்திமா, மு. இ ராம மூர்த்தி, பி. (2010). அமைதி மற்றும் மதிப்புணர்வுக் கல்வி. சென்னை: ஸ்ரீ ஜீ.வி. பதிப்பகம்.
6. http://en.wikipedia.org/wiki/value
7. http://www.ei.ie.org/en/websections/content-detail/5411
8. மும்தாஜ் பேகம், ஜாஸ்மின் குமார், (2009). அமைதிக்கான கல்வி. சென்னை: சாந்தா பப்ளிஷர்ஸ்.
9. Lincoln, Melinda G. (2001). Conflict Resolution Education: A solution for Peace, Communications and the Law, Vol.23, No.1.
10. Page, James S. (2008). Peace Education: Exploring Ethical and Philosophical Foundations. Chapter 1. Charlotte: Information Age Publishing.
11. சாய்குமாரி, க. (2008). மதிப்புணர்வுக் கல்வி. சென்னை: சாந்தா பப்ளிஷர்ஸ்.
12. Thangasamy, Kokila, (2016). Valluvar mozhi sollum aasiriyarkal, Valluvar Vazhi Sellum Manavarkal. Chennai: Pavai Publication.
13. www.ncert.nic.in

**B.Ed., DEGREE EXAMINATION, DECEMBER 2011**

**PEACE AND VALUE EDUCATION**

**PART A – (10 x 2 = 20 marks)**

**Answer any TEN questions**

**Each answer should not exceed 50 words**

**Each answer carries 2 marks**

1. What is the need for peace education?

   அமைதிக்கல்விக்கான தேவை யாது?

2. Write any two aims of peace education.

   அமைதிக் கல்வியின் ஏதேனும் இரு குறிக்கோள்களை எழுதுக.

3. Give an account of value system.

   விழுமஅமைப்புப் பற்றிக் கூறுக.

4. Mention any four reasons for students unrest.

   மாணவர்களின் போராட்டங்களுக்கான காரணங்களில் ஏதேனும் நான்கினை எழுதுக.

5. What is meant by global citizenship?

   உலகக் குடியுரிமை என்பது யாது?

6. Define Value.

   'விழுமம்' வரையறு.

7. What is aggressive behaviour?

   நெறியற்ற நடத்தை என்றால் என்ன?

8. What is meant by critical thinking?

   ஆய்வுச் சிந்தனை என்பது யாது?

9. State the objectives of value education.

   விழுமக் கல்வியின் நோக்கங்களைக் கூறுக.

10. State the meaning of democracy.

    'ஜனநாயகம்' என்பதன் பொருளைக் கூறுக.

11. What is meant by value conflicts?

    'விழுமப் போராட்டங்கள் என்பது யாது?.

12. Mention the role of society in the transmission of values.

    விழுமப் பரவலில் சமுதாயத்தின் பங்கினைக் குறிப்பிடுக.

**PART B – (10 x 5 = 50 marks)**

**Answer any SIX questions**

**Each answer should not exceed 200 words**

**Each answer carries 5 marks**

13. Explain the need of value education.

    விழுமக் கல்வியின் அவசியத்தை விளக்குக.

14. Explain the role of teachers and peer group in fostering values.

    விழுமங்களை வளர்ப்பதில் ஆசிரியர்கள் மற்றும் சகமாணவர்களின் பங்கினை விளக்குக.

15. Write a note on traditional Indian values.

    இந்தியாவின் பாரம்பரிய மதிப்புணர்வுகள் பற்றி குறிப்பு வரைக.

16. Explain the status of peace education in the curriculum.

    கலைத்திட்டத்தில் அமைதிக் கல்வியின் நிலையினை விளக்குக.

17. Explain the role of Indian Redcross Society in inculcating Human Values.

    மனிதநேய விழுமங்களை வளர்ப்பதில் செஞ்சிலைச் சங்கத்தின் பங்கினை விளக்குக.

18. What are the practical steps to be taken to build peace culture in schools?

    பள்ளிகளில் அமைதிக் கலாச்சாரத்தை வளர்ப்பதற்கு எடுக்க வேண்டிய படிநிலைகள் யாவை?

19. Explain the types of conflicts with an example.

    மனப்போராட்டத்தின் வகைகளை ஓர் எடுத்துக்காட்டுடன் விளக்குக.

20. Write a short note on Pancha Sheel and non-alignment.

    பஞ்சசீலக் கொள்கை மற்றும் அணிசேரா நாடுகளைப் பற்றிக் குறிப்பு வரைக.

**PART C – (2 x 15 = 30 marks)**

**Answer BOTH questions**

**Each answer should not exceed 600 words**

**Each answer carries 15 marks**

21. (a) Discuss the role of adolescents for social justice and civil responsibility.

    சமூக நீதி மற்றும் சமுதாய கடமைகளில் குமரப் பருவத்தினரின் பங்களிப்பினை விவரி.

    (b) How can peace education be integrated in the present curriculum? Explain in detail.

    தற்கால பாடஏற்பாட்டில் அமைதிக் கல்வியினை எவ்வாறு ஒருங்கிணைக்க முடியும் என்பதனை விரிவாக விளக்குக.

22. (a) Explain the role of United Nations Oranisation in Promoting peace.

    ஆமைதியை மேம்படுத்துவதில் ஐக்கிய நாடுகளின் அமைப்பின பங்கினை விளக்குக.

    (b) Describe the various approaches in teaching value education.

    விழுமக் கல்வியினை கற்பிக்கும் பல்வேறு அணுகுமுறைகளை விவரிக்க.

**B.Ed., DEGREE EXAMINATION, MAY 2012**

**PEACE AND VALUE EDUCATION**

**PART A – (10 x 2 = 20 marks)**

**Answer any TEN questions**

**Each answer should not exceed 50 words**

**Each answer carries 2 marks**

1. What are the aims of peace education?

   ஆமைதிக் கல்வியின் குறிக்கோள்கள் யாவை?

2. Suggest any two practical steps to build peace culture in schools.

   பள்ளிகளில் அமைதிக் கலாச்சாரத்தை உயர்த்துவதற்கான இரண்டு செயல்முறைகளைக் குறிப்பிடுக.

3. Mention any two important factors that affect world peace.

   உலக அமைதிக்கு ஊறு விளைவிக்கும் ஏதேனும் இரு காரணிகளைக் குறிப்பிடுக.

4. What is 'peace education'?

   'அமைதிக் கல்வி' – என்றால் என்ன?

5. Mention any two technologies that play vital role in global activism.

   உலகந் தழுவிய போராட்டங்களுக்குத் துணையாக நிற்கும் இரு தொழில்நுட்பச் சாதனங்களைக் குறிப்பிடுக.

6. Define the term 'value education'.

   மதிப்புணர்வுக் கல்வி என்பதை வரையறு.

7. What is Life-skills education?

   வாழ்வியல் திறன் கல்வி என்றால் என்ன?

8. Suggest any two after-school peace education programmes.

   பள்ளி வேளைக்குப் பின்னர் நடத்தக் கூடிய அமைதிக் கல்வி செயல்கள் யாவை?

9. What is secularism?

   சமயச் சார்பின்மை என்பதன் பொருள் யாது?

10. State any two skills of leadership.

    தலைமைப் பண்பிற்குரிய இரு திறன்களை எழுதுக.

11. What is role of Youth Red Cross?

    இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகள் யாவை?

12. State any two values relevant for 21$^{st}$ century.

    21-ஆம் நூற்றாண்டுக்கான இரண்டு மதிப்புணர்வுகளைக் குறிப்பிடுக.

**PART B – (10 x 5 = 50 marks)**

**Answer any SIX questions**

**Each answer should not exceed 200 words**

**Each answer carries 5 marks**

13. Who is a global citizen? What are the skills of a global citizen?

உலகக் குடிமகன் என்பவர் யார்? அவருக்கான திறன்கள் யாவை?

14. Explain five types of conflicts.

சச்சரவுகளின் ஐந்து வகைகளை விளக்குக.

15. Distinguish between ‘violence’ and ‘non’violence’.

வன்முறை மற்றும் அஹிம்சையை வேறுபடுத்துக.

16. Describe Gandhiji’s contribution to world peace.

உலக அமைதிக்குக் காந்தியடிகளின் பங்களிப்பை விவரித்திடுக..

17. Write a short note on ‘SAARC’.

சார்க் நாடுகள் குறித்து சிறு குறிப்பு வரைக.

18. What are the Major causes of student unrest in school level?

பள்ளிகளின் நிலையில் மாணவர்கள் போராட்டங்களுக்கான காரணங்கள் யாவை?

19. Write a short note on Pancha Sheel and non-alignment.

பஞ்சசீலக் கொள்கை, அணிசேரா நாடுகள் - இவை குறித்து குறிப்பு வரைக.

20. Explain the status of peace education in school curriculum.

பள்ளிக் கலைத் திட்டத்தில் அமைதிக் கல்வியின் நிலையினை விளக்குக.

**PART C – (2 x 15 = 30 marks)**

**Answer BOTH questions**

**Each answer should not exceed 600 words**

**Each answer carries 15 marks**

21. (a) Describe the major methods by which peace education can be integrated with the present school curriculum.

இன்றைய பள்ளிக் கலைத்திட்டத்தில், அமைதிக் கல்வியை இணைப்பதற்கான முக்கிய வழிமுறைகளை விவரித்திடுக.

(b) Describe the “windows of opportunity” for peace education.

அமைதிக் கல்விக்கான “வாய்ப்புக்கான சன்னல்கள்” பற்றி விவரித்திடுக.

22. (a) Describe the role of different agencies in fostering values among students.

திறமான அமைதிக் கல்வியின் கூறுகள் குறித்து விவரித்திடுக.

(b) Describe the role of different agencies in fostering values among students.

மாணவர்களிடையே மதிப்புணர்வை வளர்த்திட பல்வேறு முகமைகள் ஆற்றும் பணிகளை விவரித்திடுக.

**B.Ed., DEGREE EXAMINATION, MAY 2014**

**PEACE AND VALUE EDUCATION**

**PART A – (10 x 2 = 20 marks)**

**Answer any TEN questions**

**Each answer should not exceed 50 words**

**Each answer carries 2 marks**

1. What is peace education?

   அமைதிக் கல்வி என்றால் என்ன?

2. Write the importance of co-curricular activities in peace education..

   அமைதிக் கல்வியில் கலைத்திட்ட இணைச் செயல்பாடுகளின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.

3. Mention the objectives of staff-development.

   பணியாளர் வளர்ச்சியின் நோக்கங்களைக் குறிப்பிடுக.

4. Point out the importance of classroom management.

   வகுப்பறை மேலாண்மையின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுக.

5. What is rote discipline?

   கட்டுப்பாட்டு ஒழுக்கம் என்றால் என்ன?.

6. What do you mean by classroom management?

   வகுப்பறை மேலாண்மை என்பது யாது?

7. Define non-violence.

   அஹிம்சை – வரையறு.

8. Write a note on UNEP.

   UNEP பற்றி குறிப்பு வரைக?

9. How the positive attitudes are build the character?

   நேர்மறை மனப்பான்மை எப்படி நடத்தையை கட்டமைக்கிறது?

10. Give the meaning of values.

    மதிப்பு என்பதன் பொருள் தருக.

11. Mention the role of peace education in resolving conflict?

    மனப்போராட்டத்தைத் தீர்பப்தற்கு அமைதிக் கல்வியின் பங்கைக் குறிப்பிடுக.

12. Write about nuclear disarmament.

    அணு ஆயுதக் குறைப்பு பற்றி எழுதுக.

**PART B – (10 x 5 = 50 marks)**

**Answer any SIX questions**

**Each answer should not exceed 200 words**

**Each answer carries 5 marks**

13. Describe the tips for teaching respect for life?

    வாழ்க்கைக்கான மதிப்பை கற்பிப்பதற்கான ஆலோசனைகளை விவரி?

14. Explain five types of conflicts.

    சகிப்புத் தன்மையை எவ்வாறு கற்பிப்பீர்?

15. Skills based health education does change behaviour Discuss.

    திறன் அடிப்படையிலான உடல்நலக் கல்வி நடத்தையை மாற்றுகிறது விவாதி.

16. Write an account of ‘UNICEF’.

    UNICEF - பற்றி எழுதுக.

17. What are the classifications of values?

    மதிப்பின் வகைப்பாடுகள் யாவை?

18. Explain the aim and objectives of peace education at different level of education.

    பல்வேறு நிலைகளில் அமைதிக் கல்வியின் குறிக்கோள் மற்றும் நோக்கங்கள் விளக்குக.

19. List out the functions of UNHCR.

    UNHCR - ன் பணிகளை பட்டியலிடுக.

20. Mention the role to government and voluntary organization to fostering values.

    மதிப்புகளை பலப்படுத்த அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கை குறிப்பிடுக.

**PART C – (2 x 15 = 30 marks)**

**Answer BOTH questions**

**Each answer should not exceed 600 words**

**Each answer carries 15 marks**

21. (a) Explain the major media of integrating the peace education in the curriculum.

    அமைதிக் கல்வியை கலைத்திட்டத்துடன் ஒருங்கிணைக்கும் முதன்மை ஊடகங்களை விளக்குக.

    (b) Education helps to learn culture of peace. Discuss.

    அமைதிப் பண்பாட்டை கற்றுக் கொள்ள கல்வி உதவுகிறது. விவரி.

22. (a) Explain the contribution of Gandhiji to peace studies.

    அமைதிக் கல்வி கற்றலுக்கு காந்தியின் அன்பளிப்பை விளக்குக.

    (b) Write an essay about approaches and strategies in peace and value education.

    அமைதி மற்றும் மதிப்பு கல்வியில் அணுகுமுறை மற்றும் கற்பித்தல் முறை குறித்து கட்டுரை வரைக.

View publication stats